www.tamilarangam.net



# உயிர்நிழல்

Uyirnizhal VOL III - N°3 - ISSUE 13 MAY - JUNE 2000 Published by Exil

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கவிஞனோடு ஆற்றுதல்

இரா. றஜீன்குமார்

சூரியனோடு பேசிய கவிஞனே!
என்னை எழுதத் துண்டிய கவிஞருள் நீயும் ஒருவன்
அந்தியில்,
சூரியனோடு பேசும் வானம்
எங்கும் சிவப்பென
ஜெகமே இடித்துரைக்க
அண்டார்டிக்காவில் அது பச்சை நிறமென
ஓங்கி ஒலிக்கும் இடத்தைப் பெற நான்
உனது கவிதைகளில் படர்வதுமுண்டு.

எல்லோருடைய எழுதுகோல்களும்
நெற்றிக் கண்களைப் பொருத்திக் கொண்டன
வீரியமாய் முப்புரத்தை எரித்து
மன்மதன், நக்கீரன்.... என
நமத்துப் போயின நெற்றிக்கண்கள்
நம்பிக்கை ஞாயிற்றின் விதைகளையெல்லாம்
மூலைக்கற்களாய் நாட்டத் தொடங்கி
கைப்பிடி மண்ணை அள்ளிப் போட்டோம்
நாடுமுழுவதும் நாட்டிய கற்கள்

கைப்பிடி மண்ணும் மலையாய்ப் பெருகி
குண்டைப் புதைக்ககுண்டாய் நிறைந்து
பிணத்தைப் புதைக்க பிணமாய் நிறைந்து
எங்கள் கிராமங்கள் மண்வளம் நிறைந்தவை
பதறித் துடிக்க
தோழர் வெட்டிய குழிகளில்
தோழரைத் தள்ளிகுண்டுகள் போட்ட
காலமும் வந்ததே!

ஹிட்லருக்கும் ஏனையோருக்கும்
நடுவில் கோட்டைக் கிழித்ததுபோல
பொது எதிரிக்கும் நமக்கும் நடுவில்
ஒரேயொரு கோடு
நீ நான் முசோலினி....
கோட்டுக்கு இப்பால்

ஒன்று நினைக்க
அது ஒழிந்திட்டொன்றாகி
கோடு இப்போ சாரையாய் நெளிவுறும்
மூஞ்சூறொன்றைக் கவ்வியபடிக்கு

பூனைகள் தொல்லைக்காக
எலிகளை காவல் வைத்து
தாய் எலி ஈன்றவற்றை
எலிகளே காவுகொள்ள
பூனைகள் வழிமறிக்கும்
பூனைகள் பின்னே இரு
சிங்கங்கள் உறுமி நிற்கும்

தாய் எலி என்ன செய்யும்?
பொது எதிரியாய் யாரைக் கொள்ளும்?
கவிஞனே சொல்லு! சொல்லு!
திரேதயுகத்து சங்கை ஊதுமோ?
கிருதயுகத்து அசுரனைத் தேடுமோ?
இந்து சமுத்திரக் குழிகளில் குதிக்குமோ?
அகதியாய் அலைந்து வீழ்ந்து படுமோ?

---

உயிர்நிழல்

Uyirnizhal

**Vol. III No. 3**
**MAY - JUNE 2000**

எக்ஸிலிலும் பின்பு உயிர்நிழலிலும் தொடர்ந்து பங்காற்றிய (தொகுப்பாளராகவும் வடிவமைப்பாளராகவும்) ஓவியர் கிருஷ்ணராஜா அவர்களின் வடிவமைப்புகளில் சில நன்றியுடன் சேரத்துக் கொள்ளப்படுகிறது.

தொகுப்பாசிரியர்கள்:
லக்ஷ்மி
கலைச்செல்வன்

**அன்பளிப்பு:**
பிரதி ஒன்று - 15FF, வருட சந்தா - 100FF
(6 பிரதிகள், தபாற் செலவு உட்பட)
இலங்கை, இந்தியா -இலவசம்

காசோலைகள் அனுப்பவேண்டிய
வங்கியும், இலக்கமும்:
CREDIT LYONNAIS
CODE BANQUE 30002
COMPTE 554/6788M/21
ASSOCIATION EXIL

**தொடர்புகளுக்கு:**
EXIL, 27 Rue Jean Moulin
92400 Courbevoie, France
e-mail: EXILFR@aol.com

N° d'enregistrement de l'association : 13023204

**வெளியீடு: எக்ஸில்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கவிஞனோடு ஆற்றுதல்
*இரா. றஜீன்குமார்* ........ 02

ஆபிரிக்காவின் முதலாவது உலகப்போர்
*தி. உமாகாந்தன்* ........ 04

வெளி-வாசல்
*காமன் வசந்தன் குளிர்நாடன்* ........ 11

என் கடன்பணி செய்து கிடப்பதே
*ராஜாத்தி* ........ 13

குடம்
*சோலைக்கிளி* ........ 16

இன்மை உரையாடலும் கட்டவிழ்ப்பும்
*துடைப்பான்* ........ 17

இலக்கியச் சந்திப்பு - இன்றும் நேற்றும் நாளையும்
*என். சரவணன்* ........ 20
*வாசுதேவன்* ........ 24
*வ. அழகலிங்கம்* ........ 27
*துடைப்பான்* ........ 31

மனிதர் காட்சிச்சாலை
*திருமாவளவன்* ........ 33

முதல் தகவல் அறிக்கை
*சாஜத்* ........ 34

பீனிக்ஸ் பறவையின் நாட்குறிப்பு
*இளையவி சின்னவன்* ........ 42

ஆன் பிராங்க்
*தமிழில்: குயிலி* ........ 44

ஜெர்மன் மற்றும் ஐரோப்பிய பாசிச அமைப்புகள்
*தமிழரசன்* ........ 49

நியோன் வெளிச்சமும் நீலக் கனவுகளும்
*வசந்தி — ராஜா* ........ 59

நிழல்கள்
........ 63







தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆபிரிக்காவின் முதலாவது உலகப் போர்!

## கொங்கோ ஜனநாயகக் குடியரசின் உள்நாட்டு யுத்தம்



தி. உமாகாந்தன்

மூன்று வருடங்களுக்கு முன்னர் ஸெயரின் மிக நீண்ட காலச் சர்வாதிகாரியான மொபுட்டோ ஸெஸெ செக்கோவுக்கெதிரான வெற்றிகரமான ஆட்சிக் கவிழ்ப்பொன்றை ஸெயரில் லோறன்ற் கபிலா நிகழ்த்தியபோது ஸெயர் மட்டுமல்ல மொத்த ஆபிரிக்காவுமே ஜனநாயகம் பற்றிய கனவுகளில் மூழ்கியது. இந்தக் கனவுகளுக்கு நீருற்றி வளர்ப்பதுபோல கபிலாவின் புதிய அரசு ஸெயரின் பெயரை கொங்கோ ஜனநாயகக் குடியரசு எனவும் மாற்றியது. ஆனால் இன்று கொங்கோ ஜனநாயகக் குடியரசில் ஜனநாயகம் பற்றிய அனைத்துக் கனவுகளும் சிதைந்தது மாத்திரமன்றி உலகின் மிக உக்கிரமான யுத்தம் ஒன்று நடைபெறுகிறது.

இந்த யுத்தத்தில் கொங்கோ ஜனநாயகக் குடியரசும் அதனைச் சுற்றியுள்ள ஒன்பது நாடுகளும் ஐந்து கிளர்ச்சிக் குழுக்களும் ஈடுபட்டுள்ளன. ஆபிரிக்காவின் முதலாவது உலக யுத்தம் என அரசியல் ஆய்வாளர்களால் வர்ணிக்கப்படும் இந்த உக்கிரமான யுத்தத்தில் மனித உயிர்கள் மாத்திரம் பலியாகவில்லை. வளம் மிக்க நாடாகிய கொங்கோ ஜனநாயகக் குடியரசின் இயற்கை வளங்களான வைரங்கள், எண்ணெய் வளம், யூரேனியம், தங்கம், கனிவளம் நிரம்பிய நீர், வளம் நிறைந்த நிலம், இயற்கையோடு கலந்த காடுகள் அனைத்துமே சூறையாடப்படுகின்றன.



காலனித்துவ ஆட்சிக் காலத்தின் பின் இப்போது போல ஆபிரிக்கா எப்போதுமே துன்பத்துக்காளாகவில்லை. கொங்கோ ஜனநாயகக் குடியரசில் தற்போது நடக்கும் யுத்தத்தில் பல்லாயிரக் கணக்கானோர் கொல்லப்படுகின்றனர் மில்லியன் கணக்கானோர் தமது வீடுகளையும் நகர்களையும் விட்டு வெளியேற்றப்பட்டு நாட்டுக்கு உள்ளும் வெளியேயும் அகதிகளாக்கப்பட்டு உள்ளனர். யானைகளும் குரங்குகளும் உணவுக்காக கொல்லப்படுகின்றன. கொங்கோ ஜனநாயகக் குடியரசில் இன்று மக்களைப் போலவே பொருளாதாரமும் இறந்து கொண்டிருக்கிறது.

இன்று கொங்கோவில் நடைபெற்று வரும் போர் விசித்திரமானது. கொங்கோவுக்கு வெளியேயுள்ள ஆறு நாடுகள், 35000 இராணுவத்தினர் ஆண்கள் சிறுவர்களுடன் இணைந்து பல்வேறு காரணங்களுக்காக கொங்கோவுக்குள் இந்த யுத்தத்தில் ஈடுபட்டுள்ளன. சில நாட்டுப் படையினர் கொங்கோவின் கிளர்ச்சியாளர்களுடன் இணைந்து ஜனாதிபதி லோறன்ற் கபிலாவை பதவியில் இருந்து தூக்கி எறியும் ஆயுதக் கிளர்ச்சியில் ஈடுபட்டு வருகின்றனர். இதர நாட்டுப் படையினர் கபிலாவை பாதுகாக்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இது தவிர இதர நாடுகளை சேர்ந்த ஒன்பது கிளர்ச்சிக் குழுக்கள் தமது நாடுகளின் அரசுகளை கவிழ்க்கும் முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்கள் அனைவருமே கொங்கோவின் வளங்களை சூறையாடி வருகின்றனர்.

இன்று கொங்கோவைத் தளமாகக் கொண்டு நடைபெற்று வரும் அனைத்துப் போர்களும் இப்பிரதேசத்தில் தொடர்ந்து நிகழ்ந்து வரும் இன முரண்பாடுகளுடனும் இன மோதல்களுடனும் தொடர்புடையவை. அதிகாரத்தையும் செல்வத்தையும் தாமே குவித்து வைக்க விரும்பும் மக்கள் பொறுப்பற்ற அரசியல் தலைவர்களால் ஏற்படுத்தப்பட்டவை. 1994ம் ஆண்டு ருவாண்டா படுகொலைகளைத் தொடர்ந்து இந்த இனமோதல் நெருப்பு ஆபிரிக்காவைத் தொடர்ந்து 18 மாதங்கள் சுட்டெ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரித்தது. இப்போது இந்த இன முரண்பாடுகள் காரணமாக கொங்கோவில் நடைபெறும் போரில் அந்நியப் படைகளாலும் கிளர்ச்சியாளர்களாலும் கொங்கோவின் பாதிப் பகுதி ஆக்கிரமிக்கப்பட்டு வளங்கள் சூறையாடப்பட்டு விட்ட போதும் அர்த்த மற்ற இந்த யுத்தம் தொடர்கிறது.

கொங்கோவைப் பொறுத்தவரையில் இப்போது அங்கு ஜனாதிபதி கபிலாவுக்கோ அல்லது அவருக் கெதிரான கிளர்ச்சியாளர்களுக்கோ மக்களின் ஆதரவு கிடையாது. இந்த இரு தரப்புக்கும் ஆதர வாக செயற்படும் அந்நியப்படைகள் இந்த யுத்தத்தை மேலும் விஸ்தரித்து மோசமாக்கி கொங்கோ ஜனநாயகக் குடியரசை நாசமாக்கும் முயற்சிகளிலேயே ஈடுபட்டுள்ளன. ஆபிரிக்காவின் பல நாடுகளின் எல்லைகளைத் தொட்டு நிற்கும் கொங்கோவின் இந்த யுத்தம் விசித்திரமானது. மூன்று வருடங்களுக்கு முன்னர் கொங்கோவின் கிழக்கு எல்லையிலுள்ள இரு நாடுகளான ருவாண் டாவும் உகண்டாவும் லோரன்ற் கபிலாவை கொங்கோவின் ஜனாதிபதியாக கொண்டு வர உதவின. இப்போது அவ்விரு நாடுகளும் கபிலாவை பதவியில் இருந்து அகற்ற மூர்க்கமாகப் போரிடு கின்றன. இந்த இரு நாட்டுப் படைகளும் கொங் கோவின் மூன்று கிளர்ச்சிக் குழுக்களுடன் இணைந்து கபிலாவுக்கு எதிராகப் போராடுகின்றன. ஆனால், இந்த மூன்று கொங்கோ கிளர்ச்சிக் குழுக் களும் தமக்குள்ளே முரண்பட்டு ஒன்றுடன் ஒன்று மோதி வருகின்றன.

மறுபக்கத்தில் 1998ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் கொங்கோவில் கபிலாவுக்கு எதிரான கிளர்ச்சிகள் வெடித்தபோது அங்கோலா, ஸிம்பாவே, நமீபியா ஆகிய நாடுகளே கபிலாவைக் காப்பாற்றின. அது மாத்திரமல்ல, ருவாண்டா படுகொலைகளுக்குப் பொறுப்பான பல்லாயிரக்கணக்கான ஹூது தீவிர வாதிகளுடனும் தன் பதவியைக் காப்பாற்ற கபிலா இணைந்து கொண்டார். அத்துடன் தண்ணீரை தெய்வமாக வழிபட்டு அதனை மாயப் பொருளாகக் கருதி, தண்ணீர் தம்மை கவசமாக துப்பாக்கிக் குண்டுகளிடமிருந்து காப்பாற்றும் என நம்பி வரும் மாயி-மாயி (Mayi-Mayi) எனும் இனப் போராளிகளு டனும் கபிலா தன்னைக் காப்பாற்ற இணைந்து கொண்டார். ருவாண்டாவின் ருற்ஸி இன அரசு கொங்கோவில் இருந்து தனக்கெதிராக செயற்படும் ஹூது தீவிரவாதிகளை அடக்க கபிலாவுக்கு எதிரான யுத்தத்தில் கொங்கோவில் களம் இறங்கி யுள்ளது. ருவாண்டாவுக்கு ஆதரவாகவும் கொங் கோவிலிருந்து தனக்கெதிராக செயற்படும் உகண்டா கிளர்ச்சியாளர்களை அடக்கவும் கபிலா வுக்கு எதிராக கொங்கோவில் களம் இறங்கி யுள்ளது. தனக்கெதிராக கொங்கோவில் செயற் பட்டு வரும் ஹூது கிளர்ச்சியாளர்களை அடக்க புறூண்டியும் கொங்கோவுக்கு தனது படைகளை அனுப்பியுள்ளது.

இன்னுமொரு பக்கத்தில் கொங்கோவின் தெற்கு எல்லையிலுள்ள அங்கோலாவுக்கு கபிலா வின் உதவி தேவைப்படுகிறது. காரணம் கொங்கோ வில் தளம் அமைத்து அங்கோலா அரசுக்கெதி ராகச் செயற்படும் UNITA தீவிரவாதிகளை அடக்கு வதற்கு. அதனால் அங்கோலா தனது படைகளை கபிலாவிற்கு ஆதரவாக கொங்கோவில் களமிறக் கியுள்ளது. கபிலாவுக்கு ஆதரவாக ஸிம்பாவே தனது படைகளை கொங்கோவிற்கு அனுப்பிய தற்கு பெருத்த காரணம் எதுவும் இல்லாதபோதும் ஸிம்பாவே ஜனாதிபதி றொபேட் முகாபே தமது பதவியைத் தொடர ஆதரவளித்து வரும் இராணுவ ஜெனரல்களைத் திருப்திப்படுத்த இந் நடவடிக் கையினை மேற்கொண்டார். காரணம் கொங்கோ வின் வைரங்கள், தங்கம், மரம், உலோகங்கள் போன்றவற்றை சூறையாடுவதன் மூலம் இந்த ஸிம்பாவே இராணுவ ஜெனரல்கள் பெரும் செல்வந்தர்களாகி வருகிறார்கள்.

மேற்படி நாடுகள், கொங்கோவின் இந்த யுத்தத் தில் நேரடியாக பங்கு கொள்ள, இந்த யுத்தத்தி னால் அகதிகளாகும் இலட்சக் கணக்கான அகதி களால், சந்தர்ப்பவாதத் தீவிரவாதிகளால் இப் பிரதேசத்தைச் சேர்ந்த ஸாம்பியா, தான்ஸானியா, சூடான் போன்ற நாடுகளும் இழுத்து விடப்பட் டுள்ளன. இதற்கிடையில் இப்பிரதேச ஆதிக் கத்தை யார் கைப்பற்றுவது என்று ஸிம்பாவே ஜனாதிபதி றொபேட் முகாபேக்கும் உகண்டா ஜனாதிபதி யோவேரி முஸவேனிக்கும் இடையில் எழுந்துள்ள ஆதிக்கப் போட்டிக்கும் இன்று கொங்கோவே களமாகி உள்ளது.

இங்கே இன்னுமொரு வேடிக்கை என்னவென் றால் கொங்கோவில் நடைபெற்றுவரும் இந்த மூர்க்கமான யுத்தத்தையும் யுத்த களத்தையும் உணராத ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகள் ஐ.நா. அலுவலகக் கட்டடங்களுக்குள் நவீன தொடர்புக் கருவிகளுடன் ஐந்தாயிரத்தை அண் மித்த ஒரு சிறிய சமாதானப் படையுடன் கொங்கோ வில் சமாதானத்தை ஏற்படுத்திவிடலாம் என்ற விவாதத்தை நடத்திக் கொண்டிருக்க கொங்கோ வின் இருண்ட காடுகளில் கொடுமையான யுத்தம் ஒன்று தொடர்கிறது. வெளித் தரப்பினரால் உணர முடியாத இந்த யுத்தம் கொங்கோவுக்குள் வெகு வேகமாகப் பரவுகிறது. உக்கிரமான இந்த யுத்தம் நவீனமும் பழமையும் கலந்தது. ஒரு புறம் ஹெலி கொப்டர்கள், பீரங்கிப் படகுகள், நவீன கனரக ஆயுதங்கள், மறுபுறம் துப்பாக்கிகள், கத்திகள் சகிதம் மக்கள் நுழையமுடியாத காடுகளுக்கு உள்ளும் வெளியேயும் எப்படி 1878ம் ஆண்டு பெல்ஜிய மன்னரான லியோபோல்ட் II இன் உத்த ரவை ஏற்று ஹென்றி ஸ்ரான்லியின் படைகள் கொங் கோவில் யுத்தம் செய்தனவோ அப்படி யுத்தம் நடைபெறுகிறது.

இந்த யுத்தத்தில் இதுவரை கொல்லப்பட்டவர் களின் எண்ணிக்கை எவ்வளவு என்பது யாருக்கும் தெரியாது. 1998 ஆகஸ்டில் கொங்கோவில் இந்த யுத்தம் ஆரம்பித்த காலகட்டத்தில் இருந்து சண்டையிடுபவர்கள், அகதிகள், பொதுமக்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

உட்பட ஒரு லட்சம் பேர் கொல்லப்பட்டிருக்கலாம் எனக் கருதப்படுகிறது. அரசியல் ஆய்வாளர்களின் கருத்தின்படி கொங்கோவில் இன்று நடைபெறும் யுத்தம் மூன்று யுத்தங்களை உள்ளடக்கியது. முதலாவது ஜனாதிபதி லோறன்ற் கபிலாவுக்கும் அவரைப் பதவியில் இருந்து தூக்கியெறிய முயலும் கொங்கோ கிளர்ச்சியாளர்களுக்குமிடையிலான சண்டை. இரண்டாவது கொங்கோவின் கிழக்கு மாகாணங்களில் நடைபெறும் இனப்போர். இது குறிப்பாக கொங்கோவின் ருற்ஸி இனத்துக் கெதிரான சண்டை. மூன்றாவது பல முரண்பாடுகள் நிறைந்த இதர வெளிநாடுகளை உள்ளடக்கிய யுத்தம். ருவாண்டா, உகண்டா ஆகிய நாடுகள் கபிலாவுக்கு எதிரான கொங்கோ கிளர்ச்சியாளர் களுக்குச் சார்பு. ஸிம்பாவே, அங்கோலா, நமீபியா கபிலாவுக்கு சார்பு. இது மாத் திரமில்லை, இந்தப் போர் இப்போதைக்கு முடியப் போவ தில்லை. நீண்டகாலம் தொட ரப்போகிறது என்பதற்கு கொங்கோ தலைநகரான கின் ஷாசாவில் பாரிய அளவில் காணப்படும் அரச சுவரொட் டிகள். அவை கொங்கோ மக் களை ஒரு நீண்ட போருக்குத் தயாராகுமாறு வற்புறுத்துகின் றன. அவற்றில் காணப்பட்ட வாசகம் ஒன்று இப்படி அமைந் துள்ளது. "சமாதானத்துக்கு எப்போதும் ஒரு விலை யுண்டு. எந்தத் தியாகத்துக்கும் தயாராகுங்கள்"



உக்கிரமான இந்த நீண்ட யுத்தத்தின் பங்கா ளர்கள் பற்றிய விபரங்களை சற்றுப் பார்ப்போம். முதலில், யுத்தத்தின் களமான கொங்கோ பல தசாப்தங்கள் ஸெயிரின் சர்வாதிகாரியாக இருந்து ஸெயிரின் வளங்களைச் சூறையாடிய ஜனாதிபதி மொபுட்டோ ஸெஸெ ஸிக்கோவை 1997ம் ஆண்டு பதவியிலிருந்து தூக்கியெறிந்து கொங்கோ ஜன நாயகக் குடியரசின் புதிய ஜனாதிபதியாகினார் லோறன்ற் கபிலா. இதற்கு ருவாண்டாவும் உகண் டாவும் துணை நின்றன. இந்த இரு நாடுகளுக்கும் சர்வாதிகாரி மொபுட்டோவுக்கெதிரான இயக்கத் துக்கு தலைமை தாங்க கொங்கோவைச் சேர்ந்த ஒருவர் தேவைப்பட்டார். அதற்கு கபிலா பயன் படுத்தப்பட்டார். கபிலா ஜனாதிபதிப் பதவி ஏற்றதும் கின்ஷாசாவில் அமைந்த கபிலாவின் அரசாங் கத்தில் ருவாண்டாவில் இருந்து பலர் அரசியல் ஆலோசகர்களாகப் பதவி ஏற்றனர். இது கொங்கோ மக்களை ஆத்திரமூட்டியது. இதனால் கபிலா ருவாண்டாவுடனான தமது உறவுகளைத் துண்டித்துக் கொண்டார். இதன் காரணமாக ருவாண்டா 1998 ஆகஸ்ட் மாதம் கபிலாவுக் கெதிரான புதிய போரை ஆரம்பித்தது. கபிலா வுக்கு எதிரான கிளர்ச்சியாளர்கள் இப்போது கொங்கோவின் பாதிக்கு மேலான பகுதியை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றார்கள். கொங் கோவின் கிழக்குப் பகுதியும் வடகிழக்குப் பிரதேச மும் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டுக்குள் ளேயே உள்ளது. அதாவது இப்பிரதேசங்களிலுள்ள முக்கிய நகரங்கள், விமான ஓடு தரைகள், வீதிகள் அனைத்துமே கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டுக் குள்ளேயே இருக்கின்றன. இருப்பினும் கொங்கோ மக்களிடையே இந்தக் கிளர்ச்சியாளர்கள் ஆதர வற்றவர்களாகவே இருக்கிறார்கள். கபிலா பத விக்கு வந்தபோது அவரிடம் 70 000 படையினர் இருந்தார்கள். தென் மாநிலமான கற்றன்காவி லிருந்து கபிலாவுடன் பல்லாயிரக்கணக்கான படை யினர் இணைந்தனர். அத்துடன் கபிலாவின் அரசும் படைகளுக்கு புதிதாக ஆட்திரட்டும் செயற்பாடுக ளிலும் ஈடுபட்டது. கபிலாவின் சொந்தப் படையினர் ஓரளவு முன்னேற்றத்தை கடந்த வருடம் அடைந்த போதும் அவர்கள் பயிற்சி குறைந்தவர்களாக மிகக் குறைந்த ஊதியம் வழங்கப்படுப வர்களாக, அவர்களில் பலர் சிறு பையன்களாக இருந்தனர். கபி லாவின் கட்டுப்பாட்டுக்குள் இருந்த பல பகுதிகளில் உண் மையான அதிகாரம் அங்கோ லாவிடமும் ஸிம்பாவேயிடமுமே இருந்தது.

பொதுவாக மேற்குலக ராஜ தந்திரிகள் ருவாண்டாவும் உகண்டாவும் கொங்கோவுக் குள் அத்துமீறி நுழைந்திருக்கின்றன என்பதை ஏற்றுக் கொள்கிறார்கள். அதே சமயம் எந்த மேற் குலக நாடுகளுமே கபிலாவின் அரசுக்கு ஆதரவு வழங்கத் தயாராக இல்லை. காரணம் 1997ம் ஆண்டு ருவாண்டாவும் உகாண்டாவும் கொங்கோவுக்குள் இத்தகைய அத்துமீறல் மூலமே நுழைந்து கபி லாவை பதவியில் அமர்த்தின. அதன்பின் கபிலா, தமது ருவாண்டா நண்பர்களை கொங்கோவில் அதிகாரம் செய்ய அனுமதித்ததுடன் ருவாண்டா வின் ருற்ஸி ஆட்சியாளர்களை ருவாண்டா படு கொலைகளுக்குப் பொறுப்பான ஹூது இனத்தவரை கொல்லவும் அனுமதித்தனார். அடுத்த காரணம் கபிலாவின் அரசு பதவியேற்றபோது அரசியல் சீர்திருத்தங்களை மேற்கொள்ளப் போவதாகவும் ஜனநாயகரீதியிலான தேர்தல்களை நடத்தப் போவதாகவும் வெளிப்படையான ஒரு மக்கள் அரசை நடத்தப் போவதாகவும் வாக்குறுதி யளித்தது. ஆனால் கபிலாவின் அரசு ஒரு ஒடுக்குமுறை அரசாக எதிர்க்கட்சிகளின் நடவடிக் கைகளைப் பொறுக்க முடியாத அரசாக பத்திரி கையாளர் பலரை சிறையிலிடும் அரசாக, மனித உரிமைகளை மதிக்காத அரசாக செயற்பட்டது. மூன்றாவது காரணம் கபிலா தமது பதவியைக் காப்பாற்றுவதற்காக இரட்டை உறவுகளை பேண முற்பட்டார். குறிப்பாக ருவாண்டாவில் பல்லாயிரக் கணக்கான ருற்ஸி மக்கள் மீதான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இனப்படுகொலைகளுக்குப் பொறுப்பான, கொங்கோவில் அகதிகளாக அடைக்கலம் புகுந்த ஹூது தீவிரவாதிகளுடன் நெருக்கமான உறவுகளைப் பேணிக்கொண்டார். கடந்த வருடம் ஜூலை மாதம் லுஸாக்கா உடன்படிக்கையில் கபிலா போர்நிறுத்தம், அமைதிப் பேச்சுவார்த்தைகள் குறித்து கையெழுத்திட்ட போதும் அவற்றை அவர் மதிக்கவில்லை. கபிலா இப்போது கிளர்ச்சியாளர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தும்படி நிர்ப்பந்திக்கப்படுகிறார். அங்கோலா இந்த யுத்தத்தில் தனது பங்களிப்பை குறைக்கத் தொடங்கிவிட்டது. ஏற்கனவே உள்நாட்டுப் பிரச்சனைகளால் தவிக்கும் ஸிம்பாவே ஜனாதிபதி முகாபேக்கு, தமது படைகள் இந்த யுத்தத்தில் பங்கு கொள்வது பெரும் பொருட்செலவு நிறைந்ததாக மாறியுள்ளது.

இந்த யுத்தத்தின் அடுத்த பங்காளர்கள் கொங்கோவின் கிளர்ச்சியாளர்கள் கிட்டத்தட்ட கொங்கோவின் பாதிப்பகுதி இன்று கொங்கோவின் மூன்று கிளர்ச்சிக் குழுக்களின் கட்டுப்பாட்டில் உள்ளது. சில விதிவிலக்குகள் தவிர கிளர்ச்சியாளர்கள் கொங்கோவின் வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களை குறிப்பாக மத்திய ஆபிரிக்கக் குடியரசு, சூடான், உகண்டா, ருவாண்டா, புறூண்டி ஆகிய நாடுகளின் எல்லைப் பிரதேசங்களையும் தங்கன்பிக்கா ஏரியின் பெரும்பகுதியையும் தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கிறார்கள். கடந்த வசந்த காலத்தின்போது கையெழுத்திடப்பட்ட சமாதான ஒப்பந்தத்தையும் மீறி பல பகுதிகளில் யுத்தம் உக்கிரமடைந்துள்ளது. கொங்கோவின் வடமேற்கு மூலையிலுள்ள கெமெனாவைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் தெற்கில் கொங்கோ நதியை ஊடறுக்கும் பிரதேசங்களிலும் கிஸ்ஸங்கானியின் தென்மேற்குப் பகுதிகளிலும் வடக்கிலும் தெற்கிலும் கிவு மாகாணத்திலும் தூரகிழக்குக் கொங்கோவிலும் சண்டை நடைபெறுகிறது. ம்புஜி-மாயி எனப்படும் வைரச் சுரங்க நகர் இப்போது அரச படைகளின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளபோதும், கிளர்ச்சியாளர்கள் இப்போது இந்நகரைச் சுற்றி வளைத்துள்ளனர்.



1999ம் ஆண்டின் இறுதிப் பகுதியில் கபிலாவுக்கெதிரான கிளர்ச்சிக் குழுக்கள் ஒருங்கிணைந்து செயற்பட முற்பட்டன. அதில் ஓரளவு வெற்றியும் பெற்றுள்ளன. முக்கியமான கிளர்ச்சிக் குழுக்கள் கொங்கோவின் விடுதலைக்கான முன்னணி (The Movement for the Liberation of Congo). இதன் தலைவர் யேன் பியர் பெம்பா. இவர் ஒரு கைத் தொலைபேசி நிறுவன உரிமையாளர். கொங்கோவின் பிரபல வர்த்தகர் ஒருவரின் மகன் பெம்பாவுக்கு உகண்டா ஆதரவளிக்கிறது. குறிப்பாக கொங்கோவின் வடமத்திய பிரதேசத்தை தனது கட்டுப்பாட்டுக்குக் கீழ் வைத்திருக்கும் இவ்வமைப்பில் 10ஆயிரம் கிளர்ச்சியாளர்கள் உள்ளார்கள் எனக் கருதப்படுகிறது. இது MLC என அழைக்கப்படுகிறது. அடுத்த கிளர்ச்சியாளர் குழு கொங்கோவின் ஜனநாயகத்துக்கான முன்னணி - கோமா. (The Congolese Rally For Democracy-GOMA) இதுவே முக்கிய கிளர்ச்சியாளர் குழுவாக இருந்தது. பின்னர் இது இரண்டாகப் பிரிவடைந்தது. கோமாவைத் தளமாகக் கொண்ட இவ்வமைப்பு எமிலி இலுங்கா எனும் மருத்துவரைத் தலைமையாகக் கொண்டது. இவ்வமைப்பில் 10ஆயிரத்திலிருந்து 15ஆயிரம் வரையிலான படையினர் உள்ளனர். கொங்கோ இராணுவத்திலிருந்து அதிருப்தி காரணமாக விலகிய அதிகாரிகளே இவர்களை வழிநடத்துகிறார்கள். இந்த அதிகாரிகளில் பலர் ருற்ஸி இனத்தைச் சேர்ந்தவர்கள். இவ்வமைப்புக்கு ருவாண்டா ஆதரவு வழங்கி வருகிறது. ஆயிரக் கணக்கான ருவாண்டா படையினர் இப்போது கொங்கோவில் உள்ளனர்.

அடுத்த கிளர்ச்சியாளர் அமைப்பு RCD-ML என அழைக்கப்படும் கொங்கோவின் ஜனநாயகத்துக்கான முன்னணி-விடுதலை இயக்கம் (Congolese Rally For Democracy - Liberation Movement) இவ்வமைப்பு ஏர்ணெஸ்ற் வம்பா டியா வம்பா எனும் பலகலைக்கழகப் பேராசிரியரால் தலைமை தாங்கப்படுகிறது. இவர் சர்வாதிகாரி மொபுட்டோவினால் சிறையிலிடப்பட்டவர். முக்கிய இயக்கத் தலைமைப் பதவியில் இருந்து தூக்கியெறியப்பட்டவர். கிட்டத்தட்ட 3500 படையினர் இவ்வமைப்பில் உள்ளனர். இவ்வமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ளதாகக் கூறப்படும் பகுதிகளில் பெரும்பாலும் உகண்டா படையினரே உள்ளனர். இவ்வமைப்பின் கட்டுப்பாட்டில் உள்ளதாகக் கூறப்படும் பகுதிகளில் பெரும்பாலும் உகண்டா படையினரே உள்ளனர். உகண்டாவே இவ்வமைப்புக்கு ஆதரவு வழங்குகிறது.

இந்த யுத்தத்தின் பங்காளர்களாக கபிலாவுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுக்கள் மாத்திரமன்றி கபிலாவுக்கு ஆதரவான கிளர்ச்சிக் குழுக்களும் உள்ளன. இதில் முதலில் வருவது ஹூது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

தீவிரவாதிகள். இவர்களில் பலர் 1994இல் ருவாண்டாவில் படுகொலைகள் புரிந்துவிட்டு அங்கிருந்து கொங்கோவிற்குத் தப்பி வந்தவர்கள். இவர்களுக்கு கபிலாவும் ஸிம்பாவேயும் பயிற்சி அளித்து வருவதாகவும் இவர்களில் சிலர் ஸிம்பாவேயிலிருந்து செயற்படுவதாகவும் ருவாண்டாவும் உகண்டாவும் குற்றம் சாட்டுகின்றன. இவர்களே ம்புஜி-மாயி வைரச் சுரங்கப் பகுதிகளில் ஆயிரக் கணக்கில் உள்ளனர். கிவுல் பகுதியிலும் இவர்களது நடவடிக்கைகள் தீவிரமாக உள்ளது. இப்பகுதியினூடு இவர்கள் ருவாண்டாவுக்குள் அடிக்கடி ஊடுருவுகிறார்கள். அது மாத்திரமல்ல இவர்கள் அடிக்கடி புறுண்டிக்குள்ளும் ஊடுருவி அங்குள்ள ருற்ஸி அரசுக்கெதிராக செயற்படும் ஹூது தீவிரவாதிகளுக்கு உதவி வருகிறார்கள். ஹூது தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்தும்வரை தனது படைகள் கொங்கோவை விட்டு வெளியேறாது என ருவாண்டா வலியுறுத்தி வருகின்றது. இந்த ஹூது தீவிரவாதிகளின் எண்ணிக்கை 5ஆயிரத்திலிருந்து 25ஆயிரம் வரை ஆகும் எனக் கருதப்படுகிறது.

அடுத்த கபிலாவுக்கு ஆதரவான முக்கிய தீவிரவாதக் குழு மாயி-மாயி படையினர். கூர்க்கா இனத்தைப் போன்ற விசுவாசம் படைத்த இனத்தவர்கள் இவர்கள். கிழக்குக் கொங்கோவிலும் வடக்கு மற்றும் தெற்கு கிவுவிலும் இவர்களது நடவடிக்கைகள் தீவிரமாக உள்ளது. இவர்களில் பலர் கபிலாவுடனும் ஹூது தீவிரவாதிகளுடனும் இணைந்து செயற்படுகிறார்கள். தண்ணீர் தம்மைத் துப்பாக்கிக் குண்டுகளிலிருந்து காப்பாற்றும் என நம்பும் இவர்கள் றப்பர்க் குழாய் போன்ற உடையை அணிந்தே சண்டையில் ஈடுபடுகிறார்கள். கிழக்குக் கொங்கோ இவர்களின் பூரண கட்டுப்பாட்டுக்குள்ளேயே உள்ளதாக அவதானிகள் கருதுகிறார்கள்.



அடுத்து இந்த யுத்தத்தின் பங்காளர்களாகிய நாடுகளைப் பார்ப்போம். இதில் முதலில் வருவது ருவாண்டா. இப்போது கொங்கோவில் நடைபெற்று வரும் போரில் முக்கிய பங்கு வகிப்பது. கபிலாவுக்கு எதிராக ருவாண்டா செயற்பட்டு வருகிறது. அரசியல் அவதானிகளின் கருத்தின்படி குறைந்த பட்சம் ருவாண்டாவின் பாதுகாப்புப் பிரச்சனை தீர்க்கப்படின் கொங்கோவின் போர் முடிவுக்கு கொண்டு வரப்படும். பிரச்சனைகள், 1994ம் ஆண்டு 5 இலட்சத்திற்கு மேற்பட்ட ருற்ஸிக்களை ஹூது தீவிரவாதிகள் ருவாண்டாவில் படுகொலை செய்யப்பட்டதையடுத்து இலட்சக் கணக்கான ஹூதுக்கள் ஸெயிருக்கு தப்பியோடியதைத் தொடர்ந்து ஆரம்பித்தன. இந்த ஹூது தீவிரவாதிகள் ஸெயிரைத் தளமாகப் பாவித்து ருவாண்டாவுக்குள் ஊடுருவி தாக்குதல் நடத்தினர். 1996ம் ஆண்டு ருவாண்டாவில் புதிய ருற்ஸி அரசும் அதன் அயல்நாடாகிய உகண்டாவும் கபிலாவுக்கு தமது ஆதரவை வழங்குவதன் மூலம் இத் தாக்குதல்களுக்கு முற்றுப் புள்ளி வைக்க விரும்பினர். ஆனால் கபிலா பதவிக்கு வந்த பின் ருவாண்டாவுடனான தமது உறவுகளை முறித்துக் கொண்டார். கபிலா ஹூது தீவிரவாதிகளுடன் உறவுகொள்ள ஆரம்பித்து விட்டதாக ருவாண்டா குற்றம் சாட்ட ஆரம்பித்தது. இதன் காரணமாக 1998 ஆகஸ்ட் மாதம் ருவாண்டாவும் உகண்டாவும் கபிலாவுக்கு எதிரான கொங்கோவின் ஜனநாயகத்துக்கு எதிரான முன்னணி எனும் கிளர்ச்சிக் குழுவிற்கு ஆதரவளித்து கபிலாவுக்கெதிரான போரை ஆரம்பித்தன. ருவாண்டாவின் பலமான 40ஆயிரம் படையினரில் கால் பகுதியினர் இப்போது கொங்கோவில் உள்ளனர். இந்தப் போருக்கு எவ்வளவு பணம் செலவாகிறது என்பது குறித்து ருவாண்டா அரசு கண்டு கொள்ளவில்லை. காரணம் தனது பாதுகாப்புக் குறித்து அது அதிகம் கவலை கொள்கிறது. ருவாண்டாவின் வடமேற்குப் பகுதியில் முன்பு ஹூது தீவிரவாதிகளின் நடவடிக்கைகள் அதிகமாக இருந்தது. ஆனால் கொங்கோவுக்குள் ருவாண்டா படைகள் நுழைந்தபின் அவை தணிந்து விட்டன. தனது எல்லைகளுக்கான பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும்வரை ஹூது தீவிரவாதிகள் நிராயுதபாணிகள் ஆக்கப்படும்வரை தனது படைகள் கொங்கோவை விட்டு வெளியேறாது என ருவாண்டா பகிரங்கமாகவே அறிவித்துள்ளது. ஆனால் அரசியல் அவதானிகளின் கருத்துப்படி ஹூது தீவிரவாதிகளை நிராயுதபாணிகளாக்குவதென்பது ஐ.நா.வுக்கு முடியாத காரியம். ருவாண்டாவின் மக்கள் தொகையில் 15வீதமே ருற்ஸி இனத்தவர் என்ற போதிலும் இப்போது அரசு அவர்களிடமே. தமது இனத்தின் மீதான படுகொலைகளிலிருந்து மீண்டு அவர்கள் ஹூது இனத்தவருடன் அதிகாரத்தைப் பகிர்ந்து கொள்வதற்கு காலம் இன்னும் எடுக்கும்.





இந்த யுத்தத்தின் அடுத்த பங்காள நாடு உகண்டா. உகண்டா இந்த யுத்தத்தில் பங்கு கொள்வதற்கு சந்தர்ப்பவாதக் காரணங்களைத் தவிர வேறு முக்கிய காரணம் எதுவுமில்லை. உகண்டா இப்போது இந்த யுத்தத்திலிருந்து வெளியேற விரும்புகிறது. காரணம் மேற்குலகத்தால் ஆபிரிக்காவின் திறமையான முற்போக்கான தலைவர்களில் ஒருவரென்று கருதப்படும் உகண்டா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜனாதிபதி முஸவேனியின் கௌரவத்திற்கு இந்தப் போர் இழுக்குத் தருவதே. ஆனால் யுத்தத்தை விட்டு வெளியேறுவதும் உகண்டாவின் கௌரவத்தை கேள்விக்குறியாக்கும். இப்போது 8ஆயிரத்திலிருந்து 10ஆயிரம் வரையிலான உகண்டாப் படைகள் கொங்கோவிலுள்ளன. உகண்டா கொங்கோவின் விடுதலைக்கான முன்னணிக்கு கொங்கோவின் வடமேற்கிலும் வம்பாவின் தலைமையிலான ஜனநாயகத்துக்கான முன்னணிக்கும் ஆதரவு வழங்குகிறது. உகண்டா படையினரே கொங்கோவைச் சூறையாடுவதில் இப்போது முதன்மையானவர்கள். இவர்களே கொங்கோவின் வைரங்கள், தங்கம், மரம், யானைத் தந்தங்கள் ஆகியவற்றை சூறையாடி வருகின்றனர்.


அடுத்த பங்காள நாடு புறூண்டி. இதுவும் கபிலாவுக்கு எதிராக செயற்படுவது. புறூண்டியும் தனது படையினர் கொங்கோவில் இருப்பதை பகிரங்கமாக ஒப்புக் கொள்கிறது. ஆனால் தமது படையினர் கபிலாவுக்கோ அல்லது அவருக்கெதிரான கிளர்ச்சியாளர்களுக்கோ ஆதரவளிக்கவில்லை எனக் கூறும் புறூண்டி, தனது படையினர் ஹூது தீவிரவாதிகளுக்கெதிராகப் போராடுகிறார்கள் எனக் கூறுகிறது. ருவாண்டாவைப் போலவே புறூண்டியிலும் ஹூது, ருற்ஸி இனப் பிரச்சனையும் இதனால் ஏற்பட்ட உள்நாட்டு யுத்தமும் 1983ம் ஆண்டிலிருந்து தொடர்கிறது. புறூண்டியின் இன்றைய அரசு நாட்டின் தென்கிழக்குப் பகுதியை தனது கட்டுப்பாட்டிலிருந்து இழந்திருக்கிறது. இங்கு உள்நாட்டுப் போர் உக்கிரமடைந்துள்ளது. தினந்தோறும் இங்கிருந்து 1000பேர் அகதிகளாக தான்ஸானியாவுக்குப் போகிறார்கள்.

இந்த யுத்தத்தின் அடுத்த பங்காளி நாடு தான்ஸானியா. இதில் தான்ஸானியாவின் பங்கு 1994 இலிருந்து இன்றுவரை தொடர்ந்து நாடுகளைவிட்டு வெளியேறும் ஹூது அகதிகளுக்கு புகலிடமாக இருந்து வருவது. ஐ. நா. அகதிகளுக்கான ஆணையாளரின் கணக்கீட்டின்படி இப்போது மேற்கு தன்ஸானியாவில் உள்ள அகதி முகாம்களில் 3இலட்சத்து 20ஆயிரம் புறூண்டி மக்கள் அகதிகளாக உள்ளனர். கடந்த அக்டோபர் மாதம் புறூண்டியில் மீண்டும் உள்நாட்டு யுத்தம் தீவிரமடைந்ததைத் தொடர்ந்து மேலும் 50ஆயிரம் பேர் தான்ஸானியாவுக்கு அகதிகளாக வந்துள்ளனர். கொங்கோவிலிருந்தும் தான்ஸானியாவுக்கு அகதிகள் தொடர்ந்து வந்தபடியுள்ளனர்.

கொங்கோ யுத்தத்தின் அடுத்த தொடர்பு நாடு சூடான். சூடான் கபிலாவுக்கு பல தடவைகள் உதவியுள்ளது. கடந்த வருடம் கிளர்ச்சியாளர்களின் கட்டுப்பாட்டில் உள்ள கொங்கோவின் வடபகுதி நகர்கள்மீது குண்டுவீச்சுத் தாக்குதல்களை நடத்த சூடான் கபிலாவிற்கு தனது போர்விமானங்களை வழங்கி உதவியுள்ளது. சூடான் இதனை வெளிப்படையாக ஏற்றுக்கொள்ள மறுத்தபோதும் தனது எதிரியாகிய உகண்டாவுக்கு கபிலா எதிரி என்பதால் 'எதிரிக்கு எதிரி எனக்கு நண்பன்' என்ற வகையில் சூடான் கபிலாவுக்கு உதவுகிறது. ஆனால் கடந்த வருட இறுதியில் சூடானும் உகண்டாவும் தமது விரோதங்களைக் கை விடுவது என்ற இணக்கத்துக்கு வந்துள்ளன. உகாண்டா அரசாங்கம் சூடானின் இஸ்லாமிய அரசாங்கத்திற்கெதிராக கடந்த 16 வருடங்களாக போராடி வரும் சூடான் மக்கள் விடுதலை இராணுவத்துக்கு ஆதரவு வழங்கி வருவது குறிப்பிடத் தக்கது.

இந்த யுத்தத்துடன் தொடர்புடைய அடுத்த நாடு அங்கோலா. 1997ம் ஆண்டு கொங்கோவில் சர்வாதிகாரி மொபுட்டோ பதவியிலிருந்து தூக்கி எறியப்பட்டதும் ஜோஸே எடுவார்டோ டோஸ் ஸான் ரோஸின் தலைமையிலான அங்கோலா அரசு தனது சொந்த நலன்களிற்காக கொங்கோவினுள் நுழைந்தது. குறிப்பாக தனக்கெதிராக கிளர்ச்சிகளில் ஈடுபடும் UNITAவின் கொங்கோ தளங்களின்மீது தாக்குதல் நடத்துவதே அங்கோலா அரசின் நோக்கம். ஜொனாஸ் சுவாம்பியின் தலைமையிலான UNITA கிளர்ச்சியாளர்களுக்கு ஸெயிரின் சர்வாதிகாரி மொபுட்டோ தசாப்தங்களாக ஆதரவளித்து வந்தார். UNITA எனப்படும் அங்கோலாவின் பூரண விடுதலைக்கான கூட்டமைப்பில் 35ஆயிரம் கிளர்ச்சியாளர்கள் உள்ளனர். அங்கோலா அரச படையினரின் எண்ணிக்கை 90ஆயிரம். அங்கோலா படைகள் கொங்கோவில் கபிலாவுக்கு ஆதரவாக செயற்படுகின்றன. இரண்டாயிரம் அங்கோலாப் படைகள் இப்போது கொங்கோவில் உள்ளன.

இந்த யுத்தத்தின் அடுத்த தொடர்பு நாடு நமீபியா. கபிலாவுக்கு ஆதரவான நமீபியா இந்த யுத்தத்தில் கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்களுக்கு முன்னர் குதித்தது. அது மாத்திரமல்ல கடந்த டிசம்பர் மாதத்திலிருந்து நமீபியாவில் இருந்து அங்கோலாப் படைகள் சண்டையிடவும் அனுமதித்தது. நமீபிய கிளர்ச்சியாளர்களுக்கு UNITA உதவுவதனாலேயே நமீபியா இம் முடிவை எடுத்தது. நமீபிய படையினரில் ஏறத்தாழ மூன்றிலொரு பகுதியாகிய 2 ஆயிரம் படையினர் இப்போது கொங்கோவில் நிலை கொண்டுள்ளனர்.




தொடர்வது கபிலாவுக்கு ஆதரவாக இந்த யுத்தத்தில் பங்கு கொள்ளும் ஸிம்பாவே. ஸிம்பாவே ஜனாதிபதி முகாபே, கபிலாவுக்கு ஆதரவாக 7ஆயிரத்திலிருந்து 11ஆயிரம் ஸிம்பாவே படையினரை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கொங்கோவுக்கு அனுப்பியுள்ளார். இதற்கு முக்கிய காரணம் தனது அரசியல் விரோதிகளான உகண்டா, ருவாண்டாவிற்கு எதிராக தென்னாபிரிக்க நாடுகளின் முக்கிய அரசியல் சக்தியாக தாம் உருவெடுக்க வேண்டும் என்ற முகாபேயின் நோக்கமே. கபிலாவின் கட்டுப்பாட்டுக்குள் உள்ள பகுதிகளிலுள்ள வைரச் சுரங்கங்களுக்கான பாதைகள் இப்போது ஸிம்பாவே படைகளின் வசமுள்ளன. ஆனால் ஸிம்பாவே தனது படைகளை கொங்கோவில் வைத்திருப்பதை ஸிம்பாவே மக்கள் பெருமளவில் விரும்பவில்லை. காரணம் கொங்கோவில் நிலை கொண்டுள்ள ஸிம்பாவே படைகளுக்கான செலவீடுகள் ஸிம்பாவேக்கான சர்வதேச நிதி உதவிகளிலிருந்து எடுக்கப்படுகின்றன. இதனால் தேவையற்ற இந்த யுத்தத்துக்கான செலவீடுகளில் தாம் ஒவ்வொருவரும் பங்கு கொள்வதாக ஸிம்பாவே மக்கள் அதிருப்தி அடைகின்றனர்.

இந்த யுத்தத்தில் இறுதி தொடர்பு நாடு ஸாம்பியா. பிரச்சனைக்குரிய பல நாடுகளுடன் எல்லைகளைக் கொண்டுள்ள ஸாம்பியா மற்ற நாடுகளைப் போலல்லாமல் நீண்ட காலமாகவே அரசியல் உறுதி வாய்ந்த நாடு. 1991ம் ஆண்டிலிருந்து ஃபிறெடரிக் சிலுபா, ஸாம்பியாவின் ஜனாதிபதியாகப் பதவி வகித்து வருகிறார். இப்பிரதேசத்தில் எழுந்த பல பிரச்சனைகளுக்கு ஸாம்பியா மத்தியஸ்தம் வகித்துள்ளது. கொங்கோ பிரச்சினைக்கு ஸாம்பியா மத்தியஸ்தம் வகிக்க முனைந்தபோதும் கிளர்ச்சியாளர்கள் ஆயுதங்களை களைய மறுப்பதால் சமாதான முயற்சிகள் கைகூடவில்லை. அங்கோலா குறித்த ஸாம்பியாவின் சமாதான முயற்சிகளிலும் இதுவே நிலை. தற்போது அங்கோலாவில் நடைபெறும் உள்நாட்டு யுத்தத்தில் 2 இலட்சம் பேர் அகதிகளாகியுள்ளனர். இதில் ஒரு இலட்சத்து 60ஆயிரம் பேர் அகதிகளாக ஸாம்பியாவுக்குள் சென்றுள்ளனர். UNITA கிளர்ச்சியாளரைத் தேடி தாக்குதல் நடத்த ஸாம்பியாவுக்குள் நுழையும் அங்கோலாப் படைகளைத் தடுக்க ஸாம்பியா தனது படைகளை எல்லைக்கு அனுப்பியுள்ளது. அங்கோலாவில் ஆயுதங்கள் தாராளமாகக் கிடைப்பது ஸாம்பியாவில் ஆயுத வியாபாரத்தையும் குற்றச் செயல்களையும் அதிகரித்துள்ளது.

இத்தனை நாடுகளையும் கிளர்ச்சிப் படைகளையும் இனப் பிரச்சனைகளையும் அரசியல் சிக்கல்களையும் கொண்ட கொங்கோ ஜனநாயகக் குடியரசின் இந்த நீண்ட உக்கிரமான யுத்தத்தை வெறுமனே பலவீனமான 5ஆயிரத்துக்கும் சற்று அதிகமான ஐ.நா. சமாதானப் படைகளை அனுப்புவதன் மூலம் முடிவுக்குக் கொண்டு வந்து விடலாம் என ஐ.நா. கருதுவது வேடிக்கையானது. ஏற்கனவே சூடானில் ஐ. நா. சமாதானப் படையைச் சேர்ந்த பாகிஸ்தானியப் படையினரும் அமெரிக்கப் படையினரும் கிளர்ச்சியாளர்களினால் கொல்லப்பட்டுள்ளனர். ஸியரலியோனில் தினந்தோறும் கிளர்ச்சியாளர்களினால் பாதுகாப்புப் படையினர் கொல்லப்பட்டு வருகின்றனர். அது மட்டுமல்ல அங்கு 500க்கு மேற்பட்ட ஐ.நா. பாதுகாப்புப் படையினர் கிளர்ச்சியாளர்களால் பிடிக்கப்பட்டு ஆயுதங்களும் சீருடைகளும் பறிக்கப்பட்டு பணயக் கைதிகளாக வைக்கப்பட்டுள்ளனர். இத்தகைய நிலையில் தமது பாதுகாப்புக்கே உத்தரவாதமில்லாத ஐ.நா. பாதுகாப்புப் படையினர் தொடரும் கொங்கோவின் யுத்தத்தை எப்படி முடிவுக்கு கொண்டுவர முடியும்?

உக்கிரமான இந்த யுத்தம் தொடர்வதும் உயிர்கள் பலியாவதும் இயற்கை வளங்கள் சூறையாடப்படுவதும் பிரச்சனைகள் மேலும் சிக்கலடைவதும் சென்ற நூற்றாண்டின் முடிவு மட்டுமல்ல, இந்த நூற்றாண்டின் ஆரம்பமும் ஆபிரிக்காவுக்கு வழங்கிய பெரும் சோகம்.

●




## வாழ்த்துகிறோம்!




1999இல் வெளிவந்த சிறுகதைத் தொகுப்பிற்கான லில்லி தேவசிகாமணி இலக்கியப்பரிசு, கல்லாறு சதீஷ் எழுதிய 'பனிப்பாறைகளும் சுடுகின்றன' எனும் சிறுகதைத் தொகுதிக்கு கிடைத்துள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**காமன் வசந்தன் குளிர்நாடன்**

இன்றைய உலகத்தினதும் உலோகாயுதத்தினதும் உலக மயமாக்கலினதும் அரசியல் பொருளாதார அடிப்படையைப் பற்றிப் பேசாமல் மௌனம் சாதிப்பது மேல்நாட்டு பல்கலைக்கழகம் சார்ந்த கல்வித்துறையினதும் பி.நவீனத்துவ கொடுமுடிகள் பலரதும்(விதிவிலக்கு: டெர்ரிடா\தெரிதா\தெர்ரிடா.... வேறு பல வாசிப்புகளும் அவருடைய பெயருக்குச் சாத்தியம்) இயற்பண்பாகி விட்டது. மொழியும் தொடர்பூடகங்கள் இவை இரண்டினதும் கூட்டுச் சித்த விளையாட்டுகளூடாக மட்டுமே அதிகாரம் என்ற புரிதலில் அரசியற் பொருளாதாரம் என்ற முக்கியமான அம்சத்தை இவர்கள் கோட்டை விடுகிறார்கள். (இது ஒரு பெரு வல்லரசுச் சதி என்றும் இன்னொரு வகையான பெரும் கதையாடலுக்கான முஸ்தீபு\முன்தீர்வு என்று யாராவது குறை\நிறை சொன்னாலும் அதனை ஏற்றுக் கொள்ள இந்தப் பத்தியாளர்/கள் தயாராக இருக்கின்றார்/கள்!)

Chomsky\சோம்ஸ்கி\சாம்ஸ்கி political economy of media பற்றி எழுதியுள்ள முக்கியமான பகுப்பாய்வையும் இவர்கள் சட்டை செய்வதில்லை. அரசியல் பொருளாதாரம் பற்றிப் பேசாமல் விடுவதும் ஒரு அரசியல்தானே?

நவீன தொடர்பூடகங்களும் அன்றாடம் பார்வைப்படுகிற தொடர்பு வலையும்\வலயமும், அவை அனைத்தும் எங்கள் மூளைகளிலும் காட்சிகளிலும் அலைகின்ற வியாபார கருத்தியல் படிமங்களும் எங்கள் எல்லோரையும் நுகர்வாளர்களாகவும் முகத்திற்குப் பதிலாக வெறும் bar code மட்டுமேயுள்ள ஒரு அதிநவீன, பின்நவீனத்துவ உயிரி(லி)யாய் மாற்றிவிட்டுள்ளன. அடையாள அட்டைகள், குடும்ப அட்டைகள், காப்புறுதி அட்டைகள் போன்ற பல்வேறு papiers துண்டுகளில் எங்களுடைய முகம் bar code ஆகச் சுருங்கிக் கிடக்கிறது. அந்த வகையில் முழு மனித குலத்தையுமே bar codeஆக மாற்றிவிடுவது எல்லோரையும் கண்காணிப்பதற்கு மிக இலகுவாக இருக்குமல்லவா?

Foucault\ Fuck off\ மற்றும் après Foucault வந்த பி\நவீனத்துவ bar codeகாரர் சொல்கிற panoptican இதுதானோ? \இதுதானே?! இந்தக் கண்காணிப்பும் கண்காணிப்பு அரசியலும் உலகமயமாதல் எனும் அனைத்துலகச் சுரண்டல் பொறிமுறைக்கு மிகவும் அத்தியாவசியமானது. மனிதர்களை சிந்தனையற்ற அல்லது அவர்களைச் சிந்திக்கத் தூண்டாத அஃறிணையாக மாற்றிவிடுவதன் மூலம் அவர்களை அ-அரசியல்படுத்துவது (dépolitisation) என்பதற்கான பின்நவீனத்துவ மொழி/முழி பெயர்ப்பு அ-அரசியலாதல்!)

இந்தப் பொறிமுறை பல்லும் சில்லுமான தேவை. அ-அரசியல்படுத்துவதை இரண்டு வழிகளில் செய்யமுடியும்.

1. நேரடியான அரச பயங்கரவாத, ஒழுங்குமுறை இவற்றுடான கட்டுப்பாடு

2. மற்றையது மறைமுகமாக மெல்ல மெல்ல மக்களை மந்தமாக்குவது. தொலைக்காட்சியும் விளம்பரங்களும் சினிமாவும் இதற்கு மிகவும் வாகான வாகனமாகவும் சாதனமாகவும் உள்ளன.

விடுதலையையும் சுதந்திரத்தையும் நேரடியாக கட்டுப்படுத்துவதைவிட அவற்றுள் அடங்கியிருக்கிற அரசியலை நீக்கிவிட்டால் யானை சாப்பிட்டுத் தள்ளிய விளாம்பழம் மாதிரி ஒன்று மிஞ்சுமல்லவா? இதுதான் நுகர்வோர் உலகத்து இன்றைய அரசியல் யதார்த்தங்களுள் தலையாயது. இந் நுகர்வோர் உலகத்தில் இருக்கிற சுதந்திரம், உங்களிற்குத் தேவையான பொருட்களை நீங்கள் தெரிவு செய்வதற்கு இருக்கிற சுதந்திரம். உதாரணமாக ஷாம்பூவை எடுத்துக்கொண்டால் ஆண்களுக்கு, பெண்களுக்கு, சிறுவருக்கு, குழந்தைகளுக்கு, கைக்குழந்தைகளுக்கு, அவற்றிலும் சிறிய குஞ்சுகளுக்கு, குட்டிகளுக்கு என்று ஏராளம் தெரிவுகள் உள்ளன. பெண்களின் ஷாம்பூவைப் பொறுத்தவரையிலோ தெரிவுகள் பன்முக வாசத்துக்கும் பன்முக வாசிப்புக்கும் உட்படக்கூடியவை என்று நுகர்வோர் நலம் பேணும் நிறுவனத்தின் சான்றோர் அவையைச் சேர்ந்த ஒரு பிரமுகர் Le Monde\ Guardien weekly இதழில் diplomatique பதிப்பில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சொல்லியிருந்தார். பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண் என்று பெண்களின் ஏழு பருவங்களுக்கும் ஏற்றவாறு ஏழு ஷாம்பூக்கள் கிடைக்கின்றன. (இவற்றுள்ளும் உட்பிரிவுகள் ஏராளம் உள்ளன. அவற்றை பிரித்து ரைக்கப் புகின் நான்காம் அகிலத்தின் நவீன பாப்லோவாதம் ஏற்படுத்திய பிரிவுகளைவிட அதிகப் பிரிவுகள்பற்றி எழுதவேண்டி வரும் என்பதால் விரிவஞ்சி விடுத்தோம்)

இந்த மாதிரி 'ஷாம்பூ' தெரிவுகள்தான் இன்று நமக்கு இருக்கக்கூடிய சுதந்திரம். ஷாம்பூவுக்கு வசதியற்றவர்கள் குடிக்கத் தண்ணீர் இல்லாமல் தினந்தோறும் மைல் கணக்காக நடந்து சென்று தண்ணீர் அள்ளச் செல்பவர்களைப்பற்றி நாங்கள் கவலைப்படமுடியாது. ஏனெனில் உலகமயமாக்கலும் உலகவங்கி\ IMF கூட்டிலும் உலக, பொருளாதார ஏகபோகக் கட்டமைப்பில் தவிர்க்கமுடியாத உப விளைவு அல்லவா அது? பி\நவீனத்துவ மொழியில்/பாஷையில் சொன்னால்/மொழிந்தால்/பாஷித்தால் இதுதான் colateral damage.

அதிகாரம் என்பதை நுண்ணதிகாரமாக எல்லா இடங்களுக்கும் எல்லாத் தளங்களுக்கும் துண்டு துண்டாக்கி விரிவாக்கி விட்ட பிற்பாடு(இது ஒரு முக்கியமான சிந்தனை மாற்றம்தான்) அதிகாரம் பெருமளவில் ஏகபோகமாகவும் வன்முறையாகவும் உலகமயமாக்கலின் நிழலில் மறைந்திருக்கிற மேலைநாட்டுக் காலனித்துவமாகவும்கூட இருக்கின்றது என்ற முக்கியமான நடைமுறைப் பாதிப்பை நமது நவீன பின்நவீனவாதிகள் மறந்து/மறைத்து விட்டனர்.

அதிகாரத்தின் சித்து விளையாட்டுக்களை கலாசார, பண்பாட்டுத் தளங்களுள்ளே மட்டும் சுற்றிச் சுற்றி தேடி கட்டுரைகள் வனைந்து/ வரைந்து அரசியல் என்பதே cultural studiesதான் என்று மாற்றிவிட்டார்கள். காட்டைப் பார்க்கப் போய் மரங்களை மட்டுமே பார்த்த கதைதான் இது. அரசியல் பொருளாதார அடிப்படைகளைப் பற்றிப் பேசாமல் பண்பாட்டு ஆய்வுகளும் கலாசார ஆய்வுகளும் அதிகாரம்பற்றி ஆய்வுகளும் முழுமை பெற முடியாது. அந்த வகையில் பி-நவீனத்துவம் இப்போது நிகழ்த்தியிருக்கின்ற ஒரு வலிந்த இடப் பெயர்வு (forced migration - அதாவது அரசியல் பொருளாதாரத்தை இடம் பெயர்த்துவிட்டு மேலோட்டமான பண்பாட்டு/ கலாசார ஆய்வுகளைச் செய்வது. இன்றைய சூழலில் உலகமயமாக்கலுக்கும் அதனோடு இணைந்து வருகிற ஆபத்தான அரசியலுக்கும் மறைமுகமாகவே உதவியளிக் கிறது.

Derrida\தெர்ரிதா\டெர்ரிடா போன்ற ஒரு சிலர் இந்த ஆபத்தை இனம் கண்டுள்ளார்கள் எனினும் அரசியல் பொருளாதாரத்துக்குள் நாங்கள் திரும்ப ஒரு 'நீண்ட பயணம்' மேற்கொள்ள வேண்டும். தயவுசெய்து மாவோ மன்னிக்க வேண்டும்.

●




# காலக்குறி

நம் காலத்திற்கான நவீன மொழிப்பரப்பாய் 'காலக்குறி' தமிழ்நாட்டில் இருந்து வெளிவருகிறது. ஒடுக்கப்பட்ட மக்களின் சிந்தனையின் பால் அக்கறையும் நேசிப்பும் கொண்டவர்க்கு ஓர் அரிய சஞ்சிகை. எப்போதும் கால தாமதமின்றி நேரத் திற்கே வந்து சேரும் 'காலக்குறி' இம்முறை நிதி நெருக்கடியின் கைகளில் சிக்கி மூச்சுத் திணறி மீண்டும் எழுந்து வந்திருக்கிறது. உலகமெங்கும் பரந்து வாழும் ஒடுக்கப்பட்ட விடுதலையின்பால் அக்கறை கொண்ட தமிழ் பேசும் மக்கள் இதன் வரவில் அக்கறையும் பங்கும் கொள்வது அவசியமானது.

தமிழிலக்கியத்தில் பிரம்ம பீடாதிபதியாய் வீற்றிருந்த மௌனியை ஒரு மறு வாசிப்புக்கு உட்படுத்தி 'மனக்கோட்டையில் அலைவுறும் மனித உடல்' என ஜமாலன் காணும் ஆய்வு தமிழ் இலக்கிய ஆர்வலர்களுக்கு ஓர் அறிவு. மற்றும் இந்தியத் தேசியத்தை இந்துத்துவ தேசமாய் கட்டமைக்க முயலும் 'ஹே ராம்' - கமல் மதவாதத்திற்கு ஒரு moral support என மிகவும் ஆணித்தரமாக தெளிவுபடுத்தும் குருபரனின் கட்டுரை 'ஹே ராம்' பார்த்த அனைவரும் படிக்க வேண்டிய ஒன்று.

ஒடுக்கப்பட்ட விளிம்புநிலை மக்களின் ஒருங்கிணைவுக்கு ஆப்பு வைக்கும் பின்நவீனத்துவத்தின் அரசியல் பற்றிய மறைந்த தோழர் கோ. கேசவனின் பல் முனை ஆய்வு, இக்காலத்தின் தேவை அவரே என ஏங்க வைக்கிறது.

இப்படி அவசியமானதும் ஆழமானதுமாய்....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என் கடன் பணி செய்து கிடப்பதே!

ராஜாத்தி

இண்டைக்குச் சம்பளம் எடுத்தவுடனை சுந்தரம் அண்ணன்ரை கடனைக் கொடுத்திடோணும். ஒரு மாசத்திற்கு மேலாயிற்று. இனிமேல் கடன் வாங்கக்கூடாது சுதன் நினைத்துக் கொண்டான். அவனுக்குத் தேவை ஏற்படும் போதெல்லாம் சுந்தரம் அண்ணைதான் உதவி செய்யிறார்.

சுதன் லண்டனுக்கு வந்த ஆரம்பத்திலை சுந்தரம் அண்ணனோடைதான் இருந்தான். போன மாசம் ஒரு off licence கடையிலை(பிரதானமாக மதுவகையும் ஏனையவையும் விற்கும் கடை) சுதனுக்கு வேலை கிடைச்சதுக்கும் அவர் தான் காரணம்.

கணக்கு முடிச்சுக் கடையை மூடி வெளியே வர இரவு 11.30க்கு மேலாயிற்று.

சுதன் வேலை செய்யிற இடத்திலை இருந்து சுந்தரம் அண்ணையிட்டைப் போய்ச் சேர அரை மணித்தியாலத்துக்கு மேலை வேணும். அவசர அவசரமாக நடந்தான் டாக்சி ஸ்ரேசனுக்கு.

◆◆◆

நல்ல வேளை சுந்தரம் அண்ணன் இருந்தார்.

"யாரது? அட சுதனா! என்ன இந்த நேரம்? நேரம் காலம் தெரியவில்லையே உனக்கு" கரிசனையுடன் கேட்டார் சுந்தரமண்ணை.

"நேரம் காலம் பார்த்தா ஒன்றும் சரி வராதண்ணை. இண்டைக்குச் சம்பளம் எடுத்தனான். அதுதான் உங்களிட்டை வாங்கின கடனைத் தருவம் எண்டு வந்தனான்."

தங்கச்சியின்ரை சாமத்தியச் சடங்கு செய்ய ஒரு இலட்சம் தேவை எண்டு அம்மா சொன்னபோது சுதனின் கையில் காசிருக்கவில்லை. சுதன், சுந்தரம் அண்ணனிட்டைக் கடன் வேண்டித்தான் அனுப்பினான்.

"என்ன இப்ப அவசரம். ஆறுதலாத் தரலாம் தானே."

"இல்லண்ண சொன்ன நேரத்துக்குத் தந்தால்தானே இன்னுமொரு தடவை கேக்கக்க மனம் கூசாமல் கேட்கலாம்"

"நல்லாக் கதைக்கப் பழகிட்டா நீ. இண்டைக்கு இஞ்சை நில்லன்"

சுந்தரம் அண்ணை அன்பாய்க் கேட்டார்.

"இல்லண்ண ரூமிலை கண்ணனுக்குக் காய்ச்சல் தனியப் படுத்துக் கிடப்பான். நான் போகவேணும்"

சுந்தரம் அண்ணனின் பதிலுக்குக் காத்திராமல் நடந்தான் சுதன்.

◆◆◆

சுதன் ரூம் வந்து சேர நடு இரவு 1.30க்கு மேலாகி இருந்தது. கண்ணன் படுத்திருந்தான். இன்னும் காய்ச்சல் சரி வரேல்லைப் போலை. அவனை எழுப்பக் கூடாது பாவம் காய்ச்சல்காரன். என்ன சாப்பிட்டானோ தெரியல்லை.

கண்ணனின் நெஞ்சில் கையை வைத்துப் பார்த்தான். காய்ச்சல் குறைந்திருந்தது.

"என்ன கண்ணன், காய்ச்சல் குறைஞ்சிருக்குப் போலை"

"பரவாயில்லை. ஆ.... உன்ரை அம்மா call எடுத்தவ. உன்னை வேலை விட்டு வந்தவுடனை call எடுக்கட்டாம். ஏதோ அவசரமாக் கதைக்க வேணுமாம்"

"அவசரமாமோ? எத்தனை மணிக்கு எடுத்தவ"

"ஏழு மணி இருக்கும். கருணா மாமிற்ரை எடுத்துச் சொன்னா வருவாவாம்"

◆◆◆

கருணா மாமியின் தூக்கத்தைக் கலைத்தது ரெலிபோன் சத்தம்.

"ஹலோ.... ஹலோ...."

"ஹலோ.... கருணா மாமியோ?"

"ஓம்! நீங்க...."

"நான் சுதன் மாமி! லண்டனில இருந்து...."

"ஆ! சுதன் எப்படி சுக பலன்?"

"நான் நல்லா இருக்கிறன் மாமி. அம்மா எடுக்கச் சொன்னவவாம். அதுதான் எடுத்தனான்"

"லைன்லை நிக்கிறீங்களோ"

"இப்ப வேணாம் மாமி. இப்பதான் வேலையாலை வந்தனான். இன்னும் இரண்டு மணித்தியாலத்திலை எடுக்கிறேன். வந்து நிக்கச் சொல்லுங்கோ"

"எப்பிடித் தம்பி வேலையெல்லாம்? சமைச்சுத்தான் சாப்பிடுறீங்களோ?"

"எல்லாம் சரியான கஷ்டம் மாமி. ஒழுங்கான சாப்பாடு சாப்பிட்டு எவ்வளவோ நாளாச்சு"

"எண்டாலும் நீ கெட்டிக்காரன் தம்பி. இந்தச் சின்ன வயசிலை கண்ணுக்குத் தெரியாத ராச்சியம் போய் உழைக்கிறா. உன்ரை அம்மாவுக்குக் கூட ஒரே உன்ரை கதைதான். நேற்றும் கோயிலுக்குப் போய் உன்ரை பேருக்கு அர்ச்சனை போட்டவவாம்"

"சரி மாமி! வைக்கிறன். எனக்கு நித்திரை வருகுது"

◆◆◆

அரை மணித்தியாலத்துக்கு முன்னமே வந்தா சுதன்ரை அம்மா. சுதன்ரை தங்கச்சியையும் அழைத்துக்கொண்டு.

"என் கருணா! எங்கை கண்ணன்?"

"இந்தா! ரீவி கேம் விளையாடுறான். சுதனும் இருந்தாவெண்டா இப்படித்தான் இருந்திருப்பான்"

"பாவம் பிள்ளை! பயத்திலை தானே அனுப்பினனான்"

"அவனை அனுப்பினதாலை நீ நல்லாத்தானே இருக்கா"

"நான் நல்லா இருக்க அவனை அனுப்பல்ல கருணா. எல்லாம் அவன்ரை நல்லதுக்குத்தான்"

"ஆ.... ரெலிபோன் அடிக்குது. உங்களுக்குத்தான் இருக்கும் எடுத்துக் கதையுங்கோ"

"ஹலோ.... ஹலோ.... ஹலோ....



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யார் சுதனோ?"

"ஹலோ.... அம்மாவோ? நான் சுதன்தான் அம்மா"

"எப்பிடித் தம்பி, நல்லா இருக்கயா? நல்லா சாப்பிட்ட னியா? நல்லா சாப்பிடோணும். உன்னை நினைச்சாத்தான் எனக் குக் கவலை"

"ஏனம்மா இப்ப அழுறீங்கள் லண்டனிலை இல்லாத சாப்பாடா! நீங்க கவலைப் படாதேங்கோ. ஆ.... எப்படியம்மா தங்கச்சி யின்ரை சாமத்தியச் சடங்கு?"

"நல்ல வடிவாச் செய்தனான் தம்பி. நீ அனுப்பின காசிலை நகை மட்டும் ஐம்பதுக்கு வாங்கி னனான். சாறி மூணும் 27000 பிடிச்சுச்சு. சாப்பாட்டுக்கு காசு காணாம பவானி அன்ரிற்ர ஒரு ஐம்பது கடன் வாங்கினனான். நீ அனுப்பின உடனே தருவன் என்று"

எடுத்த சம்பளத்தைப் போன தடவை வாங்கின கடனைக் கொடுத்து முடிக்க திரும்பவும் காசு தேவை எண்டால் எங்கு போறது.

"எப்ப கொடுக்கோணும்"

"அவவும் ஏதோ தேவைக்கு வைச்சிருந்தவையாம். இரண்டு கிழமையிலை தரச் சொல்லித் தான் தந்தவ"

இடி விழுந்தது போலிருந்தது சுதனுக்கு.

"அம்மா உடன அனுப்புற தெண்டால் யாரிட்டையும் கடன் வாங்கித்தான் அனுப்போணும். கொஞ்சம் பொறுக்கச் சொல் லுங்கோ. வாற மாசம் சம்பளத் திலை அனுப்பலாம்"

"நீ உடன அனுப்புவா எண்ட நம்பிக்கையிலைதான் தந்தவ. இப்ப பொறுக்கச் சொன்னா"

"சரி பார்ப்பம்?"

"தம்பி காசு அனுப்போணும் எண்டு ஓவரைம் அது இதெண்டு செய்து உடம்பைக் கெடுத் திடாத"

சிரிப்புத்தான் வந்தது சுதனுக்கு. அவன் லண்டனுக்கு வ ந ் த த ி ல ி ரு ந ் து 'நல்லா சாப்பிடு. நல்லாத் தூங்கு. ஓவர்ரைம் செய்து உடம்பைக் கெடுக்காத' அம்மா சொல்லி அவன் கேட்டு புளிச்சுப் போயிற்று.

"அம்மா! தங்கச்சியின்ரை சாமத்தியச் சடங்கை வீடியோ எடுத்தனீங்களோ?"

"ஓம் தம்பி! உனக்கு அனுப் போணும் எண்டுதான் எடுத்த னான். ஊருக்கை இது மாதிரி ஒருத்தரும் சிறப்பாச் செய் யேல்லை எண்டு வந்த ஆக்கள் கதைச்சாங்க. நீ இல்லை எண்டு தான் எனக்குக் கவல"

நானும் அங்கை நிண்டிருந்தா
நீங்களோ அல்லது அப்பாவோ
ஊருக்குள்ள சிறப்பா எங்கை
செய்திருக்கப் போறியள்?

அம்மாவிடம் கேட்கவேணும் போலை இருந்தது சுதனுக்கு.

"சரி அம்மா! தங்கச்சி வந்த வளா?"

"இந்தா நிக்கிறாள். கதை"

"அண்ணா! எப்படி இருக்கிறா? தெளிஞ்சு இருக்கையோ? வடி வாய் இருக்கயோ? சாப்பாடு எல் லாம் எப்பிடி அண்ணா? நல்லா சாப்பிடுங்கோ. அம்மாவுக்கு உங் களப் பத்தின ஒரே கவல"

"தம்பி எங்க? அவன் வரேல் லயா?"

"அவன் வரேல்ல விளையாடு றான். தனக்கு ஒரு புதுச் சைக்கிள் வாங்க காசனுப்பட்டாம். எனக்கும் ஒரு புதுச் சைக்கிள் வாங்கோ ணும் அண்ணா"

"இரண்டு சைக்கிளுக்கும் எவ்வளவு வரும்?"

"இரண்டுக்கும் பதினையா யிரம் வேணும் போல. கட்டாயம் அனுப்போணும். அம்மாட்டைக் கொடுக்கிறன், கதையுங்கோ அண்ணா"

"தம்பி! அப்பா உன்னோடை கதைக்கேலாதாம் எண்டு மன வருத்தப்பட்டுக்கொண்டு இருக் கார். சின்னப் புள்ள உழைச்சு னுப்பற காசிலை சாப்பிட்டுக் கொண்டு இருக்கிறனெண்டு சொல்லிச் சொல்லி ஒரே கவ லைப்படுவார்"

அவர் கவலைப்படுறவரா இருந்தா நான் வந்த இவ்வளவு காலத்துக்கு ரெலிபோனிலை கதைக்காட்டியும் ஒரு கடிதமாவது எழுதி இருப்பார். ஒரு birthday card, ஒரு newyear card? சீ! எல்லாம் பொய்.

மீண்டும் மனசு உளைச்சல் எடுத்தது சுதனுக்கு.

"அம்மா! அவரைக் கவலைப் படவேண்டாம் என்று சொல் லுங்கோ"

"ஆ! தம்பி, சொல்ல வந்ததை மறந்து போனன். நம்மட புஸ்பம் அன்ரி மெயின் றோட்டிலை இருக் கிற வளவு விக்கப் போறாவாம். நாலு லட்சம் கேக்கிறா. ரெண்டு தடவையில தரட்டாம். நீ இருக் கிற நம்பிக்கையில ஓம் எண்டு சொல்லிற்றன்"

"அம்மா....!"

அதிர்ச்சியைத் தாங்க முடியாமல் கத்தினான் சுதன்.

"என்ன தம்பி. விருப்பமில் லாட்டி விடு. ஒரு காலம் நீ இங்கை வந்தா ஒரு கடையைக் கட்டலாம் எண்டு நினைச்சுத்தான் ஓம் எண்டனான்"

நான் எப்படி அம்மா அங்கை
வரேலும். தங்கச்சியின்ரை
சாமத்தியச் சடங்கிற்கே இவ்வளவு
செலவு. இனி அவளிட கலியாணம்.
தம்பியின்ர படிப்பு எல்லாத்துக்கும்
நான்தானே. சின்னப் பெடியன்ர
உழைப்பில இதெல்லாம் செய்ய
அப்பா கவலைப்பட்டாலும்
நான்தானே செய்யவேணும்.

வேதனை தொண்டையை அடைத்தது சுதனுக்கு. யாரிடம் சொல்வது?

"இல்லம்மா நான் எப்பிடி எண்டாலும் அனுப்புவன்"

"தம்பி ஒண்டாய் அனுப்புறது கஷ்டம் என்றால் கொஞ்சம் கொஞ்சமா அனுப்பு. இப்ப ஒரு இரண்டரை அனுப்பினா வளவுக் குக் குடுத்துப்போட்டு பவானி அன்ரியின்ரை கடனும் குடுக்க லாம்"

"தங்கச்சிக்கும் தம்பிக்கும் சைக்கிள்?"

"ஓ! அதுகளும் கவலைப் படுங்கள் தான். நீ காசில்லை எண்டா, அதுதான் பிறகு அனுப் பட்டும் எண்டு நினைச்சனான்"

"இல்லம்மா! நான் எப்பிடி எண்டாலும் அனுப்புறன். அதுக ளுக்கும் சைக்கிளை வாங்கிக் கொடுங்கோ. காசு கிடைச்சதும் கடிதம் போடுங்கோ"

"ஓம் தம்பி! கட்டாயம் போடு வன். ஆரும் கிட்டடியிலை வந்தா தங்கச்சியின்ர வீடியோக் கொப்பி யையும் கொடுத்தனுப்புறன்"

"ஓமம்மா! அனுப்புங்க! பார்க்க்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆசையாய் இருக்கு"

"தம்பி! நல்லா சாப்பிடு! உடம்ப பார்த்துக் கொள்! உன்ன நினைச்சாத்தான் கவலையாய் இருக்கு"

"அம்மா நீங்க கவலைப்பட வேணாம். எனக்கொரு கஸ்டமும் இல்லை. எல்லாரையும் கேட்ட எண்டு சொல்லுங்கோ அம்மா. வைக்கிறன்"

நேற்றெடுத்த சம்பளத்தின் மீதி சாப்பாட்டுக்கும் room வாடைக்கும்தான் போதுமானதாக இருந்தது. அம்மாவுக்குக் காசனுப்ப கடன் வாங்குவதைத் தவிர வேறு வழியில்லை. இண்டைக்கு வேலைக்குப் போக முதல் சுந்தரம் அண்ணையிட்டைப் போகவேணும். ●



பேராசிரியர் கா. சிவத்தம்பியுடனான யமுனா ராஜேந்திரனின் நேர்காணல் நடைமுறைச் சாத்தியக் குறைவால் தொடர முடியாமல் இடைநிறுத்தப்பட்டுள்ளது. சாத்தியம் அமையும் போது இது தொடரும்.

நேர்காணல் தொடர்பான வாசகர் கருத்துக்களை உயிர்நிழல் எதிர் பார்க்கின்றது.

மறைந்த எழுத்தாளர்
செ. கதிர்காமநாதன் நினைவாக....

# புலம்பெயராத
## தமிழ்பேசும் இலங்கையர்களுக்கான
# ஒரு லட்சம் ரூபா
## பரிசுச் சிறுகதைப் போட்டி

**போட்டிக்கான விதிகள்:**

1. புலம் பெயராத தமிழ் பேசும் இலங்கையராக இருத்தல் வேண்டும்.
2. இலங்கையில் வசிப்பவராக இருத்தல் வேண்டும்.
3. சிறுகதைகள் முன்னர் பிரசுரிக்கப்படாதவையாக இருத்தல் வேண்டும்.
4. சிறுகதைகள் படைப்பாளிகளின் சொந்த ஆக்கங்களாக இருத்தல் வேண்டும்.
5. ஒருவர் ஒரு சிறுகதை மட்டுமே போட்டிக்காக அனுப்பி வைக்க முடியும்.
6. போட்டியாளர்கள் தமது சிறுகதைகளுடன் அவர்களுடைய முழுப்பெயர், பிறந்த திகதி, தற்போதைய வதிவிட விபரங்கள் ஆகியவற்றை அறியத் தரவேண்டும்.
7. சிறுகதைகள் அனைத்தும் 30 ஒக்டோபர் 2000க்கு முன்னர் கிடைக்கப் பெறவேண்டும்.

- மூவர் கொண்ட நடுவர் குழுவினால் சிறுகதைகள் பரிசீலிக்கப்பட்டு பரிசு தீர்மானிக்கப்படும்.
- தெரிவுசெய்யப்படும் முதல் மூன்று சிறுகதைகளுக்கும் முறையே ரூபாய் 35 000, ரூபாய் 25 000, ரூபாய் 15 000 தலா வழங்கப்படும். மற்றும் ஆறு சிறுகதைகளுக்கு தலா ரூபாய் 5000 வழங்கப்படும்
- முடிவுகள் 31.12.2000க்கு முன்னர் அறிவிக்கப்படும்.
- பரிசுகள் இலங்கையில் வைத்து கையளிக்கப்படும்.

அனுப்பவேண்டிய முகவரி:

**Uyirnizhal**

EXIL, 27 Rue Jean Moulln
92400 Courbevoie
FRANCE.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குடம்

உனது இடுப்பில்
பெரிய பள்ளம்
இந்தப் பூக்குடத்தைச் சுமந்து சுமந்து சுமந்து
குடி நீர் அள்ளி வரும்போது
வெயிலுக்குப் பயந்து நிழல் மரத்தடியில் குடத்தை
இருத்திக் கொஞ்சம் காலாறி மூச்சுவிட்ட
நினைவெல்லாம் படம்போல எனக்குள்ளே ஓடி ஓடி
என் மகன் போல விளையாடும்
கண்ணுக்குள் மண் எறிந்து

இதோ - தூக்கித் தருகின்றேன்
பின்னர் நீ பூக்குடத்தின்
ஞாபகத்தை மாறித் தா

தங்கமென மினுங்கியது உன் கையால் ஒரு காலம்
இந்தப் பூக்குடம்தான்
மிக அதிகமான பூவேலை
இந்த உலகத்தை வனைந்தவனின்
கையை நான் தேடி
ஏமாந்து ஏமாந்து
காணக் கிடைக்காமல்

செய்த வளையல்
அழ
கண்டால் அணிவோம் என்று என் கற்பனையில்
இருக்கும் மோதிரத்தின்
முகம் கோண

இன்னுமோர் இனிய சவால்
அழகுப்
பூக்குடத்தை வனைந்தவன் யார்

வாய் பெரிது, சில நேரம்
நான் தேநீர் கேட்டால் நீ பாய்கின்றபோது
விரிக்கின்ற அளவுக்கு
ஊர்க்காகம் அதில் குந்தி
தன் பேய் நகத்தால் ஒரு கீறு
போட்டுவிட்டுப் பறக்க

எந்நாளும் போட்டி, அது குத்த வர நாம் விரட்ட
சிறகு கடுத்து, கடுத்துக் கடுத்தும்
போராட்டம் ஓயவில்லை, ஓய்ந்தால் இது குடமுமில்லை




30.07.1999
சோலைக்கிளி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# இன்மை

## உரையாடலும் கட்டவிழ்ப்பும்

### துடைப்பான்

**ஈ.வெ.ரா. பெரியார் பற்றிய உன் அபிப்பிராயம் என்ன என்பதைக் கூறுவாயா?**

உண்மையில் உன் கேள்வி இன்றைய காலத்தின் அவசியமானதாக்கப் பட்டுள்ள பெரியாரின் சிந்தனைகளின் கருத்தியலின் தாக்கத்திலிருந்து பிறப்பதாகவே நான் கருதுகிறேன். இதுவே பெரியாரிய சிந்தனைகளின் பரவலுக்கான படி என்பேன். பெரியார் தொடர்பாக அபிப்பிராயம் சொல்வதற்கு நான் ஒரு பெரியாரிய ஆய்வாளன் அல்ல. ஆனால், ஒரு வகையில் பெரியாரிய சிந்தனைகளின் கருத்துக்களின் அலுப்பில்லா வாசகன் என்ற தளத்திலிருந்து என்னால் பேசமுடியும் என நம்புகிறேன். பெரியார் ஒரு வியப்பூட்டும் சுவாரசியம் மிக்க ஒரு மனிதனாகவே அவரைப் படிக்கும் போதெல்லாம் எனக்குத் தென்படுகின்றார். பெரியார்/பெரியாரியம் தொடர்பாய் தமிழில் வெளிவந்த கணிசமான நூல்களைப் படித்திருப்பேன் என்பது மிகைப்படுத்தப்பட்ட கூற்றல்ல என்பதாக நீ உணர்வாயானால் நான் கூறுவது தொடர்பாய் சில அவதானங்களை உ ள் வாங்கிக் கொள்ள முடியும் என நினைக்கிறேன். இந்த சுவாரசியமும் வியப்பும் மிக்க அலுப்பில்லா மனிதனாக பெரியார் எனக்கு 'காட்சி கொடுப்பதற்கு' காரணம் பெரியாரின் முரண்பாடுகளின் வெளிப்பாட்டுத்தளம்தான். பெரியார் முரண்பாடுகளின் 'மொத்தக் குத்தகைக்காரன்'என்பதை நீ குசும்புத்தனம் மிக்க அபிபபிராயமாக கொள்வதை விடுத்து, வரிந்து கட்டிக்கொண்டு சண்டைக்கு வந்துவிடாதே என்பதே என் தாழ்மையான இரங்கல். என் அபிப்பிராயங்களை தயவு செய்து பெரியாரியத்தை வாசிப்பதன் ஊடாக மீளாய்வு செய்ய முயல். இதன் மூலம் என் அபிப்பிராயங்கள் மீதான உன் புரிதலைக்கூறு.

எனக்கு பெரியாரிடம் 'வர்க்க தற்கொலை' செய்ய முயன்று தோற்றுப்போன ஒரு சமூக சீர்திருத்த மனோபாவ மனிதனின் மன உணர்வுகளின் உண்மை வெளிப்பாட்டை தரிசிக்க முடிகின்றது. உண்மையின் ஒளிவு மறைவற்ற பிரதிநிதியாக பெரியாரை உரிமை கொண்டாட முடியும். இந்த உண்மையும் அவர்தம் முரண்பாடுகளுமே அவர் பற்றிய அறிதலைத் தேட என்னைத் தூண்டியது எனலாம்.

**தமிழ்பேசும் சூழலில் அவர்பற்றிய ஆக்கபூர்வமான விமர்சனங்கள்/ஆய்வுகள் வெளிவந்துள்ளதாக நீ கருதுகிறாயா?**

நிறையவே வெளிவந்துள்ளன. ஆனால் அநேக எழுத்துக்கள் முடிவுகளையும் நோக்கங்களையும் முன்னரே கட்டமைத்துக்கொண்டு அதன் சார்புநிலை நோக்கிய ஆய்வுகளாகவும் தேடல்களாகவுமே எனக்குப் படுகின்றது. பெரியாரியம் பற்றிய ஒரு புதிய வாசிப்பு இன்றைய கட்டத்தில் அவசியம் தேவையாகின்றது. இப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புதிய வாசிப்பு கற்பிதங்களோடும்/முடிவுகளோடும் கட்டமைக்கப் பட்ட நூல்களில் இருந்து பெறப்படும் வாசிப்பைத் தவிர்த்து பெரியாரின் மூலப்பிரதிகள்/ ஏனைய மூல தகவல்களில் இருந்து தொடங்குதல் அவசியம் எனக் கருதுகிறேன்.

**◖ இந்த முயற்சியில் ஒன்றாய், ஜேர்மன் இலக்கியச் சந்திப்பில் நீ வாசித்த, 'பெரியாரியம் ஒரு புதிய வாசிப்புக்கான ஒத்திகை' பிரதியைக் கொள்ளலாமா?**

◗ இது ஒரு முயற்சியின் சிறு தொடக்கப் புள்ளி எனக் கொள்வதே சாத்தியம். வெறும் காழ்ப்பு ணர்ச்சிகள் அல்லது முடிவுகளின் தடத்தில் நின்று அணுகுதலை விடுத்து யாராவது புகலிடத்தில் பெரியாரின் சிந்தனைகள்/போக்குகள்/வளர்ச்சி கள்/முரண்பாடுகள்/ தடங்கல்கள் மீதான விமர்சன ஆய்வுநிலை வாசிப்பொன்றைத் தொடங்குவதன் ஊடாக சாத்தியமாக்க முயலலின் வாசிப்புக்கு என் னாலான உதவிகளை செய்யத் தயாராக இருக் கின்றேன் என்பதே என் செய்தியும் ஆகின்றது.

பெரியாரின் ஆரோக்கியமான சிந்தனைகளை உள் வாங்க நாம் நினைப்போமானால் சுயமரியாதை, சமதர்மக் காலகட்டம் தொடர்பான காலங்களை பரிசீலனைக்கும் ஆய்வுக்கும் உள்ளாக்குதல் அவ சியம் என்பேன். சிறிது காலங்களுக்கு முன் இக் காலங்களை ஆய்வுக்கு கொணர்ந்த நூல் ஒன் றைப் படித்தேன். அது ஜீவானந்தத்தையும் சிங்கார வேலரையும் குற்றம் சாட்டுதலின் ஊடாக பெரியா ரின் அன்றைய சில போக்குகளுக்கு நியாயம் கற்பிக்க முயலுதலையும் இதனூடாக பெரியாரை ஒரு 'புனிதராக' உன்னத மயப்படுத்தும் முன்நோக்க லின் முடிவுகளின் ஆய்வாகவே என் வாசிப்புக்கு தென்பட்டது. இதனால் இந்நூலின் நம்பகத்தன்மை சிதறுண்டு விடுகின்றது. இவ்வாறு பெரியாரை மனித சிந்தனையாளர் என்ற வட்டத்திலிருந்து அகற்றி புனிதப்படுத்தி அடிக்கடி தமிழ் நாட்டில் புதைத்து விடுகின்றார்கள். இவ்வாறான செயல் ஓடிகளுக்கு முன்னோடி திராவிடர் இயக்கங்கள் என்பேன். திரா விட இயக்கங்கள் பெரியாரை இன்று முழுமை யாகவே புதைத்து விட்டது.

நான் பெரியார் சிந்தனைகள் மீது வைக்கும் விமர்ச னங்கள், சிந்தித்தலின் ஆற்றல் ஒடுக்கப்பட்ட மக்க ளின் விடுதலைக்கான குர லாக/ கோட்பாடாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும் என்பதற்காகவே.



இன்று பெரியாரும்/பெரியாரி யமும் மிக மோசமாக குறிப் பிட்ட சில பின்நவீனத்துவ சந்தர்ப்பவாதிகளின்/போலி களின் அடையாளத்திற்கான, சமூக இருத்தலுக்கான கவச மாக பயன்பட்டு அவர்களின் கைகளில் சிக்குண்டு சீரழிவதை காண்கிறோம். ஒரு காலகட்டத்தில் மார்க்சியம் எவ்வாறு இச் சமூக சந்தர்ப்பவாதிக ளின் போலி வேஷங்களுக்கும் இருத்தலுக்கும் பயன் கொள்ளப்பட்டு இறுதியில் தூக்கி எறியப்பட்டதோ அதே நிலை பெரியாரியத்திற்கும் ஏற்படாமல் இருக்க முயல்வோம். எனவே பெரியாரியத்தின் மீது இப் போலிகள் போல் அல்லாது வழிபாட்டு உணர் வற்ற விமர்சனம் தேவை. அப்பொழுதுதான் ஆக்க பூர்வமான சிந்தனைத் தொகுப்பொன்றையும் அதைப் பற்றிய புரிதலையும் நாம் உருவாக்கிக் கொள்ளமுடியும்.

**◖ பெரியார் பற்றிய விமர்சனங்களை எந்த அடிப்படையில் நீ பார்க்க முயல்கிறாய்?**

◗ நாம் ஒன்றை முதலில் புரிதல் அவசியம். பெரியார் ஒரு ஒருங்கிணைந்த சிந்தனையாளன் அல்ல. அவரின் பார்வை சமூக வரலாற்று இயங் கியல் கண்ணோட்டத்தை புறம் தள்ளி நிற்பதை நாம் அவதானிக்க முடியும்.

அவரின் பகுத்தறிவு அக முரண்பாடுகளின் தாக்கங் களில் இருந்து கட்டியமைக்கப்படுவதால் இவ் வரலாற்றுத் தவறுகள் நிகழ்வதாகவே நான் கருது கின்றேன். ஆனால் பெரியார் சமதர்மக் கோட் பாட்டை வரித்துக் கொண்ட காலங்களில் அவரின் சிந்தனைப் பரப்பு பார்வைத் தளம் உச்சம் என்பேன். இக்காலம் மிக மிக ஆய்வுக்கும் அவதானிப்புக்கும் உரியது. பெரியாரிடம் இருந்த தேசியம் தொடர்பான பார்வை ஆழ மிக்கதாகவும் முற்போக்குத் தடம் நோக்கி அமைவதாகவும் இக்காலங்களில் அவதா னிக்க முடியும். மதமும் தேசியமும் வெற்றி பெற வேண்டுமானால் மக்களை மூடர்களாக வைத்திருப் பதனால்தான் முடியும். தேசாபிமானம், தேசியம் என்பது முதலாளிகள் தமக்குள் சண்டை போட்டுக் கொண்டு தம் முதலை பெருக்கிக் கொள்ளும் தந்தி ரங்கள். உலக ஒற்றுமைக்குத் தடைகள். மிகவும் சாதாரண எளிமை கொண்ட சொல்லாடல்களினால் தேசியத்தின் விபரீதமான சமூக உறவை கட்ட விழ்க்கிறார் பெரியார். இத்தகைய எளிமையான சொல்லாடல்களே பெரியாரின் ஒரு வகை வெற்றி என்பேன். அந்தோனியோ கிராம்சி தேசியம் தொடர் பாய் கொண்டிருக்கும் பார்வையின் கோணத்தை நான் பெரியாரிடமும் கண்டு வியப்புறும் நிலைக்கு உள்ளாக்கப்பட்டேன் என்பதை உனக்குச் சொல் லியே ஆகவேண்டும். அதே நேரம் பெரியாரிடம் நான் கண்ட அதிர்ச்சியான விடயங்களும் ஏராளம். இவைகளே என் விமர்சனங்கள் ஆகின்றன. தேசி யம்பற்றி சமூக அக்கறைத்தளம் கொண்டு சிந் தித்த பெரியார் சில காலங்களில் மிகவும் மோச மான தமிழ்த் தேசிய வெறியனாக செயற்பட்டதை நாம் என்ன என்பது? மேலும், முஸ்லிம் மக்கள் தொடர்பாக பெரியாரின் பார்வை கொடுமை என் பேன். இதற்கான காரணங்களை, வரலாற்று தத்து வார்த்த பின்புலங்களோடு பெரியாரை தோழனாக உள் வாங்கி அணுகுதல் அவசியம். எதிரித்தன மான விமர்சன ஆய்வாடல் நிராகரிக்கப்படல் வேண்டும். இவ்வாறே மொழி, சாதியம் தொடர்பாய்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



பெரியாரின் பார்வைக் கோளாறுகளும். இவைகளே என் விமர்சனங்களின் உள்ளடக்கம் ஆகின்றது. அவைகளில் சிலவற்றை உன்னால் கூறமுடியுமா?
இவற்றை கூற வைப்பதன் ஊடாக "துடைப்பான் கம்மனாட்டி பிராமணியத்தின் கைக்கூலி ஆகி விட்டான்" என்று துண்டுப் பிரசுரம் அடித்து உள்ளூர் 'சர்வ தேச மன்னிப்பு சபை'க்கு அனுப்பி வைக்கமாட்டாய் என்ற நம்பிக்கையோடு கூற முயல்கிறேன்.
உதாரணமாக, பெரியார் களஞ்சியம் நான்காம் பாகத்தில் 293-294ம் பக்கத்தில் இருக்கும் பெரியாரின் கட்டுரை ஒன்றை உன் வாசிப்புக்காகத் தருகின்றேன். இதனை உன் பன்முக வாசிப்புக்கு உள்ளாக்கு. என்னால் கோடிடப்பட்ட பகுதியின்மீது கவனம் கொள். உன் புரிதலை சற்று எனக்கு கூறு.

**அட! அறிவும் மானமும் கெட்ட பிண்டங்களா!**

*நாம் இந்நாட்டில் (தமிழரென) பல ஆயிரக்கணக்கான ஆண்டுகளாக வாழ்ந்து வருகிறோம். இந்த ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகவே சாஸ்திரப்படி, சட்டப்படி இந்தியாவிலுள்ள முஸ்லிம்கள் தவிர்த்து, கிறிஸ்தவர்கள் தவிர்த்து மீதியுள்ள மக்கள் 40 (நாற்பது) கோடிக்கு மேற்பட்ட நாம், இந்துக்கள் என்னும் பேரால் சூத்திரர்(ஈனப்பிறவி)களாக, பார்ப்பனரின் 'தாசி மக்கள்' என்பதாக அழைக்கப்பட்டு, ஆக்கப்பட்டு வருகிறோம். மற்றவர் (பார்ப்பனர்கள்) இன்று நம்மை அந்தப்படி 'அழைக்கா' விட்டாலும் நாமாகவே நம்மை இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளுவதின் மூலம் ஈனப்பிறவிகள் என்பதை ஒப்புக்கொண்டவர்கள் ஆகிறோம்.*

*இதன் பயனாக நீண்ட நாட்களாகவே நமக்குக் கல்வி இல்லை, மதிப்புக் கொண்ட பதவி இல்லை என்பதோடு, 5 வயது பார்ப்பனப் பையனையும் நாம் 'சாமி' என்று அழைப்பதும் அவன் நம்மை 'சூத்திரன்' என்று அழைப்பதும் சத்திரம் சாவடிகளில் பிராமணாள் தங்குமிடம்' என்று எழுதப்படுவதும் சர்க்கார் சம்பந்தமான காரியாலயங்களில் 'பிராமணாள் சாப்பிடுமிடம்' 'சூத்திரர்கள் சாப்பிடுமிடம்' என்று எழுதப்பட்டிருப்பதும் மற்றும் ஆதாரங்களில் பிராமணாள், சூத்திர ஜாதிப் பெயர்களாகிய முதலியார், நாயக்கர், படையாச்சி, கவுண்டர் முதலிய பெயர்களைச் சொல்லி, சூத்திரர்களாக ஆக்கிக் கொள்வதுமான தன்மையில் இருந்து வந்தோம்; வருகிறோம்.*

*சூத்திரன் (இழிஜாதி) என்கிறதான தன்மைக்கு ஏற்பவே நாம், நமது வீடுகளில் சடங்குகள், கலியாணம், சாவு, திதி முதலிய காரியங்களை நடத்துவதில் காட்டிக் கொள்ளுகிறோம்; அந்தப் பட்டத்தை ஏற்றுக்கொண்டு பார்ப்பான் காலில் விழுந்து வணங்குகின்றோம்.*

*<u>அது மாத்திரமல்லாமல், நாம் கடவுள் தரிசனத்திற்கு, வணக்கத்திற்குக் கோவிலுக்குப் போனால், கோவில்களில் கீழ் ஜாதியார், தீண்டப்படாதார், நெருங்கப்படாதார் நிற்கும் இடத்தில் நின்று கொண்டு வணங்குகிறோம்.</u>*

*எலி, பூனை, பாம்பு, தேள், கரப்பான் பூச்சி முதலிய ஜந்துக்கள் போகிற, நடமாடுகிற இடமாகிய கர்ப்பக் கிரகம் என்னும் இடத்திற்கு நாம் போகக் கூடாது என்றால் நாமும் அதை ஏற்றுக்கொண்டு வெளியில் நின்று கும்பிடுகிறோம் என்றால், நம்மை இந்துக்கள் என்று சொல்லிக் கொள்ளுவதிலாவது, நாம் கோவிலுக்குப் போய் வெளியே நின்று வணங்குவதிலாவது நமக்கு அறிவோ மானமோ இருக்கிறது என்று பண்டார சந்நிதிகள் முதலாக, கோடீஸ்வரர்கள், பிரபு முதல், ராஜா பட்டம் பெற்றவர்கள் வரை உள்ள மக்கள் சொல்லிக் கொள்ள முடியுமா? அவர்களை மானமுள்ளவர்கள், மனிதத் தன்மைக்கு ஏற்றவர்கள் என்று கருத முடியுமா? என்று சிந்தித்துப் பாருங்கள்.*

●

**குறிப்பு: பெரியாரின் இப்பிரதியில்,**
* **சூத்திரர் எனப்படுபவர்கள் பிராமணர் அல்லாத மேல்நிலைச் சாதிகளான வெள்ளாளர்/சைவப்பிள்ளைமார்/செட்டியார்/நாயுடு முதலியோர்.**
* **தீண்டப்படாதார்/கீழ் ஜாதி: பஞ்சமர் என அழைக்கப்படும் ஒடுக்கப்பட்ட வறிய தலித் மக்கள்.**

---

## பெண்கள் சந்திப்பு - 19வது தொடர்

இடம்: பிரான்ஸ்
காலம்: 29/07/00-30/07/00

தொடர்புகளுக்கு:
ஜெபா/இன்பவல்லி
c/o EXIL, BP 204
92604 Asnieres Cedex
France. **Tel: 06 03 96 35 38**





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலக்கியச் சந்திப்பு

## இன்றும்
## நேற்றும்
## நாளையும்

## பின்நவீனத்துவத்துவத்தின் செல்வாக்கின் பின்னான பின்புகலிட இலக்கிய அரசியல் போக்கு!

**என்.சரவணன்**

புகலிடச் சூழலில் இலக்கியச் சந்திப்பானது கடந்த 12 வருடங்களாகவே தமிழ்சூழலில் ஆற்றி வரும் முக்கியத்துவம் தமிழ்சூழல் அறியும்.

நடந்து முடிந்த 26வது அமர்வில் முதற் தடவையாக பங்குபற்றியபோது கிடைத்த அனுபவங்கள் மற்றும் வரை அறியப்பட்டவை என்பன பல கேள்விகளை எம்முன் நிறுத்துகிறது.

புகலிடச் சூழலில் இன்றைய இலக்கிய ஆர்வலர்களாக படைப்பாளிகளாக ஆகியிருப்போரின், அல்லது ஆக்கப்பட்டோரின், பின்னணியை எடுத்துக் கொண்டால், ஒன்றில் கடந்த காலங்களில் ஈழத்தில் ஏதோ ஒரு அரசியல் சித்தாந்தத்தையோ அல்லது அரசியல் குழுவையோ பின்னணியாக கொண்டிருப்பவர்கள் பலர், ஏலவே இலக்கியத் துறையில் பணியாற்றியவர்கள், மற்றும் இங்கு வந்து தான் இலக்கிய மற்றும் அரசியல் துறைகளோடு தங்களை இணைத்துக்கொண்டோர் என்கிற போக்கை கொண்டிருப்பதைக் காணலாம். இதில் அரசியல் பின்னணியைக் கொண்டிருந்தவர்கள் அல்லது கொண்டிருப்பவர்கள் தங்களது ஏக்கத்தின் அல்லது தங்களது தாகத்தின் வெளிப்பாடாக "எதையாவது செய்யவேண்டும்" என்கிற போக்கின் விளைவாகவும் அவர்களின் இலக்கிய கால் பதிப்பை நிகழ்த்தியதாகக் கொள்ளலாம். இது அரசியலாகவும் வெளிப்பட்டிருக்கும். இவர்களின் தாகத்தின் நீட்சியாகவே இவ்வாறான இலக்கியச் சந்திப்புகளையும் தமக்கான வடிகாலாகப் பயன்படுத்த விளைந்தனர் எனலாம். அவர்களின் அரசியல் கருத்துக்களை, தமது நினைவுகளை, தமது துயரங்களை, எதிர்காலம் பற்றிய தேடல்களை வெளிப்படுத்தும் களமாக அவர்கள் இலக்கியச் சஞ்சிகைகள் தொடங்கி அரசியல் குழுக்களாக, இலக்கியச் சந்திப்புகளாக, பெண்கள் சந்திப்புகளாக, அரசியல் கூட்டங்களாக, கலை இலக்கிய நிகழ்வுகளுக்கூடாக வெளிப்படுத்திக்கொண்டே வந்திருக்கிறார்கள்.

இந்த "எதையாவது செய்வது" என்பது தன்னியல்பாக (அல்லது குறிப்பிட்ட இலட்சிய இலக்கின்றி) கணிசமானவை தொடர்ந்த போதும்கூட அதன் விளைபொருள் தமிழ் சமூகத்திற்கு கனதியாகவே கிடைத்திருக்கிறது. இன்று புகலிட இலக்கியத்தின் வீச்சும், கனதியும் ஒட்டுமொத்த தமிழ் இலக்கிய உலகமும் அக்கறை கொள்ளும் ஒரு விடயமாக வந்துவிட்டது. இதன் அரசியல் பணியானது அதன் படைப்பாளிகளே அறியாத வண்ணம் விளைவுகளை உண்டாக்கியும் விட்டிருக்கிறது என்றால் அது மிகையில்லை எனலாம்.

இத்தகைய போக்கின் வழி நின்று பார்த்தால் இலக்கியச் சந்திப்பின் பாத்திரம் எத்தகையது என்பதையும் நாம் விளங்கிக்கொள்ள முடியும்.

பெரும்பாலும் இலக்கியச் சந்திப்பானது பல விதமான கருத்துக்களையும், பலவிதமான அரசியலையும் கொண்ட பலரையும் அவர்களின் வெளிப்பாடுகளையும் மையப்படுத்திய ஒரு இடமாக இருந்திருக்கிறது. இது 'ஒரு' குறிப்பிட்ட அரசியலின் மேலாதிக்கத்திலிருந்து துண்டித்து பல அரசியல்களின் பன்முகத்தன்மையைப் பேண வழிவகுத்திருந்தது. ஒரு வகையில் சொல்லப்போனால் அமைப்பாகியும், அமைப்பாகாமலும் இருந்து வந்த ஒரு செயல்பாடாக இலக்கியச் சந்திப்பு இருந்திருக்கிறது. இன்னும் குறிப்பாகச் சொல்லப் போனால் விடுதலைப் புலிகளுக்கு சார்பல்லாத பலரை ஒன்று குவித்த இடமாகவும் இருந்தது. இது தமிழ்த்தேச அரசியலின் பிற்போக்குத்தன்மையை கண்டிப்பதாக, விமர்சிப்பதாக, அதன் மறுசீரமைப்பு தொடர்பான வாதங்களை எழுப்புவதாகவும், ஏன் தேடல்களை நோக்கியதாகவும் கூட அமைந்தன.

அதுவும் இடதுசாரிப் பாரம்பரியத்தில் வந்தவர்கள் சும்மா இருக்கமாட்டர்கள் என்பது வரலாறு. "எதையாவது செய்ய வேண்டும்" என்கிற மனநிலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எப்போதும் இருந்து கொண்டு இருக்கும். எனவே சமூக அக்கறையுள்ள திட்டவட்டமான ஒரு இலக்கு இருக்கிறதோ இல்லையோ எதையாவது செய்ய வேண்டும். புகலிடச் சூழலில் சுய அடையாளத்திற்கான அல்லது சுய விளம்பரத்திற்கான போராட்டமும் கூடவே இருப்பதுவும் ஒரு காரணம். இந்த நிலைமைகள் தான் இப்படியான இலக்கியச் சந்திப்புகளை பிறப்பித்துள்ளன. நிச்சயமாக இவை நின்று போகாது. இந்த இலக்கியச் சந்திப்பு இல்லையென்றால் இன்னொன்று அல்லது இன்னொன்று தோன்றிக் கொண்டேயிருக்கும். அதன் வடிவத்திலும் வீச்சிலும் வெவ்வேறான மாற்றங்களைக் கொண்டிருப்பதே முன்னையதுக்கும், பின்னையதுக்கும் இடையிலான வித்தியாசங்களாக இருக்கும். அதுதான் இயங்கியல்.

ஆனால் போராட்ட அவலங்களையும், தொடர்ச்சியான போராட்டத்தையும் எதிர்கொண்டிருக்கும் குறிப்பான தமிழ்ச் சூழலில் இந்த வகையான அரசியல் இலக்கிய சூழலை பலப்படுத்தியிருக்கிறது. முன்னால் அரசியல் செயற்பாட்டாளர்களை சும்மாயிருக்காமலிருக்கப் பண்ணியிருக்கிறது.

ஆனால் சமீப காலங்களில் புகலிடத்தில் தோன்றியிருக்கிற பிளவுகள், அரசியல் இலக்கிய வரட்சி, இந்த இருப்பதும் இழக்கப்படுமோ என்கிற பயத்தை ஏற்படுத்தியிருக்கிறது. குறைந்தபட்ச ஜனநாயக செயல்பாடுகளுக்காகக்கூட ஐக்கியப்பட்டு பணிபுரிவதை காண்பது அரிதாகி ஆகிவிட்டிருக்கிறது.

இன்னுமொரு வகையில் இலக்கியச் சந்திப்பானது இலங்கையில் சொந்த மக்களின் விடுதலைக்காக முன்னின்றவர்கள் பலரும் ஏனைய அல்லது சக இயக்கங்களால் பலம் கொண்ட அராஜக நசுக்குதலின் காரணமாக ஒருபுறம் சிங்கள அரசு, மறுபுறம் சக தேசத்தில் இருந்த அராஜக அரசுகள் என்பனவற்றின் பிடியிலிருந்து தப்பி வேறு வழியின்றி நாட்டை விட்டு வெளியேறி வந்தவர்கள் பலரையும் வெளித் தெரியாத வண்ணம் (virtually organize) ஒன்றுபட வைத்திருந்தது. இவர்கள், சொந்த மக்களுக்காக சொந்த நாட்டில் இயங்க முடியாமையை, புகலிடச் சூழலில் ஓரளவு பாதுகாப்பாக இயங்கலாம் என்கிற ஒருவித நம்பிக்கையின் பேரில் அரசியலையோ அல்லது இலக்கியம் சார்ந்த அரசியலையோ முன்னெடுத்தார்கள். ஆனால் புகலிடச் சூழலிலும் தொடர்ந்த அராஜக நடவடிக்கைகளின் காரணமாக சிலரை இழந்தும், சிலரை இயங்கவிடாமல் பண்ணியுமாக ஆன சூழலில் பலரை ஏதோ ஒரு வகையில் மாற்று சக்திகளாக அணி திரள வைத்திருந்தது. தெரிந்தோ தெரியாமலோ இலக்கியச் சந்திப்பு போன்றன இதற்கு ஒரு உருத்தெரியா நிறுவன வடிவத்தைக் கொடுத்தது என்றே நம்புகிறேன். அது சிலவேளை இங்கு குறிப்பிடும் அளவுக்கு பெரிய வடிவத்தைக் கொடுக்காமல் இருந்திருக்கலாம். ஆனால் அப்படி ஒன்று குறைந்த பட்சமேனும் இருந்தமையானது பலருக்கும் தைரியமளித்திருந்தமையை அறிந்திருக்கிறோம்.

ஆனால் கடந்த சில வருடங்களாக பலரிடம் காணப்படும் விரக்தி சோர்வு, செயலின்மை, சொந்த வாழ்க்கையோடு தம்மைக் குறுக்கிக்கொள்ளும் நிலைமை (அல்லது சிலர் புலிகளோடு தங்களை மெதுமெதுவாக இணைத்துக் கொள்வதையும்) ஒரு போக்காக ஆகிக் கொண்டிருப்பதை எம்மில் பலரும் ஒப்புக் கொள்வோம். இதற்குரிய காரணம் என்ன என்பதை கண்டறிவது இன்றைய நிலையில் முக்கியமானது. தேசத்தின் மீதான அடக்குமுறைகள் வலுக்கின்றன. ஏகாதிபத்திய சக்திகள் அனைத்தும் தேசப் போராட்டத்தை ஒடுக்க எதிரியுடன் கை கோர்க்கின்றன. இன்று அரைகுறை சோசலிச நாடுகளாக ஆகியிருக்கும் முன்னாள் சோசலிச நாடுகளும் இதில் விதி விலக்கில்லை. நாட்டில் பாசிசத்தின் செயற்பாடுகள் கையோங்குகின்றன. முன்னரை விட புகலிடத்திலுள்ள சக்திகளுக்கான பொறுப்புகள், கடமைகள் அதிகரித்திருக்கின்ற நிலையில் துரதிருஸ்டவசமாக எதிர்மாறான வரட்சி நிலையொன்று உருவாகி, ஊடுருவி, பரந்து, விரிந்து கைப்பற்றி நிலைப்பை உறுதி செய்து கொண்டிருக்கின்றன. இது ஆபத்தானது.

இவ்வாறான நிலைமைகளின் விளைவாகத் தோன்றுகின்ற இடைவெளியை ஆதிக்க சக்திகள் கைப்பற்றிக்கொள்கின்றன. அவை மெதுமெதுவாக தலைதூக்கி நிறுவனமாகி கோலோச்சுகின்றபோது நாம் அனைத்தையும் இழந்து நிற்போம். ஐரோப்பாவில் கடந்த காலங்களில் பாசிசம் வென்ற வரலாறு பற்றி நாம் அறிவோம். இடதுசாரிகளை எவ்வாறு அது படிப்படியாக களையெடுத்தது என்பது பற்றி இன்று மீண்டும் மறு வாசிப்புத்தான் செய்ய வேண்டுமா என்ன? அரசியலில் இலக்கியத்தின் பணியும், இலக்கியத்தில் அரசியலின் பணியும் அனைத்துப் போராட்டங்களிலும் காத்திரமான பங்காற்றியிருக்கின்றன.

ஒரு புறம் எதிரிகள் மற்றும் பிற்போக்கு சக்திகள் அனைத்தும் நிறுவனமாகி, தெளிவாகத் திட்டமிட்டு இயங்கி வருகின்ற போது, மறுபுறம் ஜனநாயக சக்திகள் அனைத்தும் பலம் குன்றி, 'கட்டுடைக்கப்பட்டு', துண்டாடப்பட்டு, சிதறடிக்கப்பட்டு வருகிறது. இதனை வேடிக்கை பார்ப்பதோடு எம்மில் பலர் மட்டுப்படுத்திக்கொள்கிறோம்.

சம காலத்தில் தமிழ்ச்சூழலில் பின்நவீனத்துவச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிந்தனைமுறையின் செல்வாக்கின் பங்களிப்பும் கணிசமானது. அமைப்பியல்வாதம் வழிவந்த சிந்தனைகளில் சில பகுதிகளை தூக்கிப்பிடித்துக்கொண்டு உருவாகிவிட்டிருக்கிற கருத்துக்களான அமைப்பாகக்கூடாது, மையப்படக்கூடாது, அதிகாரத்துவம் வந்துவிடும் என்கிற பார்வையும் ஜனநாயக சக்திகளின் குறைந்தபட்ச வேலைத்திட்டத்தின் கீழான ஒன்றிணைவை கூட மறுக்கின்ற போக்கு உருவாகி விட்டிருக்கிறது. அமைப்பாதலில் உள்ள பலத்தை, அவ்வாறு அமைப்பாதலின் பொறிமுறைகளில் காணப்படும் பலவீனங்களைக் கொண்டு மறுதலிக்கின்ற போக்கு ஆபத்தானது. இன்றைய முதலாளித்துவ சக்திகள் புரட்சிகர சக்திகளின் ஒன்றிணைவை இவ்வகையான புதிய சிந்தனைகளின் பகுதிகளைப் பரப்பித்தான் ஒன்றிணைய விடாமல் சதிசெய்கின்றன.

பின்நவீனத்துவ சிந்தனைகளின் பெறுமதி மிக்க விமர்சன முறையியலை ஒட்டுமொத்த அடக்கப்படும் மக்களின் போராட்டத்தையும் நசுக்க பயன்பட துணைபோவதை சமூகப் பிரக்ஞை உள்ள எவரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அடக்குமுறையாளர்கள் ஒரு புறம் பலமான அணியை ஏற்படுத்திக்கொண்டு, மறுபுறம் அடக்கப்படுவோர் அணி திரள விடாமல் இருப்பதற்கான முயற்சிகளுக்கு இத்தகைய விமர்சன முறையியலை மிகக் கவனமாக கையாண்டுவருகிறது.

இதன் விளைவுகளும் தாக்கங்களும் சமீப காலமாக இலங்கையில் இடதுசாரி இளைஞர்கள் மத்தியிலும் தோன்றி வருவதையும் கண்டுவருகிறோம். குறிப்பாக 'மாதொட்ட' எனும் சஞ்சிகையை நடாத்தி வரும் 'X Group' அணியைக் குறிப்பிடலாம். பெருமளவு முன்னைநாள் ஜே.வி.பி.யை சேர்ந்த சிங்கள இளைஞர்களாக இருக்கும் இவ்வணியினரின் பின்நவீனத்துவ வகுப்புகளுக்கு நானும் வார நாட்களில் சென்று வந்திருக்கிறேன். வார நாட்களில் மூன்று அணிகளாக வகுப்புகளை நடத்துமளவுக்கு இளைஞர்களிடம் இதன் மீதான தாகம் இருந்தது. எந்த அதிகாரத்துவத்தை எதிர்த்து இடதுசாரிக் கட்சிகளில் இருந்து விலகினோமா அதே (எதிரிகளின்) அதிகாரத்துவத்தின் அணி திரட்சிக்கு மாற்றாக அது இருக்காததும், மாறாக அணி திரட்சியை மறுதலிக்கும் போக்கை எதிர்த்துமாக அதிலிருந்து சிலர் மீண்டும் வெளியேற வேண்டிவந்தது.

இடதுசாரி சிந்தனையையுடைய சிங்கள இளைஞர்கள் மத்தியில் இதன் பாதிப்பு வேகமாகி வருவதை நாம் காண்கிறோம். இது இலங்கையில் பலமாகி வரும் ஜே.வி.பி.க்கு கூட பெரும் தலையிடியாக வந்தது. கடந்த இரு வருடங்களாக ஜே.வி.பி.க்குள் நடக்கின்ற அரசியல் வகுப்புகளில் பின்நவீனத்துவம் பற்றிய தெளிவுபடுத்தலுக்கான வகுப்பை நடத்துமளவுக்கு இந்தப் போக்கு நிர்ப்பந்தித்திருந்ததை காணக்கூடியதாக இருந்தது. ஜே.பி.வி.க்குள் இளைஞர்கள் பலர் எழுப்பிய கேள்விகளானது, ஜே.வி.பி.க்குள் இது ஒரு புரட்சிகர குணாம்சங்களை மழுங்கடிக்கின்ற, அல்லது போர்க்குணாம்சங்களை இழக்கச் செய்கின்ற போக்கொன்று வந்துவிடுமோ என்கிற பயத்தை ஏற்படுத்தியதே அரசியல் வகுப்பில் இப்படியான தலைப்புகளையும் புகுத்தியதற்கான காரணமெனலாம்.

இவ்வாறாக திறனாய்வுத்துறையில் பின்நவீனத்துவ முறையியலை கைக்கொள்வதென்பது அவசியமானது என்கிற போக்கு குன்றி, அடக்கப்படுபவர்களின் எழுச்சிக்கு வடிவம் கொடுப்பதற்கு எதிராக பின்நவீனத்துவ முறையியல் புகலிடத்திலும் பயன்படுத்தப்பட்டு வருவதை ஆங்காங்கு காண முடிகிறது. தனிநபர் மீதான வசைபாடல்களை தமிழ்நாட்டிலும் சரி, இலங்கையிலும் சரி, புகலிடத்திலும் சரி இந்த பின்நவீனத்துவத்தின் பேரால் நடாத்தப்படும் போக்கைக் கண்டு பின்வாங்குவதும் இவ்வாறான போக்குகள் மேலோங்கக் காரணமாவதை காண முடிகிறது. இன்று தமிழ்ச்சூழலில் எழுத்து என்பது ஒருவகை வன்முறை வடிவத்தைப் பெற்று வருவதையும் பின் நவீனத்துவத்தின் பாதிப்பு அதில் அடங்கியுள்ளதையும் பலர் ஒப்புக்கொள்வதை அவதானித்திருக்கிறேன். எந்த ஜனநாயக விரோதங்களுக்கு எதிராக பேனை தூக்கப்பட்டதோ அதே பேனை இன்னொரு வன்முறை ஆயுதமாக ஆக்கப்படுவதும், கருத்துக்களின் மீதான விமர்சனங்கள் என்பது போய், நபர்களின் மீதான எழுத்து வன்முறை என்கிற வடிவத்தை அடைந்திருப்பது துரதிருஸ்டமானது.

இன்று பின்நவீனத்துவம் பற்றிய சொல்லாடல்கள் ஒருவகை மோஸ்தராக (Fashion) ஆகிவிட்டிருக்கிறது. அது பற்றித் தெரியாமல் இருப்பது ஒரு கௌரவப் பிரச்சினையாக ஆகிவிட்டிருக்கிறது. இலக்கிய, அரசியல் சக்திகளோ எப்பாடுபட்டாவது இது என்னவென்று அறியத்தான் வேண்டும் இல்லாவிட்டால் இதனை எதிர்கொள்ள முடியாமல் போய் விடும், தனித்து விடுவோம் என்கிற பயத்தில் தேடித்தான் பார்க்கிறார்கள். பலருக்கும் களைப்பு மட்டும் தான் மிஞ்சுகிறது என்பதை ஒப்புக்கொண்டோர் பலர். ஒப்புக்கொள்ளாமல் தெரிந்ததை வைத்துக்கொண்டு பின்நவீனத்துவப் பூசாரிகளானோர் சிலர். இந்த சிலரால், பலர் தாக்குப் பிடிக்க இயலாமல் போனதற்கு இலக்கிய உலகை கட்டுப்படுத்தும் எழுத்து வலிமையை 'சிலர்' கொண்டிருந்ததும் ஒரு காரணம்.

இவ்வாறு இலக்கிய உலகில் 'பெரும்போக்காகவே' தற்காலச் சூழலில் இப்போக்கின் தாக்கம் பாதிப்பை செலுத்துகின்ற அதே நேரம், சமூக மாற்றத்திற்கான முனைப்பின் நிகழ்ச்சி நிரல் மாற்றப்பட்டு பின்நவீனத்துக்குப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பதில் சொல்ல கட்டாயப்படுத்தப்பட்டு விட்டுள்ளது. இப்போது புரட்சிகர சமூக மாற்றத்துக்கான நிகழ்ச்சி நிரலைத் தீர்மானிப்பது எதிரிகளின் நடைமுறை அல்ல. பின்நவீனத்துவ சாராம்சங்களின் தத்துவமே.

அமைப்பாவதற்கு எதிரான கருத்து இந்த சக்திகளிடம் காணப்பட்டாலும் அதே சக்திகள் விரும்பியோ விரும்பாமலோ ஒரு வகையில் அமைப்பாகித்தான் இருப்பதையும் அவதானிக்கலாம். ஆனால் அது ஒரு காலமும் மிஞ்சினால் மூன்று அல்லது நான்கு ஆண்டுகளுக்கு மேல் கூட நீடிக்காமல் போன வரலாறையும் காண்கின்றோம். மேலும் இருக்கிற 'அணிகள்' கூட துண்டாடப்படல் என்பதை இங்கும் அதிகமாகக் காணமுடிகிறது. பன்முகத் தன்மை, பன்முகப் பார்வை என்கிற முறையியலை நேசிக்கும் அதேவேளை பன்முக சிந்தனைகளை ஏற்க மறுக்கும், அவற்றை அடித்து நொருக்கும் போக்கையும் இத்தகையவர்கள் மத்தியில் பொதுவாகவே காண முடிகிறது. இந்தப் பொதுத் தன்மைதான் இதன் ஊற்று எங்கே இருக்கிறது என்கிற கேள்வியை எழுப்புகிறது.



இது பின்நவீனத்துவ சிந்தனையின் தவறான வழி நடத்தலா? - அதாவது, அது தத்துவத்தின் குறைபாடா? அல்லது தத்துவத்தின் பாலான அறிதலின் மீதுள்ள குறைபாடா? அல்லது தன்னியல்பின் தாக்கங்களோடு ஏற்பட்டிருக்கிற தனிநபர் மன மகிழ்வூட்டலோடு இயைந்த சேர்ப்பின் விளைவுகளா? இவை எதுவாக இருந்தாலும் இந்தப் போக்கு அடக்கப்படும் மக்களுக்கு ஆபத்தானது என்பதை மட்டும் கூறி வைக்கலாம்.

சமூக அக்கறை கொண்டு இயங்கும் எந்த சக்தியும் சமூக இயங்கியல் மீதான கேள்வியை எழுப்புவதன் மூலம் மட்டும் நின்று விட முடியாது. அதற்கப்பால் அந்த கேள்விகளுக்கான பதிலையும் தேடுவதும் அதனை பொறுப்போடு விவாதத்துக்குக் கொண்டு வருவதும் அதனடிப்படையில் இயங்குவதுமே சமூகப் பிரக்ஞையின் நேர்மை வடிவமாக இருக்க முடியும்.

இலக்கியச்சந்திப்பை எடுத்துக்கொண்டால் அது புலிகளல்லாத சக்திகளை ஒன்று குவித்திருக்கிறது. எப்போதும் எந்தவொரு சமூக மாற்றத்தை உருவாக்கவும் நிறுவனம் முன் நிபந்தனையானது. அதிகாரத்துவம் குறித்த எச்சரிக்கைகளினூடு அந்த அதிகாரத்துவம் அகற்றக்கூடிய பொறிமுறைகளைக் கொண்ட அமைப்பு இலக்கியச் சந்திப்புக்கும் தேவைப்படுவது அவசியமானதே. நாம் பின்நவீனத்துவ விவகாரத்தில் கவனமாக இருக்க வேண்டிய இடம் இதுதான். அதிகாரம் மையப்படுவதை எதிர்ப்பது எனும் பெயரில் அதிகாரம் பரவலாக்கப்படுவதை மறுப்பதில் போய் நிற்பது இன்றைய சூழலில் பின்நவீனத்தவத்தின் பெரும் போக்காக ஆகி வருவதாகவே எனக்குப் படுகிறது. அந்த வகையில் இலக்கியச்சந்திப்புக்கு ஒரு அமைப்பு வடிவம் தேவைப்படும். ஆனால், அதன் சாத்தியப்பாடின்மைக்கான காரணம் பல்வேறு அரசியலைச் சார்ந்தவர்கள், பல் வேறு விதமான சக்திகள், பல கருத்துநிலைகளையும் சார்ந்தவர்கள் எனப் பல நலன்கள் பிரதிநிதித்துவப்படுத்தப் படுகின்ற ஒரு இடத்தில் அமைப்பு வடிவம் ஒன்று உருவாக்கப்பட்டால், அமைக்கப்படும் அதே வேகத்தில் உதிர்ந்து விடும் என்பது மிக எளியையாக எவருக்கும் விளங்கும். ஏனென்றால், இவர்கள் குறிப்பிட்ட 'ஒரு' அரசியலுக்காக மையப் படுத்தப்படுபவர்கள் அல்ல. இதுதான் அராஜக சக்திகளுக்குச் சாதகமானதும், இவர்கள் 'சேர்ந்து' தமது நடவடிக்கைகளுக்கு எதிராக ஒன்றும் பிடுங்கப் போவதில்லை என்பதை புலிகள் கூட நன்றாக அறிவார்கள். வேண்டுமென்றால் உதிரிகளாக அவ்வப்போது கத்திப்போட்டுக் கிடப்பார்கள். கொஞ்சம் பிரச்சார அளவில் சங்கடத்தைத் தருவார்கள் அவ்வளவு தான் என தமக்குள் நினைத்துக் கொள்வார்கள் என்றே நம்புகிறேன்.

சமீப காலமாக புலிகளின் பிரச்சாரங்களுக்கும், வெற்றிக் களிப்புகளுக்கும் பலியாகும் போக்கு புலிகளல்லாத அரசியல் சக்திகள் மத்தியில் தற்போது ஏற்பட்டிருப்பதாக எனக்குப் படுகிறது. இதற்கான காரணம் வெறும் தேசிய உணர்வுக்குப் பலியாவதாகக் கொள்ளமுடியாது. மாறாகப் புலிகளின் பிரச்சார உத்தி எந்தளவு வளர்ந்திருக்கிறது என்பதும், மாற்று சக்திகளுக்கு சரியான அரசியல் வழி காட்டல் கிடைப்பதில் உள்ள பஞ்சத்தையும், கூடவே புகலிடத்தில் புலிகளற்ற அரசியல் நபர்களுக்கிடையிலான முறையான ஒருங்கிணைப்பு இல்லாமையையுமே கொள்ள முடியும். இது ஆபத்தானது. போகிற போக்கில் இது தொடர்வதற்கான அறிகுறிகள் அதிகளவில் தென்படுகின்றன. இதன் எதிர்காலம் என்ன?

*முதலில் அவர்கள் யூதர்களைத் தேடி வந்த போது*
*நான் எதுவும் பேசவில்லை*
*ஏனென்றால் நான் ஒரு யூதன் அல்ல*
*பிறகு அவர்கள் கம்யூனிஸ்டுகளைத் தேடி வந்தார்கள்*
*நான் எதுவும் பேசவில்லை*
*ஏனென்றால் நான் ஒரு கம்யூனிஸ்ட் அல்ல*
*அதன்பிறகு அவர்கள் தொழிற்சங்கவாதிகளைத் தேடிவந்தார்கள்*
*நான் எதுவும் பேசவில்லை*
*ஏனென்றால் நான் ஒரு தொழிற்சங்கவாதி அல்ல*
*இறுதியில் அவர்கள் என்னைத் தேடி வந்தார்கள்*
*அப்போது எனக்காகப் பேசுவதற்கு*
*யாரும் எஞ்சியிருக்கவில்லை.*

பாஸ்ரர் நியுமோலர்
(நாசி சிறைகளில் கொல்லப்பட்டவர்)

●



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

## மத - அரசியல் சாம்பாறு = இலக்கிய மலச்சிக்கல்

**க. வாசுதேவன்**

நமக்கு முரணானவர்களை அல்லது எமக்கு உளவியல் ரீதியாக ஒவ்வாதவர்களை இனவாதிகள், மொழிவாதிகள், மதவாதிகள், குறும் பார்வை கொண்டோர் மானிட நோக்கு அற்றோர், பரந்த பார்வை அற்றோர், முரண்பாடுகளுக்கு மதிப் பளியாதோர் (பிராமணன், வேளாளர், பிற்போக்கு வாதிகள்) என்றவாறான இன்னபிற குற்றச்சாட்டுக ளுக்குட்படுத்துவதில் நாம் எப்போதும் பின் நின்ற வர்களல்ல.

நமது அடையாள மறுப்பையும் மானிட புத்தி ஜீவிதத்தையும் இதன்பால் ஓசையுடன் பிரகடனம் செய்பவர்கள் நாம்.



மற்றவர்கள் மீது குற்றப்பத் திரிகை விரிப்பதிலும், அவர்க ளின் போக்குகளின்மீது விசார ணைகளை முடுக்கிவிட்டு பின் தீர்மானங்களை இலகுவாகத் தேர்ந்தெடுப்பதிலும் எம்மை விட வல்லவர்கள் யாரும் இல் லையென்று கூறி விடலாம். கிடைக்கக்கூடிய ஆகக் குறைந்த சந்தர்ப்பத்தைக் கூட இவ் விடயத்தில் நாம் பயன்படுத்திக் கொள்ளத் தவறுவதில்லை.

'நாங்கள் புத்திஜீவிகள்' என்ற போர்வைக்குள் நூதனமாக நுழைந்து சுக தூக்கம் காண்பதில் எமக்கு நாமே நிகரானவர்கள்.

பரந்தவொரு ஆய்வின்மீது பலவீனப்பட்டு விடு மோவெனச் சந்தேகமேதும் கொள்ளாது ஜீரணிக்க முடியாத விவாதங்களை இலவசமாக அள்ளி யெறிந்து விட்டுப் பின் நாம் பருத்துவிட்டோம் எனப் பட்டம் விடுவதும் நமக்குப் பழக்கமாகிவிட்டது.

நாம் வெட்டிக் கதைப்போம்; யாரை வேண்டுமா னாலும் சாடுவோம்; இளகிய இரும்பென்றால் குழு அமைத்துக் குத்துவோம்; எம்மிடம் விவாதப்பலம் உண்டு; நம் கருத்துக்களையும் கோட்பாடுகளை யும் எப்போது வேண்டுமானாலும் மாற்றிக் கொள் வோம்; அல்லது அவ்வாறு மாற்றிக் கொள்வதை அனுமதிக்கும் ஒரு புதிய கோட்பாட்டை நாம் காவிக்கொள்வோம். அதற்கு வேண்டுமானால் நாம் விரும்பியபடி 'பின்நவீனத்துவம்' எனப் பெயர் சூட்டிக்கொள்வோம்; எம்மால் மட்டுமே, இனியுலகம் ஈடேறும் என்று உறுதி கொள்வோம்; நாமின்றியுல கில் பிராமணமே தலை தூக்கும் என மார் தட்டிக் கொள்வோம்; இந்து மதத்திடமிருந்து உலகைக் காக்க எம்மால் மட்டுமே முடியுமென்று இறுமாப்படை வோம்; தலித்துகளுக்கும், இஸ்லாமியர்களுக்கு மாகக் கண்ணீர் விடுவோம்; இவ்வாறு எமது கோசங் களும் வேசங்களும் பற்பல.

நாம் என்று கூறுவது, என்னையும் எனது 'இலக் கியச் சந்திப்பு' நண்பர்களையும் சேர்த்துக் கூற நான் பாவித்துக் கொள்ளும் பதம்.

'இலக்கியச் சந்திப்பு' என்றால் என்னவென்று தெரியாதவர்களுக்கான ஒரு மிகச் சிறு குறிப்பு; ஐரோப்பாவில் வாழும் 99.99 வீதமான தமிழர்களை எவ்விதத்திலும் ஈர்க்காது 0.01 வீதமான நாங்கள் எமது புத்திஜீவித முன்னேற்றம் கருதியும் புலம் பெயர் இலக்கிய அடையாளத் தேடல் கருதியும் அவ்வப்போது ஐரோப்பிய நகரங்களில் ஒழுங்கு செய்யும் ஒரு சமரசச் சந்திப்பேயாகும். பகல் வேளைக் கலந்துரையாடல்களை விடவும் இரவு நேரக் கலந்துரையாடல்கள் இங்கு இதமானவையும் இங்கிதமானவையுமாகும். நாம் பாவனைக்காகப் பகலில் திட்டித் தள்ளுபவர் யாவரையும் இரவில் கட்டித் தழுவிக் கவலை தெரிவிப்ப துடன் எங்கள் எதிரியாக இருப் பவர்களுக்கு நாம் எமது நன்றி யுணர்வையும் தெரிவித்துக் கொள்வோம்.

இலக்கியச் சந்திப்புகளின் ஆரம்ப காலத்திலிருந்தே இச் சந்திப்புகளில் கலந்துகொண் டும் பங்குகொண்டும் எனது ஈடுபாட்டை இவ்விடயத் தில் பேணிவந்தபோதும் அவ்வப்போது எனக்குள் கேள்விகளும் முரண்பாடுகளும் தோன்றி என்னை வழிமறிக்காதிருந்ததில்லை. இலக்கியச் சந்திப்பு நண்பர்களின் புத்திஜீவிதத்திலும் எனது புத்திஜீவி தத்திலும் அவநம்பிக்கைகள் அவ்வப்போது தோன்றி மறைந்தாலும் இறுதியாக stuttgartஇல் நடைபெற்ற சந்திப்பானது எனது அவநம்பிக்கை களைப் பன்மடங்காக்கியுள்ளது.

எனது இலக்கிச் சந்திப்பு நண்பர்களின் புரட்சி கரமான சிந்தனைகள் புரட்சி செய்யவே என்ற எனது நம்பிக்கையில் தளர்வு ஏற்பட்டுவிட்டது. சிந்தனைக்கும் சொற்களுக்கும் செயல்களுக்கும் இடையில் ஒளியாண்டுகள் நுழைந்து விட்டதாகப் படுகிறது.

இனிவரும் காலங்களில் இலக்கியச் சந்திப்பில் கலந்துகொள்வதானால் சாதி அடையாள அட்டை யுடன்தான் பிரவேசமளிக்க வேண்டிய நிலை உரு வாகி விடுமோ என அச்சம் ஏற்படுகின்றது. சாதிய அடிப்படையில்தான் கருத்துக்கள் வெளியிடும் அல் லது வாய் மூடி அவதானிக்கும் உரிமைகள் வழங்கப்படுமோ என்ற கேள்விகள் என்னுள் எழு கின்றது.

தலித்துக்களுக்காகப் பரிந்து பேசுவதானாலும் அவர்களுக்காகக் குரல் கொடுப்பதானாலும் தலித் துக்களாலேயே அது செய்யப்படவேண்டும் என்றும் தலித்துக்களல்லாதார் இதில் பங்குபற்றக் கூடா தென்றும் கூறும் எனது 'இலக்கிச் சந்திப்பு' நண்பர் களின் மனப்பாங்கை புரிந்து கொள்வது எனக்குச் சிறிது கடினமாகவேயுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பின்நவீனத் தலித்துக்கள் எனத் தம்மைப் பிரகடனம் செய்தோர், அவ்வாறு பிரகடனம் செய்யாது தலித்துக்களுக்காகக் குரலெழுப்புவோர்கள் தங்களின் போராட்டக் களத்தில் இறங்கிப் புகழ் பெற்றுவிடுவார்களோவென அச்சம் கொள்கிறார்களா?

தலித்துகளுக்காகவும் அவர்களின் நலன்களுக்காகவும் குரல் கொடுக்கும் போராடும் ஒவ்வொருவரும் முதலில் தமது சாதிப் பெயரைக் குறிப்பிட்டுத்தான் ஆரம்பிக்க வேண்டுமா?

பிராமணனைத் தேடி வசை பாடிவிட்டுப் பின் தலித்துக்களைக் காப்பாற்றி விட்டதாக எண்ணிக் கொண்டு இறுதியில் 'நானும் வெள்ளாளன்தான்' எனக் கூறிக் கொள்ளும் பின்நவீனத்து-தலித்துவவாதியைப்பற்றி என்ன கூறலாம்?



பீறிக்கொண்டு வரும் சினத்தின் மூலங்களை ஆய்வு செய்ய வேண்டிய காலம் வந்துவிட்டதென நான் கருத முற்பட்டதில் தவறென்ன உண்டு.

சாதி, இன, மத அடையாளமற்ற புத்திஜீவிகள் நாங்களென்றும் ஒடுக்கப்பட்டவர்க்கான போராட்டமே எமது குறிக்கோள் என்றும் பிரகடனம் செய்யும் 'பின்நவீனத் தலித்துக்கள்' முத்திரை குத்திய எனது இலக்கிய நண்பர்களுக்கு ஒரு வேண்டுகோள்:

உங்கள் போர்க்குண உ[illegible]ங்கை உபயோகிக்கும் விதத்தை மாற்றிக் கொள்ளுங்கள். எங்கே போராட்டம் வேண்டுமோ அங்கே போராடுங்கள். பொய்யான எதிரிகளைத் தற்காலிகமாக உருவாக்கி உங்களைப் போராட்டக்காரர்களாக வருணிக்க வரட்டு முயற்சிகள் செய்யாதீர்கள்.

அடையாளத் தேடலை மட்டுமே நோக்கித் திசைதிருப்பப்பட்டிருக்கும் உங்கள் போர்க்குணங்களை 'அகப்பட்டதைத் தூக்கி அடிக்கும்' உங்கள் தந்திரங்களை குழுக்களாய்ப் பிரிந்து 'கண்ணிவெடி' வைக்கும் உங்கள் கீழ்மைகளைக் கைவிட்டு விடுங்கள்.

சகிக்க முடியா, அனைத்து மானிடப் பண்புகளையும் அவமதிக்கும் தாமிரபரணிப் படுகொலைகளை விபரிக்கும் வீடியோப் படத்தை இலக்கியச் சந்திப்பில் யார் முன் வைத்து அறிமுகப்படுத்தப் போகிறார்கள் என்பதில் எழுந்த சர்ச்சை எதை எடுத்துக் காட்டுகின்றது?

துன்பப்படுவோரின் துன்பங்களையும் துயரங்களையும் கறைப்படுத்தாது அவர்களின் துன்பங்களில் நமக்கு ஆதாயமேதுமிருக்குமோவென எண்ணாது சொல்லிலும் செயலிலும் தூய்மைப்படுவோமாக! (ஏற்கனவே தூய்மையடைந்தவர்கள் இப் பிரார்த்தனையைக் கருத்திலெடுக்காதிருப்பாராக!)

வடஇலங்கையில் இருந்து விடுதலைப் புலிகளால் இஸ்லாமியர்கள் விரட்டியடிக்கப்பட்டு வருடங்கள் பத்துக் கடந்து விட்டதற்கான பரிந்துரையும் கண்ணீரும் மனதைத் தொட்ட விடயங்களாகவே அமைந்தன. ஜெயபாலன் தொட்டு புஸ்பராஜா, ஞானம் அவர்களினுடாகத் தொடரும் இஸ்லாமியப் பரிந்துரை இலக்கியச் சந்திப்பின் பாரம்பரியமாக அமைந்துள்ளது.

பல நூற்றாண்டு காலமாக, பரம்பரை பரம்பரையாக தம் தேசம் இதுவென்று இரத்தத்தில் ஊறிய நம்பிக்கையுடன் வாழ்ந்து கொண்டிருக்கையில் ஒட்டுமொத்தமாய் பல்லாயிரக் கணக்கில் திடீரெனக் கேட்டுக் கேள்வியற்று அத்தேசத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்ட மக்களின் துன்பனுபவங்கள் சொல்லில் விபரிக்கமுடியாதவை.

அவர்களின் நம்பிக்கைகள், மதங்கள், அடையாளங்கள் என்னவாயிருந்தாலென்ன?

தன் தேசத்திலிருந்து தன் சொந்த மண்ணிலிருந்து தன் வீட்டிலிருந்து அநீதியாக விரட்டியடிக்கப்பட்ட அனைத்து மனிதனுக்கும் இதன் வேதனையின் ஆழம் புரிந்துகொள்ளக்கூடிய ஒன்று.

கொடுமைகளும் குரூரங்களும் இன அழிப்பும் பாசிச நாசகாரங்களும் உலகில் எந்த மூலையில் இழைக்கப்பட்டாலென்ன அவையனைத்தையும், எந்த நோக்கில் இழைக்கப்பட்டாலென்ன அவையனைத்தையும் புத்திஜீவிகள் என்ற வகையிலும் மனிதர்கள் என்ற வகையிலும் நாம் எதிர்ப்பதும் அவற்றைத் தடுத்து நிறுத்த முயற்சி செய்வதும் எந்தளவுக்கு எமது கடமையோ அந்தளவுக்கு கண்ணீரையும் புலம்பலையும் கண்டு பொறிகளுக்குள்ளும் பொய்மைகளிற்குள்ளும் அகப்படாமல் இருப்பதும் நமது கடமையாகும்.

கொடுமைகளைக் கண்டு குரலெழுப்புவதிலும் கண்ணீர் விடுவதிலும் உள்ள தெரிவுகளையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

முரண்பாடுகளையும் பொறுப்பெடுப்புகளையும் துல்லியமான முறையில் காணத் தவறாதிருப்போமாக.

இவ்வகையில்தான் இலக்கியச் சந்திப்பில் அடிக்கடி பேசப்படும் வட இலங்கை இஸ்லாமியப் பிரச்சினையின் மீதான அணுகுமுறைகளையும் அதன் பின்னணிகளைப் பற்றியதுமான எனது அகப் பார்வையும் புறவய நடுநிலை பற்றியதுமான நோக்கைக் கீழே தருகிறேன்.

கொடூரத்துக்குள்ளான வட இலங்கை இஸ்லாமிய மக்களின் துன்பநிலைபற்றியோ அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சாத்தியமான சுபீட்சம்பற்றியோ ஆய்வுசெய்வதோ அல்லது தீர்மானமெடுப்பதோ (இக் கட்டுரையில்) எனது நோக்கமல்ல என்பதை முதலில் குறிப்பிட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

வடஇலங்கையில் இருந்து புலிகளினால் இஸ்லாமியர்கள் விரட்டப்பட்டதுபற்றி எனது இலக்கியச் சந்திப்பு நண்பர்கள் கூறும் காரணங்களாவன:

* இதுவொரு புலிகளின் இனச் சுத்திகரிப்பு நடவடிக்கை.

-அவ்வாறெனில் புலிகள் வடஇலங்கை முஸ்லிம்களை எந்த இனமாகக் கருதி இனச் சுத்திகரிப்பில் இறங்கினார்கள்?

திராவிடர்களாக, ஆரியர்களாக....? (இஸ்லாம் என்ற ஒரு இனம் இருந்ததாக நான் அறியவில்லை. இறுதியாக நடைபெற்ற இலக்கியச் சந்திப்பில் வட இலங்கை இஸ்லாமியர்கள் திராவிடர்கள் என்று ஞானம் (எக்ஸில் சஞ்சிகை ஆசிரியர்) குறிப்பிட்டதும் குறிப்பிடத் தக்கது.

* யாழ்ப்பாண இந்து வேளாளத் தூய்மைக்காகப் புலிகள் நடாத்திய மதச்-சாதியச் சுத்திகரிப்பு

அவ்வாறெனில் புலிகள் ஏன் முஸ்லிம்களை மட்டுமல்லாது கத்தோலிக்க புரட்டஸ்தாந்து மதத்தவர்களையும் நாத்திகவாதிகளையும் நாடு கடத்தவில்லை?

· வடஇலங்கை முஸ்லிம்கள் திராவிடர்களேயானபடியாலும் புலிகள் மதச் சுத்திகரிப்பில் ஈடுபட்டார்கள் என்பதை முழுமையாக நம்ப முடியாதபடியினாலும் வடஇலங்கை முஸ்லிம்களை எதற்காகப் புலிகள் விரட்டியடித்தார்கள் என்பதை எந்த இலக்கியச் சந்திப்பு நண்பன்/பி எனக்குப் புரியவைப்பான்/ள்?

யாரை ஆதரிப்பது யாரை எதிர்ப்பது யாருடன் உடன்படுவது என்பனவெல்லாவற்றிற்குமப்பால் கூற்றுகளின் முரண்பாடுகளைத் தவிர்த்து இசைவான ஒரு காரண-காரிய உறவை ஏற்படுத்தாதவிடத்தில் தவறுப் புழுதிகளுக்குள் பார்வை திரிபடைவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகரித்துவிடுமல்லவா?

அநீதியான முறையில் புலிகளினால் விரட்டியடிக்கப்பட்ட வட இலங்கை முஸ்லிம்களுக்காக சில வருடங்களுக்கு முன் பாரிஸில் நடைபெற்ற இலக்கியச் சந்திப்பில் ஜெயபாலன் கண்ணீர் வடித்ததை இலக்கிய நண்பர்கள் எவரும் மறந்திருக்க மாட்டார்கள். அத்தனை ஆழமாக அவரின் கண்ணீர் மனங்களிலே பதிந்து அவரையொரு எல்லையற்ற மானிடவாதியாக உயர்த்தியிருந்தது.

ஆனால் இறுதியாக நடந்த இலக்கியச் சந்திப்பில் அவரையெண்ணி வெட்கமடைந்த நிலையிலும் அவரின் துரோகத்தனத்தைக் காரமாகக் கண்டித்தபடியும் கண்ணீர் வடித்தார் எக்ஸில் சஞ்சிகை ஆசிரியர் ஞானம்.

யார் கண்ணீரை நம்புவது? இன்றைய கண்ணீருக்கும் நேற்றைய கண்ணீருக்கும் உள்ள வித்தியாசம் என்ன? நாளை இந்தக் கண்ணீர்த் துளிகள் எல்லாவற்றிற்கும் கிடைக்கக்கூடிய விளக்கங்கள் என்ன? கால - இடப் பரிமாணங்களுக்கப்பால் இக் கண்ணீர்த்துளிகளின் ஆழமான உளவியற் காரணங்கள் என்ன?

துன்பப்படுபவர்களின் துன்பங்களையும் துயரங்களையும் கறைபடுத்தாது அவர்களின் துன்பங்களில் நமக்கு ஆதாயமேதுமிருக்குமோவென எண்ணாது, சொல்லிலும் செயலிலும் தூய்மையடைவோமாக!

(ஏற்கனவே தூய்மையடைந்தவர்கள் இப் பிரார்த்தனையைக் கருத்திலெடுக்காதிருப்பாராக!)

இன மத மொழி மற்றும் பல அடையாளங்களை மறுத்து புத்திஜீவிகளாகவும் மனிதாபிகளாகவும் எம்மைப் பிரகடனப் படுத்திக்கொள்ளும் நாம், வட இலங்கையில் இருந்து விரட்டப்பட்ட இஸ்லாமியர்களுக்காக வடிக்கும் கண்ணீரின் நிஜமான தன்மைபற்றிய கேள்விகளை கேட்கவேண்டியவர்களாகவும் ஆகிவிடுகிறோம்.

யாருக்காக அழுதார்கள்?

* வட இலங்கை முஸ்லிம்கள் சாதாரண முஸ்லிம்கள் என்ற தனிக் காரணத்திற்காக இவர்கள் அழவில்லை.

அவ்வாறெனில் இன்று உலகின் பல பாகங்களில் பொஸ்னியாவில் கொசோவாவில் செச்சனியாவில் பன்மடங்கு கோரங்களுக்குட்பட்ட அனைத்து இஸ்லாமியர்களுக்காகக் கண்ணீர் வடித்திருப்பார்கள்.

* உலகம் முழுவதிலுமுள்ள முஸ்லிம்களுக்காகக் கண்ணீர் வடிக்க உலகம் முழுவதும் முஸ்லிம்கள் இருக்கின்றார்கள், நாம் ஆகக்குறைந்தது நமது நாட்டு இஸ்லாமியர்களுக்காகவாவது கண்ணீர் வடிக்கிறோம் என்று இவர்கள் கூறக் கூடும்.

ஆனால் இவர்கள் உலகக் குடிமக்கள் ஆயிற்றே. பூசை பண்ணும்போது பாதிரியார் உலகிலுள்ள அனைவரினதும் நன்மை வேண்டி வழிபடுவதுபோல் இவர்களும் அழும்போது உலகிலுள்ள எல்லா இஸ்லாமியர்களுக்குமாக அழுதிருப்பார்களோ என்ற சந்தேகம் எழுகிறது.

அது மட்டுமல்லாது இவர்களைத் 'தேசிய இஸ்லாமியவாதிகள்' என்று எண்ணவும் என் மனம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கூசுகின்றது.

இவைகள் எல்லாவற்றையும் மீறி இவர்களின் காரணங்களை ஏற்றுக் கொண்டாலும் சிங்கள-இஸ்லாமியக் கலவரங்களின்போது பாதிக்கப்பட்ட இஸ்லாமியர்களைப் பற்றியும் இவர்கள் நினைவு கூர்ந்திருப்பார்களே என்ற நெருடலும் ஏற்படு கின்றது.

• தமிழ்பேசும் இஸ்லாமியர்கள் என்பதற்காகவே இவர்கள் இரக்கம் கொண்டார்களோ என்று எண்ணத் தோன்றினாலும் மத-மொழி எல்லைகளைத் தாண்டிய மானிடவாதிகளை இவ்வகையான சிறு கூண்டுகளுக்குள் கொண்டு சென்று அடைப்பது எனக்கு உடன்பாடில்லாத ஒன்று.

• எதற்காக உலகவலம்? துன்புறும் அயலவர்களுக்காக நாம் அழுவதுபற்றி யாருக்கு நாம் விளக்கமளிக்க வேண்டும் என்றும் அவர்கள் கூறலாம்.

அவ்வாறெனில் எந்த அடிப்படையில் நாம் நம் அயலவர்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்காகக் கண்ணீர் வடிக்கிறோம்?

தேர்வு அடிப்படைகளைத் தெளிவுபடுத்திக் கூறினால் என்ன?

வடிக்கும் கண்ணீர் ஒரு துளி என்றாலும் சமுத்திரமானாலும் பரந்த மானிட சுபாவமுள்ள புத்திஜீவிகளாகிய நாம், அக் கண்ணீர்த் துளிகளை உலகிலுள்ள அனைத்து அராஜகத்திற்கும் பலியாகியோருக்குச் சமர்ப்பித்தாலென்ன?

ஒரு அராஜகச் சூழ்நிலையை எடுத்துக் கொண்டால் அங்கு நிகழும் அனைத்து அராஜகங்களையும் பேதமின்றிக் கண்டிப்பதும் அவ்விதமான அராஜகங்களுக்குப் பலியானோர் அனைவரின் பாலும் பேதமின்றி குரல் கொடுப்பதும் புத்திஜீவிகளின் கடமையாகும்.

ஆனால் இலக்கியச் சந்திப்புப் புத்திஜீவிகள் மட்டும் தங்களுக்குப் 'பிடித்தமான' அராஜகங்களையும் அவற்றிற்குப் பலியானோரையும் தேர்வு செய்கிறார்களோ என்ற என் சந்தேகம் நாளுக்கு நாள் வலுத்துக்கொண்டு வருகிறது.

ஆக மொத்தத்தில் எக்கோணத்தில் பார்த்தாலும் குழப்பங்கள் பெருகி வருகிறதேயொழிய தெளிவுகள் தோன்றியபாடாயில்லை.

எனது 'பின்நவீனத்துவ-தலித்திய' இலக்கிய நண்பர்கள் பலர், தலித்துக்களின் பிரச்சினைபற்றித் தலித்துக்களே பேசவேண்டும் என்றும் தலித்தல்லாதோர் தலித்துகளின் நலன்களில் கொள்ளும் அக்கறையானது சூழ்ச்சி நிறைந்ததென்றும் தலித்துக்களின் பெயரால் தம்மைப் பிறர்நலவாதிகளாகவும் மனிதாபிகளாகவும் காட்டி அடையாளத் தேடலில் ஈடுபடுகிறார்கள் என்றும் குற்றம் சாட்டுகிறார்கள்.

இவர்களின் இக்கூற்றுக்களை ஏற்றுக்கொள்ளுவதாகவே வைத்துக் கொள்வோம். அவ்வாறெனில் தலித் அல்லாதோர் தலித்துக்களின் நலன்கள்மீது அக்கறை கொள்ளுதலில் ஏற்படக்கூடிய சந்தேக மனைத்தையும் இஸ்லாமியர் அல்லாதோர் இஸ்லாமியர்பால் கொள்ளும் அக்கறைமீது கொள்வதில் தவறென்ன இருக்கிறது?

முரண்பாடுகள் இல்லாத மனிதர்கள்/புத்திஜீவிகள் எங்குமில்லையென்றே கூறிவிடலாம். ஆனால் செயற்கையான உபாயப்பொறிகள் நிரம்பிய முரண்பாடுகளால் யாருக்கு ஆதாயம் இருக்கிறது என்பதைக் காணத் தவறாதிருப்போமாக.

துன்பப்படுவோரின் துன்பங்களையும் துயரங்களையும் கறைபடுத்தாது அவர்களின் துன்பங்களில் நமக்கு ஆதாயமேதுமிருக்குமோவென எண்ணாது சொல்லிலும் செயலிலும் தூய்மையடைவோமாக!

(ஏற்கனவே தூய்மையடைந்தவர்கள் இப்பிரார்த்தனையைக் கவனத்திலெடுக்காதிருப்பாராக!)

●

## 10.06.2000-11.06.2000 ஸ்ருட்கார்ட் இலக்கியச் சந்திப்பின் படிப்பினைகள்

### வ. அழகலிங்கம்

இந்த முறை இலக்கியச் சந்திப்பு பல ஒத்திப்போடல்கள் , இயலாமை, தடங்கல்களின் மத்தியில் ஜேர்மனியின் ஸ்ருட்காட் நகரத்தில் யூன் 10ம்-11ம் திகதிகளில் நடைபெற்றது. வெற்றியோ தோல் வியோ பல இலக்கியப் படைப்பாளிகளும் ஆர்வலர் களும் சுவைஞர்களும் சிரமப்பட்டுப் பங்கு பற்றிய தால் அறுந்து போன கிளைகளை மீண்டும் சேர்த்து முடியக்கூடியதாக இருந்தது. இலக்கியம் மனித மனங்களைப் பிணைக்கும் பாலம். ஆதலால் அதை நடாத்தியதும் பங்களித்ததும் அவலச்சுவை நிறைந்தபோதும் பெருமைக்குரிய விடயம்தான். இன்று இலங்கையில் ஒரு தமிழனைக் காப்பாற்றுதல் உலகத்தைக் காப்பாற்றுவதற்கு நிகராகும் என்று சரித்திரம் சவால் விட்டு கண்டு கேட்டிராத அறிவுத்தடை சூழலில் இருக்கும் இதமும் இங்கிதமும் அற்ற சூழலில் இலக்கிய கர்த்தாக்களின் கடைசி எஞ்சியுள்ள நம்பிக்கையும் வரண்டு விடாமற் பாதுகாக்கும் அற்ப ஆனால் வரலாற்று அர்த்தம் நிறைந்த சம்பவம்தான் இந்த இலக்கியச் சந்திப்பு.

நாகரீகம் மறந்து போக அனுமதிக்காத தோழர் சபாலிங்கத்திற்கு தலை தாழ்த்தியதோடு ஆரம்பமாகியது. முதல் நிகழ்ச்சியை நோர்வேயை வதிவிடமாகக் கொண்டவரும் சரிநிகர் ஆசிரியர் குழுவில் ஒருவரான தோழர் சரவணன் சிங்கள மக்களில் சாதியமைப்பு முறை பற்றிப் பேசினார். அமைப்பாளர்களின் எடை போடும் திறன் குன்றியதாலும் திருட்டல் வாதத்தாலும் எல்லா நிகழ்ச்சியுமே நேர நெருக்குவாரத்தால் உடற்சேதம், உளச்சேதம் செய்யப்பட்ட போதும் அரிசிப் பொதியோடு திருவாரூர் போகப்பட்டது. சாதியில்லாத பௌத்த சிங்களத்தில், இலங்கை இந்துத் தமிழ் மக்களுள் இல்லாத எத்தனையோ சாதிப் பிரிவுகள் இருந்தது அநேகருக்குப் புதிய செய்தியாகும். ஒடுக்கப்பட்ட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வர்களுள் ஒடுக்கப்பட்ட அவர்களுக்குக் கீழேயும் ஒடுக்கப்பட்டு ஒரு பக்கத்தால் அடைத்துக் கொண்டு வர மற்றப் பக்கத்தால் திமிறிக் கொண்டிருக்கும் இன்றைய சகாப்தத்தின் உலகின் முதலாவது ஜனநாயகப் பிரச்சினையை அலசி ஆராய்வது அதை மீண்டும் எழாதபடி நிர்மூலமாக்கும் வேலைத் திட்டத்தை வளர்த்தெடுக்க அவகாசம் அளிக்காதது ஓர் தவிர்க்கக்கூடிய தவறாகும்.

அடுத்த நிகழ்ச்சியாக நடந்த பெண்கள் பங்களிப்பான 'சக்தி'பத்திரிகையை வளர்த்தெடுப்பது பற்றியது எதிர்பார்த்த அளவு நிறைவை அளிக்கவில்லை. பெண்விடுதலை இலக்கியங்களோடு மேலும் பரிச்சயமாகவேண்டும் என்பதை அது சமிக்ஞை செய்து சென்றது.

பின் மதிய நிகழ்ச்சியான முனைவர் நா. கண்ணனின் நிகழ்ச்சியான 'மாறன் மனமும் மறந்துபோன புரட்சியும்' என்பது புரட்சி பற்றிய தப்பெண்ணமாக வெளிப்பட்டது. புரட்சி என்பது பல நூற்றாண்டு காலமாகத் திரண்டு இறுகிப்போன பிற்போக்குத் தனங்களின் தாங்கொணாத துயரத்தால் வெகுசனங்கள் மடை திறந்த காட்டாற்று வெள்ளம் போல எழுச்சி கொண்டு பழைய மேற்கட்டுமானங்களையெல்லாம் உடைத்தெறிந்து நவீன நாகரீக வாழ்க்கைக்கு ஏதுவாக சமுதாயத்தை மீண்டும் முதலிலிருந்து கட்டியெழுப்புவதுமாகும். இந்தியாவின் பௌத்தம் செய்த புரட்சிக்குப் பிறகு எந்தப் புரட்சியும் தோன்றவில்லை. இருந்தபோதும் ஆழ்வார்களது தமிழ் இலக்கியப் பங்களிப்பும் குறைந்ததல்ல என்பதைக் கண்ணன் வெளிக்கொணர்ந்தார். மார்க்சியமும் தலித்தியமும் பிறப்பதற்கு பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே சில ஆழ்வார்கள் சில சீர்திருத்தங்களுக்காகப் போராடிய உண்மையை சைவத் தமிழை மாத்திரம் தெரிந்த இலங்கைத் தமிழர்களுக்கு அறிமுகம் செய்து வைத்தது வரவேற்கத்தக்கது. ஐயங்கார் குடும்பத்திற் பிறந்து இன்று வரைக்கும் தலித்துகளோடு உண்டு உடுத்துப் படுத்து வாழ்ந்த தன் எழுத்துக்கள் எல்லாம் சாதியத்தை எதிர்த்துப் போராடிய போதும் தூய தலித்வாதிகள் மிகப் பிடிவாதமாக பிராமண முத்திரை குத்திய அகவய வெறுப்புச் சூழலில் அவரது செவ்வியல் இலக்கியம் சார்ந்த பங்களிப்பை எவரும் மனம் கொள்ளும் சூழல் இலக்கியச் சந்திப்பில் நிகழ்ந்ததில்லை. அடுத்த நிகழ்ச்சியை நடாத்திய யோகநாதன் புலம்பெயர் சூழலில் அரசாங்கச் சட்டங்கள் எவ்வாறு புலம்பெயர் தமிழர்களை ஒடுக்குகிற தென்பதை பல பக்கங்களில் விளங்கப்படுத்திக் காட்டினார்.



மறுநாள் நிகழ்ச்சியில் தோழர் அசோக்கினது பெரியாரியம் மறுவாசிப்பு இடம்பெற்றது. விமர்சன நோக்கோடு எதையும் வாசிக்கவேண்டும் என்பதை அசோக் திறம்பட எடுத்துக் காட்டினார். மற்றைய மரபான புனிதச் சிலைகளையெல்லாம் உடைத்தெறிந்து பெரியாருக்கு சிலை வைத்தவர்களால் அதைச் சீரணிக்க முடியவில்லை. பெரியார் பொதுவுடைமைக் கட்சியில் இருந்த காலத்தில் அவர் பிரேரித்து நடைமுறைப்படுத்திய பொதுவுடைமை வேலைத்திட்டங்களையெல்லாம் பெரியாரிசச் சரித் தன்மைகள் என்று அசோக் வலியுறுத்தினார். இரண்டாம் உலக யுத்தத்தில் பெரியார் பிரித்தானிய ஏகாதிபத்தியத்தையும் ஜெர்மன் பாசிசத்தையும் தோற்கடிக்கும் நிலைப்பாட்டை எடாது விட்டதை அசோக் ஏனோ சொல்லாது விட்டுவிட்டார். அந்தத் தவறின் மிச்ச சொச்சங்கள்தான் இன்றுவரை ஏகாதிபத்திய எஜமான்கள் விடுதலை எடுத்துத் தருவார் என்ற பிரமையில் இருந்து இன்றுவரை நாம் ஓயவில்லை. ஒரு இலக்கிய மேடையில் எவ்வளவு நிதானமாகவும் பொறுமையோடும் இருந்து சொற்பொழிவை நிகழ்த்த வேண்டும் என்பதற்கு அன்றைய நிகழ்ச்சி ஓர் உதாரணம். அவரது பெரியார் பற்றிய பல பக்கப் பார்வை கலந்து கொண்ட பலரால் மெச்சப் பட்டது.

அடுத்து நிகழ்ந்த தோழியர் சுபாஜினியின் கணனியின் அபிவிருத்தியும் றோபோட்டுகளின் (robots) பாவனைகளும் வியக்கத்தக்கதாக இருந்தது. ஆனால் அந்த நிகழ்ச்சியைப் பலர் செவிமடுக்கும் பொறுமை அற்ற போதும் நிகழ்ச்சியைத் தொடர்ந்து கலந்துரையாடலுக்கு நேரம் வழங்காமையும் இலக்கியச் சந்திப்பின் கறை பட்ட நிகழ்வாகும்.

அடுத்து நடந்த இலங்கையில் முஸ்லிம் மக்களுக்கு எதிராக நடைபெற்ற நெட்டூரங்களை ஓரளவு வரலாற்றுரீதியாக தோழர் புஸ்பராஜா அறிமுகப் படுத்தி வைக்க தோழர் ஞானம் அதை மேலும் வளர்த்தெடுத்துச் சென்றார். முழு உலக வரலாறு முழுவதும் சிறுபான்மை இனத்தவரின் ஜனநாயக விடுதலைப் போராட்டம் சிறுபான்மைக்குள்ளே சிறுபான்மையை நசுக்கிய போராட்டமாக இருந்த தென்பதை இலங்கையில் நிகழ்ந்த நிகழ்வுகள் மேலும் ருசுப்படுத்தின. அன்றைய நிகழ்வில் தோழர் ஞானம் பல சந்தேகங்கள் தெளிவாகும் விதமாகவே பங்களித்தார் எனலாம். சார்புரீதியாகத் தனிப்பட்ட தாக்குதல்களே பழிவாங்கல்களோ குறைந்த இலக்கியச் சந்திப்பு என்றால் மிகையாகாது.

இலக்கியச் சந்திப்பில் இடையிடையே சிறுமிகள் பைரவி, டிலானி, நிலானியின் புல்லாங்குழல், கீபோட் (key board) மற்றும் கீதங்களாலும் இடை நிரப்பியதால் அது மேலும் மெருகேறியது. சிறுவர் குழலினிமையும் சிறு கையழாவிய கூழினையும் தெரியாதார் தெரியாதாரே.

தோழர் சந்தூஷின் அமிர்தியா சென் பொருளா




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாரத்திற்காக நோபல் பரிசு பெற்றது. அந்தக் கட்டுரையை அவரால் முடிந்த மட்டிற்கும் அறிமுகம் செய்ய முயற்சித்தார். உலகில் வறுமையின் சில பகுதிகளைப் போக்கும் கணித சூத்திரங்களை அமிர்தா சென் பிரேரித்ததை சந்தூஷ் மெச்சியிருந் தார். பொருளியல் தத்துவத்தில் உற்பத்தியைப் போலவே விநியோகமும் ஒரு பொருளின் காரணி ஆகும். வறுமைக்கான மூல காரணம் பற்றாக்குறை விநியோகம் அல்லது சமமற்ற விநியோகமோ நாளாந்த மொழியில் சொல்வதென்றால் விலைக்கு வாங்கும் சக்தியின்மை போன்ற சமூக விஞ்ஞான எடுகோள்களை சந்தூஷ் கிரகிக்கத் தவறி விட்டார். இதைக் கலந்துரையாடலின்போது பாரதிதாசன், சூட்சுமமாக விளங்கப்படுத்தினார். அவர் சொன்னார்: 'எனக்கு பொருளாதாரத்திற்கும் சமாதானத்திற்கும் நோபல் பரிசு வழங்கும்போது எப்போதுமே சந்தேகம்தான்' என.

இருந்தபோதும் அந்த இலக்கியச் சந்திப்பில் பொருளாதாரத்தின் முக்கியத்துவத்தை தொட்ட ஒரே ஒரு பங்களிப்பு சந்தூஷினுடையதுதான்.

சக்கரவர்த்தியின் 'யுத்தத்தின் இரண்டாம் பாகம்' வெளியிடப் பட்டது. தற்போதுள்ள இலக்கியப் படைப்பாளிகளுள், அதுவும் கனடாவில், மிகவும் நன்றாகவே அங்கீகரிக்கப்பட்ட படைப்பாளி சக்கரவர்த்தியாகும். அந்த நூலை அங்கு வந்திருந்தவர்களில் பெரும்பான்மையானோர் வாசித்திருக்காத சூழலால் அந்த வெளியீட்டில் புத்தகத்தின் இம்மை வறுமைபற்றி பெரிய பேச்சுக்கள் எழவில்லை. ஆனாலும் இன்று சக்கரவர்த்தி போன்றவர்கள் இல்லையென்றால் நவீன தமிழ் இலக்கியத்தில் மனித நேயம் என்பது வறண்டு விடும்.



இரண்டு நாட்களும் முடிவில் இரண்டு விவரணப் படங்கள் காட்டப்பட்டன. பாரதியின் விவரணப் படத்தை திரு. குமரன் அறிமுகம் செய்து வைத்தார். அப்படத்தில் நாம் நிறையவே எதிர்பார்த்தோம். எதிர்பார்த்த அளவுக்கு அது எம்மைக் கற்பிக்காத போதும் பாரதி பற்றிய முதலாவது படத்தை (விவரணப் படம் என்று சொல்லுமளவுக்குப் பொருத்த முடையதோ....) பார்த்த அற்ப திருப்தி இருக்கவே செய்தது.

*11. 06. 2000* அன்று இலக்கியச் சந்திப்பின் கடைசி நிகழ்ச்சியாக தாமிரபரணி மாஞ்சோலைத் தோட்டத் தொழிலாளர்களின் சம்பளப் போராட்டத்தின் உச்சக் கட்டமாக மாஞ்சோலை தோட்டத் தொழிலாளர்களின் படுகொலை நிகழ்ச்சியைப் படம் பிடித்த விவரணப்படம் காட்டப்பட்டது. அந்தப் படம் பிராமணனோடு தொடங்கி பிராமணனோடு முடிவு பெறுகிறது. அந்தப் படத்தை ஒழுங்கு செய்தவர்கள் முடிவில் ஏதோ திரைப்பட விமர்சனத்திற்கு இழுத்துச் செல்ல முயன்றனர்.

நான் (அழகலிங்கம்) அந்தப் படத்தின் படிப் பனவுகளை சர்வதேச தொழிலாள வர்க்கத்தின் உணர்வு முதிர்ந்த சக்திகளுக்கும் தனி மனிதநேய சக்திகளினதும் நீதி நியாயங்களுக்குச் சிறிது கவனம் கொடுக்கும் சக்திகளுக்குள்ளும் கொண்டு செல்வதன் மூலம் அப் போராட்டத்தை தொடர்ந்து நடாத்தப் பின்வரும் வேலைத் திட்டத்தைப் பிரேரித்தேன்.

எனது பேச்சில் அந்தப் படம் இவ்வளவு காலமும் வந்த புலம்பெயர் இலக்கியப் பத்திரிகைகளதும் இலக்கியச் சந்திப்புகளதும் செயற்பாடுகளின் பலாபலனிலும் பார்க்க ஆயிரம் மடங்கு பலா பலனைத் தரவல்லது என்று பிரேரித்ததோடு பின்வரும் மிகச் சாத்தியமானதும் சர்வதேச தொழிலாளர் வர்க்கத்தின் வாழையடி வாழையான போராட்ட முறையுமான பின்வரும் வேலைத் திட்டத்தை முன்வைத்தேன்.

1. அவ் வீடியோ படத்தை ஜேர்மன், பிரெஞ்சு, ஆங்கில மொழிகளில் மொழி பெயர்த்து தொழிற் சங்கங்களுக குள்ளும் தொழிலாளர் வர்க்கக் கட்சிகளுக்குள்ளும் அனுப்பி வைப்பது. அதனோடு சர்வதேச மன்னிப்புச் சபை போன்ற சர்வதேச ஸ்தாபனங்களுக்கும் அனுப்பி வைக்க வேண்டும்.

2. பாரபட்சமற்ற விசாரணையைக் கோரி அதன் குற்றவாளிகளைக் கைது செய்யும்படி கோருவது இதைத் தொழிற் சங்கங்களும் தொழிலாள வர்க்கக் கட்சிகளும் இந்தியத் தூதுவர்களைக் கேட்கும்படி நிர்ப்பந்திப்பது

3. இந்தியத் தூதரகத்தின்முன் ஆர்ப்பாட்டம் செய்வதற்குத் தொழிலாளர் கட்சிகளையும் தொழிற் சங்கங்களையும் அழைப்பதன்மூலம் இந்திய அரசாங்கத்திற்கு நெருக்குவாரத்தைக் கொடுப்பது.

4. இந்த வழக்குக்குத் தேவையான காசை நாம் இங்கு சேர்த்து, அங்கே சிறந்த சட்ட வல்லுநர்களை அமர்வித்து வழக்காடுவது போன்ற இன்னோரன்ன வேலைத்திட்டங்களைப் பிரேரித்தேன்.

அதைத் தொடர்ந்து நடந்த கலந்துரையாடலில்,

அசோக்: இந்தப் போராட்டம் தொழிலாளர் வர்க்கப் போராட்டம். இதற்குத் தலித் சாயம் பூசுவதன் மூலம் அரசியல் லாபம் தேடுகிறார்கள்

அழகலிங்கம்: அசோக் கவனிக்கத் தவறியது. அங்கே போராட்டத்தை நடத்துபவர்கள் தலித்துகளாகவும் தொழிலாளர்களாகவும் இருப்பதால் அவர்கள் இரட்டை ஒடுக்குமுறைக்கும் இரட்டைச் சுரண்டலுக்கும் உள்ளாவதால் தொழிலாள வர்க்கக் கட்சிகளுக்கு இப் போராட்டத்தைப் பாதுகாக்க வேண்டிய இரட்டைத் தார்மீகக் கடமை உண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதையடுத்துப் பேசிய மணியம் அவரின் இயல்பான மேடைக் கூச்சத்தினால் "இதை நாங்கள் செய்யாவிடில் நாங்கள் என்ன மனிதர்?" என்று கூறினார்.

தொடர்ந்து பேசிய சரவணன் "ஐயோ! தலித் இயக்கத்திலே கை வையாதையுங்கோ. அது அதற்குரிய மருந்தும் என்னவென்றும் எங்களுக்குத் தெரியும். அவர்கள் உங்களது காசை நம்பிப் போராட்டத்தைத் தொடங்கவில்லை."

அழகலிங்கத்தின் பிரேரணையை நன்றாக ஆதரித்துப் பேசினார் கண்ணன். சுபாஜினி தான் இந்தப் படத்தை இணைவலயத்தில் போடுவதாகவும் ஆனால் தான் கட்சியின் பெயரைப் போடமாட்டேன் என்றும் தனக்குக் கட்சிப் பிரச்சாரம் செய்ய விருப்பமில்லை என்றும் கூறினார்.

அப்பொழுது அதைத் தொடர்ந்து பேசிய முரளி, அழகலிங்கம் கழிவிரக்கத்தினால் இப்படி உணர்ச்சி வசப்பட்டுப் பேசுகிறார். உங்களின் கழிவிரக்கம் அவர்களுக்குத் தேவையில்லை.



அப்பொழுது நான் அழகலிங்கம் அப்படி என்றால் உன து வேலைத்திட்டம் என்னவென்று கேட்டேன். உடனே முரளி எனக்கொரு வேலைத் திட்டமும் இல்லை என்றார்.

கிருஷ்ணா தான் அதை ஜேர்மன் மொழியில் sub title போட்டுத் தருவதாகவும் தான் DGBயில் சுறுசுறுப்பாகச் செயற்படுவதால், இதைத் தொழிற் சங்கத்தினுள் கொண்டு போவதாகவும் ARTE மற்றும் தொலைக்காட்சிக்கு கொடுப்போமென்றும் கூறினார். இந்தப் போராட்டத்தை வெல்வதற்கு உள்ளவர்கள் எவ்வாறு இந்த ஒடுக்குமுறை அனுபவத்தை தொழிற் சங்கங்களுக்குள் கொண்டு செல்வதென்று கேட்டேன். சிறிது சாதகமாகப் பேசினாலும் ஸ்தூலமான வேலைத்திட்டத்தை சொல்லவில்லை.

தோழர் சிவராசா மிகவும் நிதானமாகவும் விட்டுக் கொடுக்காமலும் திரும்பத் திரும்ப இப்பொழுது என்ன செய்வதென்று கேட்டதால் ஈற்றில் கிருஷ்ணா, பாரதி, நான் உட்பட இந்த வீடியோக் கொப்பியை ஜேர்மன் மொழியில் sub title போடும் வேலை செய்வதாக முடிவெடுக்கப்பட்டது. புத்திரா, யோகா மிகவும் என்னை ஆதரித்துப் பேசினர். கிருஷ்ணா ஒரு ஒறிஜினல் வீடியோ கொப்பி என்றால்தான் எதையும் செய்யலாம் என்றார்.

கூட்டமுடிவின் அதிர்வுகள்:

மேடையில் பேசுவதற்கு எப்போதும் கூச்சப்படும் அப்பன் என்னிடம் வந்து "நீங்கள் இறுக்கமாய் நின்று அந்தப் பொறுப்பை எடுத்திருக்க வேண்டும். இவங்கள் ஒண்டுக்கம் விடமாட்டாங்கள்" என்று சொன்னார்.

இரண்டு மூன்று பிரான்சு நாட்டுத் தோழர்கள் "அண்ணை காசு அனுப்பவேண்டாம். புதிய தமிழகக் கட்சித் தலைவர் கிருஷ்ணசாமி ஊழல் நிறைந்தவர். நாங்கள் அனுப்பும் காசு போய்ச் சேர வேண்டியவரிடம் போய்ச் சேராது. ஆதலால் நாங்கள் இந்தப் படத்தைத் தொழிற் சங்கங்களினுள்ளும் மற்றும் சர்வதேச அமைப்புகளுக்குள்ளும் கொண்டு செல்வோம்" பக்கத்தில் நின்ற அப்பன் இந்தத் தலைவர்களின் ஊழல்களினாற்தான் தாழ்த்தப்பட்டவர்களாக இருக்கிறார்கள் என்றார்.

பின்பு என்னோடு பேசிய காவேரி நீங்கள் consistent ஆக (திடமாக) நின்று இந்தக் காரியத்தைச் செய்யாததால் துரோகமிழைத்து விட்டீர்கள். அவர்களுக்கும் காசை அனுப்பி நாங்கள் உதவி செய்யவேண்டும். ஆனால் பாரபட்சமற்ற விசாரணைக்கு நான் விரும்பவில்லை. ஏனென்றால் அந்த விசாரணையின்போது கீழேயுள்ள சிப்பாய்கள் தான் சிறைப் பிடிக்கப்படுவார்கள். உச்சியிலுள்ள தலைவர்கள் தப்பி விடுவார்கள்.

அழகலிங்கம்: அப்ப வேறென்ன செய்யலாம்?

காவேரி: தெரியாது. ஆனால் நீங்கள் டொச்சில் மொழி பெயர்த்த வீடியோவை என்னிடம் ஒரு கொப்பி தாருங்கோ. நான் கொண்டு போய் மாணவர் அமைப்பினுள்ளே காட்டுவேன்.

என்னிடம் வந்த ஷோபாசக்தி தோழருக்கு ஒரு வீடியோ கொப்பி கொடு என்று கேட்டு ஒரு தோழரிடம் இருந்து ஒரு வீடியோ கொப்பியை எனக்குக் கொடுத்தார். நான் சொன்னேன் இப் போராட்டத்திற்காக புதிய தமிழகம் கட்சிக்கு நிபந்தனை இல்லாத ஒத்தாசை வழங்குகிறேன். பாதிக்கப்பட்டவர்கள் தலித்துகளாகவும் தொழிலாளர்களாகவும் இருப்பதனால் இரட்டை மடங்கு ஒடுக்கப்படுகிறார்கள். மார்க்சியவாதிகளுக்கு இரட்டைமடங்கு தார்மீகக் கடமை உண்டு இதற்கு ஒத்தாசை வழங்குவதற்கு.

ஆனால் புதிய தமிழகக் கட்சி யின் வேலைத் திட்டத்திற்கு ஒரு எல்லையுண்டு. ஆதலால் ஒரு மட்டத்திற்கு அப்பால் இப்போராட்டத்தை வளர்த்துக் கொண்டு செல்ல மாட்டார்கள். ஆனால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மார்க்சியவாதிகள் தவறு செய்த தினால்தான் இப்படி ஒரு கட்சி உருவானது. நான் இதைத் தொழிற் சங்கங்களினுள்ளும் தொழிலாளர் கட்சிகளினுள்ளும் கொண்டு செல்வேன். நீங்களும் இதை பாரிஸினுள் கொண்டு செல்லுங்கோ.

ஷோபாசக்தி: பாரிஸில் தொழிற்சங்கங்கள் எங்களை கணக்குப் போட மாட்டார்கள். நீ யாரென்று தான் கேட்பார்கள். இங்கையெண்டால் இதை யெண்டாலும் செய்யிறாங்கள்.

யோகராசா (தொலைபேசியில்): அண்ணை இந்தப் பொறுப்பை எடுங்கோ. நாங்கள் இயலுமானவற்றைச் செய்யலாம்.

சிவபாலன் (தொலைபேசியில்): இவங்களுக்கு தலித்தியம் ஒரு வியாபாரம். நாங்கள் புதிய தமிழகத்திற்கு காசை அனுப்பினால் கிருஷ்ணசாமிக்கு எதையும் சொல்ல உரிமை இருக்கு. அப்பதான் கிருஷ்ணசாமிக்குச் சொல்லலாம், புலி இயக்கம் சார்பாக அறிக்கை விடுவதற்கு முன்னதாக தலித் பிரச்சனையிலை கவனம் செலுத்தச் சொல்லி. கிருஷ்ணசாமிக்கு இலங்கைப் பிரச்சனையோ மாஞ்சோலைப் பிரச்சனையோ முக்கியம். தலித்தியம் தலித்தியம் எண்டு சொல்லிற இவங்கள் தான் தலித் துரோகிகள். ●



## 26வது இலக்கியச் சந்திப்பு வேதனைகள்/நம்பிக்கைகள்

### துடைப்பான் எனும் அசோக்

இலக்கியச் சந்திப்பானது மாற்றுக்கருத்துக்களின் சுதந்திர ஜனநாயக தளமாக கடந்த காலங்களில் இருந்திருக்கின்றது. இச்சந்திப்பில் கலந்து கொள்பவர்கள் பல்வேறு கருத்துகளையும் முரண்களையும் கொண்டிருந்தபோதிலும் இங்கு நாம் ஆரோக்கியமான இலக்கிய உறவுகளையும் நட்புகளையும் பேணி வந்துள்ளோம். மனித சமூகத்தின் மீது திணிக்கப்படும் அனைத்து ஒடுக்குதல்களுக்கும் அராஜகங்களுக்கும் எதிராக உரத்த குரலையே இச்சந்திப்பு கொடுத்துள்ளது. ஆனால் இம்முறை இலக்கியச் சந்திப்பில் ஷோபாசக்தி என்பவர் சுபாஜினிமீது கட்டவிழ்த்திய மிரட்டல் தொனி கொண்ட வார்த்தை வன்செயலை செவி கொண்ட சந்திப்பினர் மௌனம் கொண்டது இலக்கியச் சந்திப்பின் ஜனநாயகத் தன்மைமீதும் அதன் கடந்தகால மனித உரிமை மீறல்களுக்கெதிரான குரல்மீதும் சந்தேகம் கொள்ள வைக்கிறது. இதுவரை காலமும் வெளியில் சந்தித்த வன்முறை வடிவங்களில் ஒன்றை உள்ளேயே சந்திக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலையில் நாம் உள்ளோம். இவரின் மிரட்டல் வார்த்தைகள் நெருங்கி வரும் ஆபத்தை எமக்கு காட்டுகின்றது எனலாம். இவர்களின் இந்த அராஜகங்களின் மொத்த வடிவங்களே இங்கு என்னை அகதியாய் விரட்டியது. இங்கும் அதன் தொடர்ச்சியை காண உண்மையிலே எனக்கு அச்சத்தைத் தருகிறது. இவரின் இந்த அநாகரிக வன்முறை வார்த்தையாடலை கண்டிக்காமைபற்றி ஒருவரிடம் கேட்டேன். "நான் கண்டிக்க பிறகு இவங்கள் பல்வேறு கட்டுக் கதைகளோடு நோட்டீஸ் அடிக்க தங்களது சார்புப் பத்திரிகையில் எழுத, ஏன் இந்த சோலி?" என்றார். "நீர் கண்டித்திருக்கலாமே?" என்றார். எனக்கும் இந்தப் பயம் இருந்ததை நான் அவரிடம் ஒத்துக்கொண்டேன். இலக்கியச் சந்திப்பின் ஜனநாயகம் மிக்க சூழல் ஏன் இங்ஙனம் ஆகிவிட்டது? எங்கு போய் நொந்து கொள்வது?

****

இம்முறை இலக்கியச் சந்திப்பில் ஜனநாயகம் கேள்விக்குள்ளாக்கப்பட்டாலும் அரங்கு கடந்த கால சந்திப்புகளைவிட காத்திரமான தேடலையும் அறிதலையும் நோக்கி நகர்வதைக் காணக்கூடியதாகவே இருந்தது. இதற்குக் காரணம் சமீப காலங்களில் புகலிட இலக்கிய ஆர்வலர்கள் மௌனத்தோடு போலிகளை அடையாளம் கொள்வதில் அடைந்து வரும் தேர்ச்சிதான். மார்க்சியத்தின் மீதான புரிதல் அதனை விமர்சனரீதியாக வளர்த்தெடுக்க முயலும் போக்கு இன்று புகலிடத்தில் துளிர்விடத் தொடங்கியுள்ளதை இம்முறைக் கலந்துரையாடல்கள் நிருபிக்கின்றன. இவற்றைச் சகிக்க முடியாத மார்க்சிய விரோத வன்குரல்கள் இடைக்கிடை ஒலித்ததையும் அவதானிக்க முடிந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எனினும் பின்நவீனத்துவம் என்ற பெயரில் இவர்கள் கக்கும் மார்க்சிய விரோத வாந்தி எடுப்புகள் சகிக்கமுடியாதவை. எனினும் இவர்களை எண்ணி எனக்குப் பச்சாதாபமே ஏற்படுகிறது. பின்நவீனத்துவத்தினதும் மார்க்சியத்தினதும் எந்தக் கூறுகளையும் புரிந்து கொள்ள முயலல் இன்றி பின்நவீனத்துவம், மார்க்சிசம் என்ற தனித்த சொல்லாடல்களை உச்சாடனம் பண்ணிக்கொண்டு மார்க்சிச விரோதக் குரல் கொடுப்பது இவர்கள் அறிதலோடு கொண்ட பகையின் வெளிப்பாடே என்று கூறவேண்டும். முதலில் ஒன்றின் மீதான விமர்சனத்தை - தாக்குதலைத் தொடங்குவதாயின் அப் பிரதி பற்றிய புரிதல் அவசியம். நான் இவர்களிடம் கேட்பது மார்க்சியத்தின்மீதான புரிதல் உங்களுக்கு வரப்போவது இல்லை ஆனால் பின்நவீனத்துவம் பற்றி யாவது அறிய முயலலாமே. இங்கு இவர்கள் செய்யும் இந்த அறியாமையின் அட்டகாசத்தால் பின்நவீனத்துவம்பற்றி ஆக்க பூர்வமாகச் சிந்திக்க முயலும் சில தமிழக நண்பர்கள் முயற்சித்தவைகளும் அதன் சிந்தனைப் பரவலும் புகலிடத்தில் முளை கொள்வதற்கும் இந்தப் பின் நவீனத்துவ ஜாம்பவான்களே தடையாகி விடுகின்றனர். இதுதான் சோகமான தரிசனம்.

எடுத்ததற்கெல்லாம் பின்நவீனத்துவத்தோடு இவர்கள் ஆதரவு தேடி உச்சரிக்கும் பெயர் கொண்ட நண்பர்களிடம் இதுபற்றிக் கதைத்தால் இந்த 'அறியாமையின் ஏதிலிகளை' எண்ணி 'அவர்கள் பாவம்' என்கிறார்கள். கடந்த 25வது இலக்கியச் சந்திப்பின்போது என்னால் வாசிக்கப்பட்ட 'பின்நவீனத்துவத்தின் அரசியல்' பற்றிய கலந்துரையாடலின்போது இவர்களின் அறிதலின் வறுமை எனக்குக் கவலையைத் தந்தது. இது இந்தச் சந்திப்பிலும் தொடர்கின்றது. ●



# உயிர்ப்பு

இன்றைய காலம் அனைத்து
விடயங்களையும் தேர்வுகளையும்
மறுபரிசீலனைக்கு உள்ளாக்கும் ஒரு புதிய
போக்கைக் கொண்டிருப்பதைக்
காணமுடியும்.
சமீபத்தில் பிரான்ஸ் தமிழ் கலாச்சார
மன்றம் வழங்கிய உயிர்ப்பு நாடகம்
இயேசுவை மீண்டும் ஒரு புதிய வாசிப்புக்கு
உட்படுத்தியதைக் காணக்கூடியதாக
இருந்தது. இயேசுவை மரபுரீதியிலாலான
மதப்பிடிப்புக்கொண்ட தேவதூதனாக
காட்டும் இயல்பான நிலையில் இருந்து
அகன்று புதிய கோணங்களை நோக்கிய
பல்வேறு நாடக முயற்சிகள் கடந்த
காலங்களிலும் நிகழ்ந்தபோதிலும் எம்.
அரியநாயகத்தின் இம்முயற்சி ஒரு புதிய
தேடலின் உருவாக்கம் என்றே
கூறவேண்டும்.
இயேசுவை மேலாதிக்கத்திற்கும்
அராஜகங்களுக்கும் எதிராக மானிட
உரிமைகளை தூக்கிப் பிடிக்கும் சமூக
அக்கறையாளனாக மனித
உரிமைவாதியாக காட்ட முனைந்தது
அர்த்தமுள்ளதாக்கியது.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மனிதர் காட்சிச்சாலை

திருமாவளவன்

கொடுங்கோடை
வெய்யில் கொளுத்த
கொளுந்தெரிந்த தேசம்.

மூட்டை முடிச்சுகளோடு
முகங்களை மாற்றினோம்.

கழுதைக்கும் மனித முகம்
தெரு நாய்க்கும் மனித முகம்
பன்றிக்கும் - கரடிக்கும் குரங்கிற்கும்
பறவைக்கும் பச்சோந்திக்கும்
பல்லிக்கும் அதுவே.

மனிதரும் கூட
தங்கள் சொந்த முகங்களை அழித்து
இரவல் முகங்களை
எழுதிக்கொண்டோம்.

படர்ந்தோம்
புலம் பெயர்ந்து
உலகின் திசைகள் பதினாறிலும்.

மனிதர் கணத்து
சமனிலை கெட்டது உலகு
மாற்றிய முகங்களை
பிடுங்கி எறிந்தோம் -
மீளத் தோன்றியது இயல்பு.

பிறகென்ன
கூட்டம் - கொண்டாட்டம்
குழி பறிப்பு குழையடிப்பு
கோவில் சடங்கு - சங்காரம்
சந்திச் சண்டித்தனம்
குரங்காட்டம் - கரடி வித்தை -
எல்லாம்.

பிறகென்ன
மீளத் தோன்றிற்று இயல்பு.

இப்போது
பனி பொழிய மறுக்கிறது
துருவம்
மடி பெருத்து
வீதியில் அலைகிறது
மிருகம்.

தப்பித்துக்கொண்டனர்
புத்தி தெளிந்தவர்

அகப்பட்டது
அப்பாவிகளும் நானும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முதல் தகவல் அறிக்கை

ஜே. சாஜத்

அதிகாலைப் பாங்கு அழிழிக்கும்போது, எப்பொழுதாவது லேத்தான், திடுக்கிட்டு விழித்தான். வழமைப் படி திடீர் விழிப்பின் சூழல் மயக்கம். 'எங்கிருக்கிறேன்?' கேள்வி உருவாகி பதில் தேடி அடைவதற்குள் பாங்கோசை நினைவிற்கு கொண்டு வந்தது. ஊரிலோஎனில் வயல் வேலை பெண்களுக்கும் தறி இறங்குபவர்களுக்கும் ஒரு கடிகாரம். அல்லா கோயிலு பன்னெண்டு மணி பாங்கு ஆண்கள் குளிக்க குளக்கரைக்குப் போகும் நேரம். நாலர மணி பாங்கு டீக் கடைக்குப் போகும் நேரம். பதினொண்ணே கால் ரயில் களை எடுக்கும், நாத்து நடும் பெண்களுக்கு ரீ, வெத்தல, பாக்கு டைம். மூணர பஸ் அறுவடை முடித்து ரெஸ்ட் எடுக்கும் விவசாயிகளுக்கு களத்தில் கட்டு அடிக்கும் நேரம் போல, பாங்கும் ஒரு கால காரணி அவ்வளவுதான்.

ஊரில் ஒரே ஒரு பள்ளி. அதில் தான் ஒரு சமூகத்தின் சுக துக்கங்கள் எல்லாம். அதனை நிச்சயமாக பிற பள்ளிகளைக் காட்டி கூறி வந்ததைப்போல ஜின்கள் கட்டி இருக்க முடியாது. அதைக் கட்டியபோது ஏழு வயதில் மூணு பைசாவிற்காக கல் உடைத்திருக்கிறான். தலையில் முண்டாசு கட்டிக்கொண்டு வேலை செய்வது படு குஷியாக இருக்குமாம். சாயந்தரம் ஊர் நாட்டாமை வந்து கல் குவியலை அளந்து காசு கொடுக்கும்போது ஆயிரம் ஆயிரமாய் வாங்கும்போது இல்லாத சம்பாத்தியம் தரும் குஷி அலாதிதான். 25 பைசாவிற்கு டெண்ற் கொட்டகையில் வாத்தியார் படம். பள்ளியை விட அவனை ஒத்த சிறுவர்கள் அதிகம் படித்தது இந்த வாத்தியாரிடம் தான். ஒவ்வொரு சண்டைக்கும் ஒரு கல் என ஜோப்பில் கல் சேர்த்து நண்பர்களிடம் ஏழு சண்டை எட்டுச் சண்டை என அடித் துப் பேசுவான். மண்ணைக் குவித்து வைத்து அதன் மேல் ஏறி பின்னால் உள்ளவனுக்குப் படம் தெரியாமல் பண்ணுவதும் மூத்திரம் வந்தால் அம் மண்ணை நோண்டி உள்ளேயே சூடா கப் பெய்து வைப்பதும் பிறகு அதைத் தள்ளுபவர்கள் கையில் ஈரம் ஒட்ட அவர்கள் வைவ தைக் கேட்பதும் எடுத்த எடுப்பில் வாயில் வரும் பிரபல வசவு, 'குச்சிக்காரி மவன்', 'தேவடியா மவன்' என்பதன் மாற்றீடு என்றாலும் பொருள் விளக்கம்தான் புரியாத புதிர். ஏன் எல்லா வசவுகளும் பெண் உடலையும் பெண் குறியையும் சுற்றியே அமைந்துள்ளதோ? பெண்களே கூட இப்படித்தான் திட்டுகிறார்கள். அதுதான் புரியாத பெரிய குழப்பம் என்றான் ஒரு சிகரட்டைப் பற்றியபடி. 'மார்ல்பொரோ வொயிற்' அரேபிய பெண்கள் குடிக்கும் அமெரிக்க சிகரட்.

சிறு பிராயத்தில் குஷியானதே பெரியவர்களைப் போலி செய்வதுதானாம். ஸ்கூலைக் கட் அடித்துவிட்டு ஸ்கூல் விளையாட்டு. அம்மா அப்பா இல்லாத நேரங்களில் அம்மா அப்பா விளையாட்டு. திண்ணையில் தலை இலை கல் மண் குவியல் என மளிகைக் கடை. காலி சிகரட் பெட்டி தீப்பெட்டி என 'ஷாப்புக் கடை'. எண்ணை ஊற்ற சின்னப் புனல். கொட்டாங் குச்சி பாத்திரங்கள். களிமண் பொம்மைகள். தஞ்சாவூரான் பூண்டு மண்டிக் கிடக்கும் பீக்கொல்லைதான் தென்னந் தோப்பாம். தினமும் டயர் வண்டி லாரியை உருட்டியபடி குத்தகை எடுத்தவன் வந்து தேங்காய் பறிப்பான். சிறுமிகள் செங்கல் தூள், மண், சாம்பல் என 3 வண்ணத்தில் சோறாக்கி 'ஆணம்' வைத்து ஆடு தொடா இலையை அடுக்கி அதில் இரண்டு சிறிய கருங்கல் வைத்து தாம்பூலத்துடன் 'புருஷனுக்காகக்' காத்திருப்பார்களாம். மாலை சிற்றுண்டிக்கு தும்பைப்பூப் பறித்து பறிக்கும்போதே அதன் தேனை மட்டும் மறக்காமல் உறிந்து விட வேண்டுமாம். இதை சொல்லும்போது தேனை உறிந்தவனைப் போலவே காணப்பட்டான். அதை உள்ளுக்குள் உள்ளாய் சொருகி வட்டமாக முறுக்கு சுட்டு அடுக்கி வைத்திருப்பார்கள் சாயங்காலக் குழந்தைகளுக்கு.

'புருஷன்கள்' ஓணான் கொடி ரயிலில் பிரயாணிகளாக, கார்டுகளாக, தந்திக் கம்பங்களை முன் வைத்த ஸ்ரேசன்களில் நின்று கொண்டு கொடி அசைப்பவர்களாக, மணி அடிப்பவர்களாக, ஓணான் கொடியில் வட்டமாகச் செய்யப்பட்ட கைகாட்டி சாவியை வைத்துக்கொண்டு காத்திருக்கும் ஸ்டேசன் மாஸ்டர்களாக, கிழிக்கப்பட்ட சினிமா போஸ்டர்களை சதுரமாக்கி டிக்கட் கொடுப்பவர்களாக, கடை வைத்திருப்பவர்களாக பணியாற்றுவார்கள். எல்லாம் இந்தப் பெரிய உலகில் முகம் கொடுக்க கற்றுக் கொடுக்கும் சிறிய யதார்த்தங்கள்தாம். இதுவே உடல் உணர்ந்தபின் பெண் துரத்துவதும் இருட்டில் வாழ்வதுமாக மாறிப்போகிறது. விளையாட்டு அம்மா அப்பாக்கள் நிஜவாழ்வில் அரிவாள் வெட்டிற்கோ தூக்குக் கயிற்றுக்கோ ஆளாக நேர்கிறதாம். அதன்பின் தூக்குக் கயிறு, ரயில் தண்டவாளம், டெமக்ரான், அரளிக்கொட்டை, ஆற்றில் மிதப்பது எனப் பல சாவுகள் பற்றிக் கதைக்கத் தொடங்கிவிட்டார்கள். ஒவ்வொரு சாவிற்குப் பிறகும் ஒரு நீண்ட காரண விளக்க லெக்சர்கள் தந்தான் சவ வார்த்தைகளால். ஆளாளுக்கு சாவு கதைகள், அறை முழுக்க பற்றிக் கொண்டது. இதென்ன சவ ஓலம் எனத் தோன்றியது. பொதுவாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அறைகளில் ஒருவனிடம் துவங்கும் கதைகள் இப்படித்தான் தொற்றிக் கொண்டு சிலந்தி வலைகளைப் போல மூளைகளில் பின்னிக்கொண்டு வாழும்.

என்ன சொன்னேன் உம்.... இங்கே நூறடிக்கு ஒரு பள்ளி. அதிலும் இந் நகர் ரொம்ப மோசம். திட்டமிட்டு உருவாக்கப்பட்ட தலைநகருக்கே உள்ள ஒழுங்கும் கண்காணிப்பும். எங்கு திரும்பினாலும் போலீசின் பல வகைகள், என்னென்னவோ துறைகள், பல வண்ணச் சீருடை, வாகனங்கள் பவனி. பள்ளியை முன்வைத்து யாருக்கும் அடையாளம் சொல்ல முடியாது. அடுத்தடுத்து பள்ளிகள் இருப்பதால் பாங்கோசை ஒருசேர ஏற்ற இறக்கங்களும் ராகங்களின் குறுக்குவெட்டிலும் சத்தம் குழம்பி குலைந்து இரைச்சலாகி விடும். பகல் நேரமோவெனில் பயமும் வந்துவிடும். தொழுகைக்குப் போகாமல் முத்தஃவாவால் பிடிபட நேரலாம். 'இக்காமா' வேறு பச்சையாக இருந்து தொலைப்பதற்கு என்ன செய்ய முடியும்? தனிமனித நம்பிக்கைகளைப் பற்றிக் கவலை இல்லை. பிறப்பு துரத்தத்தான் செய்கிறது, பிழைக்க வந்த நாடுவரை.

இதை விடவும் கொடுமை அவன் மத, இறை நம்பிக்கை அற்றிருப்பது. ஆரம்பத்தில் புரியாமல் குழம்பிப் போனோம். கடவுள் இல்லையா? நம்பிக்கை இல்லையா? ஏதோ 'மோஸ்தர் - பித்து' என எண்ணினோம். வந்த புதிதில் பேச்சும் செயலும் ஒரு வரட்டுப் பெருமையாளனாக எண்ணத் தோன்றியது. பேச்சின் மூலம் தன்னை நிறுவிக் கொள்ளும் வேகம் இருந்தது. நாளடைவில் இந்த 'நிறுவுதலின்' தீவிரம் குறைந்து வந்தது. அவனுக்குள் அதீத கசப்புணர்வுகள் தலைகாட்டத் துவங்கியதோ அல்லது இச்சூழலின் சவபழக்கம் ஏற்படுத்திய வெறுப்போ? கடவுள் பற்றிய பேச்சைத் தவிர்த்தான். அதற்கு யாரேனும் 'காட்டிக் கொடுத்து விட்டால்' பயமும் ஒரு காரணமாக இருக்கலாம். குற்றங்களில் பெரிய குற்றமாகக் கருதப்படுவது மத எதிர்ப்புதான். பிடிக்காதவர்களை அதிகாரத்திடம் போட்டுக் கொடுக்க பலவீனர்களின் தந்திரம். மத அபிமானமும் பிறரை மதத் துவேஷிகளாக்கிக் காட்டுவதும் அலுவலகத்தில் அவனது பாஷையில் கூட்டத்துடன் விழுந்து எழும் சடங்கும் தொழுகை நடந்தேறியதாம். இப்படித்தான் சொல்ல வந்தது மறந்து போவதும் ஏதோ ஒன்றைப்பற்றி நகர்வதுமாக இருக்கிறது எல்லாமும்.

ம்.... திடீர் விழிப்பு அவனது மகனும் மகளும் மனைவியுமாக குழப்பமான கனவாம். புலராத ஐந்தரை மணிக் குளிர் கலியாண புதிதில் 'தான்' கீறப்பட்ட ஒரு சண்டையில் கோபத்துடன் போர்வை இல்லாமல் தூங்க இந்தக் குளிர் எழுப்பிவிட்டது. பந்தாய் சுருண்டு தூங்கும் மனைவியின் போர்வைக்குள் நுழைய சண்டையின் தூரலில் ஏற்பட்ட வைராக்கியம் குளிருக்குத் தெரியுமா? தளர்ந்த போது உடல்சூட்டின் ஞாபகம் வந்தது. மனைவியிடம் இருந்து இன்று கடிதம் வரலாம் என எண்ணினான். வந்தது! இப்படித்தான் சில கனவுகள் நடைமுறையாகி விடும். அல்லது நடக்கக்கூடியவற்றையே கனவாகக் காண்கிறானோ? இந்த உள்ளுணர்வு நிறையவே அவனை யோசிக்க வைத்திருக்கிறது. பகுத்தறிவின் வன்முறைக்குள்ளான உள்ளுணர்வுகள் என்றான் ஒரு நாள்.

அவனுக்கு இறை நம்பிக்கை, அப்படிச் சொல்வதுதான் சரியாக இருக்குமாம், கடவுள் நம்பிக்கை என்பதைவிட, இல்லை என்றான் அல்லது அவன் அப்படி சொல்லிக் கொள்வதை விரும்புபவனேபோல ஒருவேளை தன்னை எண்ணிக் கொண்டிருக்கலாம். இறைவனும் கடவுளும் அல்லாவும் அக்குரமஸ்தாவும் (ஜெராஸ்டீரியம் என்கிற பாரசீக மதத்தின் தெய்வமாம்) ஒன்றாகிவிட முடியுமா? கடவுள் என்ற பொதுச் சுற்றிலும்கூட நிறைய முரண்பாடுகள்தான். முருகனா? சிவனா? திருமாலா? காளியா? எனும்போது ஓடிக் கொண்டிருந்த எண்ண ஓட்டம் காளி என்றவுடன் ஏதோ நினைவில் நிழலாடியது போல பேச்சு தடைப்பட்டு பெரிய 'மார்புகளைக் கொண்ட செவப்புக் காளி' என்று தடுக்கியே விழுந்தது. செந்நிற முகம் எட்டுக்கைகள் ஒரு கையில் தங்க பச்சைக்கிளி மற்றொன்றில் சின்னத் திரிசூலம், ஒரு கையில் கத்தி, மற்றொன்றில் கேடயம், சிவப்பு வண்ண அகல ஜரிகை ஓர பட்டுப்புடவையும் அதே வண்ணத்தில் ஜாக்கட்டும். காளியாட்டம் ஒரு பரவசமூட்டும் நிகழ்வுதான். தெரு நெடுக ஆடிக் கொண்டே வரும் காளி, அதன் பெரிய சரீரம், எடுப்பாகச் செய்யப்பட்ட மார்புகள் சிவன் கோவில் குன்றுமுலைக் குமரியம்மன் மாதிரி பார்க்கும் போதெல்லாம் அறியாத பரவசத்தில் உடல் பொங்குமாம் அவனுக்கு.

காளிக்கு ஏழு அக்கா தங்கச்சிங்க. ஆண் துணையின்றி காலாகாலமாக ஒற்றையாய் வாழும் ஏழு கன்னிகள். ரேடிக்கல் பெமினிஸ்டுக்களோ? மூத்த அக்கா தான் தெருமுனையில் இருக்கும் மாரியாத்தா. அக்கா வீட்டை நெருங்கும் போது ஆத்தா முகத்தில் சிரிப்பு கும்மாளமிடுமாம். காளிக்கும் அதே கதைதானா? ஆனாலும் பெண்ணாயிற்றே.... மற்றொரு அக்கா பச்சைக் காளின்னா எல்லோருக்கும் பயம் தான். இப்போ 'சிரசு' மட்டும்தான் இருக்கு. முன்னொரு காலத்தில் 'டே! எனக்கும் விழா எடுங்கடா ஊரை சுத்திப் பார்க்கணும்னு' காப்புக்காரர் கனவில் வந்ததாம். காப்புக்காரர் காலாகாலமாக காளிகளைப் பராமரித்து வருபவர் போலும். அந்த வருடம் பலி கிலி எல்லாம் கொடுத்து பச்சைக்காளி மாங்கல வாத்தியம் முழங்க அமக்களமா கிளம்பிச்சாம். இந்தக் கச்சாக் குளம்னு ஒரு பெரிய குளம் இருக்கு பாரு கடைத் தெரு கிட்ட. அது கிட்ட வரும்போது ஒரு முனியா கோயில் இருக்குல. அதான் முனி எல்ல. அந்த எல்லையை ஆத்தா தாண்ட, வந்தது பெரிய சண்ட. எல்லைத் தகராறு. திடீரென ஊரே தீப்பற்றி எரிய, கடைசியில் கச்சாக் குளத்துக்குள் பச்சைக் காளி கட்டியவர் சேற்றில் புதைந்து கிடக்க,




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரத்த வாந்தி எடுத்து செத்துக் கிடந்தார்னு அல்ல பிச்சை வச்சிருக்கும் செவிட்டுத் தாத்தா பெண்டாட்டி கூறியதே. கண்ணால பார்க்காததை சொல்லக்கூடாது, அது ஆத்தா குத்தமாயிடும். ஊரே குளத்தில் இறங்கித்தேடி ஆத்தாவின் தலையை மட்டும் கொண்டு வந்து சேர்த்தார்கள். அது முத கொண்டு பச்சைக் காளியை கோவிலுக்குள் வைத்து அலங்கரிச்சு படையல் போடுவதுடன் சரி. ஊர் சுத்தி கும்மாளமெல்லாம் தங்கச்சிக்குத்தான். அது சரி, கும்மாணத்துல பச்ச காளி கிளம்புதே என்று அவன் மாமி வீட்டில பார்த்த ஞாபகத்தில் கேட்க 'நக்கல பாரு ஆத்தா எல்லாம் ஒண்ணா. அங்க குடிச்சுப்பட்டு சாமி தூக்கிறானுவ சுத்த பத்தமா இல்ல. நம்ம ஆத்தா அத்தனையும் சக்தியடா சக்தி' என்று வாயில் கதையுடன் குதப்பிய வெற்றிலை எச்சிலை சாரலடிக்க துப்பியபடி சொன்னார் வீரப்ப மாமா.

பக்கத்தூரில வன்னியர் காளி கட்டிக்கிட்ட முதலியாரும் பார்ப்பனரும்.படையல் போடுவதில்லை. இங்கு முதலியார் காளி என்பதால வன்னிய தெருவுக்குப் போறதில்ல. பார்ப்பனர்கள் காளியாட்டத்தை ஒரு பொருட்டாகவே மதிப்பதில்லை. கேட்கப் பயந்தான். சும்மா இருடா துக்கரிப் பயலே. அதட்டல் வரும். எல்லாக் காளியும் பார்வதியாகி சைவமாகி மேட்டுக் குடியில் குடியேறிய இக்காலத்திலும் பறைச்சேரி போய் கும்மி கொட்டுவதே தாய் வீடுண்ணு அதுவரை விசேஷம் தான் என்று எண்ணிக்கொண்டானாம். 'ஆயி! ஆத்தா! அங்காள பரமேஸ்வரி! அறிந்தும் அறியாமலும் தெரிந்தும் தெரியாமலும் சொன்ன சொல்லுகிற சொல்லப் போகிற எல்லாத்துக்கும் மனம் பொறுத்துக்க தாயே! திரிசூலி! ஹரி ஹரி நந்தினி நந்திச மேவினி விஸ்வ வினோதினி.... என்று பாடத் தொடங்கியபோது எல்லோரும் அவரது பக்தியின் மெய் சிலிர்ப்பைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். வீரப்ப மாமா எப்பவுமே இப்படித்தான். கதை சொல்லுவார் இல்லாட்டிப் பாடுவார். சின்ன சின்னப் பொண்ணுகளாகப் பார்த்து என்னைக் கட்டிக்கிறியாடின்னு கேட்பார். 'என்ன மாமா?' என்றால் 'சும்மா விளையாட்டுக்கிடி. வய்காரம் பேட்டையாளுக்கு பொத்துக்கிட்டு வருகுதே' என்பார். ஊர்ப் பெண்களின் பூர்வீகம் அவருக்கு அத்துப்படி.



களியாட்டம் வந்தால் தெருவில் நடத்தப்படும் குடந்தை கமலாவின் இசைத்தட்டு நடனம் (ஒரு காலத்தில் தஞ்சை மாவட்டத்தை கலக்கிய இசைத்தட்டு நடன மாது) பார்ப்பதற்கு பழைய பட இளமைக்கால சாவித்திரியைப் போலிருக்கும். இவர் அவரை விட சற்று மெலிதானவர்) அல்லது தஞ்சை ஜரினாவின் (அதே காலத்தில் கமலாவிற்குப் போட்டியாக குறவன் குறத்தி நடனத்தில் பிரபலமான பெண்மணி) குள்ளமாக இந்தக் காலக் குஷ்புவைப்போல பம்மலாக இருக்கும் இவர் அழகிலும் ஆட்டத்திலும் கமலாவை விட அதிகப்படியாக ரசிகர்களைக் கொண்டவர்)

குறவன் குறத்தி நடனம் 'புல் மனேஜ்மென்ற்' வீரப்ப மாமாதான். யாரும் கூப்பிட்டுக் கொடுப்பதில்லை. அவராக ஒரு சேவையாக இதனைச் செய்வார்போல் இருக்கு. 'இங்கே ஆடு, இப்படி ஆடு, வழி உடு, வழி உடு, டேய் நகர்றா' என்று. அவருக்குத் தெரியும் வசதியானவர்கள் அவரை ஆதரிப்பவர்கள் வீடு அங்கெல்லாம் ஆட்டம் சூடு பறக்கச் செய்வார். சன்னல்களில் பூக்கும் மேல்தட்டு முகங்களை அந்த இரவில் அவர் களிப்பார் போலும். சில வேளை ஆத்தாவும் சிரசைத் தூக்கி விட்டு விட்டு நாற்காலியில் அமர்ந்து கவனிப்பதுண்டு ஆட்டத்தை. ஆட்டத்தை ஆத்தாவிற்காக சிறப்பாக 'அம்பிகையே ஈஸ்வரியே என்னை ஆளவந்த கோவில் கொண்ட குங்குமக்காரி' பாட்டைப் போட்ரா. இது வீரப்ப மாமா ஆடர். அதற்கு ஆடி கமலாவிற்கு 'சாமி' வந்துவிட்டதாம் ஒரு முறை . உங்கள் யூகம் சரிதான் கமலாவை மடியில் கிடத்தி தண்ணீர் தெளித்து விசிறி ஆத்தாவிடம் நீரு பூசி 'சிசுருஷை' எல்லாம் வேறு யார் நம்ம வீரப்ப மாமாதான். ஏதோ ஆத்தா உபயம். சிலவேளை தர்கா கூட்டிற்கும் உண்டு. அங்கும் இந்த வீரப்ப மாமா தொல்லை தாங்க முடியாது என்று சிரித்தான். முன்னால் வந்து சந்தனம் பூச நிற்பார். சீர்ணி பகிர்வார். வீரப்ப மாமாதான். குழந்தை பிறப்பின் இரகசியம் முதல் 'மெனோபாஸ்' வரை சொல்லித் தந்த குருவாம்.

இருட்டு மறைவில் பட்டையை சாத்திவிட்டு குட்டைப் பாவாடையைத் தூக்கித் தூக்கி அவர்கள் ஆடும் ஆட்டம் உடலிற்குள் அவனது பதின்மூன்று வயதில் பரவிய இனம் புரியாத உஷ்ணம் இப்போதும் வெளிப்படும் வார்த்தை சூட்டில் உணர முடிந்தது. ஆணாக உணர்த்திய நாட்கள் என்றான். நண்பன் சாமியோடை அம்மா கரிசனமாக கூட்டிப் போய் ஆத்தா காலில் விழ வைத்து நெத்தி நிறைய துந்நூறு பூசி குங்குமம் வச்சி விடுவாங்க. மாவிளக்கு மாவும் பானகமும் தருவாங்க. கொதிக்க வைத்த புளித்தண்ணியில் வெல்லம் போட்டுக் காய்ச்சி அவ்வளவு இனிப்பாக இருக்குமாம். பெருமூச்சு வெளியேறியது பேச்சு.


களியாட்ட கூட்டத்தில் அடையாளமற்ற புதுச் சட்டையும் 'பளிச்' முகங்களுடன் உலாவரும் சிறுமிகள் பெண்கள். தெருச் சிறுமிகளுடன் பேசுவதற்கே கூச்சம். கூட்ட மறைவில் தெரியும் விழிகளில் பசியாறியபடி ஒரு குறிப்பான கண்ணைத் துரத்திக் கொண்டே ஓடும் உடலும் மனமும் யாருமற்றதாக தெரு வெறிச்சோடிய நிலையில் அப் பெண் மட்டும் தனியாக வருவாள். இருவரும் திகைத்து நிற்க என்ன செய்வது? அது தெரி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யாமலே உடலுக்குள் ஒரு காந்தம் பாய மின் அதிர்வுகள் கிளர இப்படியெல்லாம் அப்போது அவன் உணர்ந்ததாக இப்போது சொல்ல முடிகிறது. அப்போதோ வெனில் உணர்ந்தானா? உணர்ந்தாலும் மின் அதிர்வுக் கிளர்தல் போன்ற உருவகம் சாத்தியமா? 12,13 வயதில் சந்தோஷத்திற்கான உருவகம் என்னவாக இருந்திருக்கும் காதல் பற்றிய உடல் பற்றிய கற்பனைதான் என்ன? சொல்வதும் கேட்பதும் சூழலுக்குள் உயிர் வாழும் மிருகம் போலும். காளியுடன் சேர்ந்து நகரும் அடுத்த வீட்டிற்குக் கூட்டம். உடலைத் தடவிச் செல்வதாக எண்ணிக் கொண்ட அந்த விழிகளும்தான். எப்பவுமே பேச்சின் தீவிரங்களுக்குள் அவன் ஆட்படுவதாகவே இருக்கும். பேசாத போதும் பேசுவதற்கான



தயார் நிலையிலேயே இருப்பான். எப்போதும் தனக்குள் இடைவிடாது பேசுபவனைப் போலவே காணப்பட்டான். பேச்சற்ற இடங்களில் அவன் இருப்பதில்லை. பேசப்படும் இடங்களில் பேச்சிற்குள் இருந்தான்.

இந்த தீனு பயல் தினமும் ஒரு பெண்ணை வீழ்த்தியதாக கதை சொல்வானாம். எப்படித்தான் முடிகிறதோ அவனுக்கு. அவன் கூறும் அதே தெருப் பெண்கள் மட்டும் இவன் காணும்போது அவன் கூறியதுபோல் இருப்பதில்லை. ஆஸா பற்றி அப்படித்தான் அவன் கதைத்தான். சற்றே கருப்பான ஆஸா சிறார்களுக்கு ஒரு ரம்பையாம். தவிரவும் அவன்களின் வாத்ஸாயயன். ஐந்து வருடம் மூத்த தீன் பத்து வயதுச் சிறுமியான ஆஸா குறித்து உருவாக்கியிருந்த காமம் அப்படிப்பட்டது. போதாக்குறைக்கு புளியமரத்தடியில் ஸ்கூலைக் கட் அடித்து திருட்டு பீடி அடிக்க செக்ஸ் புத்தகம் படிக்க என நிறைய சூத்திரங்களைக் கற்றுத் தந்துள்ளான். 'மாங்குடி மைனரில்' மாங்குடியில் இருந்து எஸ். எஸ். எல். சி பெயிலான ஒருவன் நகர வீதியில் அலைய, இரவு மழை வந்து நனைய, ஒரு திண்ணையில் ஒதுங்கி நிற்க, அந்த வீட்டில் தனியாக வசிக்கும் மத்திய வயது செவலியராக பணியாற்றும் பெண்மணி அவனை உள்ளே அழைத்துப் போய் அழுக்கான அவனைக் குளிப்பாட்டி துவட்டி சாப்பாடு போட்டு இரவு அவனைக் கொஞ்சம் கொஞ்சமாக உறவு கொண்ட போது இவனால் அவனாவதற்கான ஏக்கம் அதிகமாகி இருந்தது. இப்படி எண்ணற்ற அவன்களாக இவன் அவ்வப்போது மாறுவதுண்டு. அவன் தமிழ் படிக்கக் கற்றதுகூட அப்படித்தான். தப்புத் தப்பான அச்சுப் பிழைகளைத் திருத்தி மாற்றித் தைக்கப்பட்ட பக்கங்களினை ஏக தேசமாக ஒன்று கூட்டி கதைகளின் பன்முகத்தன்மையையும் வாசிப்பாளனை ஒரு அறிஞனாக்கி படைப்புத் தளத்தை மீறச் செய்த பெருமை உண்மையிலேயே அந்த புத்தகங்களைத்தான் சாருமாம். ஏதோ ஒரு உன்னத இலக்கியக் கோட்பாடு பற்றி பிரலாபிப்பதைப் போல இருந்தது பேச்சு. ஒரு வேளை படைப்பின் ஆதர்சம் குற்றவியல் மனநிலையின் பதுங்கு குழிகள் தானோ? கேள்வியோடு முடித்தான். அப்பப்போ இப்படித்தான் 'தெறி'ப்பான்.

ஆஸா கூப்பிட்ட இடத்திற்கெல்லாம் வரும். சொல்கிறபடியெல்லாம் செய்யும். ஏதோ மந்திர வித்தை இருந்தது தீனிடம். பல முறை அவன் ஆஸாவை இருட்டில் சந்திக்கும் கணங்கள் மனம் தடுமாறும். கைகள் பரபரக்கும். கடைசியில் பயம் வெற்றிக்கொடி நாட்டி இவன் 'நல்ல பிள்ளையாக' அப்பெண்ணும் அவள் கண்ணும் சிரிப்பதாகத் தோன்றும் . இருட்டில் வைத்துத் தீனைப்போல அப்பெண்ணிடம் முயல பயம் கட்டிப் போட இரவில் தூக்கமற்றுப் புரள காளியும் கமலாவும் ஜரினாவும் ஆடி முடிக்க சொப்பனத்தில் ஸ்கலிதப்பட படபடப்புடன் பயந்து போய் இனம் புரியாத உணர்வும் சோகமும் சோர்ந்து படுக்கத்தான் முடிந்ததாம் அவனால்.

சென்னப் பட்டணத்திலிருந்து சின்னம்மா மூன்று தோழிகளுடன் நாகூர்க் கூடு பார்க்க வந்தபோது அவனையும் அழைத்துப் போனார்கள். நாகூர்க்கூடுன்னா கூட்டத்திற்குக் கேக்கவா வேணும். மூணு பேரும் சின்னப் பயல் கூட்டத்தில் சிதறிவிடுவானென்று தங்களது இடுப்போடு, அவ்வளவு உயரந்தான் அவன் இருப்பானாம், அணைத்துச் சென்றபோது நுகர்ந்த பெண்வாசம் தான் சிதறடித்தது. மூவருக்கும் மத்திய வயது என்பதுதான் இதில் முக்கியம் என்றும் தனது சற்றே சிறிய கண்களில் ஒன்றை இடுக்கிக் கொண்டு கூறினான். அவனிடம் ஏதோ ஒரு தாபம் லேசாகப் படமெடுத்து ஆடியதைப்போலிருந்தது.

இப்படித்தான் வேதா ஒரு கார்த்திகைத் திருநாளில் தெருவில் 'பணம் புடுக்கு', பணமரத்தின் காய்ந்த குருத்துக்களை அப்படித்தான் சொல்வோம், பெரிய கண்டுபிடிப்பைப் போல சொல்லிச் சிரித்தான். கரித்து துணிப்பை நிறைய நிரப்பி அதனைக் கவட்டையில் வைத்து பற்ற வைத்து தெருவில் சுழற்றி நெருப்பு வளையம் போடும் திருநாளில் திண்ணைகளில் அகல் ஏற்றி தெரு ஜொலிக்கும்போது இருட்டுக்கு அழைத்துப்போய் யாரும் அறியாமல் கார்த்திகைப் பொரி தந்து அந்த வாரம் முழுவதும் அவளை நோக்கியதாக பொழுதுகளைத் திருப்பி விட்டாளாம். வேதா பற்றிக் கூறும் போதெல்லாம் அவனிடம் சாந்தம் இருப்பதில்லை. எப்பொழுதும் ஒரே மூச்சில் படபடப்புடன் சொல்லி முடித்து விடுவான். அதன்பின் ஒரு நீண்ட மௌனம். இப்படிப் பேச்சற்ற தான கணங்கள் சமீப காலங்களில் அவனிடம் கூடி இருந்தது. அவளைச் சந்திக்கும் தனிமைக்காக இருட்டில் உலவியபோது சமீபத்தில் தூக்கில் தொங்கிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காதல் ஜோடியின் நிறைவேறாத ஆசை ஆவியாக அலைந்து கொண்டிருப்பது நினைவு வரும். தொங்குவதற்கு முன்பாவது நிறைவேற்றிக் கொண்டிருக்கக் கூடாதா? கண்ணில் காணா ஆவியை விட காணப்போகும் உடல் பயம் விரட்ட எனக்குள் பேய் பிசாசு எல்லாம் பொய் என்கிற பகுத்தறிவு சுடர் வேதம் வழியாக இப்படித்தான் பற்றி இருக்குமோ இல்லாவிட்டால் பால் காரியை 'விடலைப் பசங்க' பதின் மூன்று பேர் சுடுகாட்டு இருட்டிற்கு அழைத்துப் போகமுடியுமா? உலா வலும் உசாவலும்தான் மிச்சம். வேதத்தை மட்டும் கண்டதில்லை யப்பா என்றான். லீவில் ஊருக்குப் போன ஒரு முறை களியாட்டம். இரவு சாராயம் அடித்து காளி பின்னாடி சுற்றி விட்டு மூணரை மணிக்கு மனைவி ஞாபகம் வந்து வீட்டுக்குப் போயிருக்கிறான். வழக்கம்போல் தண்ணி கொண்டு வரும் சண்டை சடசடக்க வலுக் கட்டாயமாக இந்த வலு ஒரு வேளை மனைவிக்கும் பிடித்தி ருக்கலாமா தெரியவில்லை. பேச் சுக்கிடையில் இப்படி அசை போடும் பழக்கம் ஆரம்பத்தில் குழப்பமாக இருந்தாலும் பின்னா ளில் புரிந்து கொண்டோம். மனை வியின் பங்குனி மாத கடிதங்க ளில் தவறாமல் உங்க ஆத்தா புறப்பட்டாகிவிட்டது. களியாட்டம் உங்க நினைவைக் கொண்டு வருவதாகவும் எழுதுவது எதற்கோ? அறிகிலேன் என்று சொல்லும்போது ஒருவித பெருமை அவனுக்குள் சுடர்ந்த தைப்போல இருந்தது. திரும்பவும் காளி பார்க்கப் போனபோது உள்ளுக்குள் ஒரு பயம் காளி 'தீட்டுடன்' வந்து நிற்கும் அவனை முறைத்துப் பார்ப்பதாக அதன் கைக்கத்தி தன்னை நோக்கி நீண்டு விடுமோ? கைக்கெட்டாத தூரத்தில் அளந்தே நின்று கொண்டானாம். இருந்தும் அவன் பக்கம் திரும்பி ஆடும்போது நேருக்கு நேராக் கண்ணைப் பார்க்கப் பயந்து கூட்டத்தில் பதுங்காமல் இருக்க முடிய வில்லை. களியாட்டம் கொண்டு வரும் நினைவுகள் இப்படித்தான் உடலின் சுகந்தமாக உள்ளுக் குள் பரவுகிறதாம். இது என்ன 'குணாச் சிக்கல்' எனத் தோன்றி யது. அதெப்படி மனைவியை கன வில் கண்டால் கடிதம் வருமா? கனவிற்கும் போஸ்டலுக்கும் என்ன உறவு? ஏதாவது அறிவியல் வேணாமா? உலகில் அறிவியல் விளக்கமற்றவை அனைத்தும் காட்டுமிராண்டித் தனம்தானே? கைத்தடியால் கடலைப் பிளந் தார் மூசா (மெசையா) குஷ்ட ரோகிக்கு நற்சுகமளித்தார் ஈசா (ஏசு) ஏனோ வெள்ளை மூளைக்கு மட்டும் இந்தக் கேள்வி வருவ தில்லையாம் அதனால் உள்ளு ணர்வும் சேர்ந்து அவனை மூட நம்பிக்கையாளனாக ஆக்குவ தற்கான சதி செய்வதாகவே எண்ணினேன். இருந்தாலும் அறி வியலைப் பொய்யாக்கிக் கடிதம் வந்தது. பகுத்தறிவு கள்ளத்தன மாக ஏதேனும் உளவியல் விளக் கம் சொல்லலாம் என்றும் அல்ல சைக்கோட்ரானிக்ஸ் என பரா சைக்கோலஜியில் விளக்கம் தேடலாம். சித்தன் போக்கு சிவன் போக்குத்தானே என்றான்.

வழமைபோல மகனுக்கு சத் தில்லை மயக்கம் வருகிறதாம். ஏழு கிலோ எடை வழமைக்குக் குறைவாக இருக்கிறானாம் அப்ப னைப் போலவே இந்த வயதிலும் மாயாஜாலக் கதை எழுதுகிறா னாம். ஒருவேளை காளி பரவச மூட்டி இருக்கலாம் அல்லது காளிதாசனுக்கு நாக்கைக் கீறி யதைப்போல மகனுக்கு விரலைக் கீறி அருளி இருக்கலாம். அதைச் சொல்லும் போது அவனே காளி தாசனாகத் தன்னை உருவகப் படுத்திக் கொண்டதைப் போல இருந்தது. மகனுக்கு பலவீனத் தில் கைமுட்டியில் சொரசொர வென ஏதோ ஒரு ஒவ்வாமை. நான்தான் 'சிம்ரன்' என்று டிஷ் டிவி பழக்கியதில் சண்டைக்குப் போகி றாளாம். நிச்சயமாக அவனைப் போல ஆங்கில பூதத்தைக் கண்டு பயந்து நடுங்கி சென்னை மாநகரில் வெட்கித் தலை குனிந்து நடக்க வேணாம் என்றான். கிராமங்களும் அதன் கல்வியும் பயமுறுத்தும் நகர அந்நியம் தெரிந்தது. நுனி நாக் கில் இல்லாவிட்டாலும் தொண் டையில் இருந்தாவது பேசுவாள். எம் டிவி வளர்க்கும் குழந்தை ஆயிற்றே. மனைவிக்கு உடல் தடிப்பதில் கவலை. இவற்றுடன் அவன் நலமும் கொஞ்சம் பணமும் எப்போதாவது பாழ்படும் இளமை ஞாபகம் வரும்போது காதல் சொல்லிவரும். இவை இம்முறை கவலை சொல்லி வந்ததாம்.

மகன் தவழும்போதுதான் பிழைப்பேகி வந்தானாம், ஒன்பது வருடங்கள் நல்லதும் இல்லை கெட்டதும் இல்லை. வார விடு முறை, வியாழன், வெள்ளி அன்று பார்க்கும் தமிழ் சினிமாவும் மந்த்ராவின் பெரிய மார்புகளும் மூன்று மணிக்கு மேல் கதவைப் பூட்டி, வெளி வாயிலைப் பூட்டி சப்தம் அடக்க சப்தநாடியும் அடங்கி தலைபோகும் தண்ட னைப் பயத்துடன் வெளியில் கேட்கும் சின்ன சின்ன சப்தங் களையும் கவனித்து இப்படித் தான் புலனின் நுட்பங்களைப் பயிற்றுவித்துக் கொள்ள வேண் டும் போலிருக்கிறது. மனைவி அடிக்கடி கூறும் அறிவுரையை மீறி மனைவியின் சங்கேதத்தில் 'பக்திப்படம்' பார்ப்பதைத் தவிர நல்லதும் இல்லை கெட்டதும் இல்லை. பீட்டர் நார்த், ரோக்கோ சிப்பரட்டி அபிநயித்த 'மர்க்கி டி சேத்' என்கிற படம் 'சாடிஸ' பெயர் காரணகர்த்தாவான Marquise de sade இன் புனைவுகளின் தழுவலில் வித்தியாசமான படம். டாம் பிறைன், ராண்டி வெஸ்ட், டி டி பாய், ட்ரேஸி ஆடம்ஸ், ஸில் வியா இப்படி எல்லா நீல நடிகர் களும் நீல நடிகைகளும் பிம்பங் களும் அத்துப்படி. 'மிலேனியம் பக்கர், மிலேனியம் ஸக்கர், மிலே னியம் லிக்கர்' தன்னால் முடிந்த மிலேனியப் பணி என்று சொல்லி கடகடவெனச் சிரித்தான்.

ம்.... என்ன சொன்னேன். ஓ தமிழனாயிற்றே! திரை கடல் ஓடினான், இரண்டு மூன்று வருடங் களுக்கு ஒரு முறை ஊருக்குப் போவதும் பிள்ளை பெறுவதுமாக இரண்டு ஆயிற்று. வள்ளுவருக்கு கோபம் வராமல் குழலினிது யாழி னிது சொல்ல முடியும். மழலைச் சொல்தான் கேட்டதில்லையே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மீறிக் கேட்க முயன்றால் நிமிடத்திற்கு 8 றியால். 8X11=88 ருவாவா? பிள்ளை பேசத் துவங்கும் முன் 'காயின்' சரியாகி விடும். புதுக்'காயின்' போட்டுப் பேச வைப்பதற்குள் 'பாக்கெட்டே' காலியாகிவிடும். இதில் மனைவிக்கு ஆசையாகவும் அவசரமாகவும் திருட்டு முத்தம் வேறு தரவேண்டுமாம். அம்மா அண்ணிகளின் கண்காணிப்பு வலயத்திற்கு அப்பால் தரப்படுவதால் சிலவேளை முத்தம் சத்தம் கேட்டதான பாவனையில் போனைக் 'கட்' செய்யவேண்டி வருமாம். 'ஏன் முத்தம் கொடுப்பதற்குள் வைத்து விட்டீர்கள்?' வருந்திக் கடிதம் வரும்போது தான் தெரியும். கடந்த பதினைந்து நாளாக உதட்டில் ஒட்டிக்கொண்டு இனித்ததாக எண்ணி எண்ணி இறுமாந்த முத்தலட்சணம். ஒருவித வெட்கம் கலந்த போதையுடன் இதனைக் கூறிக் கொண்டிருப்பதாகப் பட்டது.

திரவியத்தை நவீன மருத்துவமும் வாழ்க்கையும் பழக்கி இருக்கும் உடல்களும் உபாதைகளும் சேர்ந்து மருத்துவம் பாதி கௌரவம் பாதியாக தின்று தீர்த்து தேடும் படலம் மட்டும் நிற்கவே இல்லை. தேவைப் படலம் விரியும் போது தேடும் படலத்தை எப்படிச் சுருக்கமுடியும். கடைசியில் மனைவியாக கடிதமும் கணவனாக காகிதங்களுமே மிச்சம். பிள்ளைகளுக்குத்தான் வண்ண வண்ணப் பொம்மைகள். ஊட்டியை எடுத்தால் அழும் குழந்தை. ஐஸ்கிறீம் விற்கும் பையன். 'ஸின்தரைஸர்' குரலில் சொன்னதைச் சொல்லும் பச்சைக்கிளி, பாடும் குரங்கு, முத்தம் கொடுக்கும் பொம்மை இப்படி. உயர் ரக சொக்லேட்டுடன் கப்பல் வந்த சந்தோஷம் பிள்ளைகளுக்கு சென்ற லீவில் மகள் 'எப்ப ஊருக்குப் போவீங்க?' என்று கேட்ட சோகத்தை எங்கே சொல்லி அழுவதாம். ஏதோ ஒன்றில் ஆழ்ந்து பேசிக் கொண்டிருந்தான்.

மனைவிக்குத் தான் இரண்டு மாத விடுப்பில் வந்துள்ள உயிருள்ள ஒரு பொம்மையாம். தினமும் கட்டாயமாக உடல் உபாதைகளைப் பொருட்படுத்தாது சாவி கொடுக்கப்பட்ட அசைவுகளுடன் கட்டிலேறும் அவலம். உரிப்பதற்கோ தரிப்பதற்கோ நேரம் போதாது. விடிய விடிய டிஷ் சினிமா பார்க்கும் அம்மாவிற்கு காது கொஞ்சம் கூர்மை. என்ன ஏது என்று புரிவதற்குள்ளும் உள்வாங்குவதற்குள்ளும் பால்காரியின் சோக்பீஸ் கோடாய் காலமும் கலவியும் காலையில் அலுப்புத் தீர தூங்க முடியாமல் குளித்துத் தொலைய வேண்டிய தொல்லைக்காக மனைவி சிலவேளை சலித்துக் கொள்வார்கள் என்றான். எப்பொழுதும் மனைவியை மரியாதை விழியுடன் 'ர்' சேர்த்தே சொல்வதைக் கவனித்திருக்கிறேன். சிலவேளை ஒன்றும் நடவாதது போலவும் சிலவேளை நடக்காதபோதே நடந்ததே போலவும் குளித்துவிடுவதும் உண்டாம். எப்படியோ குளிப்பினைக் கொண்டு உண்மை அறியாத் தந்திரத்தை மனைவி பழக்கி விட்டிருந்தார். சாமர்த்தியசாலிதான் என்றான். பொதுவாகவே இந்த அரைவாசிகளுக்கு மனைவி பெருமை உண்டு. அவ்வப்போது பேச்சில் உயிர் பெறும் தம் மனைவி நிஜத்தில் உண்டா அறியேன்.

அவனது முதல் ராத்திரி. மனைவியின் கூரைவீட்டில் ஒரு சிறிய அறையில். அன்று மழை பெய்ததாம். அவன் பிறந்த அன்றும் மழை சுழற்றி அடித்ததாம். அம்மா அடிக்கடி சொல்வார்கள். கார்த்திகை அடை மழையில் பிறந்தவன, அதுதான் கறுப்பா இருக்கான்னு. நிறைய தமிழ் சினிமா பார்ப்பான் போல் இருக்கிறது. மழையில் நடுக்கட்டிலில் நீர் சொட்ட பால் செம்பை வைத்து படுக்கையை ஈரத்திலிருந்து காப்பாற்றி கட்டிலின் ஓரத்தில் அரையிருட்டு ஆர்வக் கோளாறு. அரை குறையாக இரு துணிகளும் நனைய தூங்கிப் போனார்களாம். மறுநாள் அவன் வீட்டு மாடியில் அதே அரையிருட்டில் நிதானப்பட திரை விலகி மறக்காமல் மனைவியின் கற்பை சோதித்திருக்கிறான். வலியின் அலறல் பற்றிய அவன் படித்த நியூஸ் பிறின்ற் நூல்களின் ஆலோசனையால் குழம்பி கத்தாத மனைவியின் குழப்பம் அப்புறம் சரியாகி விட்டதாம். எல்லாம் சரி மனைவியின் கனவுகள் பற்றித் தான் புரிந்து கொள்ளாத அவசரம் வருத்தமாக இருப்பதாகக் கூறினான் ஒருநாள்.

அதிகால ஈரக்கொண்டைகள், தீட்டுத்துணி காயும் நாட்கள் கண்காணிப்பிற்கு உரியவை என்கின்றன எல்லா மதங்களின் வேத நூல்களும். என்ன செய்வது இதற்கிடையில் கிழிபடாத மூன்று கோடுகளாய் விசேஷநாட்கள். அதற்கென வேறு 'பன்டாஸி'களுடன் போனால் காலாகாலமாக கண்முழைத்த சுவர்கள். இப்படிப் படு. இப்படிப் புரளு, இப்படிக் கடி. இப்படி அடி என. இதில் மட்டும் ஏனோ மதங்களில் வித்தியாசமே இருப்பதில்லை. கடவுள்களும் வேத/ மறை நூல்களும் மிக அதிகமாகக் கவலைப்பட்டிருப்பது பயப்பட்டிருப்பது பெண்ணின் தீட்டுத் துணிக்குத்தானோ? இந்த சிவப்புக் கொடிக்கு எல்லா மதங்களும் ஒன்றுகூடி எதிர் ஓலம் இடுகிறதே? இதில் மட்டும் மத வேறுபாடுகளோ, இசக் கூறுபாடுகளோ கிடையாது போல் இருக்கிறதே. இதனைச் சொல்லும் போது ஒரு வேகம் இருப்பது அவனிடம் தெரிந்தது.

நான்கு சுவற்றிற்குள் இன்பவதை முகாம் முடித்து திரும்பவும் விமானம். முத்தஃவா தொழுகை. நல்லவேளை இதுவரை ஹைஜாக் எதுவுமில்லை. இருந்தாலும் பெரிய வித்தியாசமும் இல்லை. பெண் எனும் கருப்பு போர்த்திய உருவங்களைப் பார்ப்பதை விடவும் அழகான பணிப்பெண்களின் முகம் நகர்த்தும் பொழுதை என்றான். நுனி நாக்கில் ஏக தேசமாக புரியும் வகைக்கு ஆங்கிலம் பேசுவார்களாம். அதிலும் 'சௌதியாவெனில்' அழகான எகிப்திய பெண்கள் கடைசி சீட்டில் அமர்ந்து சிகரட் புகைப்பார்கள். ஊரில் திருட்டுத் தம் அடித்தவனுக்கு இது ஒரு அதிச



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யக் காட்சிதான் போல் இருக்கிறது. தண்ணி அடிப்பதற்குத்தான் வழி இல்லை என்றான். 'லக்கும் தீனுக்கும் வலிய தீன்' (அவரவர் வழி அவரவரக்கு) என்று அவன் அருகில் ஒரு தாடி சூரா சொல்லிக் கொண்டிருந்தார். ஏர் இந்தியா ஹைஜாக் என்றால் தான் பயம்... ஹிந்தி தெரியாமல் இந்திய பிளைட்டில் பயணிக்கும்போதும் பம்பாயில் இறங்கும்போதும்தான் தனித் 'தமிழ்நாடு' உணர்வே பொங்குமாம். பொங்கி என்ன ஆக. மச்சானைக் கேட்டால் கத்துக்க துப்பில்லாதவன்தானே என்பான்.

அவன் கூறி எனக்குப் புரியாத இரண்டு விஷயங்கள். ஒன்று கடைவீதியில் டீக்கடை வைத்திருக்கும் ஒருவர் டீ வாங்க வந்த பத்து வயது சிறுமியை கடைக்குள் அழைத்துப் போய் பாலியல் பலவந்தம் செய்ய முயல வலி பொறுக்காத அச்சிறுமி அலற ஊர் கூடி அடித்துப் போட்டு விட்டது. அவரைக் காணச் சென்றபோது அவரது மனைவியும் பத்து வயதுச் சிறுமியான மகளும் காயத்திற்கு மருந்து போட்டுக் கொண்டிருந்தார்களாம்.

இரண்டு, பொக்ரான் - இரண்டு நாடே சந்தோஷ சாகரத்தில் கொண்டாடிக் கொண்டிருந்த போது உலகநாடுகள் பொருளாதார நிர்ப்பந்தம் தர அறிவித்த போது பிரதமர் இந்திய தன்னம்பிக்கை பற்றிப் பேசிக் கொண்டிருக்கும்போது கடன் தொல்லை தாங்க முடியாமல் கணவன் மனைவி நடுவில் மூன்று 9 வயது, 5 வயது, 2 வயது ஆண் குழந்தைகளைப் படுக்க வைத்து காதுகளில் விஷத்தை ஊற்றிக் கொண்டு ஐந்து பேரும் இறந்து கிடந்தனர். அந்த இரண்டு வயதுப் பாலகன் சிரித்துக்கொண்டே இறந்து கிடந்தான். காதுகளில் விஷம் வழிந்திருந்தது. புதுப் புடவைபூ பொட்டுடன் கசங்காமல் கண் மூடிக் கிடந்தாள் அந்தப் பெண். காலங்காலமாக அழிக்கப்பட்டு வந்துள்ள 'பொன்' முறுவலை உதட்டில் தேக்கி.

இதனை ஏற்க னவே ஒரு இணையப் பத்திரிகையில் வெளியிட கீழ்க் கண்ட இரண்டு வாசகர் கடிதங்கள் மின்னஞ்சலில் வந்திருப்பதைக் காட்டினான்.


*அறிக்கை பெண் களையும் பெண் உட லையும் பற்றிய பாலியல் சுவைப்பு டன் லிங்கமையவாத பார்வை இன்பத்தில் எழுதப்பட்டிருக்கிறது. தீட்டுத்துணி போன்ற பெண் பாலியல் கூறுகளை ஆதிக்க கண்ணோட்டத்திலிருந்து அணுகுகிறது. இவ்வளவும் கூறும் இவ்வறிக்கை ஒரு பால் புணர்ச்சி, சுய இன்பம் பற்றி மௌனம் சாதிப்பது கவனிக்கத் தக்கது.*
அம்புஜம்: நியூயார்க்

*பசி பட்டினி என சாகும் மக்களின் மத்தியில் சமூக ஏற்றத் தாழ்வையும் சுரண்டலையும் இந் நிகழ்வுகள் நடைபெறும் வர்க்கச் சூழலையும் மௌனிப்பதன்மூலம் ஆதிக்கக் குரலாக இருக்கிறது அறிக்கை. பசியைப்பற்றி எழுதாமல் 'புஸீயைப்பற்றி எழுதும் ஒரு சீரழிவுப் பண்பாட்டின் விளைவே இந்த எழுத்து.*
பார்த்தசாரதி பாரிஸ்

இம் மின்னஞ்சல்களுக்கு தான் பதில் தரப் போவதில்லை என்றான்.

ஒரு நாள் அவனது டயறியின் முதற் பக்கத்தில் காணப்பட்ட இரண்டு வசனங்களைச் சத்தமாகப் படித்துக் காண்பித்தான், என்பதை விட அபிநயித்தான். ஒவ்வொரு ஆத்மாவுக்கும் (நம்மால் ஏற்படுத்தப்பட்ட) பாதுகாப்பாளர் ஒருவர் அதன்மீதில்லாமல் இல்லை. ஆகவே மனிதன் (தான்) எதிலிருந்து படைக்கப்பட்டிருக்கிறான் என்பதை அவன் (கவனித்து) பார்க்கவும். குதித்து வெளியாகும் (ஒரு துளி) நீரிலிருந்து அவன் படைக்கப்பட்டான். அது (ஆணின்) முதுகுத் தண்டிற்கும் (பெண்ணின் மார்புகளுக்கு மேல்) நெஞ்செலும்புகளுக்கும் மத்தியில் இருந்து வெளிப்படுகின்றது. நிச்சயமாக அவன் அவனை மீள வைப்பதின் மீது ஆற்றலுடையவன். சகல மாயங்களும் வெளிப்பட்டுவிடும் நாளில் - அவனுக்கு யாதொரு சக்தியுமிராது (அவனுக்கு) 'உதவி செய்பவரும் இருக்கமாட்டார்'திரு குரான்: அத்தியாயம்-86:வசனம்-4-10: ஓ சோறே! அந்த மலைகளில் நிரம்பியிருக்கும் வளம் அனைத்தும் உன்னிடமிருந்து போனதே, ஓ இனிமையே, எங்கள் உணவாக உன்னைக் கொண்டோம்.

மேலும் இந்த நீர் மற்றும் தாவரங்களின் வளத்தை உன்னால் பெற்று மகிழ்ந்ததால், எங்கள்



உடல் சத்தாக வளர்ந்தது. மேலும், வேகவைக்கப்பட்ட பால் மற்றும் பார்லியால் கலக்கப்பட்ட சோமா (பானம்) இருக்கும்வரை எங்கள் மகிழ்ச்சியும், உடலும் சத்துடன் வளரும்' ரிக் வேதம் 187 'வைர' வழிபாடு, பாடியவர் அகஸ்தியர். வார்த்தை மாம்சமானது என்கிறது பைபிள். ஏன் இப்படி எல்லோரும் மாமிசத்தால், மாமிசத்தை கீறிக் குத்திக் கிளறிக் கொண்டிருக்கிறார்கள் என்றான் கடைசியில். அதன்பின் நிற்காமல் தொடர்ந்தது அவன் பேச்சு...

அரைகுறை தூக்கத்தில் அலுவலகத்தில் அமர்ந்திருந்தால் அலறி எழுப்பும் தொலைபேசி 'ஒரு சந்தோஷமான சேதி தெரியுமா? இந்தியா அணுகுண்டு வெடிச்சிருக்கு. உலகிலேயே 7வது அணு ஆயுத வல்லரசு. ஒரு பய ஆட்ட முடியாது. பாகிஸ்தான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒழிஞ்சான். வடிவமைச்சவர் யார் தெரியுமா? நம்ம ஆளுதாம்பா அப்துல் கலாம். நம்ப ஆளா? அவசரமாக எழுந்து கழிப்பறைக்கு ஓடினான். 'சாரே ஜகான் ஷே அச்சா, ஹிந்துஸ்தான் ஹமாரா' 'ஹமாரா நையே பாய துமாரா' எச்சை தொட்டுதான் இழுத்துப் பார்க்கவேண்டுமாம். 'டில்லிக்கும் ரியாத்துக்கும் எத்தனை கிலோ மீட்டர் தூரம்?' 'ஏன் கேட்குறே' 'இல்ல கலம்பாய் சொல்லி இருக்காரு பிரிதிவி அணுகுண்டை தூக்கிகிட்டு 3000கிமீ பறக்குமாம். இங்கேயும் வாழ உடமாட்டானுவ போலிருக்கு. நம்மாள வச்சி ராக்கட் தயாரிச்சி, நம்மாளு குண்டிலேயே உடப்போறான்.' 'சேதி தெரியுமா தம்பி! குஷ்புவுக்கும் சுந்தருக்கும் கல்யாணம். செல்வமணி ரோஜாவுக்குப் பழம் வச்சிட்டான். கண்ணப்பன் சுகன்யாவைக் கடத்திட்டுப் பூட்டான்.' 'ஒரு இணையத் தகவல் தெரியுமா? மொனிக்கா லிவின்ஸ்கியின் குறி ஈரம் பட்ட சுருட்டுதான் கிளின்டனுக்கு பிடிக்குமாம்.' அப்புறம் இப்புறம் நாற்புறம் என எப்புறமும் தொடரும் குரல்களால் அறியப்படும் உலகு பொஸ்னியா குஷோவா ஈழம் திமோர் எனக் குழந்தைகளுடனும் கனவுகளுடனும் வாழ்க்கையைச் சுமந்து கொண்டு நாடற்று அகதிகளாகத் திரியும் அவலம். 'அகதி வதைகள்' மட்டும் முடிந்தபாடில்லை. 80 சதவீதம் அகதிகளாகவே ஆகிவிடும் போலிருக்கு குளோபல் விலேஜ். CNN செய்திகளில் நாள் பூராவும் ராஜ தந்திரிகள் கூடிக் கூடி அப்படி என்னதான் பேசுவார்களோ? இவர்கள் பேசவெனவே பல பிரச்சனைகள் உற்பத்தி செய்யப்படுவதைப் போலிருக்கிறது.

கவிதை எழுதத் தோணினால் கழிப்பறை ஞாபகமே, கதை எழுத தோணினால் கட்டிலின் ஞாபகமே. கட்டுரை எழுதத் தோணினால் கையடிக்கும் ஞாபகமே. எழுதி என்ன கிழிப்பது? 'மச்சி கதன்னு சொல்லி, ங்கோத்தா என்னவோ எழுதிக்கிறான் பாத்தியா' பெண் வாசம் அறியாத கட்டை பிரம்மச்சாரிகள் தங்கள் ஆண்குறிகளை அணு உலைகளில் தீட்டிக்கொண்டு விறைத்து நிற்க, பெண்களோ அடுப்பு உலைகளில் எரிந்து கொண்டிருக்கிறார்கள். எத்தனை முறைதான் நம்மை புத்தர் பார்த்து சிரித்துத் தொலைப்பாரோ?


** அறிக்கை முற்றிற்று**

சக இலக்கிய நண்பனுக்கு, அறிக்கையை ஆய்வு செய்தபின் நமக்கு முன் குற்றவாளியாக நிறுத்தப்பட்டிருக்கும் அவனுக்கான விசாரணையை துவக்கு. உனது தீர்ப்பு என்னவென்று அவனுக்கு தெரியுமாம். விசாரணைகள் எதுவும் உண்மைகளின் நிமித்தம் நடத்தப்படுவதல்ல. விசாரிப்பானுக்கும் விசாரிக்கப்படுபவனுக்கும் இடையிலான அதிகார உறவை கட்டமைப்பதன் மூலம் உண்மைகளைத் தோற்றுவிப்பதற்கான சடங்கே விசாரணை. தீர்ப்புகள் முன்னரே எழுதப்பட்ட பின் விசாரணையை மலக்கோப்பைக்குள் போடு. எழுத்தாளன் மட்டுமல்ல, எழுத்தும் இந்த 'நரம்பு நோய்' கொண்ட சமூகத்தில்தான் உருவாக்கப்படுகிறது. அவனிடம் நமக்கான தூயகலை இல்லை. காளி, ஆஸா, வேதா, தீன், வீரப்ப மாமா இவர்களைவிட அதிகம் அவனுக்கு சொல்லித் தந்துவிட முடியாது. இன்று 'பெண்', அவளது சோகம் என பேசத் துவங்கும் முன், யாருக்கும் தெரியாமல் இருட்டுக்குள் உருவமைக்கப்படும் இந்த சின்னஞ்சிறு உலகந்தான் கண்முன் வருகிறதாம். இதன் வன்முறையும் சுரண்டலும் மட்டுமல்ல இது உருவமைக்கும் மனிதர்கள்தான் புரட்சிமுதல் பூதஉடல் வரையும் நானும் நீயுமாக இருக்கிறோம் என்கிறான். அவனுக்குத் தெரியும் நம் தீர்ப்பு - பெயரிடப்படாத மனநோய் அல்லது பெண் பித்தன்தானே. இதற்குக் கூட நாம் பெயரை கிரேக்கத்தில்தான் கடன் வாங்க வேண்டி வரும். ஏனென்றால், நம் அறிவை ஆக்ரமித்திருப்பது தூயமும், அறமும் 'பிறரு'க்கு பேசும் வெள்ளைநிற பாசிச கிருமிகள். ஆமின்!

(07/02/2000-14/02/2000 ரியாத்)

(முத்தஃபா - சவுதிஅரேபி அரசால் நிமிக்கப்பட்ட மதக் காவலர்கள். 5 - வேளை இஸ்லாமி தொழுகைகளை முறைப்படுத்தவும், பாங்கு ஓதி பின், எல்லோரையும் தொழுகைக்கு அழைத்து (துரத்தி) செல்வதும், தொழுகை நேரங்களில், அறைகளில், சந்து முனைகளில் ஒளிந்திருக்கும் இஸ்லாமிர்களை, அழைத்து தண்டிப்பதற்கும், நீலப்படம் பார்த்தல், சாராம் குடித்தல், பெண்களை 'ஸைட்' அடித்தல் போன்ற 'மாபாதக' செல்கள் மத விரோதமானதாக மறை(ரை)களில் சொல்லப்பட்டிருப்பதால், அவற்றை கட்டுப்படுத்தவும், மீறுபவர்களின் [illegible] உரிமைபெற்ற மதக் காவலர்கள். 'இக்காமா' அடையாள அட்டை என்பதற்கான அரபிச் சொல். [illegible] தொழாத இஸ்லாமிர்களை பிடிப்பதற்கு வசதியாக பச்சை நிறமும் பிறருக்கு சிவப்பு நிறமுமாக வழங்கப்படுகிறது. அரேபியாவில் தெருவில் தலையில்லாமல் நடக்கலாம். இது இல்லாமல் எந்த இக்காமும் சாத்தியமில்லை, கழிப்பறை உட்பட. (சைக்கோட்ரானிக்ஸ்/பரா சைக்கோலஜி - இரண்டும் அதீத புலனுணர்வு சார்ந்த அறிவியல்துறை. இதனை ஆங்கிலத்தில் E.S.P (Extra Sensuary Perceptibility) என்பார்கள். பொதுவுடைமை ரஷ்யாவில் இத்துறை குறித்து நிறை ஆய்வுகள் செய்யப்பட்டிருக்கின்றன. தமிழ் சித்தர்களின் 'சித்து' விளையாட்டுகளுக்கான விஞ்ஞானம். புலன்களின் அதீத சக்தியினை ஒருங்கிணைத்து செயல்படுத்துவது. சுஜாதா மற்றும் ராஜேந்திர, ராஜேஸ்குமார், பட்டுக் கோட்டை மாத நாவல் நா கர்களுக்கு இந்த அறிவு விரல் நுனியில்.

●





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஒரு பீனிக்ஸ் பறவையின்

## புகலிவாழ் குறிப்புகள்

எந்த மொழி பேசும் மக்களும் அவர்கள் மொழியின் ஆதிக்கத்திற்குட்பட்ட மக்களே. தமிழ் மொழி பேசுவோரும் அப்படியே. மொழியின் ஆதிக்கம் தவிர்க்க முடியாதபடி நேரடியாகவோ மறைமுகமாகவோ தமிழ்பேசும் அதிகார சக்திக ளின் கைப்பிடிக்குள் இருந்து வருகிறது. மேல் வர்க்கங்களோ - மேல்படுத்தப்பட்ட சாதியினாலோ அன்றி அதிகாரமயப்பட்ட அரசியல் சக்தியினாலோ அவர்களின் சமூக சிந்தனை செயற்பாடுகள் அனைத்தும் ஏனைய சமூகசக்திகளின் சிந்தனை செயற்பாடுகளைச் சிறைப்பிடித்து விடுகின்றன. மக்கள் தொடர்ந்து வாழ்வில், தம் தளைகளை அகற்ற, போராடிக்கொண்டுதான் இருக்கிறார்கள்.

இலங்கை சுதந்திரத்தின்போதும் அதற்கு முன்னரும் பின்னருமாய் இந்திய தேசியத்தினதும் குறிப்பாக தமிழ்மொழி பேசுவோர், தமிழ்நாடு தேசியத்தினதும் குடையின் கீழ் இருந்து வந்துள் ளார்கள் என்பதையே இந்த நூற்றாண்டு காட்டு கிறது.

ஈழத் தமிழர்களின் பெரும்பாலான வீடுகளை காந்தி, நேரு, நேதாஜி போன்றவர்களின் படங்கள் அலங்கரித்திருக்கின்றன. பின்னர் பெரியார், அண்ணாதுரை, எம். ஜி. ஆர் இப்படி.

அண்ணாத்துரையின் இழப்பை ஈழத்திலே எத்தனையோ பேர் அழுது தீர்த்தார்கள். புகலிடத் திற்கு வந்த பின்பும்கூட எம்.ஜி.ஆர் நினைவு நாள் கஞ்சி ஊற்றிக் கொடுத்து நினைவு கூரப்பட்டது.

இன்று ஈழ தமிழ்மொழி பேசும் மக்களின் தேசிய - தேச விடுதலைப் போராட்டத்தின் சர்வதேச அரசி யல் பேச்சாளர்களாகவும் பிரச்சாரகர்களாகவும் தமிழ்நாட்டு அரசியல் தலைவர்கள் பலரே செயற் படுகின்றதை அவதானிக்க முடிகிறது.

கலை இலக்கிய முயற்சிகளிலும் இதை அவதா னிக்க முடியும். ஈழத்து சினிமா வளர முடியாமலே போயிற்று. ஈழத்து இலக்கியமும் போராடிப் போராடி ஆரம்பத்தில் கலைமகள், கல்கி, ஆனந்தவிகடன், குமுதம், குங்குமம் இத்தியாதி என. இவ் ஆக்கிர மிப்புகளை ஈடுகட்ட முடியாமலே போயிற்று.

'அலை'யும் 'மல்லிகை'யும் மிக சொற்ப எழுத்தா ளர்கள், ஆர்வர்லர்களின் வாழ்வைப் பிழிந்து வெடித்து வந்தவைதாம். இதில் தப்பியது நாடகம் ஒன்றுதான். நாடகம் நேரடியான நிகழ்கலை என்றபடியால் ஈழத்து நாடகம் ஒன்றே இதில் இருந்து தப்பிப் பிழைத்துக் கொண்டது.

எழுபதுகளில் தேசிய கலை இலக்கிய வளர்ச்சி என முன்னுரிமை கொடுத்தபோது ஈழத்து திரைப் படங்களுக்கும் இலக்கியத்துக்கும் வீசிய காற்றும் பின்னர் தடைப்பட்டுப் போயிற்று. 'அலை' அடங்கிப் போக 'மல்லிகை' மட்டும் எப்போதாவது என பூத்துக் கொண்டிருக்கிறது.

இங்கே நான் சுட்டிக்காட்ட விரும்புவது என்ன வென்றால் ஈழத்து இலக்கியம் மட்டுமல்ல இன்ன பிற துறைகளும்கூட தம் சூழல் சார்ந்து தன்முனைப் பான முரண்பாடுகளைக் கொண்டு வாழ்வதற்கு சாத்தியமில்லாமல் தொடர்ந்து இந்தியா தமிழ்நாடு சார்ந்த தாக்குதல்களுக்கு தலை சாய்க்க நேரிட்ட தைத்தான்.

இவற்றுள் பிரத்தியேகமாக ப. ஜீவானந்தத்தின் இலங்கை வரவு சொற்ப காலமாயினும் ஈழத்து முற்போக்கு இலக்கிய வளர்ச்சியின் ஆரம்பகாலச் செயற்பாடுகளுக்கு உறுதுணையாக, உந்துதலாக இருந்திருக்கிறது.

புகலிடத் தமிழ்மொழி பேசுவோரின் ஆரம்ப காலமுயற்சிகளினூடாக பல சஞ்சிகைகள் (நாற்ப துக்கு மேற்பட்ட) முளைத்திருந்தன. அவை தம் சூழல் சார்ந்த வாழ்வையும் தம் இழப்புக்களையும் கனவையும் நம்பிக்கைளையும் பற்றிப் பேசி இருக்கின்றன. இன்று அவை எல்லாம் நின்று ஒன்றி ரண்டு என அரிதாகி விட்டது. இதற்கு இலங்கை யுத்த நெருக்கடிகள் சார்ந்த அதிகாரம் போன்ற பல்வேறு பட்ட காரணங்கள் இருந்தாலும், ஒரு முக்கியமான காரணம் புகலிடத்து தமிழ் வியாபார நிலையமெங்கும் தமிழ்நாட்டு வியாபார சஞ்சிகை களும் பத்திரிகைகளும் நிறைந்து கிடப்பதுதான். அனைத்து திரைப்படங்கள் பாடல் கசெட்டுகள் எல்லாம் இந்தியாவிலும் புகலிடத்திலும் ஒரே நேரத்தில் வெளியிடப்படுகின்றன. தமிழகத்தின் அனைத்து வணிகப் பத்திரிகையையும் புகலி டத்தில் மிக இலகுவாக பெற்றுக் கொள்ள முடிகிறது. இக் காரணிகள் இங்குள்ள இலக்கிய முயற்சிகளை சாகடித்திருக்கின்றன. மொத்தத் தில் புகலிடம் ஈழத்திலும் பார்க்க பன்மடங்கு அதிகமாய் தமிழ்நாட்டின் ஆதிக்கத்திற்கு உட்பட்டுவிட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொதுவாக, புகலிடத் தமிழர்களின் கலை இலக்கிய ஊடாட்டம் தமிழ்நாட்டு விளைச்சலா கவே இருந்து வருகிறது. இம்முயற்சிகளில்கூட இந்திய தமிழ்நாட்டு ஆதிக்கம் அதிகமாக காணப் படுகிறது. தமிழ்நாட்டின் அரசியலிலும் அவர்களின் முரண்பாடுகள் சிந்தனைகளிலுமே இச் சிறு பத்தி ரிகைகளும் கவனம் கொள்வதைக் காணக் கூடிய தாக இருக்கிறது. குறிப்பாக சொல்லப்போனால் இவர்களின் இலக்கியப் பிரக்ஞையின் அஜெண் டாவை(agenda) தமிழ்நாட்டு இலக்கிய சிந்தனை களே தீர்மானிக்கினறன.


மொழி மட்டுமன்றி கலைகள், கலாச்சாரங்கள், மதங்கள், சாதியங்கள் போன்ற இன்னோரன்ன தளைகளால் எல்லாமே (ஈழம்-தமிழ்நாடு-புகலிடம்) ஒன்றுபட பின்னிப் பிணைந்து கிடப்பது யதார்த்த மானது. இந்த யதார்த்தத்தையும் மீறி எச்சக்தியும் தன்னை முழுமையாக தனிமைப்படுத்திவிட முடி யாது. ஆயினும் தமிழ்நாட்டு பெரும்பான்மை தமிழ்மொழி பேசுவோரின் சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் ஏனைய சக்திகள் தம்மீது சுமத்தி விடுவதன்மூலம் தங்களின் தனித்துவமான பிரச்சினைகளும் சூழலும் அந்நியப்பட்டுப் போவதை நாம் இனம் காணவேண்டும்.

இன்று புகலிடத்தில் தமிழ்மொழி பேசுவோர் எதிர்கொள்ளும் இன்னோரன்ன முரண்பாடுகள்பற்றி பெரும்பாலானோர் எழுதுவதில்லை. அது குறித்து எவ்வித அக்கறையும் கொள்வதைக் காணோம். கொஞ்சம் மிதப்படுத்திச் சொன்னால் புகலிடத்தில் இருந்து இலங்கைத் தமிழ் பேசும் மக்களால் தமிழக இலக்கிய முயற்சிகள் நடைபெறுகின்றன எனலாம். இப்போது மேலும் அதிகமாக தமிழ்நாட்டு சிந்தனா வாதிகளே புகலிடத்திற்கு விஜயம் செய்து அகதிகளின் அரவணைப்பில் தம்மை ஸ்திரப் படுத்திக் கொள்கிறார்கள். சிலர் அங்கே நிகழும் கூட்டங்களில் நாசூக்காக விருப்பு சிக்னல் வேறு கொடுக்கிறார்கள்.

இவர்கள் எல்லோரும் தமது நலன்களுள்ளும் தமது சூழல் நிலைமைகளிலிருந்தும் தமது செயற் பாடுகளை ஈழத்தவர்களதும் புகலிடத்தவரினதும் செயற்பாடாக்க முனைகிறார்கள்.

இதற்கு புகலிடத்தில் உள்ளவர்களும் இலகு வாகப் பலியாகிப் போகிறார்கள். இதற்கு பல்வேறு பட்ட காரணங்கள் இருக்கின்றன. ஈழம் நிலைமை களில் நாட்டமின்மை, காலமாகிப் போனதால் ஈழ வாழ்வோடு பரிச்சயமற்றுப்போனது, புகலிட வாழ் வில் உள்ள பிரிவாற்றாமை, அந்நிய உணர்வு, நிற வாதம் போன்றவற்றை எதிர்கொள்ளல் என்பவை பழக்கமாகிப் போனதோடு அகதி உணர்வுகள் கரைந்து புகலிடம் என்பது அற்று ஐரோப்பியர்(?) களாகிப் போனது.(இவர்களுக்குள் அண்மையில் ஈழத்தில் இருந்து வந்தவர்கள் மற்றும் அடுத்தடுத்த பரம்பரையினரையும் காண்பது அரிது) மற்றும் ஐரோப்பிய மொழியில் தேர்ச்சி அற்று ஐரோப்பிய அரசியல், கலை கலாச்சார நிகழ்வுகள் எதிலும் பரிச்சயமற்று இருப்பது போன்ற பல்வேறுபட்ட காரணிகளும் இவர்களை தமிழ்நாட்டை நோக்கி ஏங்க வைத்திருக்கின்றன. சுய சிந்தனை சுய செயற்பாடு என்பதற்காக சொந்த சூழ்நிலைகள் எதையும் கணக்கில் எடுக்காமல் அதற்கு பரிச்சயப் படுத்தாமல் இருப்பதாலும் மற்றும் சுய விளம்ப ரத்தில் நாட்டம் கொண்டதாலும் எளிதில் இவர்கள் இப்பொறிக்குள் இலகுவாக விழுந்துவிடுகின்றனர். இதையும் கடந்து புகலிடத்து ஈழத் தமிழ்மொழி பேசுபவர்களின் வாழ்வு எதிர்கொள்ளும் ஸ்தூல மான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க, இங்குள்ள பல்வேறுபட்ட சமூகத்தினரின் வாழ்வை தரிசிக்க சாத்தியமுள்ள சூழ்நிலையில் நமது சிந்தனை பண்பாட்டு இலக்கியத்தை நாம் மேலும் வளர்த்துக்கொள்ள முடியும். எதுவும் போலித்தன மில்லாத, மனித மேம்பாட்டுக்கான உளசுத்தியுடன் செயலாற்ற முனைந்தால் எதுவும் சாத்தியமே.

●





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆன் பிராங்க்

## இருபதாம் நூற்றாண்டு மானுடம்: இனவதையின் ஒரு மனத்துளி



### தமிழில்: குயிலி

**வெள்ளிக்கிழமை**
**21.08.1942**

அன்புடன் கிட்டிக்கு,

எங்களுடைய மறைவிடம் இப்போதுதான் சரியாக அதன் பெயருக்கு ஏற்ற மாதிரி இருக்கிறது. மறைவிடத்தின் வாசற்படிக் கதவுக்கு முன்னால் ஒரு புத்தக அலமாரியை வைப்பது கூடியளவு பாதுகாப்பானதாக இருக்கும் என்று உண்மையில் கிராளருக்குத்தான் தோன்றியது. (ஏனெனில் ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் சைக்கிள்களுக்காக நிறைய வீடுகள் தேடுதலுக்குள்ளாகின) ஆனால் வைக்கப்படும் அலமாரி ஒரு கதவைப் போல் திருப்பித் திறக்கக் கூடியதாக இருக்கவேண்டும்.

திரு வோசன் அதற்கான ஒரு ஏற்பாட்டைச் செய்தார். எங்களுடைய மறைவிடத்திற்குள் ஏற்கனவே நாங்கள் அவரை அனுமதித்துவிட்டோம். அவரால் எங்களுக்கு போதியளவு உதவி செய்ய முடியவில்லை. கீழ்மாடிக்குப் போகவேண்டும் என்றால் நாங்கள் முதலில் குனிந்து அதன் பின்பு குதிக்கவேண்டும். ஏனெனில் ஏற்கனவே அதிலிருந்த படிக்கட்டுப் போய்விட்டது. முதல் மூன்று நாட்களும் நாங்கள் எல்லோரும் நெற்றி நிறைய பெரிய பொக்களங்களுடன் திரிந்தோம். ஏனெனில் பதிவாக இருந்த கதவு நிலையின்மீது நாங்கள் எல்லாரும் இடித்துக்கொண்டோம். இப்போது நாங்கள் அந்தக் கதவுநிலையின் மேற்பகுதியில் மரத்தூள் அடைத்த துணி ஒன்றை ஆணி கொண்டு அடித்து வைத்திருக்கிறோம். இனிமேல் மோதிக் காயங்கள் வராமல் இருப்பதற்கு அது உதவுகிறதா என்று பார்ப்போம்!

நான் இப்போது அவ்வளவாகப் படிப்பதில்லை. செப்டெம்பர் மாதம் வரையும் நான் எனக்கு லீவு கொடுத்திருக்கிறேன். அதற்குப் பிறகு அப்பா எனக்குப் பாடம் சொல்லித் தருவார். ஏற்கனவே எவ்வளவு விஷயங்களை நான் மறந்து போய் இருக்கிறேன் என்று நினைக்க அதிர்ச்சியாக இருக்கிறது.

எங்களது வாழ்க்கை இங்கு அவ்வளவு பெரிதாக ஒன்றும் மாறவில்லை. திரு வான்டானும் நானும் அடிக்கடி கொளுவுப்படுவோம். ஆனால் மார்கொட்டும் அவரும் அந்த மாதிரி ஒட்டு. அவருக்கு மார்கொட்டில் நல்ல விருப்பம். அம்மா என்னைச் சில சமயங்களில் குழந்தைப் பிள்ளை போல நடத்துகின்றா. இதை என்னால் சகிக்க முடியவில்லை. மற்றும்படி எல்லாம் நல்லாகப் போகிறது. எனக்குப் பீற்றரை இப்போது இன்னும் பிடிக்கவில்லை. ஒரே போர். எப்ப பார்த்தாலும் படுத்தபடிதான். ஏதாவது அங்கை தொட்டு, இங்கை தொட்டு இரண்டு ஆணி அடித்துப் போட்டுத் திருப்பியும் படுக்கப் போடுவான். அப்பிடி ஒரு பிறவி!




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மிகவும் அருமையான கால நிலை. நல்ல வெயிலும் வெக்கையும். எல்லாவற்றிற்கிடையிலும் இதை எங்களால் முடிந்தவரை அனுபவிப்பதற்கு தொங்கல் மாடியில் உள்ள பெரிய யன்னல் கொண்ட அறைக்குச் சென்று அங்கு வரும் சூரிய வெளிச்சத்தையும் வெய்யிலையும் மடிப்புக் கட்டில்களில் படுத்திருந்தபடி எங்களால் முடிந்தவரை அனுபவித்தோம்.

உன்னுடைய

ஆன்.



### புதன்கிழமை
### 02.09.1942

அன்புடன் கிட்டிக்கு

வான்டான் தம்பதிகள் கிட்டடியில் பயங்கரச் சண்டை பிடித்தார்கள். இப்பிடி ஒரு சண்டையை நான் இதற்கு முதல் பார்க்கவே இல்லை. எங்களுடைய அம்மாவும் அப்பாவும் ஆளையாள் பார்த்துக் கத்துவது பற்றிக் கனவு கூடக் காணமாட்டார்கள். இந்தச் சண்டைக்கு எந்த விதமாகவும் சொல்லக்கூடிய காரணம் எதுவும் இருக்கவில்லை. எல்லாமே அநியாயம். ஆனால் இன்னும் ஒவ்வொருவரும் அவரவர்களுக்குப் பிடித்த மாதிரியே இருந்தார்கள்.

உண்மையாகவே இது பீற்றருக்கு மிகவும் அசௌகரியமானதும் சந்தோஷமில்லாததுமான ஒரு நிகழ்வுதான். இரண்டு பேருக்குமிடையில் நசிபடுவது அவன்தான். அவனை யாரும் பொருட்படுத்துவதே இல்லை. அவன் ஒரு சோம்பேறி. சின்ன விஷயத்துக்கும் நொந்து போவான்.

நேற்று அவன் மிகவும் குழம்பிப்போய் இருந்தான். ஏனென்றால் அவனுடைய நாக்கு சிவப்பாக இருப்பதற்குப் பதிலாக நீலமாக இருந்தது. அது அப்படி வந்த கணத்திலேயே இருந்த இடம் தெரியாமல் மறைந்து போனது. அதோடை கழுத்துக்குள்ளை சுழுக்கிப் போட்டுது என்று இன்றைக்கு அவன் கழுத்திற்கு ஒரு துண்டு சுத்திக்கொண்டு திரிகிறான். அதுக்குள்ளை தலைவருக்கு நாரிப் பிடிப்பாம். நெஞ்சு நோ, முதுகுவலி, நாரிக்குத்து இதுகளெல்லாம் வழக்கமானதுதான். இப்பிடியானதுகளை உண்மையா தலை கழண்டதுகள் எண்டுதானே சொல்லலாம். வேறை எப்பிடிச் சொல்லுறது? அம்மாவுக்கும் வான்டானின்ரை மனிசிக்கு மிடையிலை பெரிய ஒட்டு என்று இல்லை. அப்பிடி இருக்கிறத்துக்குப் பல காரணங்கள் உண்டு. அதிலை ஒரு சின்ன உதாரணம். வான்டானின்ரை மனிசி, பொதுவாய் எல்லாற்ரை படுக்கைச் சாமான்களும் வைக்கிற, அலுமாரிக்குள்ளை இருந்த மூன்று கட்டில் சீற்றுகளையும் எடுத்துப்போட்டா. அம்மாவின்ரை சீற் எங்கள் எல்லாருக்கும் காணும் என்று அவ தனக்குள்ளை கணக்குப் போட்டிட்டா. அவவினுடைய நல்ல உதாரணத்தை அம்மாவும் பின்பற்றி இருக்கிறா என்று தெரிய வரேக்கை மனிசிக்குப் பேய் விசர் வரப் போகுது.

அவவுக்கு நாங்கள் எங்களுடைய சாப்பாட்டுக் கோப்பைகளைப் பாவிக்காமல் தன்னுடையதையே நாங்கள் பாவித்துக் கொண்டிருப்பது எரிச்சலாக இருந்தது. அவ நெடுக நாங்கள் எங்கடை சாப்பாட்டுக் கோப்பைகளை எங்கை வைத்திருக்கிறம் என்று கண்டுபிடிக்கிறத்துக்கு முயற்சி செய்கிறா. அவ நினைக்கிறதை விட மிகக் கிட்டடியிலைதான் அதுகள் இருக்கு. அவை எல்லாம் ஒரு காட்போட் பெட்டிக்குள் வைத்தபடி தொங்கல் மாடி அறைக்குள் கன சாமான்களுக்கு இடையில் இருக்கின்றன. நாங்கள் இங்கு இருக்கும்வரையும் அவற்றை எடுப்பது கடினம். அது ஒருவிதத்தில் நல்லதுர்கூட. எனக்கு எப்பவும் அதிர்ஷ்டமில்லை. வான்டானின் மனிசியின் சாப்பாட்டுக் கோப்பை ஒன்றை நேற்றுச் சுக்கு நூறாக உடைத்து விட்டேன். "ஓய்! ஒருக்கால் எண்டாலும் உனக்குக் கவனமாய் இருக்கத் தெரியாதே? அதுதான் என்னட்டை இருந்த கடைசிக் கோப்பை" எண்று கத்தினா. வான்டானோடையும் இப்ப கொஞ்ச நாளாய் ஒரே பிடுங்குப்பாடுதான். எவ்வளவு நாளைக்கு நீடிக்கப்போகுதோ! இண்டைக்குக் காலமை அம்மாவிட்டையும் எனக்குப் பயங்கரப் பூசை. இவையளின்ரை தொல்லை தாங்கமுடியேல்லை. எங்களுடைய சிந்தனைகள் எல்லாம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நேரெதிரானவை. அப்பா அச்சாக் குஞ்சு. சில வேளைகளில் அப்பா என்னுடன் கோபித்துக் கொள்ள நேர்ந்தாலும் அது அஞ்சு நிமிசத்தோடை சரி. போனகிழமை எங்களுடைய வழமையான வாழ்க்கை ஓட்டத்தில் ஒரு சிறிய தடை அல்லது மாறுதல் வந்தது. அது பீற்றரும் பெண்கள் பற்றிய ஒரு புத்தகமும் சம்பந்தப் பட்டது. முதலில் நான் உனக்கு ஒன்று சொல்ல வேண்டும். பீற்றரும் மார்கொட்டும் திரு கூப்புவிஸ் எங்களுக்கு கொண்டு வந்து தரும் புத்தகங்களில் அநேகமாக எல்லாவற்றையும் வாசிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தார்கள். ஆனால் பெண்கள் பற்றிய இந்தக் குறிப்பிட்ட புத்தகத்தை மட்டும் பெரிய ஆக்கள் எடுத்து மறைத்து வைத்திருந்தார்கள். பீற்றரினுடைய ஆவல் இருந்தாற்போல் வீறுகொண்டு எழுந்தது. அப்படி இரண்டு பேரையும் வாசிக்க வேண்டாம் என்று சொல்லுமளவுக்கு அந்தப் புத்தகத்தில் அப்படி என்ன இருக்கிறது? அவனுடைய அம்மா கீழ்மாடியில் இருந்து கதைத்துக் கொண்டிருந்த போது ஒளித்து கைக்கப்பட்டிருந்த புத்தகத்தைக் கள்ளமாகத் தூக்கிக் கொண்டு தொங்கல் மாடியில் உள்ள அறைக்குக் கம்பி நீட்டிவிட்டான். கொஞ்ச நாளைக்கு ஒரு பிரச்சினையும் இருக்கேல்லை. அவன்ரை அம்மாவுக்கு அவன் என்ன செய்தான் என்று தெரியும். ஆனால் அவனின்ரை அப்பா அதைக் கண்டுபிடிக்கும் வரையும் அவ ஒரு கதையும் சொல்லேல்லை. அவருக்குப் பேய்க் கோபம் வந்துவிட்டது. புத்தகத்தை எடுத்துக் கொண்டு போட்டார். அதோடை எல்லாப் பிரச்சினையும் முடிஞ்சு விடும் என்று நினைத்துவிட்டார். எப்படியோ தன்னுடைய மகனின் ஆவலை அவர் மதிக்கவில்லை. அவனுடைய தந்தையின் செய்கை அவனுடைய ஆவலை இல்லாமற் போகச் செய்வதற்குப் பதிலாக அவனது ஆவலை இன்னும் தூண்டியது. பீற்றர் அதை எப்படியும் வாசித்து முடிப்பது என்று கங்கணம் கட்டிக்கொண்டான். அந்த வசீகரமான புத்தகத்தை எப்படிக் கைப்பற்றுவது என்பதற்கும் ஒரு வழி கண்டு பிடித்தான். இதற்கிடையில் வான்டானின் மனிசி அம்மாவிடம் கேட்டா இந்தச் சம்பவங்களைப்பற்றி அம்மா என்ன நினைக்கிறா என்று. அம்மா இந்தக் குறிப்பிட்ட புத்தகத்தை மார்கொட் வாசிப்பது அவ்வளவு நல்லதில்லை என்று யோசித்தா. ஆனால் பல புத்தகங்களையும் வாசிக்க அனுமதிப்பது நல்லது என்று எண்ணினா. அம்மா சொன்னா, " மார் கொட்டுக்கும் பீற்றருக்குமிடையில் ஒரு பெரிய வித்தியாசம் இருக்கிறது. முதலாவதாக மார்கொட் ஒரு பெண்பிள்ளை. பெண்பிள்ளைகள் ஆண்பிள்ளை களைவிட கூடியளவு வளர்ச்சியடைந்தவர்கள். இரண்டாவதாக, மார்கொட் நிறைய சீரியஸான புத்தகங்கள் வாசித்திருக்கிறா. அதோடை தனக்கு அனுமதி மறுக்கப்பட்ட விஷயங்களைத் தேடிச் செல்லமாட்டா. மூன்றாவதாக மார்கொட் பீற்றரைவிட மிகவும் கூடிய வளர்ச்சியும் புத்திசாலித்தனமும் உடையவள். அவள் பள்ளிக்கூடத்தில் நான்காம் பாரத்தில் இருப்பதில் இருந்து இது தெரிகின்றது" என்று. திருமதி வான்டான் இதை ஒத்துக் கொண்டா. ஆனால் வளர்ந்தவர்களுக்கான புத்தகங்களை சிறிய வர்கள் வாசிப்பதென்பது பிழை என்றுதான் இன்னமும் நினைத்தா.

இந்த இடை நேரத்தில் பீற்றர், அவனைப் பற்றியோ புத்தகத்தைப் பற்றியோ யாரும் கவனிக்காத ஒரு பொழுதைக் கண்டு கொண்டான். மாலை நேரம் 7:30 - எல்லாரும் பிரத்தியேக அலுவலக அறைக்குள் இருந்து ரேடியோ கேட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த நேரத்தில்தான் மீண்டும் தன்னுடைய புதையலை எடுத்துக்கொண்டு தொங்கல் மாடி அறைக்கு மீண்டும் சென்றான். அவன் கீழ்மாடியில் மீண்டும் 8:30 மணிக்கு இருந்திருக்கவேண்டும். புத்தகம் மிகவும் சிலிர்ப்பூட்டுவதாக இருந்ததனால் அவன் நேரத்தை மறந்து விட்டான். அவனுடைய அப்பா அறைக்கு வந்த நேரத்தில்தான் மீண்டும் அவன் கீழ்மாடிக்கு வந்தான். அதற்குப் பிறகு என்ன நடந்திருக்கும் என்று உன்னால் கற்பனை பண்ணிப் பார்க்க முடியும் தானே! ஒரு அறையுடன் புத்தகம் பிடுங்கப்பட்டு மேசைமேல் விழுந்தது. பீற்றர் தொங்கல் மாடி அறைக்குள் மீண்டும். நாங்கள் எல்லோரும் மேசையில் இருந்தபொழுது இதுதான் நடந்தது. பீற்றர் மேல்மாடியில் இருந்தான். எவரும் அவனைப்பற்றிக் கவலை கொள்ளவில்லை. அவன் இரவுச் சாப்பாடு இல்லாமல்தான் படுக்கைக்குப் போகவேண்டி இருந்தது. நாங்கள் மிகவும் சந்தோஷமாக அரட்டை அடித்துக்கொண்டு சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். அப்பொழுது காதைத் துளைக்கும் விசில் சத்தம் ஒன்று திடீரென்று கேட்டது. நாங்கள் சாப்பிடுவதை நிறுத்திவிட்டு வெளுத்த முகங்களுடன் ஆளையாள் பார்த்தோம். பிறகு பீற்றரின் சத்தம் கேட்டது. புகைக்கூண்டினுள்ளால் கூப்பிட்டான். "நான் எப்படியும் கீழே வரப் போவதில்லை" என்றான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வான்டான் துள்ளி எழுந்தார். அவரது நாப்கின் நிலத்தில் விழுந்தது. முகம் சிவக்கக் கத்தினார் "இதுகளெல்லாத்தோடையும் எனக்குப் போதும் போதும் என்றாகிவிட்டது." அப்பா தன்னுடைய ஆயுதத்தை எடுத்துக் கொண்டார். என்ன நடக்குமோ என்று பயந்துகொண்டு இரண்டு ஆம்பிளையளும் தொங்கல் மாடிக்குப் போனார்கள். நீண்ட போராட்டத்திற்குப் பிறகு பீற்றர் தொங்கல் மாடி அறைக்குச் சென்று பூட்டிக்கொண்டான். நாங்கள் சாப்பாட்டைத் தொடர்ந்தோம். வான்டானின் மனைவி ஒரு சின்னத்துண்டு பாணை தன்னுடைய அன்புப் பையனுக்காக எடுத்து வைக்கப் பார்த்தா. ஆனால் பீற்றருடைய அப்பா அவனுக்குச் சாப்பாடு தேவை யில்லை என்பதில் மிகவும் உறுதியாக இருந்தார். "அவன் கெதியாக மன்னிப்புக் கேட்கா விடில் தொங்கல்மாடியில் தான் படுக்கவேண்டி வரும்" என்று சொன்னார். எல்லோரும் சத்தமாக இதை எதிர்த்தோம். ஏற்கனவே அவன் இரவு சாப்பிடாமல் விட்டது அவனுக்குப் போதுமான தண்டனை என்று ஒட்டு மொத்த மாக எல்லோரும் யோசித்தோம். எல்லாத்துக்கும் மேலால் அவனுக்குக் குளிர் பிடித்து தடிமன் காய்ச்சலாக்கி விடும். அப்படி நடந்தால் பிறகு டாக்டரையும் கூப்பிடமுடியாது என்று எண்ணினோம்.



பீற்றர் மன்னிப்புக் கேட்கவில்லை. அவன் ஏற்கனவே தொங்கல் மாடியில்தான் இருந்தான். வான்டான் அதைப்பற்றி எதுவும் மேற்கொண்டு பேசவில்லை. ஆனால் அடுத்தநாட் காலை பீற்றரின் கட்டிலைப் பார்த்தபோது அதில் படுத்ததற்கான அடையாளம் இருந்தது. பீற்றர் 7:00மணிக்கு மீண்டும் தொங்கல் மாடியில் இருந்தான். எங்களுடைய அப்பாதான் அவனுடன் சிறிது நட்பாகப் பேசி அவனுக்கு நம்பிக்கையூட்டி மீண்டும் கீழே இறங்கி வரச் செய்தார். சுரத்தில் லாத முகங்களும் பிடிவாதமான அமைதியும் மூன்று நாட்களுக்குத் தொடர்ந்தன. அதன் பிறகு மீண்டும் ஒரு முறை எல்லாம் சரியாயிற்று.

உன்னுடைய
ஆன்.

## திங்கட்கிழமை 21.09.1942

அன்புடன் கிட்டிக்கு,

உனக்கு இன்றைக்கு எங்களுடைய பொது வான புதினங்கள் பற்றிச் சொல்லப் போகிறேன். வான்டானின் மனிசியின் தொல்லை தாங்க முடியவில்லை. நான் நெடுக அலம்பிக் கொண்டி ருக்கிறதாலை மனிசியிட்டை ஒரே ஏச்சுத்தான். எப்ப பார்த்தாலும் ஏதோ ஒரு விதத்தில் எங்களை அரியெண்டப் படுத்திக் கொண்டுதானிருக்கும். கடைசிப் புதினம் இதுதான்: ஒரு சொட்டுச் சாப்பாடு பாத்திரத்தில் மிச்சம் இருந்தாலும் அவ பாத்திரத்தைக் கழுவமாட்டா. மிச்சத்தை எடுத்து கண்ணாடிச் சட்டிக்கை போட்டிட்டு (நாங்கள் எல்லாரும் இதுவரை வழக்கமாய்ச் செய்யிறது போல்) கழுவுறத்துக்குப் பதிலாய் அது பழுதாகிப் போகும் வரையும் பாத்திரத்தோடை வைப்பா.

அடுத்த சாப்பாட்டுக்குப் பிறகு மார்கொட் கழுவுறத்துக்கு ஏழெட்டுப் பாத்திரங்கள் சேர்ந்திடும். அப்ப வான்டானின் மனிசி சொல் லுவா "நல்லது பிள்ளை மார்கொட்! உனக்குக் கனக்க வேலை போல!"

நான் அப்பாவுடன் அவரு டைய பரம்பரைத் தொடர் பற்றிய விஷயங்களைச் சேர்ப்பதில் பிஸியாக இருந்தேன். பேசிக்கொண்டு போகும்போது ஒவ்வொரு வரைப்பற்றியும் கொஞ்சக் கொஞ்ச விஷயங்கள் சொல்லுவார். அது மிகவும் சுவாரசியமானதாக இருக்கும். ஒன்று விட்டு ஒரு கிழமைக்கு கூப்புவிஸ் எனக்கு விசேஷமான சில புத்தகங்கள் தருவார்:. *Joopter Heul* தொடர் எனக்கு மிகவும் திகிலைத் தந்தது. *Cissy van Marxveldt* முழுவதையும் நான் மிகவும் நன்றாக ரசித்தேன். *Een Zomerzotheid*ஐ நான்கு தடவைகள் வாசித்தேன். அதில் வரும் சில விசித்திரமான கட்டங்களை நினைத்து இப்போதும் சிரிப்பேன்.

பள்ளிக்கூடம் தொடங்கிவிட்டது. நான் பிரெஞ்சைத்தான் நன்கு கஷ்டப்பட்டுப் படிக்கிறேன். ஒரு நாளைக்கு ஐந்து (ஒழுங்கற்ற) வினைச்சொற்கள் வீதம் உள்வாங்குகிறேன். பீற்றர் முணுமுணுத்துக்கொண்டும் பெருமூச்சு விட்டுக்கொண்டும் கஷ்டப்பட்டு ஆங்கிலம் படிக்கிறான். கொஞ்சப் பாடசாலைப் புத்தகங்கள் இப்போது வந்துவிட்டன. பயிற்சிப் புத்தகங்கள், பென்சில்கள், அழி றப்பர்கள், இன்னும் ஒட்டும் துண்டுகள் என்பன குறிப்பிடத்தக்களவு கையிருப்பில் உள்ளன. நான் இவைகளை என்னுடன் கொண்டு வந்திருந்தேன். நான் சில சமயங்களில் இலண்டனில் இருந்து ஒலிபரப்பாகும் டச்சுச் செய்திகளைக் கேட்பேன். அதில் இளவரசன் பேர்னாட் பேசியதைக் கேட்டேன். இளவரசி யூலியானா கர்ப்பமாக இருப்பதாகவும் அடுத்த ஜனவரி மாதமளவில் குழந்தை பெற்றுக் கொள்ளப் போவதாகவும் அவர் சொன்னார். இது வசீகரமானது. நான் அரச குடும்பத்தினரைப்பற்றி இவ்வளவு ஆவலாக இருப்பது மற்றவர்களை ஆச்சரியப்படுத்துகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்னைப்பற்றி அவர்கள் விலாவாரியாகக் கதைத்து அதன் பிற்பாடு நான் அவ்வளவுக்கு மோசமான விசரி இல்லை என்று முடிவெடுத்தார்கள். அவர்கள் இப்படிச் சொன்னது எனக்கு என்மீது மேலும் ஒரு நம்பிக்கையைக் கொடுத்தது. அடுத்த நாள் முன்னரை விட அதிகமாக வேலை செய்வதற்கு அது உதவியது. எனக்கு இப்ப பதினாலு பதினைந்து வயசாகிப் போட்டுது. இனியும் முதலாம் பாரத்தில் (ஆறாம் வகுப்பில்) இருந்து கொண்டிருக்க எனக்கு உண்மையில் விருப்பமில்லை.



இதில் இன்னும் ஒரு முக்கியமான விஷயம் என்னவென்றால் எந்த ஒரு கணிசமான புத்தகத்தையும் வாசிப்பதற்கு எனக்கு பெரும்பாலும் அனுமதி வழங்கப்படவில்லை. அம்மா இப்ப *Heeren Vrouen en Knechten* வாசித்துக் கொண்டிருக்கிறா. இதை மார்கொட் வாசிக்கலாம். ஆனால் நான் வாசிக்கக்கூடாது. என்னுடைய கெட்டிக்கார அக்கா மாதிரி என்னை நான் வளர்த்துக் கொள்ளவேண்டும் அல்லது முன்னேற்றிக் கொள்ள வேண்டும். நான் தத்துவவியலையும் மனோவியலையும் முற்றாகக் கண்டு கொள்வதே இல்லை. இவை பற்றி எனக்கு ஒரு மண்ணும் தெரியாது. ஒருவேளை அடுத்த வருடம் நான் இப்போதையைவிட கூடியளவு புத்திசாலியாக இருக்கலாம். (நான் இந்தக் கடினமான சொற்களை உடனடியாக அகராதியில் பார்த்துக் கொண்டேன்)

குளிர்காலத்திற்குப் போடுவதற்கு என்னிடம் மூன்று ஸ்வெட்டர்களும் ஒரு நீளக்கை முழுச்சட்டையும்தான் இருந்தன. இது நினைப்புக்கு வர எனக்குக் கஷ்டமாக இருந்தது. வெள்ளைக் கம்பளி நூலில் ஒரு நீளமான ஸ்வெட்டர் பின்னுவதற்கு அப்பா அனுமதி தந்தார். அது அவ்வளவு பஞ்சு போன்ற நூல் இல்லை. ஆனால் எவ்வளவுக்கெவ்வளவு அது குளிர் தாங்குகிறதோ அது வரைக்கும் போதும். அதுதான் தேவை. எங்களுடைய நண்பர்கள் சிலரின் வீட்டில் எங்கள் உடுப்புகளைக் கொண்டு போய்ப் போட்டிருந்தோம். ஆனால் துரதிர்ஷ்ட வசமாக யுத்தத்திற்குப் பின் நாங்கள் அவர்களைக் காணவில்லை, அதாவது அவர்கள் இன்னும் அங்கே இருந்தாலும். வான்டானின் மனிசி உள்ளுக்குள் வந்தபோது நான் அவவைப்பற்றித்தான் என்னவோ எழுதிக் கொண்டிருந்தேன். படக்கென்று புத்தகத்தை மூடினேன்.

"ஏய் ஆன்! எனக்கு ஒருக்கா அந்தப் புத்தகத்தைக் காட்ட மாட்டியா?"

"இல்லை! நான் மாட்டன்"

"ஆகக் கடைசிப் பக்கத்தை மட்டும் காட்டு"

"இல்லை. என்னால் முடியாது. மன்னித்துக்கொள்ளுங்கள்"

அவ என்னை இப்படிக் கேட்டது எனக்குப் பயங்கர அதிர்ச்சிதான். ஏனென்றால் நான் அவவைப்பற்றி மிக மோசமாக அந்தப் பக்கத்தில் எழுதி வைத்திருந்தேன்.

உன்னுடைய

ஆன்.

●

---



## ரமேஸ் சிவரூபனின் படைப்புகளை முன் வைத்து - கலந்துரையாடல்

புகலிட இலக்கிய ஆர்வலர்களிடையே நூல் விமர்சனம் என்பது ஆயுதங்களின் அரணில் அரசியல் பேச்சுவார்த்தையாய், அறிக்கை, துண்டுப்பிரசுரம், சண்டித்தனம் என ஆகிப்போன இன்றைய நிலையில் உயிர்த்த ஓர் கலந்துரையாடல். 16.07.2000 ஞாயிற்றுக்கிழமை பாரிஸில் Marcadet Poissoniersஇல் நடைபெற்றது.

- இன்னொரு சந்ததி (சிறுகதைத் தொகுதி)
- நிலவொன்றைத் தேடி (கவிதைத் தொகுதி)
- துளிர் (சஞ்சிகை - 1வது இதழ்)

இவை மூன்றினதும் ஆசிரியர் ரமேஷ் சிவரூபன்.



ஆசிரியரும் வெளியீட்டாளருமாய் சேர்ந்து ஒழுங்கு செய்த கலந்துரையாடலில் மதிய உணவு, தேநீர் என பரிமாறல்களுடன் கலந்து கொண்ட யாவரும் மனந்திறந்து உரையாடியதும் தங்கள் நியாயங்களே உலக நியாயம் என அடம் பிடிக்காமல் உண்மையை தேட முனைந்ததும் மனம் கொள்ளத்தக்கது. வாசகர்கள் படைப்பாளிகள் என 15 பேர்தான். ஆயினும் முன் திட்டம், பொறி வைப்பு, பின்னணிக் குரல் கோரல் என இல்லாமல் அமைதியாய் நட்புடன் விமர்சனங்கள், விரிவான விவாதம் என பலவீனங்களை ஒப்புக் கொடுத்து, பலங்களை நிமிர்த்திய ஓர் கலந்துரையாடல். பல்வேறுபட்ட கருத்துடையோராயினும் ஒன்றாய்க் கலந்த உணர்வு.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஜெர்மன் மற்றும் ஐரோப்பிய பாசிச அமைப்புக்கள்

தமிழரசன்

முதன் முதலில் கத்தோலிக்க மதம்தான் இன்றைய புதிய பழைய பாசிசச் குழுக்களுக்கு அடிப்படை யான "Antisemitismus" (செமிடிக் எதிர்ப்பு) யூத எதிர்ப்பை முழு ஐரோப்பிய நாடுகளிலும் கிறிஸ்தவ உலகிலும் விதைத்தன. நெப்போலியனின் படைஎடுப்புவரை யூதப் பெண்கள் தம் ஆடையில் யூத அடையாளத்தை இட்டுக் கொள்ளவும் யூத ஆண்கள் தம் தலையில் மஞ்சள் நிறத் தொப்பி அணியும்படியும் கட்டாயச் சட்டங்கள் யூத மக்களைத் தனியே பிரித்து அடையாளம் காட்ட போப்பால் பிறப்பிக்கப்பட்ட சட்டங்கள் இத்தாலியில் நிலவின. 1808இல் நெப்போலியனின் இத்தாலிப் படையெடுப்பின் பின்பு இவை நீக்கப் பட்டதாயினும் பின்பு மீண்டும் 1814இல் போப் Pius VII அச்சட்டங்களை கொண்டு வந்தான். ஜெர்மனியிலும் நெப்போலியனின் படையெடுப்பின் பின்பே யூதர்கட்கு முதன்முதலில் சமஉரிமை வழங்கப்பட்டது. கத்தோலிக்க மதத்தைப் போலவே மரபுவழிக் கிறிஸ்தவம், புரட்டஸ்தாந்து மதங்களும், யூத எதிர்ப்பை பல நூற்றாண்டுகளாகத் தொடர்ந்து வந்தன. புரட்டஸ்தாந்து மதச் சீர்திருத்தவாதி மார்ட்டின் லூதர் கிங் முதல் இன்றைய பின்நவீனத்துவவாதிகள் புகழ்ந்தேற்றித் திரியும் நீட்சே (Nietzche) ஈறாக தம் செமிட்டிக் எதிர்ப்புகளில் ஊறித்திளைத்தமையின் மூலம் யூத எதிர்ப்புக்கும் பிற்காலப் பாசிசத்துக்கும் ஜெர்மனியில் அரசியல் நாற்றுமேடை தயாரித்துக் கொடுத்தனர். பாசிசத்தின் அழகியலை வடிவமைத்துத் தந்தவனும் நீட்சேதான். அவன் "ûbermenschen"(அதிஉயர்மனிதன்) பற்றிப் பேசினான். "Des Höheren und des Niederen mensch" "உயர்ந்த மற்றும் தாழ்நிலை மனிதன்" பற்றிய நீட்சேயின் கருத்தியல்கள் பாசிசத்துக்கும் அதன் சித்தாந்தவாதிகளில் ஒருவனுமான Rösen berg (ரோசன்பேர்க்) மற்றும் Franz Schauwecker (பிரான்ஸ் சாவ்வெக்கர்) போன்றோருக்கு உதவின. சித்தாந்த அடிப்படைகளைக் கட்டமைக்க வழி விட்டன.



தொழிலாள வர்க்க சிந்தனையை கார்ல் மார்க்ஸ் வளர்த்தெடுத்தமையின் தொடர்ச்சியில் ஜெர்மனியின் முதல் தொழிலாள வர்க்க அமைப்பை லஸ்லால் தொடக்கிவைத்தார். பின்பு சமூக ஜன நாயகக்கட்சி (SPD)யின் பென்ஸ்டைன் (Benstein), பவுல்சிங்கர் (Paul Singer), விக்டர் ஆட்லர் (Victor Adler) மற்றும் 1918 புரட்சியில் ரோசா லுக்சம் பேர்க்குடன் பங்கேற்ற லியோ யோகிஸ்சஸ் (Leo Jogisches), கார்ல் ரடாக் (Karl Radak) உட்பட அனைவரும் யூத அடியைச் சேர்ந்தவர்கள். ஜெர்மனியில் சுதந்திர பயண் (Freistaates Beyern) பிரகடனப்படுத்திய கூர்ட் ஐஸ்னர் (Kurt Eisner) இங்கும் யூத மரபிலேயே வந்தவர். இவரைச் சுட்டுக் கொன்ற பாசிச இராணுவத்தின் அன்ரொன் கிராவ் ஆர்க்கோ (Anton Graf Arco) சொன்னான் "ஐஸ்னர் ஒரு போல்ஸ்விக். அவர் ஒரு யூதர். அவர் ஜெர்மனியர் அல்ல. அவர் தன்னை ஜெர்மனியராய் உணர்வதில்லை. அவர் ஒரு நாட்டுத் துரோகி" அன்று வளர்க்கப்பட்டு இருந்த பாசிச உணர்வுக்கு இது அடையாளமாகும். ரஸ்யாவில் ரொட்ஸ்கி, கமனேவ், ஜினோவீவ் போன்றோரும் போலந்தில் தொழிலாள வர்க்க இயக்கத்தை தொடக்கிவைத்த லுட்விக் வாறின்ஸ்கி (Ludwik Warynski) போன்றோரும் சிறுபான்மையான ஒடுக்கப்பட்ட யூத சமூகங்களில் இருந்து வந்தவர்களே. எனவே சகல முதலாளித்துவவாதிகளும் பாசிஸ்டுகளும் பழைய யூத எதிர்ப்பை புதுப்பிப்பதன்மூலம் உழைக்கும் மக்களின் ஐக்கியப்பட்ட, தமக்கு எதிரான புரட்சிகளை சிதைத்து விட முயன்றனர். இரண்டாம் உலக யுத்தம் யூத எதிர்ப்பு, ஆரிய மேலாண்மைக் கோட்பாடுகளில் தொடங்கி சகல மக்களையும் அழிக்க முயன்று தானே அழிந்து பட்டது. எனினும் பின்பும் அது ஜெர்மனியில் உள்ளூர் முதலாளிகளின் துணையோடும் ஏகாதிபத்தியங்களின் அரவணைப்போடும் தன்னைப் புனர் நிர்மாணம் செய்து கொண்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஜெர்மனியில் இரண்டாம் உலக யுத்தம் பின்பாக Köln நகரில் உள்ளூர் அரசியல்வாதியாக இருந்து ஓய்வுபெற்ற பழமைவாதியான கோன்ராட் ஆடின்ஓவர் (Konrad Adenuer) முதலாளிய சக்திகளால் முன்னுக்கு கொண்டுவரப்பட்டான். 1949nrgnlkguil5Nj uj ypd gpd 6CDU, CSU, FDP போன்ற கட்சிகளோடு DP என்ற பாசிசக் கட்சியும் இணைந்து மேற்கு ஜெர்மனியில் புதிய அரசு உருவானது. அதே மாதம் 26ம்திகதி கொன்ராட் ஆடின்ஓவர் நாசிகட்கு பொதுமன்னிப்பு வழங்கும் கூட்டத்தைக் கொண்டு வந்து நாசி அரசு இயந்திரத்தைச்சேர்ந்த 792 196 பாசிஸ்டுகட்கு மன்னிப்பு வழங்கினான். இதன் மூலம் பாசிசம் தனக்குத் தானே மன்னிப்பும் மறு அங்கீகாரமும் வழங்கிக் கொண்டது என்பதோடு மறுபடியும் கொம்யூனிச மற்றும் யூத விரோதங்கட்காக அணி கட்டப்பட்டன. ஜெர்மனியில் பாசிசத்தை ஆதரித்த கத்தோலிக்க அமைப்பின் தலைவனான Köln நகரைச் சேர்ந்த கர்தினால்-பிறிங்ஸ் (Kardinal - Frings) அமெரிக்க அதிபருக்கு விடுத்த பகிரங்க வேண்டுகோளில் கொம்யூனிசத்தின் 'சிவப்பு வெள்ளத்தை' தடை செய்ய நாசிகட்கு பொது மன்னிப்பு வழங்கப்படுவது அவசியம் என்றான். 1948இல் நாசிகளின் பயங்கரவாதத்துக்கு எதிராகக் குறைந்தது 85 000 வழக்குகள் தொடுக்கப்பட வேண்டும் என்று பாதிப்புக்குள்ளானவர்கள் மற்றும் பாசிச எதிர்ப்புச் சக்திகள் பரிந்துரை செய்த போதிலும் 7 000 பேர் விசாரிக்கப்பட்டு சில நூறுபேருக்கு மட்டுமே குறைந்த பட்ச தண்டனைகள் பலத்த உலக நிர்ப்பந்தங்கட்கு இடையில் வழங்கப்பட்டு இருந்தன. 5 243பேருக்கு மரண தண்டனை விதித்த, வழங்கக் காரணமான 577 நாசி கால நீதிபதிகள், அரச தரப்பு வழக்கறிஞர்கள் எவரும் தண்டிக்கப்படவில்லை என்பதோடு நாசி கால நீதித்துறை, பொலிஸ், இராணுவம், உளவுத்துறை, பாசிசக் கட்சி நபர்கள் உட்பட சகலரும் சேவையில் ஈடுபடுத்தப்பட்டனர். ஜெர்மனிய இராணுவமான Bundeswehr நாசி காலப் பாசிச இராணுவத்தின் ஸ்பைடல் கௌசிங்கராலும் (Speidel - Heusinger), உளவுத்துறையான BNDயானது பாசிச உளவுத்துறையின் (Cehlen) கேகெல்ன் நீதித்துறை Schlage Felbings) சிலாக பீப்ளிங்ஸ் ஆலும் புனரமைக்கப்பட்டன. ஆடின் ஓவரின் அரசுத் துறைச் செயலாளராக இருந்தவன் நியூரென்பேர்க் நகரில் இயங்கிய நாசி கால ஆரிய இன ஆய்வு மற்றும் இனத் தூய்மைக்குப் பொறுப்பாயிருந்த குளோப்க் (Globke) என்ற பாசிஸ்ட் ஆகும். இப்படியாக மேற்கு ஜெர்மனியானது மூர்க்கமான யூத, கொம்யூனிச விரோதங்களோடும் பாசிசத்தின் அரவணைப்போடும் பிறந்தது. மறு அவதாரம் எடுத்தது.

CDUவின் நெருங்கிய சந்தர்ப்பவாதக் கட்சியான FDPயின் முக்கிய தலைவர்களில் ஒருவனான லாம்ஸ்டோர்வ் (Lamps Dorff) 1952-1953 கால கட்டங்களில் ஆஹன் நகரின் FDP தலைமையில் இருந்த போது நாசி SSஇன் தலைவன் வேணர் பெஸ்ட்டுக்கு (Werner Best) பொதுமன்னிப்பு வழங்கவேண்டும் என்று கோரிக்கைவிட்டான். இந்த வேணர் பெஸ்ட்டுக்கு கீழேயே பாசிஸ்ட் பாதுகாப்பு அமைப்பான Reichssicherheitshauptamt இயங்கியது. பாசிஸ்ட் பயங்கரவாத அரசின் கெஸ்டப்போ (Gestapo), சிசகைற் பொலிசாய் (Sicherheit polizei) என்பன இவனின் கட்டுப்பாட்டிலேயே இருந்தன. யூத மக்கள் மேலான அழிப்பைத் திட்டமிட்டு செயற்படுத்திய SDயின் தலைவரான ரயின்காட் கைட்ரிச் (Reinhard Heydrich) இவனின் கீழேயே செயற்பட்டான். ஹொலண்ட் சிறையில் இருந்த மற்றொரு பாசிஸ்ட்டான Antoine Tousul சிறையிலிருந்து தப்பLambsdorff இடமிருந்து உதவிகோருமளவு இருவரிடையேயும் நெருக்கம் நிலவியது. இந்த Lambsdorffதான் இன்று நாசி கால கட்டாய வேலைகட்கான நட்ட ஈடு கேட்டு யூதர்களின் அமைப்புகள் தொடர்ந்துள்ள வழக்குகட்கு எதிராக நாசிகாலத்தில் யூத மக்களை கட்டாய அடிமை உழைப்பில் ஈடுபடுத்தி பொருள் குவித்த ஜெர்மனியின் பெரும் நிறுவனங்களுக்கு ஆதரவாக வாதாட SPDயால் நியமிக்கப்பட்டுள்ள நபராகும்.

1950ம் ஆண்டுகளிலேயே ஜெர்மனியின் பெரும் பாசிச நிறுவனங்களான JG-Farben, Des Flick-Konzerns என்பன மீண்டும் ஆயுத உற்பத்தியில் ஈடுபடத் தொடங்கிவிட்டன. பாசிச நீதித்துறையின் (Staatssekretär im Justizministerium) பயங்கரவாதி Cart Rothernbergஇற்கு யுத்தகால நட்ட ஈடாக 190 000DM பணமும் 1962வரை மாதா மாதம் 2073,18 DM ஓய்வூதியமும் வழங்கப்பட்டது. ஜெர்மனியில் உள்ள கிட்டத்தட்ட ஒரு மில்லியன் பழைய பாசிஸ்டுகட்கு அல்லது அவர்களது குடும்பங்கட்கு மாதாந்தம் 1300 முதல் 3000 வரையிலான தொகை மாதாந்த ஓய்வூதியமாக வழங்கப்படுகின்றது. இத்தாலியில் உள்ள நாசி கால SS பயங்கரவாதிகட்கு Deutsche Renten (ஜெர்மனிய ஓய்வூதியம்) ஆக மாதாமாதம் 600 000 lire (சுமார் 600DM) ஜெர்மனியில் வழங்கப்படுகின்றது. லித்துவேனியாவைச் சேர்ந்த 1500க்கும் மேற்பட்ட நாசி SS பயங்கரவாதிகட்கு மாதாந்த ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இவர்களே நோர்வே, டென்மார்க், கொலண்ட், பிரிட்டன், பிரான்ஸ், பெல்ஜியம், ஒஸ்திரியா, பின்லாந்து, சுவீடன் ஆகிய நாடுகளைச் சேர்ந்த பழைய பாசிஸ்டுகட்கு ஜெர்மனிய அரசின் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது. இவர்களே இந் நாடுகளில் புதிய பாசிசக் குழுக்களுக்கு ஆதர்சமாகவுள்ளனர்.

1966இல் புண்டஸ் கான்சிலர் (Bundes Kanzler) ஆகவிருந்த கீசிங்கர் (Kiesinger) 1974-1982வரை புண்டஸ் கான்சிலராக இருந்த கேல்மூட் சிமித் (Helmut Schmidt) ஜெர்மனிய அரசுத் தலைவராக இருந்த ரிச்சர்ட் பொன் வைசேக்கர் (Richard Von WeizSäker) போன்றோரும் நாசிகளின் இராணுவம் மற்றும் அரசு இயந்திரங்களில் இருந்து வந்தவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களே. நீண்டகாலமாய் புண்டஸ் கான்சிலராக இருந்தவனும் தற்போது ஊழல்களில் மாட்டியுள்ளவனுமான கெல்முட் கோல், பாசிச இளைஞர் அமைப்பான Hitler Jüngerஇல் இருந்து வந்தவனே.

"Hamburger Ehrenbürger"(கம்பேர்கன் மரியாதைக்குரிய பிரசை) பட்டமும் Strasbergஇல் "Einer der Grossen und Verdienstvollsten Europäer" என்ற உயர்ந்த ஐரோப்பியர் பரிசைப் பெற்றவனுமான அல்பிரட் சி. டெப்பர் (Alfred C. Toepfer) ஒரு பழைய பாசிஸ்ட் ஆவான். 1995இல் Aachen நகரில் அரச உயர்விருதான Bundesverdienst Kreuz பாசிஸ்ட் SS உத்தியோகத்தனான கான்ஸ் ஏர்ன்ஸ் சினேடர்க்கு (Hans Ernst Schneider) வழங்கப்பட்டது. இத்தாலியில் 335 பாசிச எதிர்ப்புப் போராளிகளை சுட்டுக்கொன்ற எரிச் பிரிப்க (Erich Pribke) ஆர்ஜன்டீனாவில் ஒளித்து வாழ்ந்தபோது அங்கிருந்த ஜெர்மன் தூதராலயம் அவனது கடவுச்சீட்டை தொடர்ச்சியாகப் புதுப்பித்து வந்தது. 1942இல் செக்கோசிலவாக்கியாவில் 92பேரைக் கொன்ற குற்றத்திற்காகவும், பிரான்சில் Oradour sur Glaneஇல் நடத்திய படுகொலைகட்காகவும் கிழக்கு ஜெர்மனியின் சோசலிச அரசால் தண்டனை விதிக்கப்பட்டு சிறை வைக்கப்பட்டு இருந்த பாசிஸ்ட் கைன்ஸ் பார்த் (Heinz Barth) ஜெர்மனிய இணைவுக்குப் பின்னர் 1997இல் விடுதலை செய்யப்பட்டான்.

மறுபுறம் ஜெர்மனி, பாசிசத்துக்கு எதிராய்ப் போராடிய ஆயிரக்கணக்கான கொம்யூனிஸ்டுகள், மனிதாபிமான அமைப்புகள், யூத மக்களின் பாசிச எதிர்ப்புக் குழுக்கள் யாவற்றையும் தள்ளி விட்டு Strauffenberg, Haeften, Olbricht போன்ற கிட்லருக்கெதிராக அதிகாரப் போட்டி காரணமாய் சதி முயற்சிகளில் ஈடுபட்ட கிட்லரின் யூத அழிப்பிலும் சகல மனிதப் பயங்கரவாதங்களிலும் சேர்ந்திருந்த பாசிஸ்டுகளே கிட்லரின் சர்வாதிகாரத்துக்கு எதிரான போராளிகளாய் ஜெர்மனியால் கொண்டாடப்படுகிறார்கள். உதாரணமாய், 1944 யூலையில் கிட்லருக்கு எதிராய் குண்டு வைத்த Strauffenberg சர்வாதிகாரத்துக்கு எதிராய் போராடியவனாய் நினைவு கூரப்படுகிறான். இவனும் பாசிஸ்டே. நாசிப் பயங்கரவாதத்தில் இறுதிவரை பங்கேற்றவனே. உண்மையான பாசிச எதிர்ப்புப் போராளிகளான ஏர்னெஸ்ட் தேல்மான் (Ernest Thalmann), வில்கெம் பீக் (Wilhelm Pieck) போன்றோர் ஜெர்மனிய வரலாற்றின் இருட்டுக்குள் விடப்பட்டனர்.

கொம்யூனிஸ்டுகள் மேல் வெளிப்படையான மற்றும் யூத இன மக்கள்மேல் மறைமுகமான ஒடுக்குமுறைகள் ஜெர்மனியால் ஏவப்பட்டது. கொம்யூனிஸ்டுகள் மேலும், அவர்களின் ஆதரவுச் சக்திகள் மேலும் கிட்டத்தட்ட 150 000 மேற்பட்ட வழக்குகள் இதுவரை தொடுக்கப்பட்டுள்ளன. என்கிறது Heinreh Hannover, Rolf Grössner இருவரையும் அங்கத்தவர்களாகக் கொண்ட குளிர் கால யுத்தத்தின்போது ஜெர்மனிய நீதித்துறைச் செயற்பாடுகள் பற்றி ஆராய்ந்த குழு. 1951-1968வரையான காலத்தில் மட்டும் 10 000க்கும் மேற்பட்ட வழக்குகள் கொம்யூனிஸ்டுகள் மேல் போடப்பட்டன. 1932இல் ஜெர்மனியப் பாராளுமன்றத்தில் 3வது பெரிய கட்சியாகவும் 100 பாராளுமன்ற உறுப்பினர்களையும் 287 000 கட்சி உறுப்பினர்களையும் கொண்டிருந்த கொம்யூனிஸ்ட் கட்சி பாசிஸ்டுகளின் அழித்தொழிப்பின் பின்பு கொன்ட்ராட் ஆடின் ஓவரால் தடை செய்யப்பட்டு பொய் வழக்குகள் போடப்பட்டன. 'கொம்யூனிஸ்ட் கட்சித் தடை'யை எதிர்த்தமைக்காக 1935-1945வரை நாசிகளின் Buhenwald கொலை முகாமில் Siemens நிறுவனத்தில் கட்டாய அடிமை உழைப்பில் ஈடுபடுத்தப்பட்டவரான Krut Bachmann மீண்டும் ஜெர்மனியில் சிறைத் தண்டனைக்கு உட்படுத்தப்பட்டார். யூத அடியைச் சேர்ந்த இவர் தனது துணைவியை அவுஸ்விட்ஸ்-நச்சுவாயுக்கூடத்தில் பறிகொடுத்தவர். 1969இல் மீண்டும் KPDயை தொடங்கியவர். 1946இல் "Racha" என்ற யூத அமைப்புமீது யூத மக்களை கொலை செய்த பாசிச ஜெனரல்கள் கொலை முகாம் பொறுப்பாளர்மீது கொலை முயற்சியில் ஈடுபட்டதாய் அதன் பாசிச எதிர்ப்புப் போராளிகள் கைது செய்யப்பட்டனர். யோசப் கார்மட்டஸ் (Joseph Hamatz), லைப்க டீடெல் (Leipke Dietel) போன்ற பாசிச எதிர்பாளர்கள்மீது வழக்குத் தொடரப்பட்டது. பழம் பெரும் பாசிச எதிர்ப்புப் போராளியும் கொம்யூனிஸ்டுமான Prof Dr. Siegwart Horst, யோசப் கார்மட்ஸ் (GJoseph Harmatz), அரச அவதூறு செய்ததால் 1995யூன் கைது செய்து பொலிசாரால் தாக்கப்பட்டார். 1999யூனில் அவர் மேல் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. இவர் நாட்டோ பயங்கரவாதிகளால் லிபியா யூகோஸ்லாவியா போன்ற நாடுகளில் அணுக் கதிரியக்கம் உடைய உரான் குண்டுகள் (Urane Munition) பாவித்தமையை அங்கு சென்று ஆய்வுகள் நடத்தி வெளிக்கொண்டு வந்தவர். இவரும் யூதர்களுக்கான தடுப்பு முகாமில் பாசிஸ்டுகளால் சிறை வைக்கப்பட்டு உயிர் தப்பியவர்.



## புதிய நாசி இயக்கங்களின் தோற்றம்

பாசிசம் சார்பான அதனைப் பேணும் சக்திகள் நிரம்பிய அரசியல் சமூகச் சூழல்களில்தான் புதிய நாசிக் குழுக்கள் வளர்ந்து பெருகின. 1931இல் தோன்றிய Stalhelm என்ற அமைப்போடு 1952இல் Wiking Jugend (விக்கிங் யுகென்ட்) உயிர்பெற்று "Kampf gegen der bolcheweismus" போல்ஸ்விசத்துக்கு எதிரான போரைப் பிரகடனம் செய்தன. Helfgemeinschaft für Nationale Politische Gefangene (இந்த அமைப்பு சிறைப்பட்டுள்ள பாசிஸ்டுகளுக்காகப் பிரச்சாரம் செய்தது. Wehr port Gruppe Hoffmann(வெயர்ஸ்போட் குருப்ப கொவ்மான்) ஆயுதமேந்திய பாசிசக் குழுவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இயங்கின.

1960க்கும் 1970களிலும் ஏராள மான புதிய பாசிச அமைப்புகள் தோன்றின. MUT, der Front Soldat, Ring christe iche, Demokratischer Studentes, Jungenbünd Adler, Freiheitlichen Rat, NPD என்பன , aqf;fpd ., ;jpy ;MUT அன்றைய ஜெர்மனியின் பேயர்ண் மாநில CSUஇன் கலாச்சார அமைச்சரான கான்ஸ் மாயர் (Hans Maier) அனுசரணையோடும் der Front Soldat ஜெர்மனிய பாதுகாப்பு அமைச்சரா யிருந்த மன்பிறிட் வேணர் (Menfred wörner) CDU வின் பின்புலத்திலும் Student என்ற பாசிச அமைப்பு Beyern மாநிலத்தின் நன்கு அறியப்பட்ட பாசிஸ்ட் முதல் மந்திரியான பிரான்ஸ் யோசெவ் ஸ்றவுஸ் (Franz Josef Strauss) CSU உதவி ஒத்தாசை யோடும் இயங்கின.

1975-1980ம் ஆண்டு பகுதிகளில் Bundes Heimettreuer Jugend (BHJ) என்பவையோடு Die Republikaner அமைப்பு பழைய SS- பயங்கரவாதி பாசிஸ்ட் பிரான்ஸ் சோண்கோபரால் (Franz Schönhuber) பழைய நாட்டோ அட்மிரல் டி குன்டர் (D. Günter) ஆதரவோடு 1986இல் Beyern தேர்தலில் இறங்கியது. வெளிநாட்டார் எதிர்ப்பை பிரதானப்படுத்தியதோடு வெளிநாட்டார் எயிட்ஸ் நோயைக் கொண்டு வருவதால் வெளிநாட்டாருக்கு கட்டாய எயிட்ஸ் சோதனை நடத்தப்படவேண்டும் என்றது. ஆனால் ஜெர்மனியின் எயிட்ஸ் ஆய்வுப்பிரிவு ஜெர்மனிய பாலியல் சுற்றுலாப் பயணிகளே எயிட்சை கொண்டு வந்து பரப்புவதாய் மதிப்பிட்டது) அரசியல் தஞ்சத் துஷ்பிரயோ கம் வெளிநாட்டவ ருக்கு வாக்களிக்கும் உரிமை இல்லை போன்ற சுலோகங்க ளையும் பிரதானப்படுத் தியது.



சகலதிலும் முக்கி யமான கட்சி NPD இது 1964இல் தொடங்கப் பட்டு 1966/1967 Baden würettenberg தேர்தலில் 9.8% வாக் குகளைப் பெற்றது. இதைப் பின்னிருந்து இயக்கிய பாசிஸ்டுகளான எட்கார் கைஸ், எர்வின் சோண்போன், மிசையேல் கூனன் என்போர் முக்கியமானவர்கள். ஆரம்பத்தில் இதன் முக்கிய தலைவராக தற்போதைய DVUஇன் தலைவரான பாசிசப் பின்புலன்களைக் கொண்ட Gerard Frey இருந்தான். இதுவே பயங்கரவாத பாசிசக் குழுக்களுடன் தொடர்பு கொண்டு இருந் தது. இதன் இளைஞர் அமைப்பு Jungen National demokraten Deutsche Stimme, White Power என்ற பத்திரிகைகளைக் கொண்டுள்ளனர். Die Auschwitz Lüge 'அவுஸ்விட்ஸ் பொய்' என்ற யூத மக்களுக்கு எதிரான பாசிச வெளியீடாக 100 000 புத்தகங்கள் வெளியிடப்பட்டன. இது Auschwitz என்ற யூத மக்களை அழித்த சித்திரவதைக் கூடங்கள், நச்சுவாயுக்கூடங்கள் என்பன நிலவவே இல்லை என்று சாதித்தன. அவை 'அவுட்ஸ்விற்ஸ் பொய்' என்று வரலாற்றைப் புரட்டின.

1972இல் இருந்து NPDயுடன் தொடர்புடைய Studenten Schlesein கிழக்கு ஜெர்மனி, சுவிஸ், இத்தாலியின் Südtrirol, ஒஸ்ரியா, போலந்து, செக்கோஸ்லவாக்கியாவின் பகுதிகளை உள்ள டக்கிய மேற்கு ஜெர்மனியின் தலைமையிலான மிகப்பெரும் தந்தையின் நாடு பற்றிப் பேசினர். 1987இல் Deutche Volks Union (DVU), Beyern மாநிலத்தில் உள்ள Mûnchener Verlag என்ற வெளியீட்டு நிறுவன உரிமையாளனும் NPDயின் தலைமையில் இருந்தவனுமான Gerhard Freyஆல் தொடங்கப்பட்டது. Schlesische Jugend Rin Freiheitlicher Studen Kamred Junger Deutsche Volksgenosse Patrioten für Deutchland Europaischer Arbeiter Partei என்பவையும் இயங்கின. Kamerad Junge Deutscher Volksgenosse ஜெர்மனியர்கள் கருக்கலைப்பு நடத்துவதை எதிர்த்தது. வருடா வருடம் 800 000கருக்கலைப்புகள் நடப்பதாயும் இதனால் மில்லியன் கணக்கான ஜெர்மனிய மக்கள் தொகை இழக்கப்பட்டுவிட்டதாயும் அதே சமயம் வெளிநாட டவர் மத்தியில் குழந்தை பிறப்பு விகிதம் அதிக ரித்து வருவதாகவும் பிரச்சாரம் செய்தது. ஜெர்மனி யில் வாழும் ஆசிய ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த சில வெளிநாட்டு மக்கள் பிரிவினரிடம் குடும்பத் திட்டமிடல், குடும்பக் கட்டுப்பாடு என்பவை ஐரோப்பிய மக்கள் போல் அனுட்டிக்கப்படாவிடினும் அவர்களிடம் குழந்தை பிறப்பு விகிதம் வீழ்ச்சி யடைந்தே வந்தது. 1984 இல் 28%மாக இருந்த குழந்தை பிறப்பு விகிதம் 1989இல் 20%மாகக் குறைந்திருந்தது. Hamburgஇல் பாசிசக் குழுக் கள் நகர மட்டத்தில் மட்டும் இயங்கின. Hamburger Kampf Gegen Auslander Integration und Asylschwindel போன்ற அதிதீவிர வலதுசாரி மற்றும் பாசிசம் இணைந்த மூர்க்கமான வெளிநாட்டார் மற்றும் அகதிகள் எதிர்ப்பு இயக்கங்கள் இயங்கின.

ஜெர்மனியரின் இயற்கையான வாழ்விடம் வெளிநாட்டவர்கள், யூதர்கள், கொம்யூனிஸ்டுகள் என்பவர்களால் அழிக்கப்படுவதாயும் இவர்களால் குறையாடப்பட்ட தலைமுறை நாம் என்ற பிரச்சாரங்களும் ஜெர்மனிய தூய்மை வாழத் தகுதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யற்றவைகளை அழிப்பது என்ற பாசிஸ்டுகளின் கோசங்களையும் மீட்டனர். யூத மக்களின் நாசி கால கட்டாய உழைப்பு முகாம்களையும் படு கொலைகளையும் நியாயப்படுத்தும் யூதர்களின் வாழ்விடம் இனத் தூய்மைப்படுத்தும் பிரதேசங்கள் என்று பெயரிட்டனர். பேர்லினில் உருவாகி வரும் யூத மக்களுக்கான நினைவுக் கூட்டத்துக்கு எதிராக முழுப் பாசிச இயக்கங்களும் இணைந்து Nationales Aktionbünnis, Frier Kamerad Schaften என்ற அமைப்புகளில் திரண்டுள்ளனர். ஜெர்மனியின் இடதுசாரி ஆய்வு மற்றும் வெளியீட்டு நிறுவனமான Das Hamburger Institüts Für Sozial forschung ஜெர்மனி முழுவதும் நடாத்தி வரும் நாசி இராணுவத்தின் அழிவு மற்றும் யுத்தக் குற்றங்கள் பற்றிய கண்காட்சியான Vernichtungs Krieg Verbrachen der Wehrmacht 1941-1945 எதிராக அரசியல் மற்றும் ஊர்வல நிகழ்ச்சிகளை ஜெர்மனி முழுவதும் சகல பாசிசக் குழுக்களும் இணைந்து நடாத்தி வருவதோடு கொலைப் பயமுறுத்தலையும் விட்டு வருகின்றன. இந்த ஆய்வு வெளியீட்டு நிறுவனம் Saar brucken நகரில் நடாத்திய கண்காட்சியையும் 1999 மார்ச்சில் குண்டு வைத்துத் தகர்த்தனர்

இதைவிட பாசிஸ்ட் ருடோல்வ் ஹெஸ் (Rudolf Hess) கிட்லர் போன்றோரின் நினைவு நாளையும் ஜெர்மனியின் பிரதான நகரங்களில் அரசியற் கூட்டங்கள், ஊர்வலங்கள் மூலம் கொண்டாடினர். 12 மார்ச் 2000இல் கிட்லர் ஒஸ்திரியாவை ஆக்கிரமித்த 12 மார்ச் 1938 நினைவுநாளையும் ஒஸ்திரியாவின் புதிய பாசிஸ்ட் கைடருக்கு (Haider) தம் கூட்டுறவைத் தெரிவித்து 'நாம் அனைவரும் ஒரே மக்கள்'என்று பேர்லினில் ஊர்வலம் செய்தனர். Beyernஇன் PDS பேச்சாளியும் ஈரானிய தேசத்த வருமான சீமா சோர்க்யு (Sima Sorgyu) 'கொம்யூனிச விபச்சாரி' என்று பழிக்கப்பட்டதோடு Beyernஇன் மற்றொரு PDS பாராளுமன்ற பெண் உறுப்பினரான ஈவா புல்லிங் சுறோடருக்கும் (Eva Bull) கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டு வருகின்றது. PDS தலைவரான கீசி (Gysi) அவரது யூதப் பிறப்புக்காக பழிக்கப்படுகின்றார். (PDS - கிழக்கு ஜெர்மனியின் முன்னாள் கொம்யூனிஸ்ட் கட்சி)

புதிய நாசிக் குழுக்கள் கிழக்கு ஜெர்மனி காலத்தில் அதன் முக்கிய பதவிகளில் இருந்த யூத அடியைச் சேர்ந்தவர்கள்மீது பாசிசத் தாக்குதல்கள் தொடுத்தனர். கிளவுஸ் கீசி (Klaus Gysi) கலாச்சார அமைச்சர் பாசிச எதிர்ப்புப் போராளி. கிறிஸ்தவ சமயம் பற்றிய ஆய்விற்குப் பொறுப்பாய் இருந்தவர். கிழக்கின் பாசிச எதிர்ப்பு கலை வடிவங்கள் பலவற்றை உருவாக்கக் காரணமாக இருந்தவர். மார்க்கஸ் வோல்வ் (Markes wolf) Stassi என அழைக்கப்படும் உளவுத்துறைக்குப் பொறுப்பாயிருந்தவர். இவரும் பழைய பாசிச எதிர்ப்புப் போராளி 2ம் உலக யுத்தம் பின்பாக நாசிக் குற்றவாளிகளைத் தேடிப்பிடித்ததில் பெரும்பங்கு வகித்தவர். கிழக்கு ஜெர்மனின் அரசதரப்பு வழக்கறிஞராயும் பின்பு நீதி அமைச்சராயும் இருந்த கில்ட் பெஞ்சமின் (Hilde Benjamin) பிராங்போட் மார்க்சியக் குழுவில் இருந்த வேல்ட் பெஞ்சமினின் சகோதரரின் மனைவியாவர். இவரின் துணைவர் யூத அழிப்பு முகாமில் கொலை செய்யப்பட்ட பின் இவர் மட்டும் தப்பிப் பிழைத்தார். SFD என அழைக்கப்படும் கிழக்கின் கொம்யூனிஸ்ட் கட்சியின் தகவல் செய்தித் தொடர்புகட்குப் பொறுப்பாயிருந்த அல்பேர்ட் நோர்டன் (Albert Norden), எழுத்தாளர் ஸ்டீபன் கேர்ம்ளின் (Stehen Hermlin) உட்பட யூத பிறப்பை அடிப்படையாய்க் கொண்டவர்களை இழிவுபடுத்தும் எதிர்ப்புப் பிரச்சாரங்கள் சகல பாசிசக் குழுக்களிடமும் உள்ள பொதுவான அம்சமாய் காணப்பட்டது. 'வெறிகொண்ட கொம்யூனிஸ்ட்' (Fanatische Kommunisteten) சிவப்பு கில்ட் (Rote Hilde) என்றே பாசிச எழுத்துக்கள் Heide Benjamin குறித்து எழுதின. கொம்யூனிசம் யூதர்களின் சதி என்று பிரச்சாரம் செய்தன.



### பாசிச இசைக்குழுக்கள் மற்றும் ஸ்கின்ஹெட்ஸ்

ஜெர்மனியில் 1999 மதிப்பீட்டின்படி 93 பாசிச இசைக்குழுக்கள் உள்ளன. Blood Hanouer Hammer skins Kraft durch froide Geachte Faustrecht Gestapo Die Zillertamler டேக்கன் ஜேகர் Herren rasse mein bester kamerad Helden für Deutchlande Die Deutschen Kommen Gegen den untermenschen Germania Sieg wird unser sein என்பன போன்ற பலவித பாசிச இசைக் குழுக்கள் இயங்குகின்றன. 1970களில் KISS என்ற இசைக்குழு முதலில் புதிய பாசிசக் குழுக்களின் ஆதரவோடு இயங்கியது. அன்றைய காலம் Pop,Beat, Rock இசைகள் பிரபல்யமாய் இருந்த காலம். எனவே பாசிஸ்டுகள் மக்களை அடைய அன்றைய இசைப் போக்குகளையும் தமக்குப் பயன்படுத்த முயன்றனர். KISS இசைக்குழுவின் ரசிகர்கள் என்ற முறையில் Kiss Armee என்ற பாசிச அமைப்பு 10 000 உறுப்பினர்களைக் கொண்டிருந்தது. இவர்கள் தமக்கென்று பாசிசக் கலாச்சாரத்தை (Nazi Cult) உருவாக்கினர். பாசிச அடையாளங்களுடனான ஆடைகள் பெல்ட் சங்கிலிகள் என்பவற்றை அணிந்தனர். கொம்யூனிச விரோதத்துக்குப் பெயர்போன Axel Springer நிறுவனம் இவர்கட்கான வெளியீடுகளையும் இசைகளையும் வெளியிட்டது. அத்தோடு Skinhead குழுக்களும் பாசிச இசைக் குழுக்களோடு ஒன்று கலந்து இருந்தன. Skinhead குழுக்கள் தோன்றக் காரணமான அமைப்பு பிரிட்டனில் 1960இல் Modernist என்ற பெயரில் இயங்கியது. இதிலிருந்து Mods என்ற அமைப்பும் இதிலிருந்து பின்பு skinhead குழுக்கள் தோன்றின. இவைகள் Rocker குழுக்களுக்கு எதிராக செயல்பட்டன. Skinheadஇன் ஒருபிரிவு Hard Mods என்ற பெயரிலும் இயங்கின. இவைகளின் சிதறலில் இருந்து National Front பிறந்தது. 1970களில் ஜெர்மனியில் Hamburg, Berlin போன்ற நகரங்களில் Skinhead குழுக்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உருவாகின. இவை பகுதியாய் Punks எனப்படும் ஹிப்பிகளை ஒத்த குழுக்களில் இருந்தும் உறுப்பினர் களைப் பெற்றுக்கொண்டன. Sektion Berlin, Blood & Hanouer. இவைக ளோடு பெண்களின் Skinhead அமைப்புகளான Skinheadgirl Frauenkreis Deutschland Mutter Kind Brauchtum Germanentum போன்றவையும் ஜெர்மனியின் முக்கிய நகரங்களில் இயங்கின. இப் பாசிச அமைப்புக்கள் தமக்கென Skin-Kult கொண்டி ருந்தன. Springerstiefel எனப்படும் இராணுவத்தினர் அணிவதை ஒத்த முரட்டுச் சப்பாத்துகள் Bombe jacke எனப்படும் மொத்தமான மேலாடைகள் பாசிச SS அடையாளங்கள் இவைகளை அணிந்தனர். கிட்லரின் மின்னல் வேக யுத்தம் (Blitzkrieg) யூத மக்களின் இறப்பை நையாண்டி செய்யும் Auschwitz Jerk, பாசிச அடையாளங்களான Hakenkreuz, Totenkopf போன்ற தலைப்புகளில் பாசிச இசைக்குழுக்கள் பாடல்களைப் பாடினர்.

Skinhead குழுக்களுக்கு எதிராக இடதுசாரிகள் Redskins, Sharp Rock, Gegen Rechts போன்ற குழுக்களை பாசிச இசைக் குழுக்களுக்கு எதிராக உருவாக்கினர். இடதுசாரிகளும் மனிதாபிமான அமைப்புகளும் இயக்கங்களை நடத்தியபோது 1980ம் ஆண்டுகளில் பாசிஸ்டுகள் நிறவெறித் தென்னாபிரிக்க அரசை ஆதரிக்கும் Hilfs Komitee Sudliche Afrika என்ற அமைப்பைத் தொடங்கி வெள்ளை ஆபிரிக்காவுக்கு ஆதரவு கொடுத்தனர். Weiss Waren Immer die besten Krieger (வெள்ளையர்கள் எப்போதும் சிறந்த போர்வீரர்கள்) என்று நிறவெறிப் பிரச்சாரம் செய்தனர். பாசிச ஆதரவு உதைபந்தாட்ட ரசிகர் குழுக்களான Borussen Front, Hooligann, Hertha BBC என்பனவும் பெரும்பகுதி உதைபந்தாட்ட ரசிகர்கள் மத்தியில் பலம் பெற்று விளங்கின. இவை யாவும் தமக்கான கொடிகள் நிறம் ஆடைகள் என்பவற் றைக் கொண்டிருந்தன.

பாசிசப் பத்திரிகைகள் அகதிகளை இழிவு படுத்தும் Asylanten, Schienasylanten, Wirt schaftsasylante, Kriminell easy lanten போன்ற சொற்களையும் பொதுவாக வெளிநாட்டவர்களைக் கேவலப்படுத்த Auslanderflu+ (வெளிநாட்டார் வெள்ளம்) குடியேற்றவாதிகளின் அலை ஆபிரிக்க ஆசிய ஆக்கிரமிப்பு யூதர்கள் Judensau Geldjuden என அழைக்கப்பட்டதோடு கொம்யூனிஸ்டுகள் Neger freund (கறுப்பர்களின் நண்பன் என்ற பொருளில் இது சொல்லப்படுகிறது. Rot terror (சிவப்புப் பயங்கரவாதி) என்று நாமகரணம் இடப்பட்டனர்.

## புதிய நாசிக்குழுக்களின் பயங்கரவாத நடவடிக்கைகள்

1999ம் ஆண்டு இறுதி மதிப்பீட்டின்படி ஜெர்மனி முழுவதும் 53600 பேர் புதிய பாசிசக் குழுக்களில் அங்கத்தவர்களாக உள்ளனர். யூத எதிர்ப்பு மற்றும் வெளிநாட்டவர்கள், இடதுசாரிகள், அங்கவீனர்கள் இவர்கள் மேலான தாக்குதல்களை புதிய நாசிக் குழுக்கள் நடாத்தி வருகின்றனர். 1993இல் யூத மக்களின் மேலான உடலியல்ரீதியான தாக்குதல் கள், அவர்களின் சவச்சாலை, வழிபாட்டிடங்கள், கலாச்சார நிலைகள் மேலான 652 வன்முறைச் சம்பவங்கள் இடம்பெற்றன. இது முறையே 1994இல் 802, 1997இல் 2800ஆக அதிகரித்ததாய் ஜெர்மனி யின் குற்றத் தடுப்புப் பிரிவான BKA அறிக்கை சொல்கிறது. 1991இல் 13 வெளிநாட்டவர்கள் புதிய பாசிஸ்டுகளால் கொல்லப்பட்டனர். 1992இல் மொத் தம் 42 கொலைகளும் 1993இல் 53 கொலைகளும் 1994இல் 33 கொலைகளும் இடம்பெற்றன. ஜெர்ம னிய இராணுவமான Bundeswchr 1998இல் மட்டும் 320 தடவைக்கு மேலாக வெளிநாட்டவர்கள் யூத எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டது. இதில் 20%மானவர்கள் இராணுவத்தின் உயர்பதவிகட்கு உரியவர்கள் - 1995இல் 53பேர் நாசி நடவடிக்கை களில் ஈடுபட்டதாய் நீதிமன்றத் தண்டனை பெற்ற னர். இவை முறையே 1994இல் 64பேரும் 1993இல் 43பேரும் 1996இல் 56பேரும் 1997இல் 110பேரும் தண் டனை விதிக்கப்பட்டனர் அல்லது நீதிமன்றங் களால் விசாரிக்கப்பட்டனர். 1999 ஒக்டோபர் மாதத் தில் கிழக்கு ஜெர்மனியில் உள்ள ஐரோப்பாவி லேயே மிகப் பெரும் யூதர்களின் சவச்சாலையான "Der Judische Friedhof" - Berlin Weissanceeஇல் 103 நினைவுக்கற்கள் சேதப்படுத்தப்பட்டன. அதில் Bertolt Brecht (பேர்ரோல்ட் பிரெ:க்ட்)இன் நினைவுச் சின்னமும் ஒன்றாகும். யாவற்றிலும் நாசிச் சின்ன மும் வரையப்பட்டது.

ஜெர்மனியின் தேசியவாத வலதுசாரி அரசியல் வாதிகள் ஒவ்வொரு தேர்தல் சமயத்திலும் வெளி நாட்டவர்கள் அகதிகள் பிரச்சனைகள் பற்றி விவாதங்களை தவறாமல் கிளப்பினார்கள். CDU, CSU, FDP, SPD என்று எந்த அரசியல் கட்சியும் இதற்கு விதிவிலக்கல்ல. இப்போது பதவியில் உள்ள SPDயின் புண்டஸ்கான்சிலரான Schröder "Kriminalle Auslander? Raus und zwar schnell" (குற்றவாளிகளான வெளிநாட்டார் உடனடியாக வெளியேற்றம்) என்பதாய் எரியும் ஜெர்மன் பெருந் தேசியவாத பாசிச விசராட்டத்திற்கு உருவேற்றி னான். 1994இல் எகிப்தில் நடைபெற்ற உலக மக்கள் தொகை சம்பந்தமான மாநாட்டில் ஜெர்மன் பிரதிநிதியாய் கலந்துகொள்ள நியமிக்கப்பட்ட Charlotte Höhn (சார்லொட்டோ கேன்) "ஆபிரிக்கர் கள் மற்றைய மக்களைவிட குறைவான புத்திக் கூர்மை உடையவர்கள்" என்று பத்திரிகையாளர் களுக்கு சொன்னான் CSUவின் அரசியல் வாழ்வு கொம்யூனிச எதிர்ப்பு, வெளிநாட்டவர் எதிர்ப்பு இவைகளையே அடிப்படையாய் கொண்டது. புதிய நாசிகள் "ஆரிய மனிதன்" பற்றிப்பேசி Voll jüden (முழு யூதன்) Halb jüden (அரை யூதன்) Vietel jüden (கால் யூதன்) போன்ற கிட்லர் கால இனத் தூய்மைக் கோட்பாடுகளை அதன் புதைகுழியுள் இருந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

மீண்டும் தோண்டி எடுக்கின்றார்கள்.

ஜெர்மனிய பொதுசன ஊடகங்கள் நாசிகளை Traumtänzer 'கனவு நடனக்காரர்) Spinner (கிறுக்கர்) Verüchtte (உள நலமற்றவர்) என்று கோபப் பாவனையில் செல்லம் கொஞ்சுவதற்கு மேல் செல்லுவதில்லை. ஆனால் இடதுசாரி ஆயுதப் போராட்ட இயக்கங்களான RAF, AZ என்பன பயங்கரவாத இயக்கம், தீவிரவாதிகள் என்பதாய் வசை பாடப்பட்டன. புதிய பாசிச இயக்கங்கள் ஒருபோதும் பயங்கரவாத இயக்கங்களாக மதிப்பிடப்படுவது/எழுதுவது கிடையாது.

**ஜெர்மனிக்கு வெளியேயான புதிய பாசிச அமைப்புகள்**

ஒஸ்திரியா - இங்கு கிட்லருக்கு முன்னோடியாக இருந்தவர்கள் "Deutschen Fortchrits Partei" யைச் சேர்ந்த Georg Ritter von schönerer (1842-1921) அத்தோடு christlich Sozialen Parteiஇன் Karl Lueger (கார்ல் லூஏகர்) இருவரும் ஆவர். அத்தோடு கத்தோலிக்க மத அடிப்படையிலான பலமான யூத எதிர்ப்புவாதம் அங்கு பாசிசப் போக்குகட்கு அடிப்படையாய் இருந்தது. இன்றைய FPO - Haiderஇன் பாசிசக் கட்சி 1970களில் Bruno Kreiskyஆல் ஆரம்பிக்கப்பட்டது. இவர்கள் யூதர்கள் வெளிநாட்டார்கள் அற்ற ஒஸ்திரியா, ஜெர்மனி, உள்ளிட்ட "பெரும் ஜெர்மனி" பற்றிப் பேசினார். FPOஇன் இன்றைய Haider நாசி இராணுவமான Deutschen Wehrmartஇன் பழைய பாசிஸ்டுகளிடையே பெரும் செல்வாக்குப்



பெற்றுள்ளான். நாசி இராணுவம் குற்றவாளி அல்ல. மாறாக ஒரு இலட்சியத்துக்காகப் போராடி பாதிக்கப்பட்ட வீழ்ந்த ராணுவம் என்று சொன்னதோடு யூதர்களின் Auschwitz ஒத்த முகாம்கள் சித்திரவதை மற்றும் கொலை முகாம்களல்ல மாறாக நன்னடத்தைக்கான, குற்றமிழைத்த யூதர்களைத் திருத்துவதற்கான முகாம்களே என்று பாசிச விளக்கம் தந்தான். கிட்லரின் அரசு ஒழுங்கும் கட்டுப்பாடும் கொண்டது என்று பாசிசத் துணிவோடு பேசினான். இவனின்



அமைப்பைவிட "Bejuwarische Befreiungs armee" போன்ற பாசிசச் குழுக்களும் பலவித skinhead குழுக்களும் இயங்குகின்றன. ஜெர்மனியில் இயங்கும் அதே குழுக்கள் இங்கும் செயற்படுகின்றன. Bejuwarisch Befreiungs armee 25க்கு மேற்பட்ட கடிதக் குண்டுகளை யூதர்கள், வெளிநாட்டார்கள், இடதுசாரிகள், வெளிநாட்டார் ஆதரவு அரசியல்வாதிகள் போன்றோருக்கு அனுப்பியது. 4 கொலை, 2 கொலை முயற்சி 21 பேர் காயம் அடையச் செய்தது. புதிய நாசிகள் 5.2.1995இல் 4 ரோமா இன மக்களைக் குண்டு வைத்துக் கொன்றதோடு அந்த இடத்தில் "Roma Züruck Indien" (ரோமா இந்தியாவுக்குத் திரும்பு) என்ற அட்டையையும் விட்டுச் சென்றனர். 1980-1992 ஒஸ்திரியாவின் புண்டஸ் கான்சிலராக இருந்த Waldheim பழைய நாசி ஜெர்மனியின் அரசுத் தலைவனாக இருந்த Richard von weizsaker உடன் ஒன்றாய் Deutschen Wehrmacht பாசிச இராணுவத்தில் இருந்தவன் - பிற்காலத்தில் கண் துடைப்பு விசாரணை நாடகங்களில் தனிப்பட்ட குற்றங்கள் ஏதும் இல்லை, கட்டளைகளை மட்டுமே நிறைவேற்றினான் என்று விடுதலை செய்யப்பட்டான்.

சுவிஸ் - தனது வங்கி முலதனத் திரட்டலுக்கு ஆதரவான சர்வதேச ஊழல் சர்வாதிகாரிகள் மாபியாக்களின் பணக்குவியல்கட்கான பதுங்கு குழியாக இருப்பதால் அது எந்த நாட்டுடனும் தொடர்பு கொள்ளக்கூடிய நடுநிலை வேடம் கட்டியாடுகிறது. எனினும் அதன் ஆதிமூலம் பாசிசத்துடன் தொடர்புடையதே. 1941இல் Schweizer 'A'rztemission என்ற பெயரோடு வைத்தியர்கள் தாதிமார்கள் அடங்கிய குழுவையும் Freiwillingen என்ற பெயரில் போராடும் குழுக்களையும் நாசிகள் சார்பில் போரிட சோவியத்தின் பெயரில் கிழக்குப் போர்முனைக்கு அனுப்பியது. 1945-1946களில் யூதர்களிடமிருந்து கொள்ளையிடப்பட்ட பெருந்தொகையான தங்கம் சட்டவிரோத வழிகளில் சுவிசில் நுழைந்தது. சகல பாசிஸ்டுகளையும் தம் பெரும் செல்வங்களை வங்கிகளில் பதுக்கினர். 1941-1945களில் குரோசியாவில் கத்தோலிக்கப் பாசிஸ்டுகளின் (Ustasche) அரசு சேர்ப்பியர்கள் யூதர்களிடமிருந்து கொள்ளையிட்ட தங்கத்தை சுவிஸ் ஊடாக வத்திக்கானுக்கு கடத்தப்பட்டது. யூதர்களின் படுகொலை முகாமில் மனிதப் பரிசோதனைகள் நடாத்திய செஞ்சிலுவைச் சங்க கடவுச்சீட்டில் தென்அமெரிக்காவுக்குத் தப்பிச் சென்ற Dr Josef Mengel சுவிசுக்கு தன் விடுமுறைக்கு தடையின்றி வந்து சென்றான். ஜெர்மனியிலும் ஒஸ்திரியாவிலும் இயங்கும் பெரும்பகுதி பாசிச குழுக்கள் இங்கும் இயங்குகின்றன.

ஸ்பெயின் - இங்கு Armagedon, The third



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



Position போன்ற புதிய பாசிசக் குழுக்கள் உட்பட பலவித skinheads குழுக்களும் இயங்குகின்றன. Los Pedriches கிராமம் நாசிகளின் கட்டுப்பாடற்ற கூடும் வதிவிடமாக உள்ளது. சர்வதேசப் பாசிஸ்டுகள் இங்கும் தம் சந்திப்புகளை நிகழ்த்துகின்றனர். பிரான்ஸ், சுவிஸ், ஜெர்மனி, ஒஸ்திரியா, குரோச்சியா, இத்தாலி ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர் கலந்து கொள்கின்றனர். அத்தோடு ஸ்பெயினின் சிறு தீவான Malloriaவில் ஜெர்மானிய skinhead பாசிசக் குழுக்களும் தம் சந்திப்பு இடங்களைக் கொண்டுள்ளதோடு இங்கு ஒரு போலந்து நாட்டவரும் 2 வீடற்ற தெருவில் வாழும் மனிதர்களும் இவர்களால் கொல்லப்பட்டுள்ளனர். யூதர்கள் சிந்தி மற்றும் ரோமா மக்களினங்கட்கு எதிராக இவர்கள் பிரச்சார நடவடிக்கை மற்றும் வன்முறைகளில் ஈடுபட்டுள்ளனர். அண்மையில் மொரோக்கோ நாட்டுத் தொழிலாளர்கட்கு எதிரான கலவரங்களில் இவர்கள் பங்கேற்றுள்ளனர். அங்கு தாம் "வெள்ளை இனத்தின் புரட்சி வாழ்க" என்று முழக்கமிட்டதை ஜெர்மனிய புதிய நாசிகளின் வெளியீடுகள் பெருமையோடு எழுதுகின்றன.

இத்தாலி-வத்திக்கான் - *1939-1958* போப்பாக இருந்த Pius XII மற்றும் ஒஸ்திரியாவின் கத்தோலிக்க பிசப்பான Alois Hudel (கிட்லரோடு மிகவும் நெருக்கமானவன்) உதவியோடு யூத மக்களை அழித்த Auswitz கொலை முகாமின் மனிதப் பரிசோதனையாளன் Dr. Josef Mengel, Treblinka முகாம், கொலையாளி Franz Hudel போன்றோர் தென் அமெரிக்காவுக்குத் தப்பியோடினர்.



பெர்லினின் Gestapo பொறுப்பாளி Heinreich Alois Müller வத்திக்கானில் உள்ள Deutsche Vatican Schule இன் பொறுப்பாளராக *1973*இல் மரணம் அடையும் வரை Franz Alexander Kaminsky என்ற மாற்றுப் பெயரிலே வேலை செய்தான். அதே சமயம் இஸ்ரேலிய மற்றும் கிழக்கு ஜெர்மனிய உளவுப் பிரிவுகள் உலகெங்கும் இவனைக் கடுமையாகத் தேடி வந்தன. முசோலினியின் பேத்தி இத்தாலியில் பாராளுமன்றத் தேர்தலில் நிற்கிறாள். இத்தாலியின் பழைய பாசிஸ்டுகளும் புதிய பாசிசக் குழுக்களும் இணைந்து செயற்படுகின்றன.

பிரிட்டனில் - Kombat-18, Hooligans உட்பட பலவித பாசிசக் குழுக்கள் இயங்குகின்றன. இதில் Kombat-18 கடந்த வருடங்களில் வெளிநாட்டவர்கட்கு எதிரான குண்டுத் தாக்குதல்களை மேற்கொண்டது. பிரான்சில் Jean Marie Lepenஇன் Front National மற்றும் *1995*இல் மொரோக்கோ இளைஞனைக் கொலை செய்த 'Oeuvre Français' போன்ற பாசிச அமைப்புகளும் இயங்குகின்றன. பிரான்சின் கடந்த காலத்திய அரசகளிலும் பாசிசத்தின் வேர்கள் உள்ளன. பிரான்சின் அதிபராயிருந்த மித்தரோன், நாசிகள் பிரான்சைக் கைப்பற்றிய போது உருவாக்கிய உள்ளூர் படையிலே இருந்து பாசிசத்துக்கு தொண்டு செய்தவன் என்பதை அவனின் வாழ்க்கை வரலாற்றை எழுதிய Jean Edern Halliger குறித்துள்ளார். பழைய மந்திரியான Maurice Papon நாசி காலத்தில் *1690* யூதர்களை கொலை முகாமுக்கு அனுப்ப உதவியவன். Jean Marie Lepen அல்ஜீரிய விடுதலைப் போராட்டத்தில் அல்ஜீரிய மக்களைக் கொன்றவன்.

சுவீடனில் - பல பாசிச அமைப்புக்கள் உள்ளன. Wolve Packs, VittArriskt Motstand (VAM) உட்படப் பல பாசிச இயக்கங்கள் இயங்குகின்றன. Blood & Haneuer பிரதானமான பாசிச இயக்கம். இது ஜெர்மனியின் National Revolutioären Zellen பிரிட்டனின் Kombat-*18* உடனும் நெருக்கமுடையது. Blood & Haneuer, Wehrwolf என்பன சுவீடனில் மட்டுமல்ல சகல ஸ்கன்டினேவியன் நாடுகளிலும் உண்டு. *1999* ஒக்டோபர் *12*இல் சுவீடனில் SAC தொழிற்சங்கவாதியும் பாசிச எதிர்ப்பாளருமான Bjön Söderberg அவரது வீட்டில் வைத்துச் சுட்டுக்கொல்லப்பட்டார். *1999* யூன் மாதத்தின் Expo என்ற இடது சாரிப் பத்திரிகையைச் சேர்ந்த Peter Karlson உடன் அவரது *8* வயதுக் குழந்தையும் கார்க்குண்டு மூலம் கொல்லப்பட்டனர். அவரின் துணைவி Katarina Karlssonக்கு தொடர்ந்து கொலைப் பயமுறுத்தல் விடப்பட்டு வருகின்றது. இக் கொலைகளை Wolve Packs என்ற புதிய பாசிச அமைப்பே நடத்தியது. இவர்கள் கொம்யூனிஸ்டுகள் யூதர்களைக் குறிவைத்து இயங்குகின்றனர்.

டென்மார்க்கில் *1999*முதல் பாசிஸ்ட் Rudolf Hess நினைவுநாளைக் கொண்டாடி வருகின்றனர். நோர்வேயில் Oslo நகரில் உள்ள யூத அமைப்பின் தலைவரும் Auschwitz இல் இருந்த தப்பியவருமான Birkeaukai Feinberg *1995*இல் நோர்வே புதிய நாசிகளால் கொல்லப்பட்டார். இவரது கொலையில் பெர்லினில் உள்ள புதிய நாசி இயக்கமான Gruppe-FAP தொடர்பு கொண்டிருந்தது. இதன் உறுப்பினன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

Lars Burmeis கைது செய்யப்பட்டான்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் முதலாளிய மீட்டமைப்பின் பல்வேறு பாசிச மற்றும் skinhead பெருகியுள்ளன. சிலவாக்கியாவில் Jozef Tiso போன்ற நாசிகளுடன் இணைந்து கொம்யூனிஸ்டு களையும் யூதர்களையும் கொலை செய்த பாசிஸ்டு கள் தேசியவீரனாக ஆக்கப்பட்டு Zilina நகரில் நினைவுச்சின்னம் எழுப்ப முயற்சிகள் நடக்கின்றன. பலவித skinhead குழுக்கள் சிந்தி ரோமா மேலான கொலைகளிலும் யூத எதிர்ப்பிலும் கொம்யூனிச எதிர்ப்பிலும் இறக்கி விடப்பட்டுள்ளன. ருமேனியா வில் 3000 யூதமக்களைக் கொல்ல நாசிகளிற்கு உதவிய பாசிஸ்ட் உள்ள Oradeaவில் Antonescu பெயரில் வட ருமேனிய நகரான Oradeaவில் Marschell Antonescu வீதி உருவாக்கப்பட்டுள்ளது. அங்குள்ள ஜெர்மனிய பாசிசக் குழுக்களோடு இணைந்த பாசிச அமைப்புகள் சிந்தி, ரோமா, யூதர்கட்கு எதிராய் மூர்க்கமாய் இயங்குகின்றன. கங்கேரியில் 50 000க்கும் மேற்பட்ட புதிய நாசிகள் skinhead குழுக்கள் உள்ளன. 500 000க்கு மேற்பட்ட சிந்தி ரோமா இனமக்கள் 800 000 யூதர்களின் வாழ்வு நிச்சயமற்ற தன்மைக்கு விடப்பட்டுள்ளது. முன் னாள் யூக்கோஸ்லாவியாவில் குரோச்சியர்கள் மத்தியில் Ustasche போன்றவையும் சேர்பியர்களின் பகுதிகளில் Schetniks போன்ற பாசிசவாதக் குழுக்களும் இயங்குகின்றன. அல்பானியாவில் இரண்டாம் உலக பாசிஸ்டுகளான Balistenகள் உயிர்பெற்றுள்ளனர். லெத்லாந்தில் 1995இல் Volkbewegung für Lettland என்ற பாசிசக் கட்சி 15% வாக்குகளைப் பெற்றது. ஜெர்மனிய புதிய நாசிகளோடு தொடர்புடைய இக் கட்சி ரஸ்யர்கள், யூதர்கள், கொம்யூனிஸ்டுகளை தம் முதல் எதிரி என்று பிரகடனப் படுத்தியது. இதன் தலைவர் Joachin Siegrist ஜெர்மனியில் Axel Springer நிறுவன ஏடான Bildஇல் வேலை செய்தவன். புதிய நாசி நடவடிக்கைகட்காக ஜெர்மனியில் தண்டிக் கப்பட்டவன். இவன் மூர்க்கமான கொம்யூனிச விரோதி "Ich Hasse die kommunistern wie die Pest" (கொம்யூனிஸ்டுகளைத் தொற்றுநோய் போல வெறுக்கிறேன்) என்றான். 16 மார்ச் 2000இல் இங்கு 1000 பழைய SS பாசிஸ்டுகள் ஊர்வலமாய் சென்று செம்படையை எதிர்த்துப் போராடிச் செத்த 50 000 பாசிஸ்டுகட்கு மலர் வைத்து அஞ்சலி செலுத்தினர்.

கிட்லரையும் பாசிசத்தையும் முறியடித்த ரஸ்ய பூமியில் ஒக்டோபர் புரட்சிக்கு முன்பு இருந்த "கறுப்பு நூற்றுவர்" என்ற பாசிசக் குழு மீண்டும் தோன்றி கிட்லரை தம் ஆசானாக அறிவித்துள்ளது. மித வாதப் பாசிஸ்டுகளான விளாடிமிர் சிரினேவ்ஸ்கி போன்றோரும் skinhead குழுக்களும் இயங்கு கின்றனர். யூத எதிர்ப்பும் முஸ்லிம் மக்கள் மேலான எதிர்ப்புகளையும் இவை கொண்டுள்ளன.

அமெரிக்காவில் மெத்தமாய் 809 வலதுசாரி அமைப்புகளில் 2 மில்லியன் உறுப்பினர்கள் உள்ள னர். 60க்கு மேற்பட்ட புதிய நாசி மற்றும் Ku-Kuux-Klan அமைப்புகளில் 40 000க்கும் மேற்பட்ட பாசிஸ்டு கள் உள்ளனர். White Aryan Rassistence (WAR) Ku-Kuux-Klan Blood and Hanouer Skinhead front wolf Ariyan போன்ற இயக்கங்கள் ஆசிய, ஆபிரிக்க மக்கள், யூதர் கலப்பின மக்கள், அமெரிக்கக் கறுப்பின மக்கள் ஆகியோருக்கு எதிராய் செயற்படுகின்றனர். இவை ஜெர்மனியின் புதிய பாசிசக் குழுக்களோடு நெருக்கமாக தொடர்புடையவை. அமெரிக்க நாசியான Lauck Wirck ஐரோப்பாவில் 11 மொழிகளில் பாசிசப் பிரச்சாரங்களை வெளியிடுவதற்குப் பொறுப்பாயி ருந்தமை டென்மார்க்கில் இவன்மீது நடந்த விசரணைகளின்போது தெரிய வந்தது. 1997இல் அமெரிக்க மாநிலமான ஒக்கலகோமாவில் (okolo koma) 168பேர் மரணமடைந்து 500பேருக்கு மேல் காயமடைந்த கறுப்பு மற்றும் ஆசிய மக்கள் வாழ்ந்த மாடித் தொடர்மீதான குண்டுத் தாக்கு தலில் பங்கேற்ற ஜெர்மனிய புதிய நாசியான Andreas ஜெர்மனிய இராணுவமான Bundes wehrஇல் இருந்தவன். White Aryan Rassis tenceக்கும் ஏனைய சில பாசிசக் குழுக்களுக்கும் இராணுவப்பயிற்சியாளனாய் இருந்தவன். 1995இல் அமெரிக்க இராணுவத்திலிருந்த புதிய நாசி Ku-Kuuk-Klan குழுக்கள்பற்றி Neues Week செய்தி வெளியிட்டது. வட Caralinaவில் அமெரிக்க இராணு வத்திலிருந்த பாசிசக் குழு ஒரு கறுப்பின சோடியை சுட்டுக்கொன்றது. ஜெர்மனியில் இருந்த அமெரிக்க இராணுவ முகாம்களுடன் ஜெர்மனியப் பாசிசக் குழுக்களின் தொடர்புகள் நீண்டகாலமாய் அவதா னிக்கப்பட்டுள்ளது. 1998இல் அமெரிக்க Nevada மாநிலத்தில் பாசிசக் குழுக்கள் வெளிநாட்டு மற்றும் கறுப்பின மக்கள் வாழும் இடங்களில் நச்சு வாயுத் தாக்குதலுக்குத் திட்டமிட்டு இருந்தமை கண்டு பிடிக்கப்பட்டது.



இலத்தீன் அமெரிக்க நாடுகளான பிரேசில், ஆஜன்ரீனா, பராகுவே, சிலி போன்ற நாடுகளிலும் பாசிச மற்றும் வெள்ளை இனவாதக் குழுக்கள் இயங்குகின்றன. ஆர்ஜன்ரீனாவில் PNOSP (புதிய சமூக ஒழுங்குக்கான தேசபக்தக் கட்சி) 6000 உறுப்பினர்கள் உண்டு. இதில் ஜெர்மனியில் இருந்து தப்பிச்சென்று அங்கு வாழும் பழைய நாசிகள் முக்கியமாய் உள்ளனர். இவர்கள் அரசு, இராணு வம், இவைகளாடு மிகவும் நெருக்கமும் செல்வாக் கும் உடையவர்கள். PNOSPயின் தலைவன் Ivan Franze யூத எதிர்ப்போடு கறுப்பின மக்கள் செவ்விந்திய மக்களுக்கு எதிரான வெள்ளைப் பாசிசத்தை பகிரங்கப்படுத்துகின்றான்.

சிலியில் ஜெர்மனியில் இருந்து குடியேறிய ஜெர்மனிய வெள்ளை இனவாதிகளாலும் ஜெர்மனி யில் இருந்து தப்பிச் சென்ற பழைய நாசிக் குற்ற வாளிகளாலும் நிர்வகிக்கப்படும் Deutsche Colonia Dignidad பகுதி 1973-1990வரையிலான காலத்தில் கொம்யூனிச எதிர்ப்பு இயக்கத்தின் மையமாய் விளங்கியது. சிலியின் பினாசேய் இராணுவக் கும்ப




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லோடு தொடர்புடைய இவர்கள் கொம்யூனிஸ்டுகளையும் ஏனைய மனிதாபிமான சக்திகளையும் அரசு உளவுத்துறையோடு இணைந்து கொலை செய்தனர்.

இன்று உலகில் பாசிசம் பிரதான அபாயமாய் மீண்டும் வளர்ந்து வருகின்றது. ஐரோப்பாவில் 1994இல் மட்டும் 40க்கு மேற்பட்ட ரோமா இனமக்கள் பாசிஸ்டுகளால் கொலைசெய்யப்பட்டுள்ளதாய் ரோமா அமைப்பு தெரிவிக்கிறது. தென்ஆபிரிக்காவின் கொம்யூனிஸ்ட் கட்சியின் தலைவரும் நீண்ட கால வெள்ளை இனவாத அரசுக்கு எதிரான போராளியுமான Chris Haniயைக் கொன்றவர்களான Derby Lewis, Janusz Walusz இருவரும் புதிய நாசிக் குழுவோடு தொடர்புடையவர்கள். இந்தியாவில் இந்து மதத்தின் பெயரால் பாசிசம் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றுமளவு பலம் கொண்டுள்ளது. இலங்கையில் வீரவிதான, சிங்கள பலவேகய போன்ற பெருந்தேசியவாத வெறியர்கள் வளர்கின்றனர். மறுபுறம் தமிழ்மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் புலிகளினால்



குறுகிய தமிழ்த் தேசிய வெறியாயும் இராணுவ வாத சித்து விளையாட்டுகளிலும் சிதைந்து சீரழிந்து நிற்கிறது. சாதாரண சிங்கள மக்களை எதிரியாக்கி அவர்கள்மேல் பயங்கரவாதத்தை ஏவும் புலிகளை தமிழ்ப் பகுதிகளில் இருந்து முஸ்லிம் மக்களைத் துரத்திய புலிகளை இந்திய இந்துப் பாசிச வெறியனான பால் தக்கரே போன்றோர் 'புலிகளின் உடலில் ஓடுவது இந்து இரத்தம்' எனப் பாராட்டுவதும் சகல சமூக உணர்வு கொண்ட சக்திகளின் கவனத்துக்கு உரியதாகும். இந்தப் போக்குகளை எதிர் கொள்ள வல்ல அரசியல் மார்க்சியத்தால் தயாரிக்கப்படல் வேண்டும். தமிழ் மக்களின் தேசிய எழுச்சியை சிங்கள மக்களின் சமூக விடுதலையோடு ஐக்கியப்படுத்தும் அரசியலை முன்மொழிய வேண்டும்.

26.03.2000, பெர்லின்

**தொடர்புகளுக்கு:**

இணையம்: http://www.geocities.com/pennsakthi
மின்னஞ்சல்: sakthee@england.com
தபால்: SAKTHI
BOKS 99 OPPSAL
0619 OSLO 6
NORWAY.

# சக்தி



புகலிடத்தில் ஒரு சிறு சஞ்சிகையின் உயிர், திறன், காலம் எப்பொழுதும் குறுகியதாகவே இருந் திருக்கின்றது. பல்வேறு தடைகளைத் தாண்டி ஒரு சஞ்சிகையின் வருகை பலவேறு தடைகளைத் தாண்டி ஒரு சஞ்சிகையின் வருகை ஆச்சரிய மயம் கொண்டது. அதிலும் பெண்ணிய சிந்தனைகளைக் கொண்ட ஒரு புகலிட இதழ் எதிர் கொள்ளும் நெருக்கடிகள் ஏராளம். இவை எல்லாவற்றையும் எதிர் கொண்டு சக்தி இரண்டாவது சகாப்தத்தில் தன் காலடியை பதிக்கின்றது.

இவ் இதழில் 'பாலியல் அரசியல்' எனும் புகழ் பெற்ற நூலின் ஆசிரியை கேட் மிலட்டின் 'ஹிட்லரின் ஜேர்மனியில் பெண்களின் நிலை' எனும் கட்டுரை கவனத்திற்குரியது. ஆணாதிக்க அரசியல் கட்டமைப்புக்குள் நடாத்தப்படும் ஓர் அரசு யந்திரம் எவ்வாறு திட்டமிட்டு பெண்களை ஒடுக்குதலுக்கு உள்ளாக்குகிறது என்பதை விபரிக்கின்றது இது. 60 வருடங்களுக்கு முன் ஜேர்மனியச் சூழலைக் கொண்ட இக் கட்டுரை இன்றைய அரசுகளினதும் பொருத்தத்துக் குரியதாக இருப்பதுதான் இன்னும் வேதனைக் குரியது.

மேலும் இவ்விதழில், ஆனந்தராணியின் நீண்ட உரையாடல், நாடகத்துறையில் பெண்கள் எதிர் கொள்ளும் பல்வேறு நெருக்கடிகளை, தனது 25 வருட அனுபவங்களினூடு பேசுவது மிகப் பயனுள்ளது.

இன்னும் பல்வேறு காத்திரமான கட்டுரைகள் நம் வாசிப்புக்கு காத்திருக்கின்றன.

இம்முறையில் இருந்து இணை வலயத்திலும் இடம் பெற்றிருக்கும் சக்தியை அனைவரும் கருத்திற் கொள்வதும் அதனை மேலும் ஆரோக்கியமாக வளர்த்தெடுப்பதும் எங்களின் (முக்கியமாகப் பெண்களின்) இன்றைய அவசியப்பாடாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# நியோன் வெளிச்சமும் நீலக் கனவுகளும்

*வசந்தி - ராஜா*

போதை ஏற்றுகிறது.... நீல வண்ண ஒளிச் சிதறல்கள்.

கவிந்து கொண்டிருக்கும் இருளைக் கிழித்தபடி குபுக் குபுக் என வீசியடிக்கிறது நீல நிற நியோன் ஒளி அருகிலிருக்கும் கட்டிடங்களிலிருந்து.

சின்னமேளம் பார்க்கவென அவசர அவசரமாய்ப் போகையில், கோவில் வந்துவிட்டதை தெரிவிப்பதாய், சிகரங்களிலிருந்து சீறியடிக்கும் அந்த மெர்க்குரி வெளிச்சம் அன்று ஏற்படுத்திய பரவசத்திற்கு இம்மியளவும் குறைந்து விடவில்லை இந்தப் பரவசம்....

யன்னல் திரைச்சீலையை இழுத்துவிடப் போனபோது எதேச்சையாய் தெரிந்த வெண்ணிலவிலிருந்து சிந்திக் கொண்டிருந்த அந்தத் தண்மையான ஒளி ஏற்படுத்திய போதை....

இதுதான் இந்தக் கவிஞர்களெல்லாம் போட்டி போட்டுக் கொண்டு கவிதையாய் எழுதிக் குவிக்கிறார்களோ நிலவைப் பற்றி....

இரண்டுமே நீல வண்ணங்கள் தான்.... ஒன்று இயற்கையானது. ஒன்று செயற்கையாய் ஆக்கப் பட்டது.

இரண்டும் ஏற்படுத்துவது ஒரே போதையைத்தான்.... ஒன்றைக் காதல் என்கிறார்கள். ஒன்றைக் காமம் என்கிறார்கள். அப்போ எனக்கு ஏற்படுவது காதலா? காமமா? இரண்டும் வெறும் இரசாயன மாற்றங்களல்லவா!

மனதுக்குப் பிடித்தவன் தோள் உரசி, மல்லிகை மணம் கமழ, மணற்பரப்பில் கவிதை சொல்கையில் வெள்ளை மணற்பரப்பை, வெள்ளிப் பொடியாக்கி மாயம் புரியும் வெண்ணிலா காதல் போதை தருகிறது.

வெட்டி வெட்டி அதிருகிற இசைக் கருவிகளின் சப்தப் பிரதேசத்தில் பீய்ச்சியடிக்கும் ஒளி பரவும் இருள் மண்டபத்தில் மனதுக்குப் பிடித்தவன் தோள் தழுவி ஆவேச ஆடல் புரிகையில் பிரவகிக்கும் போதை காமம் ஆகின்றது.

காதல், காமம் இந்தப் பெயர்களினூடாக உணர்வுகளுக்கு வர்ணம் பூசியது யார்? ஏன்?

எனக்கு என்னவாயிற்று? எதற்காக இத்தனை கேள்விகள்? விவாதங்கள்?

நியோன் விளக்குகள் விட்டு விட்டு எரிகின்றன. என்னுள் ஏதோ மாற்றம் நிகழ்கிறது. காமம்தான் கொச்சைதான். என்னுள் wild ஆன பக்கம் ஒன்று உள்ளே இருக்கிறது. ஏற்றுக்கொண்டு விட்டுவிட வேண்டியதுதானே.

எதற்காக பெயர் வைத்தவர் யார்.... அது இது என்று.... இல்லாத ஒருவர்மேல் துவேஷம் வளர்த்துக் கொண்டு....

பனிக்காலத்தின் தொடக்கம். ஆறு மணிக்கே இருட்டிவிட்டது. வழமையாகப் பிரயாணம் செய்யும் நேரம்தான். இருட்டு அச்சுறுத்துகிறது.

அச்சம் இருளுடன் இணைந்து வரும் உணர்வா?

மனிதர்களுக்கே பொதுவான உணர்வா?

பெண்களுக்கு மட்டுமா?

அல்லது

எங்கள் பெண்களுக்கு மட்டுமா?

*இருட்ட முதல் வந்துவிடு.*

*இருட்டு கவனம்.*

*இருட்டுக்கை போகாதை.*

சொல்லிச் சொல்லிப் பயிற்றுவிக்கப்பட்டதா? ஆண்களின் இன்னொரு திட்டமிட்ட அச்சுறுத்தலா?

இருட்டு போதை தரும். கணவனுடன் மட்டுமேயான போதை, வெளியில் அந்நியருடன் வந்து விடக்கூடாதே என்பதாய் அவர்களால் தடுக்கப்பட்ட இன்னுமொன்றா?

பரவசப்பட்டுப் போன மனசு. உடனே பயப்படுவது இந்த அச்சுறுத்தல்களின் விளைவா?

மறுபடியும் வேதாளம்....

நிறுத்திவிடும் முனைப்பு.... போதும் உள்மன விவாதங்கள்.

எனக்குத்தான் எங்கு போறாய்? எப்போ வந்தாய்? கேள்விகள் கேட்க எவருமில்லையே? பின் ஏன் இந்த மன உளைச்சல்கள்? இருபத்தைந்து வருஷ போதனைகள்... சும்மாவா?

கையில் பியர் கேசுடன் சிரித்தபடி றோட்டைக் கடந்து போகிறது ஒரு சோடி. பெண் மனநலங் குன்றியதான தோற்றத்துடன்.... ஆண் போதைப்பொருளுக்கு அடிமையானவன்போல. எங்கே விழுந்து தொலைக்கப் போகிறானோ எனும் எண்ணத்தை ஏற்படுத்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யவனாய்....

விசித்திரமான சோடி... இவர்கள் இனிப் போய் என்ன செய்வார்கள்.... இவர்கள் குடும்பம் எப்படி இருக்கும். மனிதர்களை எடை போட முயலும் சின்னத்தனத்துக்காக வெட்கப்பட்டுக் கொள்கிறேன்.

ஆனாலும் அந்த மனநலம் பாதிக்கப்பட்ட பெண்ணுக்குக் கூட மறுக்கப்படாத ஒன்று எனக்கு மறுக்கப்பட்டுள்ளமை ஆற்றாமையை ஏற்படுத்துகிறது.

யார் மறுத்தார்கள்? எனக்குத் தான் இங்கு யாருமில்லையே? ஒருவரும் இல்லாவிட்டால் சரியா? என்னுள் ஊடுருவிச் செலுத்தப்பட்டிருக்கிறதே எம் கலாச்சாரக் கலவைகள் உள்ளேயிருந்து எப்போதும் அச்சுறுத்தியபடிக்கு.

தன்னிரக்கம் கொள்ளக் கூடாது என்பதில் எவ்வளவு பிடிவாதமாக இருந்தாலும் சமயங்களில் அது வந்து விடத்தான் செய்கிறது.

மேலும் யோசித்து மூளையைக் குழப்பிக்கொள்ள வேண்டாம் என்பதாய் பஸ் திரும்புமிடம் நோக்கிப் பார்வையைச் செலுத்துகிறேன்.

பஸ்ஸைக் காணவில்லை.

சர் சர் என்று கார்கள்தான் வெளிச்சத்தை வீசியடித்துக் கொண்டு போகின்றன. முடக்கில் திரும்புகையில் முகத்தில் அடிக்கும் வெளிச்சம் என்னைக் கடந்து போகும்வரை கண்களை மூடிக் கொள்ளச் செய்கிறது.

எதிர்ப்புறமாய்த் திரும்பி நின்றால் தப்பிக்கலாம்தான்.

காரினுள் இருப்பது ஆணா பெண்ணா என்பது கூடத் தெரியாது. ஏனோ திரும்பாமலே நிற்கிறேன். அவர்கள் என்னை நன்றாகப் பார்க்கட்டும். யாரையோ எதிர்ப்பதாய் ஒருவித திருப்தி.

யாரை எதிர்க்கிறேன்?

சமூகத்தையா?

உடலை அதன் அழகை காட்டாதே காட்டாதே என்று மூடச் சொல்லும் சமூகத்தையா?

என் உருவத்தை காரில் போற எவனோ பார்த்துவிட்டால் சமூகத்தை பழி வாங்கியதாகி விடுமா?

எனது உடல் அது பற்றிய பிரக்ஞையின்றி நிற்கத் தோன்றுகிறது. செய்தேன். அது பற்றிய விசாரம் எல்லாம் இப்போ ஏன்?

இவன்களில் யாராவது ஒருத்தன் காரை நிறுத்தி என்னைத் தூக்கிச் செல்ல மாட்டானா?

இதுவும் ஒரு சமூக எதிர்ப்பா?

இல்லை இது ஆற்றாமை. என்னால் முடியாதது, தன்னால் நடந்துவிட்டால் நல்லதுதானே.

இந்தக் கலாச்சாரத் தளைகளுக்குள் சிக்கி, பாவம் உடல் அது என்ன செய்யும். அது தன் இரசாயன மாற்றங்களை நிகழ்த்திக் கொண்டு எத்தனை காலம்தான் தன்னை ஏமாற்றிக் கொள்ளும்?

துணிச்சலற்ற மனம் மந்திர மாயங்களை வேண்டி நிற்கிறது.

அதுதான் இந்தப் பெண்கள் சாமிமார்களிடம் போகும் இரகசியமோ?

கலாச்சாரக் கட்டுக்களை அவிழ்க்க முடியாத உயிர்கள் தானாக ஏதாவது நடக்கட்டும் என்று எதிர்பார்த்து நிற்கின்றனவோ?

அப்போ சமயத்தின் பேரில் சாமிமாரும் சேவைதான் செய்கிறார்கள் போல.

இல்லாத உறவுக்கு ஏங்கும் பெண்கள் ஒரு பக்கம்!

விரும்பாத் துணையுடன் முயங்க முடியாப் பெண்கள் ஒருபுறம்!

அப்போ திருப்தியாய் இருப்பவர்கள் எத்தனை வீதமோ?

திரும்பவும் வேதாளம் முருங்கை மரத்தில் போதும்!

பாலுறவு மறுக்கப்பட்ட, அதற்கு ஏங்கும் பெண் பற்றிய கதை பற்றி சாருநிவேதிதா கேலி செய்து விமர்சனம் தந்திருந்தது ஞாபகத்தில் வர....

எதற்காக அப்படிக் கேலி செய்தார்? புலம்பெயர்ந்த நாட்டில் இப்பிடியெல்லாம் இருப்பார்களா என்று எண்ணினாரா? பாலுறவு பற்றிய கெடுபிடிகள் அவருக்குப் புரியாது இருந்ததா?

அவர் ஆண்.... சிலவேளை புரியாமற் போயிருக்கும். மரபுகள் வரையறைகள் மீறுவது அவருக்கு பெரிய விஷயமாய்த் தெரிந்திருக்காது.

புறத்தளைகள் இல்லாத நாட்டில் அகத்தளைகளுக்குள் அகப்பட்டுக்கொண்டு மறுகும் பெண்கள்பற்றி.... அவிழ்க்க முடியாத அத்தளைகள் பற்றி.... அவர்களுக்கு எங்கே புரியப் போகின்றது.

ஒன்று மறுக்கப்படின் அதுவே விஸ்வரூபம் எடுத்து மனதை ஆக்கிரமித்துக் கொள்ளும் என்கிறது மனோதத்துவம்.

எனக்கு மறுக்கப்பட்டுள்ளது.... எனக்கு மட்டுமா?

இன்னும் எத்தனை பெண்களோ?

ஆண்களும் இதில் அடங்குவார்களா?

இருக்காது.

எங்கள் கலாச்சாரத்தில் ஆண்களுக்கு எதுவும் மறுக்கப்பட்டதில்லையே?

பெண்களால் இந்தத் தளைகளை அறுத்து வெளி வர இயலாதா?

ஏன் முடியாது? ஆனால் ஒவ்வொன்றாக அறுத்து வர மனம் களைத்துப் போகும். உடல் ஓய்ந்துவிடும். அதைவிடக் கட்டுகளுடன் கிடந்து மாய்ந்து விடத் தோன்றும்.

சிந்திக்க ஆரம்பித்தால் முடியும்தானே?

ஆனால் கட்டுக்களை அறுத்த பின் அதே கலாச்சாரத்துள் வாழுதல் சாத்தியமில்லை. வேறு கலாச்சாரத்துடன் இணைந்து விடலாம். அதுவும் அத்தனை எளிதல்லவே.

கிளைவிட்டுப் பரவிக் கிடக்கும் கலாச்சார வேர்களை அறுத்தெறிந்து விட்டுப்போவது அத்தனை சுலபமில்லை.

அப்போ கலாச்சாரத்துக்குக் கட்டுப்பட்டு வாழ்க்கையையே சுமையாக்கிக் கொள்வதா?

சமூகம் சில வரையறைகள் போட்டு வைத்திருக்கிறது. அதற்குள் அடங்குமாப்போல பாவ்லா காட்டிக்கொண்டு உள்ளேயே மீறிக் கொண்டிருந்தாலும் கண்டும் காணாமலும் விட்டுவிடும்.

உன் எல்லைகளுக்குள்ளும் அடங்க எனக்குப் பிடிக்கவில்லை. என்ன செய்யப் போகிறாய்? என்ப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தாய் சவால் விட்டு விட்டுச் செல்லும் பெண்களை திரும்ப ஒட்டவிடாது.

அதுதான் எனக்கும் நிகழ்ந்தது.

24வயதில் புதிய நாட்டிற்கு வருகை....

ஒரு வருடத்திற்குள் நாடு நன்கு பிடிபட்டுப்போனது.

கேட்க எவருமில்லை என்னும் துணிவு.

படிக்கப்போன இடத்தில் காதல்.

முதற்காதலை சமூகம் எப்போதும் ஆராதிக்கவே செய்கிறது.

Made for each other என்று கொண்டாடியது.

பெருமிதம். கட்டுமீறித் திரிய வைத்தது.

முணுமுணுத்தன உறவுகள்.

அம்மாவிடம் இருந்து சம்மதக் கடிதம் வரவழைத்து உறவுகள் வாயை அடக்கமுடிந்தது.

"கலியாணப் பேச்சு இப்போ வேண்டாமே. அக்கா எனும் பொறுப்பிருக்கு பொறுமை வேண்டும்"என்றார்.

"ஆகட்டும்"என்றேன்.

ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டாயிற்று. எல்லோரின் சம்மதமும் பெற்றாயிற்று. எதற்காக இருவீடுகளில் இரு வாடகை கொடுத்துக்கொண்டு...." என்றார்.

"சரி" என்றேன்.

உறவுகளின் முணுமுணுப்பு மறுபடியும்.

உதாசீனம் செய்தேன்.

அங்குதான் சமூக வரையறை மீறப்பட்டது.

காதலர்களாய் வேறு கூரைகளின் கீழ் இருந்து எதுவாயினும் செய் என்பதாய் அங்கீகாரம் தந்த சமூகம் ஒரே கூரையின் கீழான வாழ்க்கையை அங்கீகரிக்கவில்லை.

திருமணம்தான் செய்து கொள்ளப் போகிறோமே. இவர்கள்பற்றி என்ன? என்று அசட்டை செய்தது தவறாயிற்று.

திருமணம் நடந்திருந்தால் பிரச்சனையே இல்லை.

ஆனால் அது நடக்க வில்லையே.

ஒரு வருட வாழ்க்கை.

Bank balanceஉம் பூச்சியமாயிற்று.

அக்காவிற்கு திருமணத்திற்கு பணம் தேவை. சீதனத்துடன் என்னைக் கேட்டு வருகின்றார்கள்.

இனாம் வாங்கி திருமணம் செய்துகொண்டு city மாறிப் போய்விட்டான்/ர்?

உண்மையிலேயே ஏமாற்றும் எண்ணத்துடன் பழகினானா? அல்லது சந்தர்ப்பம் சூழ்நிலை அவனை மாற்றியதா?

ஆராய முற்படவில்லை.

நல்லவனானால் அக்கா இருப்பது முதலிலேயே தெரிந்திருக்கும்தானே.

அவன்மீதும் கோபம் இல்லை. என்பால் கழிவிரக்கமும் ஏற்பட வில்லை.

அடப் போடா! உனக்குக் குடுத்து வைத்தது அவ்வளவு தான் என சமாதானப்பட முடிந்தது.

நல்லவேளை city மாறினான். கண் முன்னால் பிள்ளையும் பெற்றுக் குடித்தனம் நடத்திக் கொண்டிருந்தால்....

கஷ்டத்திலும் ஒரு அதிர்ஷ்டம்.

குரலினிமையும் உடலழகும் தொலைக்காட்சி நிலைய மொன்றில் வேலை கிடைக்க ஏதுவாயிற்று.

புகழ், பெருமை, பணம் வந்தது. ரசிகர் கூட்டம் துரத்தியது.

ஆனாலும் என்ன?

சமூகம் பார்க்கும் பார்வை கூனிக் குறுக வைத்தது.

திருமணமாகி கைவிடப்பட்ட பெண்கள், விதவைகளுக்குக் கிடைக்கும் அனுதாபம் எனக்குக் கிட்டவில்லை.

ஓடிப்போனவள், அடங்காதவள் என்பதாய்ப் பார்த்தார்கள்.

சமூகம் என்னைப் பார்க்கும் கண்ணில் சுண்ணாம்பு பூசிக் கொண்டிருந்தது. வேலை செய்யுமிடத்தில் வீட்டு அயலில் நிறைய ஆண்களுடன் பழக நேரிட்டது.

சுதந்திர உணர்வுடன் பழகும் சூழ்நிலைகளில் சமயங்களில் தொடுதல்கூட சாத்தியமாயிருக்கும். கவிதை பரிமாற்றம், நகைச்சுவை, கேலி, கிண்டல் என சகஜமாகப் பழக முடிந்தது.

சமயங்களில் எதிர்ப்பாலாரால் கண்களை ஊடுருவி பாய வைக்கும் இரசாயனத் தாக்கங்கள் எதையோ புலப்படுத்துவதாய் இருக்கும்.

புரியாதது போலப் பாவனை செய்துகொண்டாலும் அதிலிருந்து வரும் pleasureஐ அனுபவிக்க முயன்றாலும் அதன்மூலம் பெண்ணை எடைபோட முயலும் அவன்கள் ஆணாதிக்க நோக்கம் பயமூட்டும்.

தாங்களும் சேர்ந்து அனுபவித்துவிட்டு ஒரு பால்மீது மட்டும் களங்கம் சுமத்தும் அவலம். பாலுணர்வையே வெறுக்க வைக்கும் இவர்களுடன் சேர்ந்து வாழுதல் தவிர்க்க முடியாதது.

இரு பாலாருக்குமே ஒருவர் தயவு மற்றவர்க்குத் தேவை.

இங்குதான் பெண்களுக்குத் தந்திரம் தேவைப்படுகிறது.

சாமர்த்தியசாலிப் பெண்கள் நிறையத் தந்திரோபாயங்களைக் கைக்கொள்வர்.

அண்ணாபோல தம்பிபோல நண்பன்போல என்பதாய் சில கேடயங்களைப் பிடித்துக் கொண்டே தொட்டுப் பழகியும் கட்டிப் பிடித்தும்கூட கொச்சைப் படாமல் தப்பித்துக் கொள்வார்கள்.

தற்செயல் நிகழ்வுகள் போல பாசாங்கு புரிந்து ஆண்மகனைச் சீண்டி விட்டு அசடு வழிவதை வேடிக்கை பார்ப்பார்கள்.

இங்கு ஆணினால் அவளைக் கொச்சைப்படுத்த இயலாது.

இங்கு பெண் ஆட்டுவிக்கிறாள். இதற்கு மிகுந்த சாமர்த்தியம் தேவை.

உணர்வுகளைக் கட்டுக்குள் வைக்க முடியாது ஆணிடம் அடைக்கலமாகிவிடும் பெண்தான் அவனது ஆக்கிரமிப்பின் பின்னர் கொச்சைப் படுத்தப்படுகிறாள். சுயகௌரவத்தை இழந்து போகிறாள்.

கத்தி விளிம்பில் நடப்பது போன்ற இந்தச் செயலை இப்போதெல்லாம் பெண்கள் வெகு இலகுவாகக் கையாளப் பழகி விட்டார்கள்.

திருமணமான பெண்கள், திருமணமாகாத பெண்கள், பாட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சாலை மாணவிகள், boy friend ஏற்கனவே உள்ள பெண்கள் எல்லாம் ஆண்களுடன் வெகு இயல்பாகப் பழகுகின்றார்கள். உல்லாசமாகப் பொழுதைக் களிக்கின்றார்கள். இவர்களுக் குத் தங்கள் வரையறைகள் எல்லைகள் எல்லாம் தெரிந்தி ருக்கின்றது.

என் விஷயத்தில்.... பிரிந்து வாழ்பவள் எனும் பட்டம்.... சமூகத் தில் வாழ மேலதிக கவனம் தேவைப்படுகிறது.

இவள் பசித்திருப்பவள் என்ப தாயும் இலகுவாய்க் கிடைப்பாள் என்பதாயும் எதிராளியின் பார்வை கொஞ்சம் அழுத்தமாகவே பதிந் திருக்கும். இவளது மெல்ல2றிய ப'ங(2றுவீனமும் பயன்படுத்தப்பட் டு விடும்.

எனக்கு ஒரு துணை தேவைப் படுகிறது. அரிதாரம் பூசிய முகங் களுக்கிடையில் பொருத்தமாய் ஒருவனை அடையாளம் காண்பது அத்தனை சுலபமாயில்லை.

இன்னொரு தடவை சுட்டுக் கொள்ள மனதிலும் உடலிலும் திராணியில்லை.

சூதுவாதில்லாத பருவத்தில் இயல்பாக வந்த காதல் காரியத் துடன் தேடியபோது கைகூடுவதா யில்லை.

ஆனாலும் ஒவ்வொரு முக மூடியையும் கழற்றி சோதனை போடுவது அத்தியாவசியமாகிப் போயிற்று.

என்றோ ஒருநாள் எனக்கான அந்த ஒருவனை அடையாளம் காண்பேன் என்பதான எதிர்பார்ப்பு டன் நாட்கள் நகருகின்றன.

வேலை நேரத்தில் பரபரப்பான நாளில் சுலபமாகக் கடந்து விடும் பொழுது தனிமையில் தத்த ளிக்கச் செய்கிறது.

மனசு விவஸ்தை கெட்டு அலைகிறது.

தறி கெட்டுப்பாயும் மனதை ஒருநிலைப்படுத்தும் நோக்குடன் கைப்பையைத் திறந்து புத்தக மொன்றை எடுத்து அந்த வெளிச் சத்தில் வாசிக்க முனைகிறேன்.

வெளிச்சத்தை வாரியிறைத் துக்கொண்டு வளைந்து திரும்பு கிறது பஸ்....

ஒரு மணித்தியாலப் பிரயா ணம்.... அதனால் வரும் களை.... சாப்பிட்ட பின் தொலைக்காட்சி பார்த்தல்.... அதனால் வரும் களை.... இவையெல்லாம் உட லையும் மனதையும் சோர்வ டையச் செய்து களைக்கச் செய்து விரைவில் உறக்கத் திற்குக் கொண்டு போய்விடும். ஒருவாறு இன்றைய நாள் கழிந்துவிடும். நாளை... அதை நாளை பார்த்துக் கொள்ளலாம்.... எண்ணியபடி bus tokenக்காக கைப்பையுள் கையை விடுகி றேன். ●

---

# சமூக அசைவியக்கத்திற்கான விமர்சன அரங்கு

**சனி (05.08.00)**

தேசி இனப் பிரச்சினைனின் எதிர்காலம் அழகலிங்கம் (ஜேர்மனி)
லத்தீன் அமெரிக்க நாடுகளின் விடுதலை இக்கங்கள்
( முனா ராஜேந்திரன் (இங்கிலாந்து)
மார்க்சிப் பார்வைில் பெண்ணிம்
உமா (ஜேர்மனி), நிருபா (ஜேர்மனி)
இலங்கைின் இடதுசாரி இக்கங்களின் வரலாறு
பரராஜசிங்கம் (ஜேர்மனி)

**ஞாயிறு (06.08.00)**

இலங்கையும் உலகமமாக்கலும்
றஞ்சித் (ஜேர்மனி)
கிழக்கைரோப்பி வீழ்ச்சியும் அதன் பின்பான உலக ஒழுங்கும்
தமிழரசன் (ஜேர்மனி)
பெரிாரிம் - ஒரு மறு வாசிப்பிற்கான ஒத்திகை
அசோக் (பிரான்ஸ்)

<u>விவாதத்திற்கு எடுக்கப்படும் ஏனைய கட்டுரைகள்</u>


தலித்திமும் முதலாளிமும் - எஸ்.வி.ராஜதுரை (இந்திா)
பின்நவீனத்துவம் ஒரு பார்வை - கா. சே. பாலசுப்பிரமணிம் (உறவு சஞ்சிகை இந்திா)
இந்தி சமுதா விடுதலைில் மார்க்சித்தின் எதிர்காலம் - சா.சி. கண்ணன்
இலங்கை இடதுசாரி இக்கங்களின் நிகழ்ச்சி நிரலைத் தீர்மானிக்கும் சக்திகளும்
சித்தாந்தங்களும் - சரவணன் (நோர்வே)

காலம்: 05.08.2000 - 06.08.2000
இடம்: Adalbert str. 06
Berlin
தொடர்புகளுக்கு: Katuththatanku
Adalbert str. 06
Berlin



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எழுத்து இலக்கியம், பெண்கள் பெயரில் ஆண்கள், பெண்களுக்காக எழுதும் ஆண்கள், படைப்பாளுமையற்று அதை ஸ்வீகரிக்கும் பெண்கள், பெண்கள் எழுத்துக்களைப்பற்றி ஆண்கள் என்று இளையவி சின்னவனும் பிரதீபாவும் சென்ற 'உயிர்நிழலி'ல் நிறைய விவாதத்திற்குரிய விஷயங்களை முன்வைத்திருக்கிறார்கள். 'சக்தி'யில் என் எழுத்துக்கள் பிரசுரிக்கப்படுவது சம்பந்தமாக சில ஆண் எழுத்தாளர்கள் கோபம் கொண்டிருக்கிறார்கள். பெண் பெயரில் எழுதத் தொடங்கி கொஞ்ச நாட்களிலேயே தனது பெயரை மாற்றிக் கொண்டு ஆண் பெயரை பிரகடனப்படுத்திக் கொண்டு பெண்நிலைவாதத்துக்கு கைமாறு செய்து விட்டதாக நினைப்பவர்களும் இருக்கிறார்கள். அது வாழ்வையும் வரலாற்றையும் கோட்பாட்டையும் ஆண் - பெண் உறவையும் எவ்வாறு அவர்கள் நோக்குகிறார்கள் என்பதைப் பொறுத்தது. அது அவரவர் தேர்வு சார்ந்தது என்பதால் எனக்கேதும் அபிப்பிராயம் இல்லை. என்னளவில் எக்காரணம் கொண்டும் என் பெயரை மாற்றிக் கொள்வதில்லை என்பதில் ரொம்பவும் உறுதியாக இருக்கிறேன். இப்போது என் பெயரை மாற்றிக் கொண்டால் என்னை நேசிக்கும் நண்பர்களெல்லாம் வருத்தப்படுவது மட்டுமல்ல கோபமாக ஏசவும் செய்வார்கள் என்பதுவும் அதிலொரு காரணம்.

எண்பதுகளில் தமிழகத்தில் மானுட மகத்துவம் சார்ந்து நாங்கள் யாரோ ஒருவருக்கு புத்திரனாக இருக்க நினைத்தோம். ரங்கராஜன் அக்கினி புத்திரன் ஆனார். ஸாகுல் அமீது மனுஷ்ய புத்திரன் ஆனார். கோவை 'வானம்பாடி' கவிதையிதழின் பாதிப்பில் நான் யமுனா புத்திரன் என்ற பெயர் சூட்டிக் கொண்டேன். ஞானி, புவியரசு, ரவீந்திரன், சிற்பி எல்லோருடனும் நெருங்கிப் பழகக் கூடியதாக இருந்தது. அப்போது என்னளவில் இப்பெயர் குறித்து சந்தோஷப்பட்டுக் கொள்ளக்கூடிய நிறைய தனிப்பட்ட காரணங்களும் இருந்தது. நான் நேசித்த அல்லது என்னை நேசித்த பெண்ணின் பெயர்; இந்திய ஜீவ நதிகளில் ஒன்றின் பெயர்; தி. ஜானகிராமனின் மோகமுள் நாயகியும் இசையும் ஆகின பெண்ணின் பெயர். எல்லாமும் இந்த ஒற்றைச் சொல்லில் கரைவதாகக் கருதியபோது நான் பரவசம் கொண்டேன். யமுனா புத்திரன் கவிதைகள் 'தாமரை'யிலும் 'செம்மலரி'லும் 'மனிதனி'லும் அன்று வந்து கொண்டிருந்த அநேகமான சிவப்புப் பத்திரிகையிலும் வெளியானது. மனுஷ்யபுத்திரனும் இக்காலங்களிலொன்றில்தான் எனக்கு நண்பரானார். அப்புறமாக பிறமொழிக் கவிதைகளை நிறையப் படித்தபோது எனக்கு தமிழில் கவிதை எழுதுவது பிடிக்காமல் போனது. எவருக்கும் சீடனாகவோ புத்திரனாகவோ இருக்கவும் எனக்குப் பிடிக்காமல் போனது. யமுனாபுத்திரன் என கவிதைகள் எழுதிக் கொண்டிருந்த காலத்திலும்கூட யமுனா ராஜேந்திரன் என்கிற பெயரில்தான் நான் அரசியல் கட்டுரைகளும் 'மார்க்சிய ஒளி' எனும் கம்யூனிஸ்ட் கட்சியின் சித்தாந்த இதழுக்கு மொழிபெயர்ப்புக்களும் செய்து வந்தேன். அந்த நாட்களில் தான் பாப்லோ நெருடாவின் கான்ட்டோ ஜெனரலில் இருந்து 'நான் பழி வாங்க விரும்புகிறேன்'(I demand punishment) என்கிற மிக முக்கியமான எனது மொழிபெயர்ப்பு சமகாலத்தில் 'செம்மலரி'லும் 'தாமரை'யிலும் வெளியாகியது. எனது நெருங்கிய சிநேகிதர்களும் தோழர்களும் 'யமுனா' என்று அன்புடன் அழைத்தபோது அந்த விளித்தலில் இருந்த நெருக்கமும் வாஞ்சையும் எனக்கு சந்தோஷமாக இருந்தது. சிறு பத்திரிக்கை சூழலில் நான் ஆண் என்று அறிவதில் எவருக்கும் சிரமமிருக்கவில்லை.

இத்தனை நாள் இல்லாத பிரச்சினை இப்போது புதிதாக நிறைய வீராவேசமான ஆண் பெண்நிலைவாதிகள் உருவாகிவிட்டார்கள். சகல விஷயங்களையும் பால்ரீதியில் பார்ப்பதென்பதும் கோட்பாடாக உருவாகிய சூழலில் நாம் வாழ்கிறோம். ஆணோ பெண்ணோ பால் கடந்தவரோ விளிம்புநிலை மனிதரோ அவரவர் தாம், அவரவர் அனுபவத்தை உக்கிரத்துடன் எழுத முடியும் என்பதில் மாறுபாட்டுக்கிடமில்லை. ஆனால் தேடலும் பிற மனிதர் வலியும் உணர்ந்து கொள்ள முடிகிற ஜீவி இவைகளைக் கடந்து போக முடியும் என்பதை உறுதியாக நான் நம்புகிறேன். ஆகவேதான் என்னில் மரியாதை கொள்கிற பெண் நண்பர்கள் எனது எழுத்துக்களுக்காகவும் என்னில் அனுபவம் கொள்ளும் கடந்து செல்லும் தன்மைக்காகவும் தான் மரியாதை கொள்கிறார்கள் என்பதை நான் உணர்ந்திருக்கிறேன். பிரதீபா, எழுத்துக்கள் அது ஆணினுடையதோ பெண்ணினுடையதோ எப்போதுமே சரீரம் சார்ந்தும் வரலாற்றுரீதியிலும் சூழலைக் கணக்கில் எடுத்துக் கொண்டும் நோக்கப்பட வேண்டும் என நான் உணர்ந்திருக்கிறேன். மனம் புண்பட எழுதுவதும் கடுமையாக எழுதுவதும் எளிது. எழுதுபவரையும் வாசகரையும் உடன் மனிதர்களாக நினைத்து அணுகும் போது அவர்களது சிந்திக்கும் திறனை அடுத்த கட்டத்துக்கு மறுபரிசீலனையுடன் நகர்த்தமுடியும் என்று நான்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நம்புகிறேன். குறிப்பிட்ட 'புது உலகம் எமை நோக்கி'விமர்சனத்தில் அந்தத் தொகுப்பிலான எழுத்துக்களில் எவை படைப்புத் தன்மை கொண்டவை என்பதை மூன்று கட்டங்களாக நகர்ந்து சில எழுத்துக்களை பின்விட்டுப் போய் சுட்டிக் காட்டியிருக்கிறேன். எனது ஆண் எழுத்தாளர்கள் தொடர்பான கட்டுரைகளுடன் ஒப்பிட்டு இதை நீங்கள் நிறுவ முடியுமானால் நான் கற்றுக் கொள்ளமுடியும் என நினைக்கிறேன். படைப்பும் படைப்புத் தன்மையும் சார்ந்து இதை மீறியும் நீங்கள் பார்க்கமுடியும் எனில் உங்கள் படைப்புக்கள் பாய்ச்சல் நிகழ்த்தும் என்று நம்புகிறேன்.

இதுவன்றி எனக்கேற்பட்ட ஆண்-பெண் பெயர் தொடர்பான ஒரு அனுபவத்தை இங்கு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். அமெரிக்காவிலும் கனடாவிலும் கல்வி பயில்பவர்கள் இலக்கியத்தில் ஆர்வமுள்ளவர்கள் அறிந்திருக்கக் கூடிய ஒரு ஆங்கில இலக்கிய வலைத்தளம் தெற்காசிய இலக்கிய விவாத வலைத்தளம் (www.sasialit.com). தெற்காசிய இலக்கியம் பற்றி அறிந்து கொள்ளவும் விவாதங்களை அவதானிக்கவும் ஒரு பார்வையாளன் எனும் அளவில் அந்த வலைத்தளத்திற்குள் நான் பிரவேசித்தேன். விவாதங்களைக் கண்ணுற்ற போது எனக்கு சில அபிப்ராயங்களும் சொல்லத் தோன்றியது. தமிழில் நன்கு அறியப்பட்ட சிறுகதையாசிரியர் ரமணீதரனும் கவிஞர் சித்தார்த்த சேகுவாராவும் ஆன கந்தையா ரமணீதரனும் அதில் ஒரு சக விவாதக்காரராகப் பங்கேற்றார். இந்திய சினிமா, ஸியாம் செல்வதுரை, ஒன்டாஜியின் நாவல்கள் ஈழவிடுதலை, அருந்ததி ராய், எழுத்தாளனின் மரணம் போன்றன பற்றிய சுவாரஸ்யமான விவாதங்கள் சில அதில் வந்தன. 99 சதவீதம் பெண் பங்கேற்பாளர்களே நிறைந்த அந்த வலைத்தளத்தில் எனது பெயர் அவர்களுக்கு மிகப் பெரிய பிரச்சினை ஆகியது. எனது அபிப்ராயங்கள் பொருட்படுத்தக் கூடியதாக இருந்ததால் வலைத்தளத்திற்கு வெளியில் எனக்கு தனிப்பட்ட முறையில் எனது பால் அடையாளம் கேட்டு குறுகுறுப்பில் (just curious to know) கடிதங்கள் வந்தன. தனித்தனியே அவர்களுக்கு விளக்கிக் கொண்டிருந்தேன். ஒரு கட்டத்தில் அந்த வலைத்தளத்திலிருந்து வெளியேறி விடலாம் போலக் கோபம் வந்தது. அதேவேளை மேற்கத்திய நாடுகளில் வளர்ந்திருக்கும் பால் சார்ந்த அதி பிரக்ஞை சார்ந்த பிரச்சினை இது என்பதையும் நான் உடனே உணர்ந்து கொண்டேன். பெண்களுக்கிடையிலான முன் உணர்வும் தோழமையும்கூட இதற்கான காரணங்களில் ஒன்று என்பதையும் அறிந்து கொண்டேன். பிற்பாடு எனக்கு நிறைய பெண் நண்பர்கள் அதன் மூலம் கிடைத்தார்கள். எனது அபிப்ராயங்கள் மட்டுமே இறுதியில் அங்கு பொருட்படுத்தப்படுவதாயிருந்த சந்தோஷமான நிலைக்கு நான் வந்தேன். நீண்ட நாட்கள் தமிழ் வாழ்வோடு தொடர்பற்றிருந்த ஆனால் தமிழ் இலக்கியத்தில் அக்கறை கொண்ட மாலதி எனும் தமிழகப் பெண்ணின் நட்பு இதில் முக்கியமானது. வர்க்கம், பால், இலக்கியம், இந்திய ஏழைகள் தொடர்பான அவரது பார்வை அந்த வலைத்தளத்தில் அவரை வித்தியாசப்படுத்திக் காட்டியது. அவருக்கு சில தமிழ் நூல்களும் சில இலக்கியச் சஞ்சிகைகளும் பிற்பாடு அனுப்பி வைத்தேன். அவர் தமிழில் எழுதுவது பல புதிய செய்திகளை தமிழுக்குத் தருவதாக இருக்கும் என்று நான் நம்புகிறேன்.

இந்திய மரபிலுள்ள அர்த்த நாரீஸ்வரர் எனும் குறியீடு இன்று மிகுந்த அரசியல் முக்கியத்துவம் கொண்டதாகும். இந்தக் குறியீட்டை வெறுமனே மதம் சார்ந்ததாக நான் பார்க்கவில்லை. மதநீக்கம் கொண்ட ஆழ்ந்த அர்த்தங்கள் கொண்டது என்பது எனது நம்பிக்கை. எப்பொழுதுமே நான் யமுனா ராஜேந்திரனாக இருப்பது எனக்கு சந்தோஷமாக இருக்கிறது. ஆண்-பெண் வித்தியாசங்களை என்னளவில் எழுதுகிறவன் எனும் அளவில் குறைந்த முக்கியத்துவம் கொண்டதாகவே உணர்கிறேன். நீண்ட நாளுக்கப்புறம் இப்படியெல்லாம் யோசிக்க வைத்ததற்கு இளையவி சின்னவனுக்கும் பிரதீபாவுக்கும் எனது அன்பும் நன்றியும் உரியது.

**யமுனா ராஜேந்திரன்**
**இலண்டன்**

◆◆◆

**பிம்பங்களுடனான ஒரு உரையாடல்**

இலக்கிய உலகம் விசித்திரமாக இருப்பதற்குக் காரணம், இலக்கியப் பிறப்பு என்பது விசித்திரமாக இருத்தலும் ஒரு காரணமாகலாம். நரியைப் பரியாக்கிய சொக்கன் மாணிக்கவாசகருக்கு அரச மரத்தடியில் உபதேசம் செய்தது போல் திரு. ஜமாலன் 'உயிர்நிழலி'ல் வெளிவந்த செந்தட்டி என்ற கதையை விமர்சிக்கிறேன் என்று ஒரு இலக்கிய உபதேசம் செய்துள்ளார். படைப்பு பிறந்தவுடன் படைப்பாளி இறந்து விடுகிறான் என்றிருக்கும் காலத்தில் படைத்தவன் தேமே எனக் கேட்டுக் கொண்டு இருப்பதுதான் உசிதம் என்று தோன்றுகிறது. வர வர என் படைப்புகளுக்கு வரும் விமர்சனங்களை படைப்பு எடுத்துக்கொண்ட பக்கங்களை விட விஞ்சும் அளவிலேயே அமைந்து விடுகின்றன. இவ்வளவு நேரமும், இவ்வளவு இடமும் என் படைப்பிற்காக அவர் எடுத்துக் கொள்ளும்போது சில உண்மைகளைச் சொல்லி இன்னும் சில பக்கங்களைக் கேட்டால் பதிப்பாளர் மறுக்கமாட்டார் என்ற நம்பிக்கையில் இதை எழுதுகிறேன்.

"செந்தட்டி ஒரு சிலிர்ப்பின் ரகசியம்" என்று ஆரம்பிக்கும் வரியில் இருந்து அவர் என் கதை பற்றிய சில கற்பிதங்களை உருவாக்கிக் கொண்டு உருவாக்கிய பிம்பத்துடனான ஒரு உரையாடலைத் துவங்குகிறார். இதற்கு கட்டியம் கூறுவது போல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

'செந்தட்டி', 'அவன் அப்படித்தான்', 'இலையுதிர் காலத்தின்....' என்று முன்கூட்டியே 'அவன் அப்படித் தான்' அவனைப் பற்றி மேலும் என்ன சொல்ல உள்ளது என்ற தொனியிலேயே அவர் தன் விமர்சனத்தை வைக்கிறார். (உயிர்நிழல் மார்ச்-ஏப்ரல் 2000, பக்கம் 27 மற்றும் 32-35)

அதாவது, 'செந்தட்டி' என்ற கதை நிகழ்வதற்கான சாத்தியப்பாடு இல்லை என்றும் இது ஐரோப்பிய மனோ நிலையில் சுகம் காணும் ஒரு ஐரோப்பியத் தமிழன் இந்தியத் தமிழனை நக்கலடிக்கும் விதமாக எழுதிய கதை என்று அவர் அனுமானிக்கிறார். "பொதுவாக கண்ணனிற்கு தமிழ் ஒரு அந்நிய நிலப் பரப்பாக தெரிவதுபோல் இருக்கிறது. இத்தனை வெறுப்பு ஏன் தனது சொந்தப் பண்பாட்டின் மீது" என்பது அவரது விமர்சனம்.

முதல் உண்மை, இக் கதை பல வருடங்களுக்கு முன் மதுரையில் வாழ்ந்த காலத்தில் எழுதியது. அக்காலத்தில் முற்போக்கு எழுத்தை தரிக்கும் 'கணையாழி' என்ற பத்திரிகைக்கு அனுப்பி அது பிரசுரிக்கப்படவில்லை. இத்தனை ஆண்டுகளுக்குப் பிறகு ஐரோப்பிய சூழலைக் கண்டு அனுபவித்த பின் அதற்கு வேறொரு பிரதி கொடுத்து வெளியிட்டேன். எத்தனைதான் கொக்கோ சாத்திரங்கள் கோவில் கோபுரங்களில் இருந்தாலும், வாத்சாயனர்கள் காம சூத்திரங்கள் எழுதிப் போட்டாலும் இன்றுள்ள தமிழனுக்கு (இந்தியனுக்கு) செக்ஸ் பற்றிய எள்ளளவு புரிதலும் இல்லை என்பது உலகை மிரட்டும் அதன் ஜனப் பெருக்கத்தில் இருந்து அறியலாம். குழந்தைகள் அங்கு விபத்தாகப் பிறக்கின்றன. செக்ஸ் என்பது அங்கு பொழுதுபொகாமல் 'ஏதாச்சும் செய்யவே' நடக்கின்றன. இதுதான் நிதர்சனம். இக்கதை நாயகன் அச் சூழலில் வளர்ந்த ஒரு அப்பாவித் தமிழன். அவனுக்கு கிடைக்கும் முதல் வாய்ப்பைப் பற்றியது கதை. இதை ஏன் 'இந்தியா டுடே'க்கு அனுப்பவில்லை என்று என்னைக் கேட்கிறார். அவர்தான் தமிழ்நாட்டில் வாழ்ந்து கொண்டு இருக்கிறார். அவர்தான் பதில் சொல்ல வேண்டும். 'கணையாழி'யே போடவில்லை. 'இந்தியா டுடே' போடுமா? இதுவெல்லாம் தமிழ் இலக்கிய ஆச்சார உலகில் எடுபடுமா? 'உயிர்நிழல்'போட்டுவிட்டு இப்போது உதைபடுவது போன்ற துணிச்சல் தமிழ்ப் பத்திரிகைகளுக்கு வருமா? அவர்தான் பதில் சொல்லவேண்டும்.

இரண்டாவது, சூழல் விவரணைகள் பற்றியது ஆல்ப்ஸ் மலையில் இருக்கும் கருத்த ஏரி பற்றி எழுதினால் இதென்ன ஏரித் தண்ணியிலும் நிற வெறியா? என்று விமர்சித்து இருக்கிறார். இவர் கொஞ்சம் பயணிக்க வேண்டும் அல்லது பூகோள சாஸ்திரம் படிக்கவேண்டும். கிளேசியல் தண்ணீர் எனப்படும் பனிநீர் பல்வேறு வகை நிறமுடைய ஏரிகளை உருவாக்குகின்றன. கருப்பு, பச்சை, ஊதா ஏரிகள் இப்படி உருவாகுகின்றன. ஜப்பான் நாட்டில் கந்தக நீர் உருவாக்கும் குளங்கள் சிவப்பு, மஞ்சள் நிறங்களில் கூட அமைவதுண்டு. வர்ணனையை வைத்து என்னை ஆரியனாக்க அவர் முயல்வதன் காரணம் நான் ஜெர்மனியில் வாழ்வதால் என்று இருக்கலாம். (பிம்பம் + பிம்பம் என்று பல அடுக்குகள் அதற்கு வந்துவிடுகின்றன)

மூன்றாவது ஐரோப்பிய சூழலில் உள்ள ஒருவர் தனது மனைவியிடம் அவர் ஜெர்மனியராகவே இருந்தாலும் திருமண-முன் பாலுறவு பற்றி எல்லா விவரங்களுடனும் பேசுவது யதார்த்த பொருத்தமற்றது' என்று அனுமானிக்கிறார். இக் கதை எழுதப்பட்டது இந்தியாவில். இந்தியாவிலேயே அப்படிச் செய்ய முடியும் என்பதை அவர் அறிவாரா? அது போகட்டும். இவர் ஜெர்மனியில் வந்து இரவு 9.00 மணிக்குப் பின் தொலைக்காட்சி பார்க்கட்டும். உடலுறவு பற்றிப் பேசுவதென்ன, உடலுறவுக் காட்சிகளை லட்சக்கணக்கான மக்களுடன் பகிர்ந்து கொள்ளும் தம்பதிகள் உள்ளார்கள் என்பது தெரியவரும். இவர் சொல்லும் www.venus tv.com எக்ஸ் தர இணையத்தளமோ அல்லது அதன் தொலைக்காட்சிப் படிவமோ அல்ல. எல்லோரும் பார்க்கும் சாதாரண தொலைக்காட்சி நிலையங்கள் இரவில் இந்நிகழ்ச்சிகளை ஒளி பரப்புகின்றன!

நான்காவது, கதையின் முகவரியைப் பாருங்கள். 'கிழக்கே போகும் ரயிலு'க்காக அவள் காத்திருந்தாள். இது ரயில் ராதிகாவைத்தான் ஞாபகப் படுத்துகிறது என்று சொல்லி சினிமாவை ஒரு கலாச்சாரமாகவே வைத்திருக்கும் சமூகத்தின் பிரதிநிதியாகவே எழுதப்பட்டுள்ளது என்று ஒரு தீர்மானத்திற்கு வந்து விடுகிறார். அக்கதை எழுதப்பட்ட சூழல், அதன் வருணனையில் வரும் ஆண்டிப்பட்டி, வைகை அணை நோக்கிப் போகும் இரயில் மதுரைக்குக் கிழக்கேதான் போகிறது. இந்த ரயில் போகும் திக்கை வைத்துத்தான் பாரதிராஜா தனது 'கிழக்கே போகும் ரயில்' என்ற படத்தை பின்னால் தயாரித்தார். பாரதிராஜா தயாரித்துவிட்டார் என்பதற்காக கிழக்கே போகும் ரயிலை மேற்கே போகச் சொல்லமுடியுமா?

'பாலியல் என்பது ஒரு பகிர்தல் அதில் என்ன த்ரில்' என்று கேட்டுவிட்டு 'டேட்டிங் என்பது தொடர் நிகழ்வோ, காதலோ, பொறுப்பேற்கும் நிகழ்வோ அல்ல. ஜஸ்ட் டேட்டிங்!' என்று தன் புரிதலை வெளிப்படையாய் பகிர்ந்து கொள்கிறார். மௌனி பற்றி, புதுமைப்பித்தன் பற்றி அரேபிய இரவுக்கதைகளை 'கண்ணன் கவனமாகப் படிப்பது நல்லது' (சொக்கன் தட்சிணாமூர்த்தி உபதேசம் இதுதான்!) என்று சொல்லும் ஜமாலனின் டேட்டிங் பற்றிய இந்த எளிமையான புரிதல் ஆச்சர்யத்தைத் தருகிறது. முதல் முறையாக தன் தாய் தந்தையர் பார்த்து திருமணம் செய்து வைக்காத பெண்ணுடன் உடலுறவு கொள்ள வாய்ப்பளிக்கும் டேட்டிங் என்பதில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

த்ரில் இல்லை என்றால் பின் வேறு எதில் த்ரில் இருக்கும்? (சார்! நீங்க டேட்டிங் செய்தது உண்டா?) இந்த டேட்டிங் என்பது உண்மையில் மேலை தேசத்து பண்பாட்டு நிகழ்வு என்பதை இவர் அறி வாரா? இது பற்றி எத்தனை அழகான திரைப்படங் கள் வந்துள்ளன. மேலும் ஒரு விவரம், பெரும் பாலான மேலைத் தேசத்து தம்பதியர் இத்தகைய டேட்டிங் மூலம்தான் ஒருவரைப் பற்றி ஒருவர் அறிந்து கொண்டு கலந்து காதலித்து, கல்யாணம் செய்து குடும்பம் நடத்துகின்றனர். எனவே ஜமாலன் சொல்லும் 'பாலியல் என்பது ஒரு பகிர்தல்' என்ற உயர்ந்த பக்குவத்திற்கு இட்டுச் செல்லும் முதற்படி தான் இந்த டேட்டிங்.

ஆனால் இப்படி நடக்காமல் சொதப்பி விடுவது தான் 'செந்தட்டி'யின் உள்ளுணர் நகை! 'செந்தட்டி' ஒரு நகைச்சுவைக் கதை. தமிழ் மண்ணில் செக்ஸ் பற்றிய புரிதல் இல்லாமல் வளர்ந்து விட்ட ஒரு ஆணுக்கும் பாலியல் சுதந்திரம் பற்றிய புரிதலுடன் வெளிநாடு சென்று மீண்ட ஒரு பெண்ணுக்கும் இடையில் நடக்கும் டேட்டிங் பற்றியது. சொகுசாக கிச்சுக் கிச்சுமூட்டும் கதை. நல்ல இலக்கிய வாசிப்புள்ள (ஆங்கில இலக்கியப் பரிச்சயம் இதை மேலும் கூட்டும்) ஒருவருக்கு இப்படித்தான் தோன் றும். அதற்கு மேல் இதற்குள் ஒன்றுமில்லை. அதை விடுத்து மிகவும் உணர்ச்சிவசப்பட்டு உலகப்போர், பாசிசம், அணு ஆயுதம் என்று கதைக்கு சம்மந்த மில்லாத விஷயங்களைக் கொண்டு வந்து விமர்சிப் பது நேர விரயம் என்றுதான் தோன்றுகிறது.

இந்தக் கதை வந்தவுடன் எனக்கு வந்த முதல் விமர்சனம் அமெரிக்காவில் வாழும் ஒரு பெண்ணி டம் இருந்து. அவளது கோபமெல்லாம் 'அது என்ன, வெளிநாடு போய்விட்டு வந்த பெண்ணுக்குத்தான் இத்தகைய பாலியல் (சுதந்திர) இச்சைகள் தோன் றுமா, உள்ளூர் பெண்களுக்குத் தோன்றாதா என்று இந்த ஆண் மூளை அதாவது எனது மூளை) யோசிக்கிறது' என்பதுதான். அவர் பாரதி கண்ட புதுமைப்பெண். "ஆத்திரம் கொண்டோர்க்கு சாத்திரம் ஏதுக்கடி?" என்று கேட்கும் புதுமைப் பெண். இதை விமர்சனமாக ஏற்றுக்கொள்ள முடிகிறது. அதை விடுத்து ஆணுடலிலே புதிய தூய இன உடல் தேடிய ஒரு சமூகம் ஜேர்மனி என்பதும் உலகிற்கு ஐரோப்பா தந்த உலகப்போர், பாசிசம், அணு ஆயுதம் மற்றும் எயிட்ஸ் என்பதை மறந்துவிடக் கூடாது என்று பயம் காட்டுவதும் அவர் என்னை முழுமையாக ஒரு ஜெர்மானியனுடன் ஐக்கியப் படுத்தி அடையாளப்படுத்தி விட்டார் என்பதைக் காட்டுகிறது. (இனி மனிதாபிமானக் கதை எழுத வேண்டுமெனில் ஜெர்மனியில் இருக்கக்கூடாது போலுள்ளது)

"மனோ சிறுநீர் கழிக்கப் போய் செந்தட்டி அவனது குறியில் பட்டு சம்பவம் திரும்ப நிகழ்ந்தி ருந்தால்?" என்று ஒரு கேள்வியைப் போடுகிறார். இது ரசிக்கக்கூடிய நகைச்சுவையாக நிச்சயம் இருந்திருக்கும் என்பதுதான் என் பதில் (ஜமாலன்) கி.ராஜநாராயணனின் கதைகளை ரசிப்பதில் லையா? வாழ்க்கை என்பது மிக விசித்திரமானது. மனிதர்களிடம் மட்டும் நகைச்சுவையாக விஷயங் கள் நடக்கின்றன என்று அல்ல, விலங்கு உலகில் நடக்கும் நகைச்சுவைகளை வைத்து ஒரு திரைப் படம் வந்துள்ளது. மிகவும் ரசிக்கக்கூடியது.

சிறு இலக்கியச்சூழல் என்பது சிலரது இருப்பு ணர்த்தும் ஒன்று. அதை இப்படி பயன்படுத்துவது வருத்தமளிக்கிறது என்ற புனிதக் கட்டமைப்புடன் விஷயத்தை முடிக்கிறார் ஜமாலன். ஏனிப்படி ஆகிவிட்டது ஜமாலனுக்கு? இதைப்பற்றித்தான் பேசவேண்டும், இதைப்பற்றி பேசக்கூடாது என்று உலகிற்கு வழிகாட்டும் வணிகப் பத்திரிகைகளி லிருந்து விடுதலை வேண்டுபவர்களுக்குத்தானே சிறு பத்திரிகைச்சூழல் உள்ளது. முன்பு தஞ்சை பிரகாஷ் இம்மாதிரி கதைகளுக்காகவே ஒரு இதழ் (ஒரே ஒரு இதழாக அது ஆகிப்போனது தமிழக அபசகுனம்) நடத்தினார். இந்தக் கதைக்கே இப்படி என்றால், சுகன் எழுதும் கூட்டுக்கலவிக் கதை களை வெளியிடும் 'எக்ஸில்' பத்திரிகையை பகிஷ் கரிக்க கோரிக்கை விடுவார் போலுள்ளதே. (உயிர் நிழலின் முதல் பெயர் 'எக்ஸில்' என்பது தன்னிச்சை யான ஒப்புமை அல்ல)

**நா. கண்ணன்**
ஜேர்மனி

◆◆◆



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ் இனி 2000

## www.tamil-ini2000.org

இடம் : ஹோட்டல் அட்லாண்டிக் எக்மோர் சென்னை
காலம் : செப்டெம்பர் 1, 2, 3 – 2000

## இவ்விலக்கிய விழாவில்

- தமிழவன்
- ஞானி
- சுஜாதா
- எஸ். வி. ராஜதுரை
- கா. சிவத்தம்பி
- சேரன்
- பிரபஞ்சன்
- ராஜ் கௌதமன்
- நாஞ்சில் நாடன்
- எஸ் ராமகிருஷ்ணன்
- ஆ. இரா. வெங்கடாசலபதி
- பெருமாள் முருகன்
- பிரேம் : ரமேஷ்
- அம்பை
- கி. ஆ. சச்சிதானந்தம்
- க. பூரணச்சந்திரன்
- பிரம்மராஜன்
- வெளி ரங்கராஜன்
- செ. ரவீந்திரன்
- 'எதிர்வு' சிவக்குமார்
- ராஜமார்த்தாண்டன்
- கோலாகல சிறிநிவாஸ்
- இ. ஜே. சுந்தர்
- எஸ். சண்முகம்
- டி. தர்மராஜன்
- ஆ. சிவசுப்ரமணியம்
- பழ. அதியமான்
- ரவிக்குமார்
- வீ. அரசு
- ராசேந்திரசோழன்
- பா. செயப்பிரகாசம்
- ந. முருகபாண்டியன்
- இந்திரன்

மற்றும் இன்னும் பல இந்திய படைப்பாளிகளுடன் 50க்கு மேற்பட்ட இலங்கைப் படைப்பாளர்களும் மற்றும் புகலிடப் படைப்பாளர்களும் இவ்விழாவில் கலந்து கொள்கின்றனர். இவ் அமர்வுகள் பற்றிய விபரங்களுக்கு மேற்கண்ட இணை வலயத்தில் தொடர்பு கொள்ளவும்.

www.tamilarangam.net

